**கவனிக்க .-** *01.11.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1836 - 2013 නොවැම්බර් මස 08 වැනි සිකුරාදා - 2013.11.08
*1836 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | 2100 | மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | |

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஊவா மாகாண மாகாண சபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகாரம் பெற்ற துணை விதிகள்) சட்டம்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவின் (1) வது உபபிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும், 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க மாகாண சபைகள் (அங்கீகாரம்பெற்ற துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) வது உபபிரிவில் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தான தத்துவங்களின் பிரகாரம், ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருமான சஷீந்திர ராஜபக்ஷ ஆகிய என்னால் ஆக்கப்பட்ட துணைவிதிகளின் வரைவு இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.*

*மேற்படி துணைவிதிகளின் வரைவில் உள்ளடங்கிய ஏற்பாடுகளை உள்ளடக்கிய துணைவிதிகளை ஆக்க 255 வது அத்தியாயமான நகர சபைகள் சட்டத்தின் 157 வது பிரிவுடன் வாசிக்கப்படுகின்ற மேற்படி கட்டளைச் சட்டத்தின் 94 மற்றும் 153 ஆகிய பிரிவுகள் மூலமாக நகர சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளதோடு இந்த வரைவுத் துணைவிதிகளை உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகாரம் பெற்ற துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆவது உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு கட்டுப்பட்டதாக ஏற்றுக்கொள்ள ஊவா மாகாணத்தின் நகர சபைகளுக்கு இத்தால் அதிகாரம் வழங்கப்படுகின்றது.*

*சஷீந்திர ராஜபக்ஷ,*
*முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரும்,*
*ஊவா மாகாணத்தின் மாகாண சபை.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*பதுளை,*
*2013, ஒற்றோபர் 14.*

**பாகம் I**

**சகலவிதமான அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகளுடனும் தொடர்புடைய பொருள்கோடல் பற்றிய துணைவிதிகள்**

*1. ஏதேனும் நகர சபையினால், இந்த அங்கீகாரம் பெற்ற துணைவிதிகள் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் இந்த அங்கீகாரம் பெற்ற துணைவிதிகளில் IV வது பாகத்தில் இருந்து XXX வது பாகம் வரையான பகுதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பதங்கள் தொடர்பில் பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலேயொழிய-*

*"நகர சபைப் பிரதேசம்" என்பது, ஏற்புடைய நகர சபை அடங்கியுள்ள நியாயாதிக்க பிரதேசத்தையும் ;*

*"நகர சபை" என்பது, ஏற்புடைய நகர சபையையும் ;*

*"பரிசோதனை செய்ய அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம்" என்பது, ஏதேனும் தினத்தில் முற்பகல் 6.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணி வரையான காலம் எனக் கருதப்படுவதோடு இத்துணைவிதிகளின் ஏதேனுமொரு பகுதியில் அதற்கு முரணாக வேறு ஏதேனும் நியாயமான காலம் அப்பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டு பணிக்கப்பட்டிருப்பின். அப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புக்களைப் பரிசீலணை செய்ய அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம் என அங்கு விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள காலம் கருதப்படல் வேண்டும் ;*

*"பொது நீர் வழி" என்பது, ஆறு, ஓடை, அருவி, நீர்வழி, கிணறு, குளம், தடாகம், வடிகான் மற்றும் கடல் எனக் கருதப்படுவதோடு அனுமதிப்பபத்திரம் பெற்ற இடத்தில் கழிவு நீர் பாய்ந்து செல்ல நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏதேனும் வடிகான் உள்ளடக்கப்படல் ஆகாது.*

*"பொது இடம்" என்பது, ஏதேனும் வழி, பொது வழி, வீதி, ஒழுங்கை, ஒற்றையடிப்பாதை, நடைபாதை மேடை, பொதுக்காணி, வீதி ஒதுக்கம், விளையாட்டு மைதானம், பொதுக் கட்டிடம், பொது மயானம், பஸ்தரிப்பு நிலையம், புகையிரத நிலையம், ஆறு, ஓடை, அருவி, குளம், தடாகம், கடனீரேரி, நீரூற்று, நீர்வழி, மழைநீர், வடிகான், கடற்கரையோரம், பஸ்தரிப்பிடம், சபைக்குச் சொந்தமான காணி, மக்களின் பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான காணி, அல்லது பொதுமக்களின் பாவனைக்கு இலக்காகின்ற வேறு ஏதேனும் பொது இடமும் ;*

*"பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்" என்பது, நகர சபைப் பிரதேசத்தை உள்ளடக்கக்கூடியவாறு நியமிக்கப்பட்டுள்ள பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரையும் ;*

*"அனுமதிப்பத்திரம் பெறுநர்" என்பது, இங்கு ஏதேனும் பகுதியின் துணை விதிகளிலான பணிப்புக்களின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள எவரேனும் ஆள் எனக் கருதப்படுவதோடு மேற்படி அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் பொறுப்பாளியோ முகாமையாளரோ அப்போதைக்கு அவ்விடத்தின் பணிகளை நிர்வகிக்க பொறுப்பாகவுள்ள எவரேனும் ஆளையும் ;*

"அனுமதிப்பத்திரம் பெற்ற இடம்" என்பது, இங்கு ஏதேனும் பகுதியின் துணைவிதிகளிலான பணிப்புக்களின் கீழ் எந்த இடத்தைப் பாவிக்க அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ, அந்த இடத்தையும் ;

"அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்" என்பது, அக்கருமத்திற்காக தலைவரால் ஆவணமொன்றினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நகர சபையின் எவரேனும் உத்தியோகத்தரையும் ;

"செயலாளர்" என்பது, ஏற்புடைய நகர சபையின் செயலாளரையோ அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கருமங்கள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தரையும் ;

"தலைவர்" என்பது, ஏற்புடைய நகர சபையின் தலைவரையும் கருதும்.

2. முதலாவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டிராத எனினும் இந்த அங்கீகாரம் பெற்ற துணைவிதிகளின் ஏதேனும் பகுதியில் குறிப்பிடப்படுகின்ற வேறு ஏதேனும் பதம் அல்லது பதங்கள் சம்பந்தமாக பொருள்கோடல் தேவைப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அத்தகைய பதம் அல்லது பதங்கள் தொடர்பான பொருள்கோடல் அப்பகுதிக்கு மாத்திரம் தொடர்புடையதாக வலுவில் இருத்தல் வேண்டும்.

### பாகம் II

### சகல விதமான அங்கீகாரம் பெற்ற துணைவிதிகளுடனும் தொடர்புடைய பொதுவான ஏற்பாடுகள் பற்றிய துணைவிதிகள்

1. இந்த அங்கீகாரம் பெற்ற துணைவிதிகளில் பாகம் IV இல் இருந்து பாகம் XXX வரையான ஏதேனும் பகுதியின் கீழ் நகர சபையினாலோ தலைவராலோ ஏதேனும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தராலோ எவரேனும் ஆளுக்கு விடுக்கப்பட்ட அறிவித்தலொன்று,-

(அ) அத்தகைய அறிவித்தல் கிடைக்க வேண்டியவருக்கு தபாலில் அனுப்பிவைக்கப்படுவதற்காக உறுதிசெய்யப்பட்டதென்பதை நிரூபிக்கக்கூடிய வகையில் தபாலுக்காக ஒப்படைக்கப்பட்டால் ; அல்லது

(ஆ) அவரிடம் அல்லது அவரது முகவரியில் அப்போதைக்கு குடியமர்ந்துள்ள எவரேனும் ஆளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பின் ; அல்லது

(இ) அவர் குடியமர்ந்துள்ள இடத்தில் அல்லது அவரால் தனது பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடத்தில் எந்தவோர் இடத்திலும் ஒட்டப்பட்டிருப்பின் அத்தகைய அறிவித்தல் முறையாக ஒப்படைக்கப்பட்டதாக கருதப்படல் வேண்டுமென்பதோடு அது எவ்விதத்திலேனும் ஒப்படைக்கப்படுவது சட்டமுறையானதாக அமைதல் வேண்டும்.

2. இந்த அங்கீகாரம் பெற்ற துணைவிதிகளின் ஏதேனும் பகுதியொன்றிலான ஏற்பாடுகளின் கீழ் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏதேனும் கருமம் அல்லது பணி, அவரால் நகர சபையின் உத்தியோகத்தர் எவருக்கேனும் கடிதமொன்றினால் பணிக்கப்படுகின்ற பணிப்புகளுக்கு கட்டுப்பட்டதாக ஒப்படைக்கப்பட முடியுமென்பதோடு அவ்வாறான அதிகாரம் பெற்ற ஆளொருவரினால் அத்தகைய சாட்டுதல் கடிதத்தில் பணிக்கப்பட்டுள்ள பணிப்புக்களுக்கு கட்டுப்பட்ட வகையில் ஈடேற்றப்படுதல் சட்டமுறையானதாக அமைவதோடு அத்தகைய கருமம் அல்லது பணி இந்த அங்கீகாரம் பெற்ற துணைவிதிகள் மூலமாக தலைவருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் அவரால் புரியப்பட்ட கருமம் அல்லது பணியாகக் கருதப்படல் வேண்டும்.

3. இந்த அங்கீகாரம் பெற்ற துணைவிதிகளின் ஏதேனும் பகுதியொன்றிலான பணிப்பு அல்லது பணிப்புக்களின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற இடமொன்றைப் பரிசோதனை செய்ய தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டுமென்பதோடு எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் பரிசோதனை செய்ய அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனுமதிப்பத்திரம் பெறுநரின் கருமமாக அமைதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஏதேனும் பரிசோதித்தலைத் தடுக்கவோ தடையேற்படுத்தவோ கூடாது.

### பாகம் III

### ஏதேனும் துணைவிதிகளின் ஏற்பாடுகளையோ பணிப்புக்களையோ மீறுதல் சம்பந்தமான தண்டனைகள் பற்றிய துணைவிதிகள்

1. இந்த அங்கீகாரம் பெற்ற துணைவிதிகளில் பாகம் IV இல் இருந்து பாகம் XXX வரையான பகுதிகளில் உள்ளடங்கிய துணைவிதிகளுக்கிடையில் ஏதேனும் துணைவிதியில் காட்டப்பட்டுள்ள பணிப்போ ஏற்பாடோ மீறுதல் அல்லது மீறப்படுதல் தவறாக அமைதல் வேண்டும்.

2. 1 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தவறு சம்பந்தமாக உரிய அதிகாரம்கொண்ட நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கான தவறாளியாக்கப்பட்ட பின்னர் அத்தவறு சம்பந்தமாக 252 வது அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 வது பிரிவின் (2) வது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அபராதவிதிப்புக்கு கட்டுப்படல் வேண்டும்.

*3. 1 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தவறு சம்பந்தமாக உரிய அதிகாரம்கொண்ட நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கான தவறாளியாக்கப்பட்ட பின்னர், 2 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட விதத்திலான அபராத விதிப்புக்கு இலக்காக்கப்பட்ட ஒருவரினால் அத்தகைய மீறுதல் அல்லது மீறப்பட்டமையை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகையில் மேற்குறிப்பிட்ட 153 வது பிரிவின் (2) வது உபபிரிவில் குறிப்பிட்ட மேலதிக அபராத விதிப்புக்கும் கட்டுப்படல் வேண்டும்.*

## *பாகம் IV*

### *சபைக் கூட்டங்களின் அலுவல்களை மேற்கொண்டு வருதல் பற்றிய துணைவிதிகள்*

*1. இப்பகுதியின் துணைவிதிகள் நகர சபைகளின் கூட்டங்களை மேற்கொண்டு வருதல் பற்றிய துணைவிதிகள் என எடுத்துக்காட்டப்படும்.*

*2. (1) ஒவ்வொரு மாதத்திலும் முன்கூட்டியே குறிக்கப்பட்ட தினத்திலும் நேரத்திலும் நகர சபையின் சாதாரண கூட்டம் நகர சபை அலுவலகத்தில் நடத்தப்படல் வேண்டும். அவ்விதமாக முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட திகதியானது 1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கமுடைய விடுமுறைகள் சட்டத்தின் கீழ் அரசாங்க விடுமுறைத் தினமொன்றாக பிரகடனஞ் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அத்தகைய கூட்டம் அடுத்துறும் வேலை நாளில் நடாத்த தீர்மானிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டுமென்பதோடு, அத்தகைய அடுத்துறும் வேலைநாளில் நடத்தப்படலும் வேண்டும்.*

*(2) நகர சபையின் சாதாரண கூட்டமொன்று அல்லது விசேட கூட்டமொன்று தொடர்பான அழைப்பு அறிவித்தல் சிங்களத்திலோ தமிழிலோ அல்லது அவ்விரு மொழிகளிலும் அமைதல் வேண்டும்.*

*(3) ஒவ்வொரு சாதாரண கூட்டம் பற்றியும் அந்தந்த கூட்டத்தில் புரியப்படவுள்ள நடவடிக்கைகள் பற்றியும் குறிப்பிடப்பட்ட அறிவித்தல் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசாங்க விடுமுறைத் தினங்கள் நீங்கலாக அத்தகைய கூட்டம் நடத்தப்படுகின்ற திகதிக்கு குறைந்த பட்சம் நான்கு நாட்களுக்கு முன்னர் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒப்படைக்கப்படல் வேண்டும்.*

*(4) (2) மற்றும் (3) ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட அறிவித்தலை ஏதேனும் காரணத்தின் நிமித்தம் தனிப்பட்ட முறையில் ஒப்படைக்க முடியாவிடின் ஏதேனும் சந்தர்ப்பத்தில் அத்தகைய அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் பொதுவாக வதிகின்ற இடத்தில் வைக்கப்பட்டால் அது முறையாக ஒப்படைக்கப்பட்டதாகக் கருதப்படும்.*

*3. (1) ஏதேனும் கூட்டத்தில் கூட்டநடப்பெண் இல்லாவிடின் அக்கூட்டத்தின் நடவடிக்கைகள் ஏதும் புரியப்படலாகாது. நகர சபையொன்றின் சாதாரண கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் அக்கூட்டத் தினத்தன்று பதவி வகிக்கின்ற உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்காக அமைதல் வேண்டும். அவ்வுறுப்பினர் எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்கு முழு எண்ணின் பின்னமாக அமையும் சந்தர்ப்பத்தில் அத்தகைய முழு எண்ணின் பின்னத்திற்கு அதிகமான அடுத்த முழு எண் இத்துணைவிதியின் கருமத்திற்காக மூன்றிலொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*(2) ஏதேனும் கூட்டத்திற்கு உரிய நேரத்தின் பின்னர் அரை மணித்தியாலம் கழிந்த பிறகு அல்லது கூட்டம் தொடங்கிய பின்னர் எந்த நேரத்திலும் கூட்டநடப்பெண் இல்லாத சந்தர்ப்பத்தில் அக்கூட்டத்தின் தலைவரால் அக்கூட்டம் அத்தேதியின் பின்னர் பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமலும் அவரால் பொருத்தமானதெனக் கருதப்படுகின்ற நாளொன்றுக்கு ஒத்திவைக்கப்படல் வேண்டும். அவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தில் கூட்டநடப்பெண் இருந்ததெனில் அக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படத்தக்கதாக இருந்த பணிகள் பின்னர் நடத்தப்படும் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அது சம்பந்தமாக பொருத்தமானதைச் செய்யமுடியும்.*

*4. (1) நகர சபையின் கூட்டநடப்பெண் உள்ள ஏதேனும் சாதாரண அல்லது விசேட கூட்டத்தில் தலைவர் நகர சபையின் விருப்பத்துடன் காலத்திற்குக் காலம் கூட்டங்களை ஒத்திவைக்கலாம். அவ்வாறு ஒத்திவைக்கப்படலுக்கு இலக்கான கூட்டத்தின் நிகழ்ச்சிநிரலில் குறிப்பிடப்பட்டுள்ள எனினும் முற்றுப் பெறாமல் எஞ்சியுள்ள அலுவல்களைத் தவிர்ந்த வேறேதேனும் அலுவல் அவ்வாறு பின்னர் நடத்தப்படுகின்ற ஏதேனும் கூட்டத்தில் நகர சபையின் அனுமதியின்றி மேற்கொள்ளப்படலாகாது.*

*(2) ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தை இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்குள் நடாத்த ஆரம்பக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டாலன்றி ஒத்திவைக்கப்பட்ட கூட்டமொன்று பற்றிய அறிவித்தலை அக்கூட்டத்திற்கு உரிய நேரத்திற்கு குறைந்த பட்சம் மூன்று நாட்களுக்கு முன்னராக உறுப்பினர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும்.*

*5. செய்தித்தாள் நிருபர்களை உள்ளிட்ட விருந்தினர்கள், சபைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்ற இடத்தில் அந்தந்த ஆட்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள கூடங்களில் இருக்கலாம். எனினும் பொதுமக்களை சபாமண்டபத்தில் இருந்து வெளியேற்றுதலானது மக்களின் நன்மைக்கு உகந்ததென கூட்டத்திற்கு சமுகமளித்துள்ள நகர சபை உறுப்பினர்களின் பெரும்பான்மை எண்ணிக்கையுடையோரின் பிரேரணை வழிமொழியப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட அபிப்பிராயமாக அமையின் அதற்கிணங்க கூட்டத்தின் தலைவரால் கேட்டுக்கொள்ளப்பட்டவிடத்து அவர்கள் சபா மண்டபத்தில் இருந்து வெளியேறுதல் வேண்டும்.*

6. நகர சபைக் கூட்ட அலுவல்கள்:-

(அ) கடந்த கூட்ட அறிக்கையை அங்கீகரித்தல்;

(ஆ) தலைவரால் செய்யப்படுகின்ற விசேட அறிவித்தல்கள்;

(இ) நகர சபையை விளித்து அனுப்பி வைக்கப்பட்ட நிருபங்கள், மனுக்கள், முறைப்பாடுகள் மற்றும் தொடர்பாடல்களை சபைக்குச் சமர்ப்பித்தல்;

(ஈ) ஒழுங்கான முறையில் கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ள வினாக்கள்;

(உ) ஒழுங்கான முறையில் கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ள பிரேரணைகள்;

(ஊ) குழுக்களின் அறிக்கைகளை சபைக்குச் சமர்ப்பித்தல். அவ்வறிக்கைகளை அவ்வேளையிலேயே பரிசீலனை செய்ய நகர சபை தீர்மானித்தாலன்றி அவற்றைப் பரிசீலனை செய்வதற்கான திகதியை நிர்ணயித்தல் சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(எ) பெறுகைகள் மற்றும் செலவினங்கள் பற்றிய மாதாந்தக் கூற்றுகள், சேகரித்த வருமானம் பற்றிய முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் நகர சபை சமர்ப்பிப்பதற்குரிய பிற ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதலும் பரிசீலனை செய்தலும்;

(ஏ) கூட்ட அழைப்புக்கான அறிவித்தலில் வேறு விடயங்களேதும் காட்டப்பட்டிருப்பின் அவ்விடயங்கள் அங்கு காட்டப்பட்டுள்ள வரிசைக்கிரமத்திலோ விசேட காரணங்களின் நிமித்தம் நகர சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற வரிசைக்கிரமத்திலோ;

என்ற வரிசைக்கிரமப்படி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

7. (அ) நகர சபை உறுப்பினர்களின் முந்துரிமையும் மூப்புரிமையும் முறையே -

(i) தலைவர்;

(ii) உப தலைவர்;

(iii) மீண்டும் தெரிவு செய்யப்பட்ட முன்னாள் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டதாயின் நகர சபையில் அவர்களின் இடையறாத உறுப்பாண்மை வரிசைக்கிரமப்படி;

(iv) ஏனைய உறுப்பினர்கள் தொடர்பிலாயின் அவர்களின் தெரிவு சம்பந்தமாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள முந்துரிமை அடிப்படையிலும்;

அமைதல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் (iii) உபபந்தியில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் உறுப்பினர்கள் இருவரினதோ அதற்கு மேற்பட்டோரினதோ இடையறாத உறுப்பாண்மை சமமானதாக அமையும் சந்தர்ப்பத்தில் மேற்படி உறுப்பினர்கள் இறுதியாகத் தெரிவுசெய்யப்பட்டமை தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள முந்துரிமை வரிசைக்கிரமப்படி முந்துரிமையும் மூப்புரிமையும் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

(இ) ஏதேனும் நகர சபைத் தேர்தலின் பின்னர் மேற்படி நகர சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் சம்பந்தமாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட விதத்தில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கையின் வரிசைக்கிரமத்திற்கு உரிய அரசியற் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் அத்துணைவிதிகளின் கருமங்களுக்காக ஏற்புடையதாதல் வேண்டும்.

8. (1) செயலாளரால் நகர சபைக் கூட்டங்களின் அலுவல்கள், பணிப்புக்கள் மற்றும் தீர்மானங்கள் பற்றிய அறிக்கைகள் சிங்களத்தில் அல்லது தமிழில் பதியப்பட்டு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் கூட்டத்தின் அலுவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள்அல்லது அங்கீகரிப்புக்கள் சம்பந்தமாக -

(அ) ஒரு பிரேரணை சம்பந்தப்பட்டதெனில் அத்தகைய பிரேரணை யாதென்பது;

(ஆ) பிரேரணையை முன்வைத்த உறுப்பினர் மற்றும் பிரேரணையை வழிமொழிந்த உறுப்பினர் யாவரென்பது;

(இ) பிரேரணைக்குச் சார்பாகவும் எதிராகவும் கருத்துக்களை முன்வைத்த உறுப்பினர்கள் யாவரென்பது;

(ஈ) பிரேரணையை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் ஏகமனதாக இடம்பெற்றதா; இன்றேல்

(உ) பிரேரணை சம்பந்தமாக வாக்கெடுப்பு கோரப்பட்டுள்ள வேளையில் அத்தகைய பிரேரணைக்கு -

(i) சார்பாக வாக்களித்த உறுப்பினர் எண்ணிக்கையும் அவர்கள் யாவரென்பதும்;

(ii) எதிராக வாக்களித்த உறுப்பினர் எண்ணிக்கையும் அவர்கள் யாவரென்பதும்;

(iii) வாக்களிப்பதில் இருந்து விலகிநின்ற உறுப்பினர் எண்ணிக்கையும் அவர்கள் யாவரென்பதும்; மற்றும்

(iv) கூட்டத்திற்கு வருகை தந்திருந்த மற்றும் வாக்கெடுப்பு நடைபெறுகின்ற தருணத்தில் சபாமண்டபத்தில் பிரசன்னமாகவிராத உறுப்பினர் எண்ணிக்கையும் அவர்கள் யாவரென்பதும்;

(ஊ) நகர சபைக் கூட்ட அலுவல்களின் வரிசைக் கிரமத்தின் வேறு ஏதேனும் விடயம் சம்பந்தமானதாக அமையின் அத்தகைய விடயம் சம்பந்தமாக சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் யாதென்பதும்.

ஒவ்வொரு பிரேரணை அல்லது விடயத்துடன் அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

(3) ஒவ்வொரு கூட்ட அறிக்கையும் உறுப்பினர்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டுமென்பதோடு அடுத்த கூட்டத்தில் அறிக்கை வாசிக்கப்பட்டதாக கருதப்பட்டு வழிமொழியுமாறு கூட்டத்தின் தலைவரால் வினாவிடுக்கப்படல் வேண்டும். எதிர்ப்போ பிழைதிருத்தமோ இல்லாவிடின் பதியப்பட்டுள்ளவாறு அறிக்கை வழிமொழியப்படல் வேண்டும். இன்றேல் எதிர்ப்போ பிழைதிருத்தமோ இருப்பின் அத்தகைய பிழைதிருத்தம் யாதென்பது பற்றி அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். சம்பந்தப்பட்ட அறிக்கையின் இறுதியில் பிழைதிருத்தங்கள் இல்லாவிட்டால் அதனையும் இன்றேல் மேற்படி பிழைதிருத்தங்களையும் குறித்து அத்தகைய பிழைதிருத்தங்களுக்குக் கட்டுப்பட்டதாக அறிக்கையை வழிமொழிந்தமைக்கான சான்றுரையினை கூட்டத்தின் தலைவர் தனது கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(4) சபைக் கூட்டத்தில் உறுப்பினர்களால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் மற்றும் கூற்றுக்கள் சபை அறிக்கைகளில் உள்ளடக்கப்படல் ஆகாது. ஆயினும் எவரேனும் உறுப்பினரால் சபையில் முன்வைக்கப்பட்ட விடயங்களோ கூற்றுக்களோ பின்னர் அறிந்துகொள்ள அவசியப்படுமென நகர சபை கருதுமாயின் அத்தகைய சபைக் கூட்டத்தின் அல்லது கூட்டங்களின் கருமங்களைக் கொண்டுநடாத்துதல் பற்றிய ஒலிப்பதிவு நாடாக்கள் தனிவேறாகத் தயாரிக்கப்பட்டு நகர சபையில் பாதுகாப்பாக வைத்திருக்கவும் உறுப்பினர்கள் மத்தியில் விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்க முடியும்.

9. (1) மனு அல்லது நிருபம் நகர சபைக்கு சமர்ப்பிக்கப்படுமாயின் எவரேனும் உறுப்பினர் அந்த மனுவின் அல்லது நிருபத்தின் நோக்கினை சுருக்கமாக வெளிப்படுத்த வேண்டும்.

(2) எவரேனும் உறுப்பினர் ஒட்டுமொத்தமாக கௌரவமான தொனியிலன்றியும் எழுதிய ஆளின் பெயர் மற்றும் முகவரி உள்ளடக்கப்படாமலும் எந்தவொரு மனுவையும் நிருபத்தையும் அல்லது வேறு தொடர்பாடலை நகர சபைக்குச் சமர்ப்பித்தல் ஆகாது.

(3) மனு அல்லது நிருபம் வாசிக்கப்படல் வேண்டுமென எந்தவொரு உறுப்பினரும் பிரேரிக்க முடியும். பிரேரணையைச் சமர்ப்பிக்கும்போது அது வாசிக்கப்படல் வேண்டுமென எக்காரணத்தின் நிமித்தம் எதிர்பார்க்கப்படுகின்றதென்பதை சுருக்கமாக் கூறுதல் வேண்டும்.

(4) அப்பிரேரணை தொடர்பாக விவாதமொன்றுக்கு இடமளித்தல் ஆகாதென்பதுடன் பிரேரணையை முறையாக வழிமொழிந்தாலன்றி மனு அல்லது நிருபத்தைக் காரணமாகக் கொண்டு அதுபற்றி வேறு எவரேனும் உறுப்பினர் உரை நிகழ்த்தலாகாது.

(5) அப்பிரேரணை வழிமொழியப்பட்டால் சம்பந்தப்பட்ட மனுவோ நிருபமோ வாசிக்கப்படல் வேண்டுமா என்ற கேள்வியைக் கேட்க வேண்டும்.

(6) நகர சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மனு அல்லது நிருபம் பற்றி பொருத்தமாக செயலாற்றும் பொருட்டு தலைவரிடம் அல்லது அது சம்பந்தமாக இறுதியாகச் செயலாற்றும் பொருட்டு அறிக்கை சமர்ப்பிக்க குழுவொன்றிடம் ஆற்றுப்படுத்துமாறு உறுப்பினரால் பிரேரிக்கப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(7) ஏதேனும் சாட்சியாளர்களிடமிருந்து சாட்சிகள் விசாரிக்கப்படக் கருதப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அத்தகைய சாட்சி விசாரணைக்குரிய தினத்திற்கு குறைந்த பட்சம் மூன்று நாட்களுக்கு முன்னர் அச்சாட்சியாளர்கள் அவசியப்படுகின்ற மனுதாரராலோ உறுப்பினராலோ அச்சாட்சிக்காரர்களின் பெயர்கள், வதிவிடங்கள் மற்றும் தொழில்களை உள்ளடக்கிய பட்டியலொன்று செயலாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதோடு அச்சாட்சிகளை விசாரிக்க சமுகமளிக்குமாறு செயலாளரால் அச்சாட்சியாளர்களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்படலும் வேண்டும்.

10. (1) நகர சபையின் அலுவல்களுடன் தொடர்புடைய வினாக்கள் தலைவரிடம் கேட்கப்படமுடியும்.

(2) ஏதேனும் வினா தொடர்பில், ஞாயிற்றுக்கிழமையும் அரசாங்க விடுமுறைத் தினங்களும் நீங்கலாக குறைந்தபட்சம் முழுமையாக ஏழு நாட்கள் அவகாசம் கொடுத்தல் வேண்டும்.

(3) ஒவ்வொரு வினாவுக்குமான எழுத்திலான விடையை கூட்டத்தின் போது கூட்டத்தின் தலைவர் வாசித்தல் வேண்டும்.

(4) ஏதேனும் வினா தொடர்பில் உறுப்பினர் ஒருவர் நகர சபையில் உரையாற்றலாகாதென்பதுடன், ஏதேனும் வினாவின் சொற்றொடரில் அவ்வினாவைத் தெளிவுபடுத்திக்கொள்ள அவசியமான அளவினைவிட ஏதேனும் விவாதத்தை அல்லது ஏதாவது நோக்கத்தை உருவாக்கிக்கொள்ளல் அல்லது அபிப்பிராயம் தெரிவித்தல் அல்லது விடயங்களை எடுத்துரைத்தல் உள்ளடங்கலாகாது.

(5) கூட்டத்தில் விடையளிக்கப்பட்ட விடயம் அல்லது சம்பவம் பற்றி மேலும் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக எவரேனும் உறுப்பினரால் குறைநிரப்பு வினா எழுப்பப்பட முடியும். ஆயினும் தனது கருத்திற்கிணங்க ஏதேனும் குறைநிரப்பு வினா மூலமாக வினாக்களின் விடயப்பரப்புடன் தொடர்புடையதாக இந்த துணைவிதியில் இதற்கு முன்னர் உள்ள ஏற்பாடுகள் மீறப்படுமாயின் அவ்வினாவை எழுப்ப இடமளியாமல் இருக்க கூட்டத்தின் தலைவருக்கு இயலுமென்பதோடு, அத்தகைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏற்புடைய குறைநிரப்பு வினா நகர சபையின் கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்படலாகாது.

11. (1) பிரேரணையொன்றைச் சமர்ப்பித்தல் தொடர்பிலான ஒவ்வொரு அறிவித்தலும் எழுத்தில் அமைதல் வேண்டுமென்பதோடு, அந்த அறிவித்தலைச் செய்கின்ற உறுப்பினரால் அது கையொப்பமிடப்பட்டிருத்தலும் வேண்டும். சனி, ஞாயிறு மற்றும் அரசாங்க விடுமுறை நாட்கள் நீங்கலாக நகர சபைக் கூட்டத்திற்கு முன்னர் ஏழு நாட்கள் அவ்வறிவித்தல் செயலாளரின் பொறுப்பில் இருந்தாலன்றி அத்தகைய பிரேரணை ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படல் ஆகாது.

(2) பிரேரணை தொடர்பான சகலவிதமான அறிவித்தல்களும் கிடைக்கின்ற விதத்தில் திகதியும் இலக்கமும் இடப்பட்டு அவை கிடைக்கப்பெற்ற வரிசைக்கிரமத்தில் செயலாளரால் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும்

(3) பிரேரணை பற்றிய ஏதேனும் அறிவித்தல் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட முன்னர் தலைவரிடம் அது சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதோடு, அது ஒழுங்குவிதிகளுக்கு முரணானதென அவர் அபிப்பிராயப்படுவாரெனில். அப்பிரேரணை ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படலாகாதென அவரே பணித்து, அவ்வறிவித்தலைச் செய்த உறுப்பினருக்கு அதுபற்றி அறிவிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(4) அறிவித்தல் மூலமாக செய்யப்படுகின்ற ஒவ்வொரு பிரேரணையும் நகர சபையின் அலுவல்களின் நிர்வாகம் மீது தாக்கமேற்படுத்துகின்ற ஏதேனும் பிரேரணையுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.

(5) முந்திய ஆறு மாதங்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு பிரேரணையையும் முடிவுறுத்துவதற்கான பிரேரணையோ முந்திய ஆறு மாதங்களுக்குள் நிராகரிக்கப்பட்ட பிரேரணையை ஒத்த பெறுபேறுகளைப் பெற்றுத்தருகின்ற வேறு பிரேரணையொன்றையோ சமர்ப்பித்தலானது, அவ்வாறு சமர்ப்பிப்பதாக பிரேரிக்கின்ற உறுப்பினரது கையொப்பத்திற்கு மேலதிகமாக மேலும் நான்கு உறுப்பினர்களின் கையொப்பமிடப்பட்ட அறிவித்தலை விடுத்து. ஒழுங்குப் பத்திரத்தில் அது பற்றித் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருந்தாலேயொழிய இப்பகுதியின் துணைவிதிகளுடன் அமைந்தொழுகுவதாகக் கருதப்படலாகாது. அப்பிரேரணை சம்பந்தமாக உகந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அடுத்த ஆறு மாத காலப்பகுதிக்குள் அதனையொத்த பிரேரணையொன்றை சமாப்பிக்க எந்தவோர் உறுப்பினருக்கும் அதிகாரம் இருத்தலாகாது.

(6) எந்தவொரு பிரேரணையும், முன்மொழியப்பட்டு வழிமொழியப்படும் வரை விவாதத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கருதப்படலாகாது.

(7) எந்தவோர் உறுப்பினருக்கும், தனது ஆசனத்தில் இருந்து எழுந்துநின்று தலைமைப் பீடத்திற்குச் சிரம் தாழ்த்தி, மரியாதை செலுத்துவதன் மூலமாக, விவாதத்தின் பிந்திய கூட்டமொன்றில் உரையாற்ற தனக்குள்ள உரிமைக்குப் பங்கமின்றி, ஏதேனும் பிரேரணையையோ திருத்தத்தையோ முறையாக வழிமொழிய முடியும்.

(8) ஒத்திவைக்கப்பட்டு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ள பிரேரணைகள் தொடர்பாகச் செயலாற்றி முடிந்ததும் உடனடியாக ஒத்திவைக்கப்பட்டு அறிவித்தல் கொடுக்கப்படாத ஏதேனும் பிரேரணையை நகர சபைக்குச் சமர்ப்பிப்பதற்காக சபையின் அனுமதியைக் கோருகின்ற பிரேரணையொன்றை முன்வைக்க உறுப்பினரொருவருக்கு இயலும். இருந்தபோதிலும் முன்னராக அது பிரேரிக்கும் உறுப்பினரால் கையொப்பமிடப்பட்டு செயலாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

(9) பிரேரணையொன்று கூட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டு வழிமொழியப்பட்டு அது தொடர்பான விவாதம் முற்றுப்பெற்ற பின்னர் கூட்டத்தின் தலைவரால் அப்பிரேரணை அங்கீகரிக்கப்படுதல் தொடர்பாக வினா விடுக்கப்படல் வேண்டும்.

12. எவரேனும் உறுப்பினரால் முன்வைக்கப்பட்ட பிரேரணையோ திருத்தமோ நகர சபையினால் கொடுக்கப்பட்ட அனுமதியுடன் அந்த உறுப்பினரால் வாபஸ் பெறப்பட முடியும். அத்தகைய அனுமதியை விவாதமின்றி வழங்க வேண்டும். ஏதேனும் பிரேரணையைச் சமர்ப்பிப்பவரால்

அனுமதி கோரப்பட்ட பின்னர் அவ்வனுமதி நிராகரிக்கப்பட்டாலேயன்றி, அப்பிரேரணை தொடர்பில் உரையாற்ற எந்தவோர் உறுப்பினருக்கும் அதிகாரம் இருத்தலாகாது.

13. வாபஸ் பெறப்பட்ட ஏதேனும் பிரேரணை பின்னர் நடத்தப்படுகின்ற ஏதேனும் கூட்டத்தில் மீண்டும் சமர்ப்பிக்கப்பட முடியும். எனினும் 11 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட ஆறு மாதக் காலப்பகுதிக்குள் ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் பிரேரணைக்கு உள்ளார்ந்த ரீதியில் ஒத்ததாக அமைகின்ற எந்தவொரு பிரேரணையும் சமர்ப்பிக்கப்படல் ஆகாது.

14. (1) பிரேரணைக்கு கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு திருத்தமும் எழுத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதோடு, பிரேரிக்கும் உறுப்பினரால் அத்தகைய எழுத்திலான திருத்தமோ, திருத்தங்களோ செயலாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

(2) பிரேரணைக்கு கொண்டுவரப்படுகின்ற ஒவ்வொரு திருத்தமும் அது சமர்ப்பிக்கப்படுகின்ற தருணத்தில் கலந்துரையாடப்படுகின்ற பிரேரணையுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.

(3) பிரேரணைக்கு கொண்டுவரப்படுகின்ற ஒவ்வொரு திருத்தமும் அது சமர்ப்பிக்கப்பட முன்னர் சபையில் வாசிக்கப்படல் வேண்டும்.

(4) எந்தவொரு திருத்தமும் வழிமொழியப்பட்டாலன்றி கலந்துரையாடப்படலோ நகர சபைக்குச் சமர்ப்பிக்கப்படலோ ஆகாது.

(5) திருத்தமொன்றை முறையாக வழிமொழிந்த உறுப்பினரொருவருக்கு அதன் பின்னர் அது பற்றி உரையாற்ற உரிமை இருத்தல் வேண்டும்.

(6) கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் பிரேரணைக்கான திருத்தத்தை முன்மொழிந்து வழிமொழியப்பட்டுள்ளவிடத்து முதலாவது திருத்தத்திற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு முடியும் வரை இரண்டாவதோ அதற்குப் பிந்திய திருத்தமோ சமர்ப்பிக்கப்படலாகாது. திருத்தமொன்று, அங்கீகரிக்கப்பட்டால் அத்தகைய திருத்திய பிரேரணை மூலப் பிரேரணையின் இடத்தைப் பெறல் வேண்டுமென்பதோடு, தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், அவை அத்தகைய திருத்தப்பட்ட பிரேரணை சம்பந்தப்பட்ட திருத்தங்களாக அமைதல் வேண்டும்.

15. சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயம், பிரச்சினை அல்லது பிரேரணை சம்பந்தமாக, அத்தகைய விடயம், பிரச்சினை அல்லது பிரேரணையை அங்கீகரித்தல் பற்றிய வினா கூட்டத் தலைவரால் விடுக்கப்பட்ட பின்னர் எந்தவோர் உறுப்பினராலும் அப்பிரச்சினை பற்றி தொடர்ந்தும் பேச முடியாது. அத்துடன் ஏதேனும் விடயம், பிரச்சினை அல்லது பிரேரணையை அங்கீகரித்தல் பற்றிக் கூட்டத் தலைவரால் வினா விடுக்கப்பட்ட பின்னரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்படுதல் அல்லது வாக்கொடுப்பு நடைபெற்ற பின்னரும் மேற்படி வினா முழுமையாக விடுக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

16. (1) ஏதேனும் விடயம், பிரச்சினை மற்றும் பிரேரணை அங்கீகரிக்கப்படுதல் பற்றிக் கூட்டத் தலைவரால் வினா விடுக்கப்படல் வேண்டுமென்பதோடு, அவ்வாறு வினா விடுக்கப்பட்ட பின்னர் எந்தவோர் உறுப்பினராலும் அது தொடர்பில் வாக்கெடுப்பு கோரப்படாவிட்டால் அப்பிரேரணை ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும். ஆயினும் அத்தகைய பிரேரணை தொடர்பில் ஏதேனும் உறுப்பினரால் வாக்கெடுப்பு கோரப்படுமாயின் அல்லது இரகசிய வாக்கெடுப்பு கோரப்படுமாயின் கூட்டத் தலைவரால் வாக்கெடுப்பு நடாத்த ஆவன செய்யப்படல் வேண்டும்.

(2) (1) வது பந்தியில் குறிப்பிடப்பட்ட விதத்தில் ஏதேனும் விடயம், பிரச்சினை மற்றும் பிரேரணை சம்பந்தமாக வாக்கெடுப்பு அவசியமாகுமிடத்து -

(i) அத்தகைய வாக்கெடுப்பு இரகசிய வாக்கெடுப்பாக அமையாதவிடத்து, செயலாளரால் 7 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட உறுப்பினர்களின் முந்துரிமை வரிசைக் கிரமப்படி ஒவ்வோர் உறுப்பினரதும் விருப்பம் அந்த உறுப்பினரிடம் தனித்தனியாகக் கேட்கப்பட்டு அதற்கிணங்க வாக்குகளைக் குறிப்பதன் மூலமாக வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டும், இன்றேல்,

(ii) அத்தகைய வாக்கெடுப்பு இரகசிய வாக்கெடுப்பாக அமையுமிடத்து, செயலாளரால் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித்தனியாக விநியோகிக்கப்படுகின்ற வாக்குச்சீட்டு மீது அவ்வுறுப்பினரின் இரகசிய வாக்கினைப் பதியச் செய்வித்து அதற்கிணங்க வாக்குகளை எண்ண வேண்டும்.

(3) (2) வது பந்தியில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் வகையில் செயலாளரால் வாக்கெடுப்பு நடாத்தப்பட்ட பின்னர் மேற்படி விடயம், பிரச்சினை அல்லது பிரேரணை தொடர்பில் நகர சபை மேற்கொள்ளும் அங்கீகாரம் கூட்டத் தலைவரால் பிரகடனஞ் செய்யப்படல் வேண்டும்.

(4) நகர சபையிலோ முழு நகர சபையையும் உள்ளடக்கிய குழுவிலோ ஏதேனும் வினா விடுக்கப்பட்டால் வருகை தந்துள்ள ஒவ்வோர் உறுப்பினரும் தான் வாக்களிப்பதிலிருந்து விலகி நிற்பின் ஒழிய தனது வாக்கினைச் சார்பாகவோ எதிராகவோ அளிக்க வேண்டும்.

(5) வாக்கெடுப்பு கோரப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் எவரேனும் உறுப்பினர் வாக்களிப்பதில் இருந்து விலகி நிற்பின் செயலாளர் அவ்வுறுப்பினரின் பெயரை வாக்களிப்பதிலிருந்து விலகிநின்ற உறுப்பினராக அறிக்கையில் பதிதல் வேண்டும்.

17. ஏதேனும் விடயம், பிரச்சினை அல்லது பிரேரணை சம்பந்தமாக நகர சபையிலோ நகர சபை முழு நகர சபையின் குழுவாக மாறியுள்ள வேளையிலோ ஏனைய உறுப்பினர்களுடன் பொதுவில் கூட்டத்தின் தலைவருக்கும் ஆரம்ப வாக்கு இருத்தல் வேண்டுமென்பதோடு, ஏதேனும் பிரச்சினையின் பேரில் வாக்குகளின் எண்ணிக்கை சமமானதாக அமையின் அறுதியிடும் வாக்கும் அவருக்கு உரித்தாதல் வேண்டும்.

18. ஏதேனும் விடயம், பிரச்சினை அல்லது பிரேரணை தொடர்பில் உடன்படாத உறுப்பினரொருவருக்கு அவ்வாறு உடன்படாமைக்கான காரணங்களை அறிக்கை செய்ய அதிகாரம் இருத்தல் வேண்டுமென்பதோடு, ஆவணமாக அமையவேண்டிய அத்தகைய உடன்பாடின்மை சம்பந்தப்பட்ட கூட்டத்தின் ஒரு வாரத்திற்குள் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டால் செயலாளரால் அத்தகைய கூட்ட அலுவல்கள் பற்றிய அறிக்கையில் அவ்வாறு உடன்படாமைக்கு ஏதுவான காரணங்கள் குறிக்கப்படல் வேண்டும்.

19. 6வது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட விதத்தில் தயாரிக்கப்பட்டவாறு கூட்ட அலுவல்களின் வரிசைக்கிரமத்தில் ஏற்புடைய அலுவல்கள் அனைத்தும் உள்ளடக்கப்படல் வேண்டும். ஏதேனும் சபைக் கூட்டத்தில் பிறிதொரு வரிசைக்கிரமம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலேயொழிய, வேறு துணைவிதியில் குறிப்பிடப்பட்ட வரிசைக்கிரமத்துக்கமைய கூட்ட அலுவல்கள் நடத்தப்படல் வேண்டும்.

20. (1) கூட்டத்தின் ஒழுக்கத்தைப் பாதுகாத்தலானது, கூட்டமொன்றின் தலைவரது கருமமாக அமைதல் வேண்டுமென்பதோடு, கருத்து முரண்பாட்டுக்கு இலக்காகின்ற சகல விதமான ஒழுங்குப் பிரச்சினைகள் தொடர்பிலும் அவரது தீர்மானமே இறுதியானதாக அமைதல் வேண்டும்.

(2) கூட்டமொன்றின் போது இப்பகுதியின் துணைவிதிகளிலான பணிப்புக்களுக்கு முரணாகச் செயற்படுகின்ற உறுப்பினர் எவரேனும் துணைவிதிகளுக்கு அமைவாக நடந்து கொள்ள வேண்டுமென கூட்டத்தின் தலைவர் தனது நெறிப்படுத்தல் மூலமாகவோ பிறிதோர் உறுப்பினரின் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புதலின் பேரிலோ கட்டளையிட முடியும்.

21. ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய பின்னர் அதனை எழுப்பிய உறுப்பினர் அமரவேண்டுமென்பதோடு, கூட்டத்தின் தலைவரால் அப்பிரச்சினை தீர்க்கப்படும் வரை கூட்டத்தில் தலைவரின் அனுமதியுடன் அன்றி வேறு எந்த உறுப்பினரும் உரையாற்றல் ஆகாது. அதன் பின்னர் பிரச்சினையை எழுப்பிய வேளையில் நகர சபையில் உரையாற்றிக்கொண்டிருந்த உறுப்பினருக்கு தான் கூட்டத்தின் தலைவரது, நகர சபையினது அல்லது நகர சபையின் குழுவின் தீர்மானத்திற்கு அமைந்தொழுகுவதாயின் தனது உரையை மீண்டும் தொடர்வதற்கான உரிமை இருத்தல் வேண்டும். அவர் அவ்வாறு அமைந்தொழுகாவிடின் அவருக்கு மீண்டும் உரையாற்றுவதற்கு வாய்ப்பளிப்பதை கூட்டத்தின் தலைவரால் நிராகரிக்க முடியும்.

22. தன்னால் பிரயோகிக்கப்பட்ட தகாத வார்த்தைகள் சம்பந்தமாக விடயங்களை எடுத்துரைக்காத அல்லது அந்த வார்த்தைகளை வாபஸ் பெற்றுக்கொள்ளாத அல்லது அவ்வார்த்தைகளைப் பிரயோகித்தல் பற்றி நகர சபை திருப்தியுறும் வகையில் கவலையைத் தெரிவியக்காத உறுப்பினரைக் குறைகூறுதல் பொருத்தமானதென நகர சபை கருதுகின்ற வேளையில் அவர் தொடர்பாக நகர சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட முடியும்.

23. கூட்டமொன்றில் தலைவர் உரையாற்ற விருப்பம் தெரிவிக்கின்ற வேளையில் அப்போது உரையாற்றிக்கொண்டிருக்கின்ற எவரேனும் உறுப்பினர் உடனடியாக தனது ஆசனத்தில் அமர வேண்டும்.

24. (1) தலைமைப்பீடத்தின் அதிகாரத்திற்கு கட்டுப்படாத அல்லது நகர சபையின் அலுவல்களுக்கு மீண்டும் அத்துடன் வேண்டுமென்றே இடையூறு விளைவிப்பதன் மூலமாக இப்பகுதியின் துணைவிதிகளின் பணிப்புகளுக்க முரணாகச் செயற்படுகின்ற எவரேனும் உறுப்பினர், கூட்டமொன்றின் தலைவரால் பெயர் குறிக்கப்பட இயலுமென்பதோடு, எவரேனும் உறுப்பினராலோ கூட்டத்தின் தலைவராலோ "அந்த உறுப்பினரின் நகர சபை சேவை இடைநிறுத்தப்படல் வேண்டும்" என சமர்ப்பிக்கப்படுகின்ற பிரேரணையின் பேரில் கூட்டத்தின் தலைவரால் உடனடியாக வினா விடுக்கப்படல் வேண்டும். அத்தகைய பிரேரணைக்கு திருத்தஞ் செய்யவோ, ஒத்திவைக்கவோ, விவாதத்திற்கு இடமளித்தல் ஆகாது.

(2) அத்தகைய ஏதேனும் பிரேரணையொன்று அங்கீகரிக்கப்பட்டு இத்துணைவிதிகளின் கீழ் எவரேனும் உறுப்பினரின் சபைச் சேவை இடைநிறுத்தப்பட்டால் முதல் தடவைக்கு அத்தகைய இடைநிறுத்தம் ஒரு மாத காலத்திற்காகவும், இரண்டாவது தடவையாக செய்யப்படுகின்ற இடைநிறுத்தம் இரண்டு மாதங்களுக்காகவும், மூன்றாவது தடவை அல்லது அதற்குப் பிந்திய ஏதேனும் தவறொன்றின் போது செய்யப்படுகின்ற இடைநிறுத்தம் மூன்று மாதங்களுக்காகவும் அமைதல் வேண்டும்.

(3) வருகை தந்துள்ள உறுப்பினர்கள் சிலர் ஒன்று சேர்ந்து கூட்டத்தின் அதிகார பலத்தைப் பொருட்படுத்தாமல் நடந்துகொண்டாலன்றி ஒரு தடவையில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைப் பெயர் குறித்தல் ஆகாது.

(4) இத்துணைவிதியின் கீழ் சபைச் சேவை இடைநிறுத்தப்பட்ட எவரேனும் உறுப்பினர் அல்லது ஒரு சில உறுப்பினர்களை சபா மண்டபத்தில் இருந்து வெளியேறுமாறு கூட்டமொன்றின் தலைவர் விடுத்த கட்டளைக்கு அமைந்தொழுகுதலை, அத்தகைய இடைநிறுத்தல் காலப்பகுதிக்குள் ஏதேனும் சந்தர்ப்பத்தில் மறுத்தால் தனது தீர்மானத்தை அமுலாக்காத உறுப்பினராகப் பெயர் குறித்து பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்வதற்காக அமைச்சரிடம் அறிக்கை செய்ய முடியும்.

25. மீண்டும் மீண்டும் தொடர்பில்லாதவற்றைக் கூறிக்கொண்டோ தானோ அல்லது உறுப்பினர்களோ விவாதத்தின் போது முன்வைத்த விவாதங்களை சபைக்குச் சலிப்புத்தட்டும் வண்ணம் மீண்டும் மீண்டும் கூறுவதில் ஈடுபட்டுள்ள உறுப்பினரது நடத்தை பற்றிக் கவனஞ் செலுத்திய பின்னர் அவரது உரையை நிறுத்துமாறு கூட்டத்தின் தலைவரால் கட்டளையிடப்படலாம்.

26. (1) பாரதூரமான வகையில் ஒழுக்கத்திற்கு முரணாக நடந்துகொள்கின்ற உறுப்பினர்களை நகர சபையின் சபா மண்டபத்தில் இருந்து உடனடியாக நீங்கி அன்றையதின கூட்டத்தின் எஞ்சிய பகுதி நிறைவடையும் வரை வெளியில் இருக்குமாறு கூட்டத்தின் தலைவரால் கட்டளையிடப்படல் முடியும்.

(2) இத்துணைவிதியின் கீழ் தனக்குரிய அதிகாரங்கள் போதுமானதாக இல்லையென ஏதேனும் கூட்டத்தின் தலைவர், ஏதேனும் சந்தர்ப்பத்தில் கருதுவாரெனின் அவரால் 2 வது துணைவிதியின் (4) வது உப பந்தியின் பணிப்புக்களுக்கிணங்க செயலாற்றப்பட முடியும்.

27. 24 வது துணைவிதியின் (1) வது பந்தியின் கீழ் சேவை இடைநிறுத்தப்பட்ட அல்லது 24 வது துணைவிதியின் (4) வது பந்தியின் கீழ் வெளியேறுமாறு பணிக்கப்பட்ட உறுப்பினர்கள் நகர சபா மண்டபத்தில் இருந்து உடனடியாக நீங்க வேண்டும்.

28. ஏதேனும் பிரச்சினை சம்பந்தமாக மேற்கொள்ளப்படுகின்ற கலந்துரையாடலை ஒத்திவைக்குமாறு உறுப்பினரொருவர் எந்நேரத்திலும் பிரேரணை முன்வைக்க முடியும். அப்பிரேரணை வழிமொழியப்பட்டால் அது பற்றி உடனடியாக வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டும். கூட்டமொன்றில் பாரதூரமான ஒழுக்கமீறல் தோன்றிய சந்தர்ப்பத்தில், கூட்டம் ஒத்திவைக்கப்படல் வேண்டுமென கூட்டத்தின் தலைவர் அபிப்பிராயப்படின் ஒத்திவைத்தல் பற்றிய வினாவின்றியே கூட்டத்தை அவரால் பணிக்கப்படுகின்ற காலப்பகுதிக்கு ஒத்திவைக்கவோ இடைநிறுத்தவோ முடியும்.

29. நகர சபையிலோ ஒட்டுமொத்தமான நகர சபையின் குழுவிலோ பரிசீலனை செய்யப்படுகின்ற விடயம் சம்பந்தமாக உரையாற்றும் போது கீழே காட்டப்பட்ட பணிப்புக்களைத் தீவிரமாக கடைப்பிடித்தல் வேண்டும் :-

(அ) கூட்டத்தின் போது ஒவ்வோர் உறுப்பினரும் கூட்டத்தின் தலைவரை விளித்து உரையாற்ற வேண்டுமென்பதோடு, குழு நிலை தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் எழுந்து நின்று உரையாற்றல் வேண்டும்.

(ஆ) எந்தவோர் உறுப்பினரும் உரையாற்றுகையில் இப்பகுதியின் துணைவிதிகளின் பணிப்புக்களுக்கு முரணாயின் ஒழிய அவரைக் குறுக்கீடு செய்தல் ஆகாது.

(இ) எவரேனும் உறுப்பினர் தனது உரையை நிகழ்த்தி முடிந்ததும் தனது ஆசனத்தில் அமர வேண்டும். அவ்வேளையில் சபையில் உரையாற்ற விரும்புகின்ற வேறொரு உறுப்பினர் உரையாற்றுதல் வேண்டும்.

(ஈ) எவரேனும் உறுப்பினர் தனது உரையைக் குறித்துக்கொண்ட உரையாக வாசித்தல் ஆகாது. ஆயினும் தனது வாதங்களை நிரூபிக்கும் பொருட்டு எழுத்திலான அல்லது அச்சிடப்பட்ட கட்டுரைகளில் இருந்து மேற்கோள் காட்டுவதற்காக பிரித்தெடுத்த பகுதியை அவர் வாசிக்க முடியும்.

(உ) கூட்டமொன்றில் ஒரே நேரத்தில் இரண்டு உறுப்பினர்களுக்கு உரையாற்ற அவசியமேற்படின், கூட்டத்தின் தலைவரால் தான் கண்ணுற்ற முதலாவது உறுப்பினரை உரையாற்றுமாறு அறிவிக்கலாம்.

(ஊ) ஒவ்வோர் உறுப்பினரும் தனது அவதானிப்புரைகளை கவனத்திற்கொள்ளப்படுகின்ற விடயப்பரப்பிற்கு மாத்திரம் வரையறுக்க வேண்டும்.

(எ) ஒவ்வோர் உறுப்பினராலும் பிறிதோர் உறுப்பினர் மீது முறையற்ற வகையில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படல் ஆகாது,

(ஏ) தனிப்பட்ட விடயங்கள் சார்ந்த சகலவிதமான உரைகளையும் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும்.

(ஐ) உறுப்பினரொருவரால் நகர சபையின் எதிரில் உள்ள பிரச்சினை பற்றியோ அதற்கான ஏதேனும் திருத்தங்கள் பற்றியோ உரையாற்றப்படலாம்.

(ஒ) ஒழுங்குப் பிரச்சினை பற்றித் தான் குற்றமற்றவர் என்பதற்கான விளக்கங்களைக் கூற அவசியமேற்படுகின்ற சந்தர்ப்பத்திலோ, நகர சபை குழுவாக மாறியுள்ள சந்தர்ப்பத்திலோ அன்றி எந்தவோர் உறுப்பினரும் நகர சபையின் எதிரில் உள்ள விடயம் பற்றி ஒரு தடவைக்கு மேலாக உரையாற்றுதல் ஆகாது.

(ஓ) சபையின் எதிரில் பிரச்சினையொன்று இல்லாதிருப்பினும்கூட உறுப்பினரொருவரால் நகர சபையின் விருப்பத்துடன் தனிப்பட்ட தன்மையிலான விளக்கமளித்தலை மேற்கொள்ள முடியும். ஆயினும் அவரது செயற்பாடுகளை தவறற்றதென நிரூபிப்பதற்காக மாத்திரம் அத்தகைய விளக்கமளித்தல் வரையறுக்கப்படல் வேண்டுமென்பதோடு, அவ்விடயம் விவாதத்திற்கு உள்ளடக்கப்படல் ஆகாது.

(ஔ) ஏதேனும் பிரேரணை அங்கீகரிப்பின் அல்லது பிரேரணையின் முன்மொழிபவரால், சமுகமளித்துள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் அந்தப் பிரேரணை அங்கீகரிப்பு அல்லது பிரேரணை பற்றி நகர சபையில் உரையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்பட்ட பின்னரும் சபைக்கு வினா விடுக்கப்பட முன்னரும் விடையளிக்கப்பட முடியும். ஆயினும் அவரது உரையானது முன்னர் உரை நிகழ்த்திய பேச்சாளர்களுக்கு விடையளிப்பதற்காக மாத்திரம் வரையறுக்கப்பட வேண்டுமென்பதோடு, விவாதத்திற்கான புதிய விடயங்களை சமர்ப்பிப்பதாக அமைதல் ஆகாது. தொடர்ந்தும் அவ்வாறே விடையளிப்பதற்கான உரிமையானது திருத்தமொன்றினை முன்மொழிபவருக்கு உரித்தாதல் ஆகாது.

30. (1) நகர சபையினால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரேரணை வழிமொழிவின் மூலமாக ஒட்டுமொத்தமான நகர சபையையும் குழுவாக மாற்ற முடியும். ஆயினும் அதே விதத்திலான பிரேரணை வழிமொழிவின் மூலமாக அக்குழுவினை மீண்டும் பேரவை நிலைக்கு கொண்டுவந்த பின்னர் அத்தகைய குழு நிலையில் கலந்துரையாடிய விடயங்களின் பெறுபேறுகள் பற்றி நகர சபையினால் தீர்மானமொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(2) ஒட்டுமொத்தமான நகர சபையின் குழுவின் ஏதேனும் கலந்துரையாடல்கள் நடைபெறுகின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நகர சபை மீண்டும் பேரவை நிலைக்குச் செல்ல வேண்டுமென பிரேரிப்பதற்கான அதிகாரம் எந்தவோர் உறுப்பினருக்கும் உண்டு. ஒட்டுமொத்தமான நகர சபையின் குழுவினது கூட்டத் தலைவரால் வினா மீதான வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டுமென்பதோடு, பிரேரணை அங்கீகரிக்கப்பட்டால் நகர சபை உடனடியாக குழு நிலையில் இருந்து பேரவை நிலைக்குச் செல்ல வேண்டும்.

31. (1) நகர சபையின் ஏதேனும் கருமத்திற்காக, சபையினால் பொருத்தமானதெனக் கருதப்படுகின்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய அல்லது அரைப்பகுதி உறுப்பினர்களையும் அரைப்பகுதி மாநகரத்தின் ஏனைய வாசிகளையும் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் நகர சபையினால் காலத்திற்குக் காலம் நியமிக்கப்பட வேண்டும்.

(2) மேற் கூறப்பட்டவாறு நியமிக்கப்பட்ட அத்தகைய அலோசனைக் குழுவினால் அதனை நியமித்த ஆண்டின் நிறைவுக்குப் பின்னர் அதன் ஏதேனும் பணிகள் ஈடேற்றப்பபடலாகாது.

(3) அத்தகைய ஆலோசனைக் குழுவினது ஒவ்வொரு கூட்டத்தினதும் கூட்ட நடப்பெண் அக்கூட்டம் நடத்தப்படுகின்ற தினத்தில் பதவி வகிக்கின்ற ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர்கள் எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்காதல் வேண்டும். அத்தகைய உறுப்பினர்களின் எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்கு முழு எண்ணின் பின்னமாக அமைகின்ற சந்தர்ப்பத்தில் அத்தகைய முழு எண்ணின் பின்னத்திற்கு அதிகமான அடுத்த முழு எண் அத்துணைவிதியின் கருமங்களுக்கான மூன்றிலொரு பங்காக கருதப்படல் வேண்டும்.

(4) ஏதேனும் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கூட்டத்திற்குச் சமுகமளித்திராத சந்தர்ப்பத்தில் சமுகளித்துள்ள உறுப்பினர்களால் அவ்வுறுப்பினர்கள் மத்தியில் இருந்து ஒருவரை மேற்படி குழுவின் தவிசாளராக தெரிவு செய்துகொள்ளல் வேண்டுமென்பதோடு அவ்வுறுப்பினருக்கு அந்த ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கொண்டுள்ள சகல விதமான அதிகாரங்களும் இருத்தல் வேண்டும்.

(5) ஆலோசனைக் குழுவொன்று ஏதேனும் அறிக்கைக்கு உடன்பட்டிருப்பின், அவ்வறிக்கையில் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் கையொப்பமிடல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஆலோசனைக் குழுவின் அலுவல்களை உள்ளடக்கிய அறிக்கையுடன் நகர சபைக்குச் சமாப்பிக்கப்படல் வேண்டும்.

(6) ஆலோசனைக் குழுக் கூட்டங்களின் போது செய்தித்தாள் நிருபர்களுக்கு பிரவேசிக்க இடமளித்தல் ஆகாது.

32. நகர சபையின் நிதி மற்றும் கொள்கைகள் பற்றிய ஆலோசனைக் குழுவின் செயலாளராக நகர சபையின் செயலாளர் பணியாற்ற வேண்டுமென்பதோடு ஏனைய ஆலோசனைக் குழுக்களின் செயலாளராகப் பணியாற்ற நகர சபையின் எவரேனும் உத்தியோகத்தரை நியமிக்க வேண்டியது தலைவரின் கடமையாகும்.

33. நகர சபையின் ஒவ்வோர் ஆலோசனைக் குழுவினதும் அலுவல்கள் பற்றிய அறிக்கைகளைப் பேணிவருதல் மேற்படி ஆலோசனைக் குழுவின் செயலாளரது கடமையாக அமைதல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு குழு அறிக்கையும் அடுத்துறும் நகர சபையின் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

34. நகர சபையின் கூட்டங்களுக்கு வருகைதந்ததும் செயலாளரின் பொறுப்பில் உள்ள வரவுப் பதிவேட்டில் உறுப்பினர்கள் அனைவரும் வருகைதந்த வரிசைக்கிரமத்தில் பெயர், வந்த நேரம் மற்றும் கையொப்பத்தைப் பதிதல் வேண்டுமென்தோடு அப்பதிவேடு செயலாளரது கட்டுக்காப்பில் வைக்கப்படலும் வேண்டும்.

35. ஏதேனும் ஆலோசனைக் குழுக் கூட்டங்களுக்கு வருகை தந்ததும் மேற்படி ஆலோசனைக் குழுவின் செயலாளரின் பொறுப்பில் உள்ள பதிவேட்டில் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் வருகைதந்த வரிசைக்கிரமத்தில் பெயர், வந்த நேரம் மற்றும் கையொப்பத்தைப் பதிதல் வேண்டுமென்பதோடு, அப்பதிவேடு ஆலோசனைக் குழுவின் செயலாளரது கட்டுக்காப்பில் வைக்கப்படலும் வேண்டும்.

36. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில் -

''தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்'' என்பது, தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகத்தைக் கருதுவதோடு ஏதேனும் நகர சபையின் தெரிவத்தாட்சி உத்தியோகத்தரும் அதில் உள்ளடங்குதல் வேண்டும்.

''கூட்டத்தின் தலைவர்'' என்பது, அப்போதைக்கு நகர சபைக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கின்ற நகர சபையின் தலைவரையோ அவர் இல்லாத சந்தர்ப்பத்தில் தலைமை வகிக்கின்ற உபதலைவரையோ கருதுவதோடு, தலைவரும் உபதலைவரும் இல்லாத ஏதேனும் சந்தர்ப்பத்தில், அன்றைய தினக் கூட்டத்தில் தலைமை வகிப்பதற்காக உறுப்பினர்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படுகின்ற வேறு எவரேனும் உறுப்பினரும் அதில் அடங்குதல் வேண்டும்.

''ஒலிப்பதிவு நாடா'' என்பது, இயந்திர மூலமாக பதிவு செய்யப்பட்ட ஏதேனும் ஒலியைக் களஞ்சியப்படுத்தக்கூடிய இறுவட்டுக்களும் தரவுகளைக் களஞ்சியப்படுத்தக்கூடிய வேறு ஏதேனும் விதத்திலான சாதனமும் அதில் அடங்குதல் வேண்டும்.

### பாகம் V

### மீன் விற்பனை பற்றிய துணை விதிகள்

1. இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் மீன் விற்பனையை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. எவரேனும் ஆளொருவர் விற்பனை நிலையமல்லாத வேறு ஏதேனும் இடத்தில் தலைவரால் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமின்றி மீன் விற்பனைக்காக இடமொன்றைப் பாவித்தல் ஆகாது.

3. அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளக் கோருகின்ற விற்பனை நிலையம் இங்கு கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் அமைந்தொழுகினாலேயன்றி தலைவரால் எந்தவோர் ஆளுக்கும் மீன் விற்பனை நிலையமொன்றைக் கொண்டுநடாத்துவதற்கான அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.

(அ) விற்பனைக்காக மீன்களைக் காட்சிக்கு வைக்கப்படுகின்ற நிலையம், மாபிள் ஓடுகள் அல்லது சீமெந்து சாந்து பூசப்பட்டு அல்லது துருப்பிடியாத உலோகத் தகடுகள் போடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) மீன் விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்படும் நிலையத்தின் தரை மற்றும் களஞ்சியப்படுத்தும் இடத்தின் தரை, சீமெந்து சாந்து பூசப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(இ) கழிவு நீர் பாய்ந்தோடுவதை வசதிப்படுத்துவதற்கு அவசியமான சரிவினைக் கொண்டதாக சீமெந்து சாந்து பூசப்பட்ட அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்ட வடிகான்களைக் கொண்டிருந்தல் வேண்டும்.

(ஈ) (இ) பந்தியில் குறிப்பிட்ட வடிகான்களின் ஊடாக பாய்ந்து செல்கின்ற கழிவுநீர், ஏதேனும் பொது நீர்வழியில் பாய்ந்து செல்வதைத் தடுக்கப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், மேற்போந்த கழிவு நீர் உறிஞ்சிக்கொள்ளக்கூடிய கிடங்கில் பாய்ந்து செல்ல ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

(உ) கழிவு நீர் பாய்ந்தோடுவதற்காக அமைக்கப்பட்ட உறிஞ்சக்கூடிய கிடங்கு, வளிக்கு திறந்ததாக இருத்தல் ஆகாது.

(ஊ) மீன் விற்பனை நிலையத்திலிருந்து அகற்றப்படுகின்ற உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்களை இடுவதற்கு போதுமானளவு பாத்திரங்களை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், அன்றாட வியாபார நடவடிக்கைகள் முடிவடைந்ததும் அக்கழிவுப் பொருட்களை தரைமட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 0.5 மீற்றர் ஆழத்தில் புதைத்தல் அல்லது நகர சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்டு விதிக்கப்படுகின்ற விதிகளுக்கு அமைவாக நகர சபையின் குப்பை சேகரித்தல் வாகனத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(எ) விற்பனை செய்யும் இடத்தில் பணியாற்றும் ஆட்களின் உபயோகத்திற்காக போதியளவு நீரடைக்கப்பட்ட மலசலகூட வசதிகள் இருத்தல் வேண்டுமென்பதோடு, மலசலகூட பாவனையின் பின்னர் பாவனைக்குகந்த துப்பரவு ஏற்பாட்டு முறைகளும் பொருட்களும் விநியோகிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

4. அனுமதிப் பத்திரம் பெற்ற எந்தவொரு மீன் விற்பனை நிலையத்திலும் நாளாந்த நடவடிக்கைகளின் இறுதியில், அவ்விடத்தின் தரையும் சுவர்களும் மாபிள் ஓடுகள் பதித்த அல்லது சிமெந்து சாந்து பூசப்பட்ட பகுதிகளும், மீன் வெட்டுவதற்கு உபயோகிக்கப்படுகின்ற மரக்குற்றிகளும் உபகரணங்களும், மீன் விற்பனையின் பொருட்டு மீன்கள் காட்சிக்கு வைக்கும் இடங்களும் கிருமிநாசினித் திரவங்களை உபயோகித்து சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

5. இலையான்கள், பூச்சிகள் அல்லது வேறு ஏதேனும் பிராணிகள் உட்புகாதவாறு நன்றாக மூடிவைக்கக்கூடிய வாகனத்தில் அல்லது பெட்டியில் அல்லது வேறு ஏதேனும் பாத்திரத்தில் மூடி எடுத்துச்செல்வதாயின் அன்றி எந்த ஒரு ஆளும் எந்தவொரு மீன் வகையையும் எடுத்துச் செல்லுதல் ஆகாதென்பதுடன், அத்தகைய மீன்களை கொண்டு சென்ற பின்னர் அவ்வாறு மீன்களைக் கொண்டு செல்வதற்காக பாவிக்கப்பட்ட வாகனம், பெட்டிகள் அல்லது ஏனைய பாத்திரங்களை கிருமிநாசினிகளை உபயோகித்து நன்றாகக் கழுவுதல் வேண்டும்.

6. அனுமதிப் பத்திரம் பெற்ற எந்தவொரு மீன் விற்பனை நிலையத்திலும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள வடிகான்களும். மீன்களைக் களஞ்சியப்படுத்துதல், தயாரித்தல் அல்லது விற்பனை சம்பந்தமாக உபயோகிக்கப்படுகின்ற சகலவிதமான பாத்திரங்களும் உபகரணங்களும் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்டும் துர்நாற்றமின்றியும் வைக்கப்படல் வேண்டும்.

7. அனுமதிப் பத்திரம் பெற்ற இடத்தில் நாளாந்த வியாபார நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் விற்பனை செய்ய இயலாமல் எஞ்சியுள்ள மீன்கள் மிகைக்குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தப்படுமாயின் அவை களஞ்சியப்படுத்தப்பட்ட தருணத்தில் இருந்து அடுத்த நாளன்று மீன் விற்பனை நிலையம் திறக்கப்படும் தருணம் வரை மேற்படி மிகைக்குளிரூட்டி உரிய வகையில் இயங்கினாலன்றி எஞ்சியுள்ள எந்தவொரு வகையைச் சேர்ந்த மீனையும் அடுத்த நாளில் விற்கவோ விற்பனைக்காகக் காட்சிக்கு வைக்கவோ அல்லது மிகைக்குளிரூட்டியிலோ அல்லது அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் வைத்திருத்தலோ ஆகாது.

8. அனுமதிப் பத்திரம் பெற்ற இடத்தில் மீனை வைத்திருக்க அல்லது விற்பனை செய்ய உபயோகிக்கும் உபகரணங்கள் அல்லது பாத்திரங்கள் தவிர்ந்த வேறேதேனும் பண்டத்தை அல்லது உடையை அல்லது நித்திரை செய்யும் பாய் அல்லது வேறு பொருளை வைத்திருத்தல் ஆகாது.

9. அனுமதிப் பத்திரம் பெற்ற எந்தவொரு மீன் விற்பனை நிலையங்களை நாய்கள், பூனைகள், எலிகள் அல்லது பூச்சிகள் உட்புகாதவாறு வைத்திருத்தல் வேண்டும்.

10. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு மீன் விற்பனை நிலையத்திலும் எவ்வகையான வியாபாரத்திலும் அல்லது அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் மீன் விற்பனை செய்யும் இடத்தில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) மீன் விற்பனை செய்யும் இடத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் கடமையாகும்.

11. மீன் விற்பனை நிலையத்தில் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக் கவசம் மற்றும் அவசியமான வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதலும், அவ்வூழியர் மீன் விற்பனை செய்யும் இடத்தில் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

12. அனுமதிப் பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைவரினதும் பாவனையின் பொருட்டு சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் ஆகியவற்றை வைத்திருத்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

13. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசோதிப்பதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, மீன் விற்பனை செய்யும் இடத்தில் மீன் விற்பனை செய்யப்படும் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

14. (அ) அனுமதிப் பத்திரம் பெற்ற இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள் -

(i) உயிர்ச்சிதைவு கழிவுப் பொருட்கள் ;

(ii) கண்ணாடிப் பொருட்கள் ;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள் ;

(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் ;

(vii) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களையும் இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

(ஆ) மேலே (அ) பிரிவில் கூறியவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், நகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி தலைவரால் பணிக்கப்பட்டவாறு இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

15. தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் மீன் விற்பனை செய்யும் இடத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள அல்லது விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள அல்லது உள்ளே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் மீன் வகையின் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவராலும் அத்தகைய கொள்வனவை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

16. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் மீன் விற்பனை நிலையத்தையும் கொண்டுநடாத்தப்படும் இடம் 3 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய நிலவுதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தலைவர் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

17. 16 வது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தலைவருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

18. 17 வது துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை தலைவரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

## பாகம் VI

### இறைச்சி விற்பனை பற்றிய துணை விதிகள்

1. இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் இறைச்சி விற்பனையை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. எவரேனும் ஆளொருவர் விற்பனை நிலையமல்லாத வேறு ஏதேனும் இடத்தில் தலைவரால் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமின்றி இறைச்சி விற்பனைக்காக இடமொன்றைப் பாவித்தல் ஆகாது.

3. அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளக் கோருகின்ற விற்பனை நிலையம் இங்கு கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் அமைந்தொழுகினாலேயன்றி தலைவரால் எந்தவோர் ஆளுக்கும் இறைச்சி விற்பனை நிலையமொன்றைக் கொண்டுநடாத்துவதற்கான அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது :-

(அ) விற்பனைக்காக இறைச்சி காட்சிக்கு வைக்கப்படுகின்ற நிலையம், மாபிள் ஓடுகள் அல்லது சீமெந்து சாந்து பூசப்பட்டு அல்லது துருப்பிடியாத உலோகத் தகடுகள் போடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இறைச்சி விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்படும் நிலையத்தின் தரை மற்றும் களஞ்சியப்படுத்தும் இடத்தின் தரை சீமெந்துச் சாந்து பூசப்பட்டோ அல்லது தரை ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(இ) கழிவு நீர் பாய்ந்தோடுவதை வசதிப்படுத்துவதற்கு அவசியமான சரிவினைக் கொண்டதாக சீமெந்துச் சாந்து பூசப்பட்ட அல்லது தரை ஓடுகள் பதிக்கப்பட்ட வடிகான்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) (இ) பந்தியில் குறிப்பிட்ட வடிகான்களின் ஊடாக பாய்ந்து செல்கின்ற கழிவுநீர், ஏதேனும் பொது நீர் வழியில் பாய்ந்து செல்வதைத் தடுக்கப்போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், மேற்போந்த கழிவு நீர் உறிஞ்சிக்கொள்ளக்கூடிய கிடங்கில் பாய்ந்து செல்ல ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

(உ) கழிவு நீர் பாய்ந்தோடுவதற்காக அமைக்கப்பட்ட உறிஞ்சக்கூடிய கிடங்கு, வளிக்கு திறந்ததாக இருத்தல் ஆகாது.

(ஊ) இறைச்சி விற்பனை நிலையத்திலிருந்து அகற்றப்படுகின்ற உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்களை இடுவதற்கு போதுமானளவு பாத்திரங்களை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், அன்றாட வியாபார நடவடிக்கைகள் முடிவடைந்ததும் அக்கழிவுப் பொருட்களை தரைமட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 0.5 மீற்றர் ஆழத்தில் புதைத்தல் அல்லது நகர சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்டு விதிக்கப்படுகின்ற விதிகளுக்கு அமைவாக நகர சபையின் குப்பை சேகரித்தல் வாகனத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(எ) விற்பனை செய்யும் இடத்தில் பணியாற்றும் ஆட்களின் உபயோகத்திற்காக போதியளவு நீரடைக்கப்பட்ட மலசலகூட வசதிகள் இருத்தல் வேணடுமென்பதுடன், மலசலகூட பாவனையின் பின்னர் பாவனைக்குகந்த துப்பரவு ஏற்பாட்டு முறைகளும் பொருட்களும் விநியோகிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

4. ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய முறையான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ள ஊன் வினைஞர் நிலையத்தில் அறுக்கப்படும் ஏதேனும் விலங்கின் இறைச்சி அன்றி, எந்தவோர் இறைச்சி விற்பனை நிலையத்திலும் விற்பனைக்காக அல்லது விற்பனையின் பொருட்டு காட்சிக்கு வைத்தல் எந்தவோர் ஆளினாலும் மேற்கொள்ளப்படல் ஆகாது.

5. இலையான்கள், பூச்சிகள் அல்லது வேறு ஏதேனும் பிராணிகள் உட்புக முடியாதவாறு நன்றாக மூடிவைக்கக்கூடிய வாகனத்தில் அல்லது பெட்டியில் அல்லது வேறு ஏதேனும் பாத்திரத்தில் மூடி எடுத்துச்செல்வதாயின் அன்றி எந்த ஒரு ஆளும் எந்தவொரு இறைச்சி வகையையும் எடுத்துச் செல்லுதல் ஆகாதென்பதுடன், அத்தகைய இறைச்சியை கொண்டு சென்ற பின்னர் அவ்வாறு இறைச்சியைக் கொண்டு செல்வதற்காக பாவிக்கப்பட்ட வாகனம், பெட்டிகள் அல்லது ஏனைய பாத்திரங்களை கிருமிநாசினிகளை உபயோகித்து நன்றாகக் கழுவுதல் வேண்டும்.

6. அனுமதிப்பத்திரம் பெற்ற எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையத்திலும் நாளாந்த நடவடிக்கைகளின் இறுதியில், அவ்விடத்தின் தரை மற்றும் சுவர்களில் மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்ட அல்லது சீமெந்துச் சாந்து பூசப்பட்ட பகுதிகளும், இறைச்சி வெட்டுவதற்கு உபயோகப்படுத்தப்படும் மரக்குற்றிகளும் உபகரணங்களும், இறைச்சி விற்பனையின் பொருட்டு இறைச்சி காட்சிக்கு வைக்கும் இடங்களும் கிருமிநாசினித் திரவங்களை உபயோகித்து சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

7. அனுமதிப்பத்திரம் பெற்ற எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையத்திலும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள வடிகான்களும் இறைச்சி களஞ்சியப்படுத்துதல், தயாரித்தல் அல்லது விற்பனை சம்பந்தமாக உபயோகிக்கப்படுகின்ற சகலவிதமான பாத்திரங்களும் உபகரணங்களும் சிறப்பாகப் பழுதுபார்க்கப்பட்டும் துர்நாற்றமின்றியும் வைக்கப்படல் வேண்டும்.

8. அனுமதிப்பத்திரம் பெற்ற இறைச்சி விற்பனை நிலையத்தில் நாளாந்த வியாபார நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் விற்பனை செய்ய இயலாமல் எஞ்சியுள்ள இறைச்சி மிகைக்குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தப்படுமாயின் அவை களஞ்சியப்படுத்தப்பட்ட தருணத்தில் இருந்து அடுத்த நாளன்று இறைச்சி விற்பனை நிலையம் திறக்கப்படும் தருணம் வரை மேற்படி மிகைக்குளிரூட்டி உரிய வகையில் இயங்கினாலன்றி எஞ்சியுள்ள எந்தவொரு வகையைச் சேர்ந்த இறைச்சியும் அடுத்த நாளில் விற்கவோ விற்பனைக்காகக் காட்சிக்கு வைக்கவோ அல்லது மிகைக்குளிரூட்டியிலோ அல்லது அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் வைத்திருத்தல் ஆகாது.

9. எந்தவோர் விலங்கு அறுக்கும் நிலையத்தில் ஏதேனுமோர் நாளில் இறைச்சிக்காக விலங்குகளைக் கொல்லுதல் தடை செய்யப்பட்டோ அல்லது ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் அதிகாரங்களின் பிரகாரம் முறையான அதிகாரியால் கட்டளையொன்றை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்தில் எந்தவோர் இறைச்சிக் கடையிலும் விற்பனைக்காக இறைச்சியை வைத்திருத்தல் அல்லது விற்பனைக்காக இறைச்சியைக் காட்சிக்கு வைத்திருத்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் ஆகாது.

10. அனுமதிப்பத்திரம் பெற்ற எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையத்திலும் நாய்கள், பூனைகள், எலிகள் அல்லது பூச்சிகள் உட்புகாதவாறு வைத்திருத்தல் வேண்டும்.

11. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் இறைச்சி வைத்திருக்க அல்லது விற்பனை செய்ய உபயோகிக்கும் உபகரணங்கள் அல்லது பாத்திரங்கள் தவிர்ந்த வேறேதேனும் பண்டத்தை அல்லது உடையை அல்லது நித்திரை செய்யும் பாய் அல்லது வேறு பொருளை வைத்திருத்தல் ஆகாது.

12. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளோரின் பாவனையின் பொருட்டு குடிப்பதற்கு உகந்த போதுமானளவு நீரை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

13. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையத்திலும் எவ்வகையான வியாபாரத்திலும் அல்லது அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவிச் சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் இறைச்சி விற்பனை செய்யும் இடத்தில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) இறைச்சி விற்பனை செய்யும் இடத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் கடமையாகும்.

14. இறைச்சி விற்பனை நிலையத்தில் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக் கவசம் மற்றும் தேவைப்படும் வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதலும், அவ்வூழியர் இறைச்சி விற்பனை செய்யும் இடத்தில் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

15. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைவரினதும் பாவனையின் பொருட்டு சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் ஆகியவற்றை வைத்திருத்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

16. தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் இறைச்சி விற்பனை செய்யும் இடத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள அல்லது விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள அல்லது உள்ளே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் இறைச்சி வகையின் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவராலும் அத்தகைய கொள்வனவை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

17. (அ) அனுமதிப் பத்திரம் பெற்ற இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள் -

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;

(ii) கண்ணாடிப் பொருட்கள் ;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள் ;

(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின்போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் ;

(vii) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

(ஆ) மேலே (அ) பிரிவில் கூறியவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், நகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி தலைவரால் பணிக்கப்பட்டவாறு இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

18. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசோதிப்பதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, இறைச்சி விற்பனை செய்யும் இடத்தில் இறைச்சி விற்பனை செய்யப்படும் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

19. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் இறைச்சி விற்பனை நிலையம் கொண்டு நடாத்தப்படும் இடம் 3 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய நிலவுதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தலைவர் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

20. 19 வது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தலைவருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

21. 20 வது துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை தலைவரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

## பாகம் VII

### குளிர்பானத் தொழிற்சாலைகள் பற்றிய துணை விதிகள்

1. இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் குளிர்பானத் தொழிற்சாலைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. தலைவரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமின்றி குளிர்பானத் தொழிற்சாலையொன்றைக் கொண்டுநடாத்துதல் ஆகாது.

3. இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

4. இப்பகுதியின் துணை விதிகளில் கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, தலைவரால் எந்தவோர் ஆளுக்கும் குளிர்பானத் தொழிற்சாலையொன்றைக் கொண்டுநடாத்துவதற்கான அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது :-

(1) தொழிற்சாலை நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் கொண்டுநடாத்தப்படுதல் வேண்டும்.

(2) தொழிற்சாலையின் சகல கட்டடங்களும் நல்ல காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் கிடைக்கப்பெறும் வகையில் அமைதல் வேண்டும். எல்லா அறைகளுக்கும் திறந்து வைக்கக்கூடிய யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, திறக்கும் போது அந்த ஜன்னல்களின் பரப்பளவு அறையின் தரைப்பகுதியின் பரப்பளவின் பதினைந்திலொரு பங்குக்குக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

(3) எல்லா அறைகளினதும் சுவர்களின் ஆகக்குறைந்த உயரம் 2.14 மீற்றர்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டுமென்பதுடன், அச்சுவர்கள் செங்கற்கள், சீமெந்து அல்லது கபூக் கற்களால் கட்டப்பட்டவையாயின் அவை சீமெந்துச் சாந்து பூசப்பட்டிருக்க வேண்டுமென்பதோடு, உட்பக்கங்களுக்கு வர்ணப்பூச்சு பூசப்படுதலும் வேண்டும். இல்லையேல் அலுமினியம் அல்லது வேறு உலோகப் பொருட்களுடன் மரப்பலகைகளை உபயோகித்து சுவர்கள் நிர்மாணிக்கப்பட்டால் மரப் பலகைமீது வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) கூரை நிலையான பொருட்களை உபயோகித்து வேயப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, கூரையின் ஓரம் நில மட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 02 மீற்றர் உயரத்தில் இருப்பதுடன், தாழ்வாரம் ஆகக்குறைந்தது ஒரு மீற்றராகவும் இருத்தல் வேண்டும்.

(5) கூரைக்கு உபயோகிக்கப்பட்ட இரும்பு, வேறு உருக்கு அல்லது மரங்களுக்கு மேற்புறத்தில் எண்ணைச் சாயம் அல்லது வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) தரை சீமெந்திடப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(7) குளிர்பான தயாரிப்புக்கென உபயோகிக்கப்படும் அறைகளில், வெற்றுப் போத்தல்களைக் கழுவுதல் மற்றும் ஊழியர்களின் குளியல் அறைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரை தடையின்றி பாய்ந்தோடுவதற்கு போதுமானளவு வடிகான் முறைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(8) குளிர்பான தயாரிப்புக்கு பாவிக்கும் சிரப் வகைகள், வேறு இரசாயனப் பொருட்கள், குளிர்பானங்களைத் தயாரிக்க உபயோகப்படுத்தும் போத்தல்கள் அல்லது வேறு ஏதேனும் பாவனைப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கென குறைந்தது, ஒரு தனியான அறை இருத்தல் வேண்டுமென்பதோடு, அந்த அறை எலிகள் மற்றும் வேறு பூச்சி பிராணிகள் நுழையாதவாறு பேணுவதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(9) குளிர்பானங்கள் தயாரிப்பதற்கு உபயோகிக்கும் நீர் மனித பாவனைக்கு உகந்தது என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் வழங்கப்பட்ட தரச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதோடு, இத்தரச் சான்றிதழ் குறைந்தது ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் பெறப்படல் வேண்டும். தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் வழங்கப்படும் நீர் குளிர்பானங்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுமேயானால் அப்படியான தரச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

(10) குளிர்பானத் தொழிற்சாலைக்கும் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட கருமங்களுக்கும் பாவிக்கப்படும் நீரைக் களஞ்சியப்படுத்தி வைப்பதாயின், அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கப்படும் நீர் அசுத்தமாவதைத் தடுப்பதற்குப் போதுமானளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(11) வெற்றுப் போத்தல்களைக் கழுவுவதற்குரிய இடம் குளிர்பானங்கள் தயாரிக்கும் அறைகளிலிருந்து தனிவேறான ஒரு இடத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், மேலே (9) ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு தரச் சான்றிதழ் வழங்கப்பட்ட நீரையே அதற்காகப் பாவித்தல் வேண்டும்.

(12) குளிர்பான தொழிற்சாலையின் கருமங்களிலிருந்து பிறப்பிக்கப்படும் கழிவுப் பொருட்கள் 14 வது துணை விதியில் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தி அகற்றுவதற்கேதுவாக தனித்தனியான பாத்திரங்கள் அல்லது தொட்டிகள் இருத்தல் வேண்டும்.

(13) குளிர்பான தொழிற்சாலை ஊழியர்களுக்காக குறைந்தது பத்துப் பேருக்கு ஒரு மலசலகூடம் வீதம் இருத்தல் வேண்டுமென்பதோடு, பெண்கள் மற்றும் ஆண்களுக்கென தனிவேறான மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும், அத்துடன் அம்மலசலகூடங்கள் குளிர்பானங்கள் தயாரிக்கும் அறைகளிலிருந்து குறைந்தது 15 மீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

(14) குளிர்பானங்கள் தயாரிக்கப்படும் எந்தவொரு அறை அல்லது அதற்காகப் பாவிக்கப்படும் நீர், நிலத்துக்கடியிலுள்ள நீர்த் தொட்டியில் களஞ்சியப்படுத்துவதாயின் அவ்விடத்திலிருந்து 18 மீற்றருக்குக் குறைந்த தூரத்தில் குப்பைக் கிடங்கு, பசளைக் கிடங்கு அல்லது சாம்பல் கிடங்கு இருத்தல் ஆகாது.

5. நான்காவது துணை விதியின் (3) ஆம் (4) ஆம் பிரிவுகளில் காட்டப்பட்டுள்ளவாறு வர்ணப்பூச்சு பூசுவதற்கென குறிப்பிடப்பட்ட பகுதிகள், குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசப்படுதல் வேண்டும்.

6. குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கு உபயோகிக்கும் எல்லா அறைகளையும் தினந்தோறும் ஒரு தடவையேனும் கழுவுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

7. குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கு உபயோகிக்கும் எல்லா அறைகளும் அவற்றின் சுற்றாடல், வடிகான்கள், மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் சுத்தமாகவும் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

8. குளிர்பானத் தயாரிப்பு தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் குளிர்பான வகைகளை பொதியிடுவதற்கு உபயோகிக்கும் போத்தல்களைச் சுத்தஞ் செய்கையில் -

(அ) அப்போத்தல்களில் முன்னர் ஒட்டப்பட்டிருந்த லேபிள்களை அகற்றுவதற்கும் முதற்தடவைச் சுத்திகரிப்புக்கும், ஒரு தொட்டியும்; அத்துடன்

(ஆ) அந்த போத்தல்களை இறுதியாகச் சுத்தஞ் செய்வதற்கு பிறிதொரு தொட்டியும் என குறைந்த பட்சம் இரண்டு தொட்டிகள் பாவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவற்றை இறுதியாக ஓடும் நீரில் சுத்தம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

9. குளிர்பான பொதியிடலுக்காக கண்ணாடியால் தயாரிக்கப்பட்ட போத்தல்கள் தவிர்ந்த வேறு ஏதேனும் பொதியிடல் வகை அல்லது பொதியிடல் வகைகள் உபயோகிக்கப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய பொதியிடல் வகையானது ஒரு தடவை மாத்திரம் பாவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவை சுகாதார பாதுகாப்பு மிக்க பொருட்களால் தயாரிக்கப்பட்ட பொதியிடல் வகையென்பதை உறுதி செய்துகொள்ளல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாக இருத்தல் வேண்டும். இச்செயற்பாட்டின் போது அத்தகைய பொதியிடல் பொருட்களை உற்பத்தி செய்பவரால் அல்லது பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வழங்கப்படும் எழுத்து மூலமான சான்றிதழ் போதுமானதெனக் கருதப்படல் வேண்டும்.

10. குளிர்பானங்கள் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படும் சிரப் வகைகள் மற்றும் ஏனைய இரசாயனப் பொருட்களின் காலாவதியாகும் தினம், போதியளவு எதிர்காலத்தைக் கொண்டிருந்தாலன்றி, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப்பொருட்களை குளிர்பானங்களைத் தயாரிக்க உபயோகித்தல் ஆகாது.

11. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையத்திலும் எவ்வகையான வியாபாரத்திலும் அல்லது அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் குளிர்பானத் தொழிற்சாலையில் எவ்வகையிலுமான பணியிலும் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) குளிர்பான தொழிற்சாலையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் கடமையாகும்.

12. குளிர்பானங்கள் தயாரிப்பில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக் கவசம் மற்றும் தேவைப்படும் வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதலும், அவ்வூழியர் குளிர்பான தயாரிப்பு பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

13. குளிர்பானங்கள் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படும் சிரப் மற்றும் ஏனைய இரசாயனப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு ஊடுருவமுடியாத அத்துடன் இலகுவாக சுத்தஞ் செய்யக்கூடிய பாத்திரங்கள் உபயோகிக்கப்படல் வேண்டுமென்பதுடன், அப்பொருட்கள் குளிர்பானங்களைத் தயாரிப்பதற்காக, குளிர்பானங்கள் தயாரிக்கும் அறையில் வைத்திருக்க வேண்டுமே தவிர அவற்றை களஞ்சியப்படுத்தும் இடத்திற்கு வெளியே வைத்திருத்தல் ஆகாது.

14. (அ) அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள் -

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;

(ii) கண்ணாடிப் பொருட்கள் ;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள் ;

(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் ;

(vii) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

(ஆ) மேலே (அ) பிரிவில் கூறியவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், நகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி தலைவரால் பணிக்கப்பட்டவாறு இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

15. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசோதிப்பதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, தொழிற்சாலையில் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

16. தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் குளிர்பான தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் குளிர்பான வகையின் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவராலும் அத்தகைய கொள்வனவு செய்வதை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

17. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் குளிர்பான தொழிற்சாலை கொண்டுநடாத்தப்படும் இடம் 4 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய நிலவுதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தலைவர் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

18. 17 வது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தலைவருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

19. 18 வது துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை தலைவரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

20. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில் -

"குளிர் பானம்" என்பது, பழங்கள், எசன்ஸ், சிரப் போன்ற அனைத்தையும் அல்லது ஒரு வகையை உபயோகித்து தயாரிக்கப்படுகின்றதும் போத்தல்களில் அல்லது வேறு பொதியிடல் வகையில் பொதியிடப்படுகின்ற பானங்கள் எனக் கருதப்படுவதுடன் சோடா பானமும் இதில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

## பாகம் VIII

### சிகை அலங்கார நிலையங்கள், நாவிதர் சாப்புகள் மற்றும் சலூன்கள் அத்துடன் உடல்வனப்புக்கலை நிலையங்கள் பற்றிய துணைவிதிகள்

1. இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் சிகை அலங்கார நிலையங்கள், நாவிதர் சாப்புகள் மற்றும் சலூன்கள் அத்துடன் உடல்வனப்புக்கலை நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. தலைவரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமின்றி சிகை அலங்கார நிலையமொன்றை, நாவிதர் சாப்பொன்றை சலூனொன்றை அல்லது உடல்வனப்புக்கலை நிலையமொன்றைக் நடாத்துதல் ஆகாது.

3. இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

4. (அ) இப்பகுதியின் துணை விதிகளின் (ஆ) மற்றும் (இ) பிரிவுகளில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, தலைவரால் எந்தவோர் ஆளுக்கும் சிகை அலங்கார நிலையம், நாவிதர் சாப்பு மற்றும் சலூன் அத்துடன் உடல்வனப்புக்கலை நிலையமொன்றைக் கொண்டுநடாத்துவதற்கான அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.

(ஆ) சிகை அலங்கார நிலையம், நாவிதர் சாப்பு மற்றும் சலூன் அல்லது உடல்வனப்புக்கலை நிலையமொன்றைக் கொண்டுநடாத்துவதற்கு எண்ணியுள்ள கட்டடம் அல்லது கட்டிடத்தின் பாகம் -

(i) திடகாத்திரமாக முடிவுறுத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒரு வாடிக்கையாளருக்கு சேவை வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் அளவு ஆகக் குறைந்தது 1.5 மீற்றருக்கு குறையாதவாறு ஒரு சந்தர்ப்பத்தில் சேவை வழங்கும் வாடிக்கையாளரின் எண்ணிக்கைக்கேற்ற அளவிலான இடவசதி இருத்தல் வேண்டும் ;

(ii) சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு வருகைதரும் எந்தவோர் வாடிக்கையாளருக்கும், சேவையைப் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்கள் அமர்ந்திருக்கும் இடத்திலிருந்து குறைந்தது 1.5 மீற்றர் தூரம் இடைவெளி உள்ளவாறு இலகுவாக அமர்ந்திருப்பதற்கு போதியளவு இடவசதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) உள்ளடங்குகின்ற சுவர்கள் சக்திவாய்ந்த பொருட்களால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தலும் வேண்டும் ;

(iv) உள்ளடங்குகின்ற கூரை மரத்தினால் அல்லது உறுதியான பொருட்களால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, குறைந்த பட்சம் நிலமட்டத்திலிருந்து 2.25 மீற்றர் உயரத்தைக் கொண்ட உட்கூரையைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் உட்கூரைக்கு வெள்ளை நிற வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(v) உட்புறத் தரை சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டுமென்பதுடன், சுவரும் தரையும் சேரும் இடங்களை சுத்தப்படுத்துவதை இலகுவாக்கும் வகையில் வளைவு வடிவத்தில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(vi) உட்புறம் குளிராக்கிகள் பொருத்தப்படாத கட்டிடமொன்றாயின், அதன் தரையின் பரப்பளவின் பதினைந்திலொரு பங்கிற்குக் குறையாத யன்னல்கள் பொருத்தப்படல் வேண்டுமென்பதுடன், போதியளவு வெளிச்சத்தைப் பெறக்கூடிய ஏற்பாடுகளையும் செய்திருத்தல் வேண்டும் ;

(vii) உட்புறம் குளிராக்கிகள் பொருத்தப்பட்ட கட்டிடம் ஒன்றாயின் போதியளவு மின்சார வெளிச்சம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(viii) வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்குகையில் கழுவுவதற்காக நீர் உபயோகப்படுத்தப்படின், அதற்கேதுவாக பேசின் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், பாவனையின் பின்னர் கழிவு நீர் பாய்ந்தோடுவதற்கு போதியளவு நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ix) உள்ளே பாவித்து அப்புறப்படுத்தப்படும் கழிவு நீர் உறிஞ்சக்கூடிய கிடங்கினுள் பாய்ந்தோடுவதற்கு வழியமைத்தல் வேண்டுமென்பதோடு, பொது நீர் மார்க்கங்களுக்கு பாய்ந்தோடாதவாறு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

(x) உட்புறம் அல்லது வளவினுள் நீரடைக்கப்பட்ட மலசலகூட வசதிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(xi) உட்புறம் வீட்டுச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படல் ஆகாதென்பதுடன், வீடொன்றாக உபயோகிக்கும் பாகத்திலிருந்து தனிவேறாக இருத்தல் வேண்டும்.

(இ) சிகை அலங்கார நிலையங்கள், நாவிதர் சாப்புகள் மற்றும் சலூன்கள் அத்துடன் உடல்வனப்புக்கலை நிலையங்கள் -

(i) வாடிக்கையாளர்களுக்காக திறந்திருக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் போதியளவு நீர் வழங்கல் ;

(ii) சேவைகளை மேற்கொள்கையில் உபயோகிக்கும் உபகரணங்கள் மற்றும் கருவிகளைக் கிருமி நீக்கும் பொருட்டு போதுமானளவு நீரைக் கொதிக்க வைக்கும் முறையொன்று அல்லது கிருமி நீக்கும் முறையொன்று அத்துடன் கிருமி நீக்கும் பொருட்டு பாவிப்பதற்குப் போதியளவு பாத்திரங்கள் ;

(iii) உள்ளே பணிபுரிபவர்களுக்கு அவர்களின் சேவைகளை மேற்கொள்ளும் பொழுது கைகளைக் கழுவிக்கொள்ள வசதியாக பேசின் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் ;

(iv) வாடிக்கையாளரின் உபயோகத்திற்காக வெள்ளை நிறமுடைய அல்லது வேறு இளநிறங்களைக் கொண்ட ஆனால் கடும் நிறங்கள் அல்லாத துவாய்கள் மற்றும் போதியளவு எண்ணிக்கைகொண்ட மேலாடைக் கவசங்கள் ;

(v) உள்ளே வெட்டப்படும் சிகை மற்றும் ஏனைய கழிவுப் பொருட்களைப் போடுவதற்கான நன்றாக மூடக்கூடிய மூடியைக் கொண்டதும் அங்குமிங்கும் கொண்டுசெல்லக்கூடியதுமான பாத்திரங்கள் ;

(vi) உள்ளே மின்சாரத்தின் மூலம் இயங்கும் உபகரணங்கள் உபயோகிக்கப்படுவதாயின், வாடிக்கையாளரின் மேசை ஒவ்வொன்றிலும் குறைந்த பட்சம் ஒரு பாதுகாப்பு மின்சாரப் பிளக் வீதம் ;

(vii) பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரால் பணிக்கப்பட்டவாறு போதியளவு முதலுதவி உபகரணங்களும் மருந்துகளுடன்கூடிய முதலுதவிப் பெட்டியொன்று. வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. இப்பிரிவின் துணைவிதியின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட எல்லா நிலையங்களிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்களுக்கு, பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரால் சிபாரிசு செய்யப்படும் அளவிலான முதலுதவிப் பயிற்சியொன்றும் ஆகக்குறைந்தது வருடத்திற்கொரு தடவை வீதம் முதலுதவி ஒத்திகையும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. இப்பிரிவின் துணைவிதிகளுக்கமைய அனுமதிப்பத்திரம் பெற்ற அனைத்து ஆட்களாலும் 4 வது துணை விதியின் (ஆ) பிரிவில் குறிப்பிட்டவாறு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட இடத்தில் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமெனப் பணிக்கப்பட்ட இடங்கள் ஆகக் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசப்படுதல் வேண்டும்.

7. இப்பிரிவின் துணைவிதிகளுக்கமைய அனுமதிப்பத்திரம் பெற்ற அனைத்து ஆட்களாலும் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ள இடத்தின் தரை ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது கிருமிநாசினிகள் உபயோகித்து கழுவப்படுதல் வேண்டும்.

8. இப்பிரிவின் துணைவிதிகளுக்கமைய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ள இடத்தைப் பகல் அல்லது இரவு வேளைகளில் நித்திரை செய்யும் அல்லது உணவு உண்ணும் இடமாகப் பாவித்தல் ஆகாதென்பதோடு, வேறு எந்தவோர் ஆளையும் அவ்வாறு பாவிக்க இடமளித்தல் ஆகாது.

9. இப்பிரிவின் துணைவிதிகளுக்கமைய அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள இடத்தினுள் உணவு சமைத்தல் அல்லது உணவு விற்பனை அல்லது விற்பனைக்காக உணவைக் காட்சிக்கு வைத்தல் ஆகாது.

10. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையத்திலும் எவ்வகையான வியாபாரத்திலும் அல்லது அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட இடத்தில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் கடமையாகும்.

11. ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் வாடிக்கையாளருக்கு சேவை வழங்கிய பின்னர் -

(அ) அவ்வாறு சேவை வழங்கிய ஆள் ஏதேனும் கிருமிநாசினி திரவத்தை உபயோகித்து தமது இரு கைகளையும் சுத்தம் செய்த பின்னர் அன்றி வேறு எந்தவொரு வாடிக்கையாளருக்கும் பணியாற்றுதல் அல்லது சேவையாற்ற இடமளித்தல் ஆகாது.

(ஆ) அவ்வாறு வாடிக்கையாளருக்கு பாவித்த எவ்வகையான உபகரணமும் கிருமி நீக்கப்பட்டிருந்தாலேயன்றியும் பாவித்த துவாய் மற்றும் மேலாடைக் கவசங்கள் கிருமிநாசினி அல்லது சவர்க்காரம் உபயோகித்து கழுவப்பட்டிருந்தாலேயன்றியும், வேறு எவரேனும் வாடிக்கையாளருக்கு பாவித்தலோ அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளித்தலோ ஆகாது.

12. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல ஊழியரும் -

(அ) தினந்தோறும் நீராடிய அல்லது குளித்த பின்னர் மாத்திரமே சேவையில் ஈடுபடுகின்றனர் என்பனையும்

(ஆ) அணியும் ஆடை அணிகள் சுத்தமாகவும் சுகாதார நிலையிலும் உள்ளன என்பதையும்

(இ) நகங்களைக் கட்டையாக வெட்டி சுத்தமாக வைத்திருக்கின்றனர் என்பதையும்

(ஈ) ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் பணி தொடங்குவதற்கு முன்னர் சவர்க்காரம் உபயோகித்து கைகளைக் கழுவிக்கொள்கின்றனர் என்பதையும் ;

உறுதி செய்துகொள்ளல் அனுமதிப்பத்திரதாரரின் கடமையாகும்.

13. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் -

(அ) உபகரணங்கள் பாவிக்கப்படும் ஒவ்வொரு தடவையின் பின்னரும் கிருமி நீக்கம் செய்தலையும் ;

(ஆ) தூரிகைகள் மற்றும் சீப்பு போன்றவை ஒவ்வொரு நாளும் பாவனைக்கு முன்னர் நன்றாகக் கழுவிச் சுத்திகரித்து கிருமி நீக்கம் செய்தலையும் ;

(இ) சகல பேணிகள், கோப்பைகள் மற்றும் சவர்க்காரத் தூரிகைகள் போன்றவை, பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு தடவையின் பின்னரும் கொதிநீரில் அமிழ்த்தி கழுவுதலையும் உறுதி செய்துகொள்ளல் அனுமதிப்பத்திரதாரரின் கடமையாகும்.

14. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேவையைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு வாடிக்கையாளரினதும், -

(அ) சிகை அல்லது சவரஞ் செய்கையில் அப்புறப்படுத்தப்படும் வெட்டப்பட்ட மயிர்த் துண்டுகள் அல்லது வேறு கழிவுப் பொருட்களை கூட்டித் துப்புரவாக்கியோ அல்லது மின்சார மூலம் உறுஞ்சி இழுக்கும் இயந்திரத்தின் மூலம் சேகரித்து அதற்காக ஒதுக்கப்பட்ட பாத்திரத்தில் இடுதலையும் ; அத்துடன்

(ஆ) சிகை அல்லது சவரஞ் செய்வதற்கு உபயோகிக்கப்படும் சவரக் கத்தியில் சவர பிளேடுகளை மாற்றுதலையும்

உறுதி செய்துகொள்ளல் அனுமதிப்பத்திரதாரரின் கடமையாகும்.

15. நாளாந்த நடவடிக்கைகளின் முடிவில் அல்லது தேவைப்படின் நாளொன்றுக்குப் பல தடவைகள் என்றவாறு வெட்டப்பட்ட மயிர்த் துண்டுகள் உள்ளிட்ட பாத்திரத்திலுள்ள கழிவுப் பொருட்கள் ஆகக் குறைந்தது நிலத்தில் ஒரு மீற்றருக்குக் குறையாத ஆழத்தில் புதைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் கடப்பாடாகும். அவ்வாறு அப்புறப்படுத்தப்படும் வெட்டப்பட்ட மயிர்த் துண்டுகள் அல்லது வேறு கழிவுப் பொருட்கள் காற்றில் பறந்து செல்லல் அல்லது சுற்றாடலில் ஏதேனும் பொது இடத்திற்கு பறந்து செல்வதைத் தடுக்கும் நடவடிக்கை எடுத்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் கடமையாகும்.

16. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேரும் வெட்டப்பட்ட மயிர்த் துண்டுகள் மற்றும் ஏனைய கழிவுப் பொருட்கள் 15 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டவாறு அகற்றுவதற்கு இயலாத சந்தர்ப்பத்தில் நகர சபையின் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ நடைமுறையின் கீழ் பணிக்கப்பட்டவாறு நகர சபையின் குப்பை சேகரித்தல் வாகனத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

17. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உபயோகிக்கப்படும் பாத்திரங்களை அவற்றிலுள்ள கழிவுப் பொருட்களை அகற்றிய பின்னர் சுத்தஞ் செய்து கிருமிநாசினி இடுதல் அனுமதிப்பத்திரதாரரின் கடமையாகும் :-

18. ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில்,

(அ) ஏதேனும் வகையில் அல்லது குருதி நிறுத்தல் பென்சில் அல்லது பவுடர் தடவும் தூரிகை அல்லது வேறு பொருட்கள் ;

(ஆ) எந்தவொரு குருதிப்பாய்வை நிறுத்தும் செயலுக்காக சீனக்காரம் அல்லது வேறு திரவம், அவை தூளாக அல்லது திரவமாக இருந்தாலன்றி எந்தவோர் வாடிக்கையாளரின் பொருட்டு பாவித்தல் அல்லது பாவிப்பதற்கு இடமளித்தல் ஆகாது.

*19.* எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அனுமதிப்பத்திரம் பெறுநரால் சுத்தமான நிலையில் அல்லாத மேலாடைக் கவசங்கள் அல்லது கழுவிய பின்னர் முதற் தடவையாகப் பாவிக்கும் துவாய் அல்லாத ஏதேனும் துவாய் அல்லது மேலாடைக் கவசமாக வாடிக்கையாளரின் பாவனைக்காக உபயோகித்தல் ஆகாது.

*20.* இப்பிரிவின் துணைவிதிக்கு அமைய அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திற்கு விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட கருமங்களைத் தவிர்ந்த வேறு எந்தவொரு கருமத்தையும் தலைவரின் எழுத்து மூலமான அனுமதி இருந்தால் அன்றி செய்தல் ஆகாது.

*21.* இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசோதிப்பதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கும் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

*22.* இப்பிரிவின் துணை விதிகளுக்கமைய அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் இடத்தில் 4 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய நிலவுதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தலைவர் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

*23.* 22 வது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தலைவருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

*24.* 23 வது துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திர உரிமையாளரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை தலைவரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

*25.* பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில் -

''மேலாடைக் கவசம்'' என்பது, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேவையைப் பெற்றுக்கொள்ளும் எவரேனும் வாடிக்கையாளரின் உடலின் மேற்பகுதியை மூடுவதற்காக உபயோகிக்கும் ஏதேனும் போர்வைத் துணியெனக் கருதப்படும்.

## *பாகம் IX*

## வெதுப்பகங்கள் (பேக்கறி) பற்றிய துணை விதிகள்

*1.* இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் வெதுப்பகங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

*2.* தலைவரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் நகர சபை பிரதேசத்தினுள் வெதுப்பகமொன்றை நடாத்துதல் ஆகாது.

*3.* இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

*4.* இத்துணைவிதியில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, எந்தவொரு வெதுப்பகத்திற்கும் தலைவரால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.

(அ) வெதுப்பகத்தில் தயாரிக்கப்படும் உணவு வகைகளுக்கு வெப்பத்தைப் பெற்றுக்கொள்ளும் எதுவாகவிருந்தாலும் இப்பிரிவில் காட்டப் பட்டுள்ள பிரமாணங்களைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(i) தொழிற்சாலை நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் இருத்தல் வேண்டும்.

(ii) வெதுப்பகத்தின் அனைத்து அறைகளுக்கும் வெளியில் திறந்துவைக்கக்கூடிய ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், திறந்திருக்கும் சன்னலின் பரப்பளவு அறையின் பரப்பளவின் பதினைந்திலொன்றுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும்.

(iii) அனைத்து அறைகளும் உட்கூரை நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், வெள்ளை நிற வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தலும் வேண்டும்.

(iv) அனைத்து அறைகளினதும் தரை சீமெந்திட்டு மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடு பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(v) வெதுப்பகத்தின் சூளை அமைந்திருக்கும் அறை நில மட்டத்திலிருந்து உட்கூரை வரை ஆகக்குறைந்தது 3 மீற்றர் உயரம் இருத்தல் வேண்டுமென்பதுடன், செங்கல் அல்லது சீமெந்துக் கல் அல்லது கபூக் கல் அல்லது அலுமினியம் மற்றும் வெட்டுமரத்தினால் நிர்மாணித்து இருபக்கங்களும் சாந்து பூசப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) வெதுப்பகத்தின் சூளை அமைந்திருக்கும் அறை தவிர்ந்த ஏனைய எல்லா அறைகளும் நில மட்டத்திலிருந்து உட்கூரை மட்டம் வரை ஆகக் குறைந்தது 2.75 மீற்றர் உயரம் இருத்தல் வேண்டுமென்பதுடன், செங்கல் அல்லது சீமெந்துக் கல் அல்லது கபுக் கல் அல்லது அலுமினியம் மற்றும் வெட்டுமரத்தினால் நிர்மாணித்து இருபக்கங்களும் சாந்து பூசப்பட்டு வர்ண மை பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(vii) வெதுப்பகத்தினுள் வெட்டுமரம் கொண்டு பொருத்தப்பட்ட பாகங்களுக்கு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) கூரை திடமான பொருட்களை உபயோகித்து வேயப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, கூரையின் ஓரம் நில மட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 1.8 மீற்றர் உயரத்தில் இருப்பதுடன், தாழ்வாரம் ஆகக்குறைந்தது ஒரு மீற்றராகவும் இருத்தல் வேண்டும்.

(ix) தயாரிப்புச் செயற்பாடுகளின் பொருட்டு குடிப்பதற்குகந்த நீரை பாவிப்பதற்கான ஏற்பாடுகளை செய்திருத்தல் வேண்டும்.

(x) தயாரிப்புச் செயற்பாடுகளின் பொருட்டு நீரைப் பாவிக்கும் அனைத்து அறைகளுக்கும் பாதுகாப்பான நீர் வழங்கல் குழாய் மூலம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, வெளியேற்றப்படும் கழிவு நீர் பாய்ந்தோடுவதற்கு போதியளவு வடிகான் முறை தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(xi) வெளியேற்றப்படும் கழிவு நீரை உறிஞ்சியிழுக்கக்கூடிய கிடங்கிற்கு பாய்ந்தோடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

8 வது துணை விதியில் பணிக்கப்பட்டுள்ளவாறு கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தும் நடைமுறைகளைச் செய்திருத்தல் வேண்டும்.

(ஆ) அனுமதிப்பத்திரத்தைக் கோரும் வெதுப்பகம் விறகை உபயோகிக்கும் வெதுப்பகம் ஆயின்,

(i) வெதுப்பகத்தின் சூளையில் அமையும் புகைபோக்கியின் மேல் விளிம்பு குறைந்த பட்சம் நில மட்டத்திலிருந்து 7.5 மீற்றர் உயரத்தைக் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

(ii) மாவைப் பிசையும் எல்லா மேசைகளினதும் மேற்புறம் சிதைவுகள் இன்றி செம்மையாக இருத்தல் வேண்டுமென்பதுடன், பலகை இணைப்புக்களுக்கு இடையில் இடைவெளியின்றி, பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். இன்றேல் துருப்பிடிக்காத உலோகத் தகட்டினால் இடைவெளிகள் இன்றி மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) வெதுப்பகத்திலிருந்து வெளியாகும் எரிந்த சாம்பல் மற்றும் எஞ்சிய விறகுத் துண்டுகளை அகற்றுவதற்கு போதுமானளவு அங்கும் இங்கும் கொண்டு செல்லக்கூடிய பாத்திரமொன்று இருத்தல் வேண்டும்.

(iv) வெதுப்பக சூளையின் வெளிப்புறம் வர்ணப்பூச்சு பூசப்பட்டோ அல்லது சுண்ணாம்புப் பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) சாதாரண தீ அணைக்கும் கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் வெதுப்பகத்திற்கு மின்சாரத் தொடர்பைப் பெற்றிருப்பின் மேலதிகமாக மின்சார தீ அணைப்பு கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) அனுமதிப்பத்திரத்தைக் கோரும் வெதுப்பகம் மின்சாரத்தினால் இயங்கும் வெதுப்பகம் ஆயின் -

(i) வெதுப்பக உபகரணங்களுக்கு மின்சாரத் தொடர்பை ஏற்படுத்தும் மின் பிளக்குகள் பாதுகாப்பான நிலையில் இருத்தல் வேண்டுமென்பதுடன், மிகை வோல்ற்றளவு ஏற்படும் சந்தர்ப்பத்திலோ அல்லது மின்ஒழுக்கின் போதோ தன்னிச்சையாக மின்சார இணைப்பகற்றும் உபகரணங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) வெதுப்பகத்தின் வளவில் பொருத்தப்பட்டுள்ள மின் சுற்றுக்களின் மின் கம்பிகளிலிருந்து மின்ஒழுக்குகள் ஏற்படாதவாறு குழாய்கள் அல்லது பெட்டிகளினுள் பொருத்தப்படல் வேண்டுமென்பதுடன், வெளியில் பாதுகாப்பற்ற மின் கம்பிகளின் முனைகள் இருத்தல் ஆகாது.

(iii) சாதாரண தீ அணைக்கும் கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேணடும்.

5. வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென 4 வது துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ள அனைத்து பாகங்களுக்கும் ஆகக் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசப்படுதல் வேண்டும்.

6. மா பிசைதலுக்காக உபயோகிக்கப்படும் அனைத்து அறைகளின் தரையை, தினந்தோறும் குறைந்த பட்சம் ஒரு தடவையேனும் கழுவுவதற்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

7. வெதுப்பகம் மற்றும் அதன் சுற்றாடலில், வடிகான்கள், மரத்தளபாடங்கள் மற்றும் கருவிகள் சுத்தமாகவும் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலைமையில் வைத்திருத்தல் வேண்டும்.

8. வெதுப்பக தயாரிப்புகளுக்காக உபயோகிக்கும் மா மற்றும் ஏனைய பொருட்களின் காலாவதியாகும் திகதி போதியளவு எதிர்காலத்தைக் கொண்டிருந்தாலேயன்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப்பொருட்கள் வெதுப்பக தயாரிப்பு நடவடிக்கைகளுக்காக உபயோகிக்கப்படல் ஆகாது.

9. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் ஏதேனும் கருமங்களில் அல்லது அத்தகைய கருமங்களில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட இடத்தில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட இடத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் கடமையாகும்.

10. வெதுப்பகத்தில் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக் கவசம் மற்றும் தேவைப்படும் வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதலும், அவ்வூழியர் வெதுப்பகக் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப் பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

11. (அ) அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள் -

(i) உயிர் சிதைவுக் கழிவுப் பொருட்கள்

(ii) கண்ணாடிப் பொருட்கள்

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள் ;

(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் ;

(vii) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களைச் இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

(ஆ) மேலே (அ) பிரிவில் கூறியவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், நகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி தலைவரால் கட்டளையிடப்பட்டவாறு இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

12. வெதுப்பக தயாரிப்புகளுக்காக மனித உபயோகத்திற்குப் பொருந்தாத நீரை உபயோகித்தல் ஆகாது.

13. வெதுப்பக பாவனைக்காக மா மற்றும் வேறு பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு, அதற்கென்றே ஒதுக்கப்பட்ட அறையொன்றை உபயோகித்தல் வேண்டுமென்பதோடு, அந்த அறை காற்றோட்டமுள்ளதும் இலையான்கள் அல்லது பிற பூச்சிகள், வண்டுகள் மற்றும் எலிகள் புகாதவாறு பாதுகாப்புடன் கூடியதாக இருத்தல் வேண்டும்.

14. 13 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள களஞ்சிய அறையில் மாவைக் களஞ்சியப்படுத்துகையில், ஆகக் குறைந்தது நிலமட்டத்திலிருந்து 20 சென்றி மீற்றர் உயரமுடைய கால்களைக் கொண்ட பலகைத்தட்டொன்றை உபயோகித்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய பலகைத்தட்டு வெறுமையானதும் அங்கும் இங்கும் எடுத்துச் செல்லக்கூடியவாறு முழுநிறைவு செய்யப்பட்டிருத்தலும் வேண்டும். அதேபோன்று அந்த பலகைத் தட்டுகளின் அடியில் எலிகளுக்கோ அல்லது வேறேதேனும் பூச்சிகளுக்கோ தரித்திருக்க முடியாதவாறு மூடப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, குறைந்த பட்சம் சுவரிலிருந்து 23 சென்றி மீற்றர் தூரத்தில் இருத்தல் வேண்டும்.

15. 14 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பலகைத்தட்டு ஆகக்குறைந்தது மாதத்திற்கு இரண்டு தடவை என்றவாறு அறையிலிருந்து வெளியே எடுத்து சுத்தப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாகும்.

*16.* இப்பிரிவின் துணைவிதிக்கமைய அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட எந்தவொரு இடத்திலும், எந்தவோர் ஆளும் நித்திரை செய்தல் ஆகாதென்பதோடு, வெதுப்பகச் செயற்பாடுகளுக்காக உபயோகிக்கப்படும் உபகரணங்கள் அல்லது பொருட்கள் தவிர்ந்த வேறு எந்தவிதமான பொருட்களை வைத்தல் அல்லது களஞ்சியப்படுத்துதல் ஆகாது. எனினும் வெதுப்பகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேறாக ஒதுக்கப்பட்டுள்ள ஓய்வெடுக்கும் அறை அல்லது சாப்பாட்டறை இதில் உள்ளடங்காததாதல் வேண்டும்.

*17.* வெதுப்பகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் பொருட்டு குறைந்தது பத்துப்பேருக்கு ஒன்றென்ற வகையில் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டுமென்பதுடன், பெண்கள் மற்றும் ஆண்களுக்கென வெவ்வேறாக மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும், அத்துடன் மலசலகூடங்கள் வெதுப்பக அறைகளிலிருந்து குறைந்தது 15 மீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

*18.* வெதுப்பக செயற்பாடுகளுக்காக பாவிக்கப்படும் நீர், நிலத்துக்கடியிலுள்ள நீர்த் தொட்டியில் களஞ்சியப்படுத்துவதாயின் அவ்விடத்திலிலுந்து 18 மீற்றருக்குக் குறைந்த தூரத்தில் குப்பைக் கிடங்கு, பசளைக் கிடங்கு அல்லது சாம்பல் கிடங்கு இருத்தல் ஆகாது.

*19.* வெதுப்பகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சுத்தமான நீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தப்படுத்தும் தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் போன்றவை வழக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*20.* எந்தவோர் ஆளும் வெதுப்பகத்தினுள் புகை பிடித்தல் அல்லது வெற்றிலை சப்புதல் அல்லது வேறு ஏதேனும் பொருளைச் சப்புதல் அல்லது உணவு உண்ணுதல் ஆகாது.

*21.* இப்பிரிவின் துணைவிதிக்கமைய அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள எல்லா இடங்களிலும் நன்றாகப் பார்க்கக்கூடிய இடத்தில் அங்கீகரிக்கப்பட்ட தராசுப்படிகளைக் கொண்ட தராசு அல்லது வேறு ஏதேனும் வகையான அங்கீகரிக்கப்பட்ட தராசினை வைத்தலும், எவரேனும் ஒரு வாடிக்கையாளரினால் கோரப்படும் போது விற்பனைக்கு அல்லது விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள எந்தவொரு வெதுப்பகத் தயாரிப்பினதும் நிறையை அளந்து பார்ப்பதற்கோ அல்லது நிறையை அளந்து காட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப் பத்திரம் பெறுநரின் பணியாகும்.

*22.* எந்தவொரு வெதுப்பகத்திலும் தயாரிக்கப்படும் தயாரிப்புகளை அனுமதிப்பத்திரம் பெறுநரால் எடுத்துச் செல்லப்படுவதாயின் தூசி அல்லது வேறு கழிவுப் பொருட்கள் அல்லது நீர் உட்புக முடியாதவாறு தயாரிக்கப்பட்ட பெட்டிகளை உபயோகித்தல் அனுமதிப் பத்திரம் பெறுநரின் பணியாகும்.

*23.* இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசோதிப்பதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, வெதுப்பகத்தில் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

*24.* தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் வெதுப்பகத்தில் தயாரிக்கப்படும் அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப்பத்திரம் பெறுநராலும் அத்தகைய கொள்வனை செய்வதை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

*25.* இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் வெதுப்பகம் கொண்டுநடாத்தப்படும் இடம் 4 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய விளங்குதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தலைவர் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

*26.* 25 வது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தலைவருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

*27.* 26 வது துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திர உரிமையாளரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை தலைவரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

*28.* பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில் -

"வெதுப்பகத் தயாரிப்புகள்" என்பது, விற்பனைக்காக அல்லது வேறு ஆளொருவரின் வேண்டுகோளின் மீது தயாரிக்கப்படும் பாண், கேக், பணிஸ், விஸ்கோத்து அல்லது எந்தவொரு இனிப்புப் பண்டமும் ;

"வெதுப்பகம்" என்பது, விற்பனைக்காக அல்லது வேறு ஆளொருவரின் வேண்டுகோளின் மீது தயாரிக்கப்படும் பாண், கேக். பணிஸ், விஸ்கோத்து அல்லது எந்தவொரு இனிப்புப் பண்டத்தையும் தயாரிக்கும் இடம் எனக் கருதுவதோடு, அவ்வாறான உணவுகளைத் தயாரிக்கப்படும் அல்லது அவ்வாறான உணவுகள் தயாரிப்பதற்கான பொருட்களைக் களஞ்சியப்படுத்தி வைக்கும் இடமும் இதில் உள்ளடக்கும்.

### பாகம் X

### பாற் பண்ணைகள் பற்றிய துணை விதிகள்

1. இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் பாற்பண்ணைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. தலைவரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் நகர சபை பிரதேசத்தினுள் பாற்பண்ணையொன்றைக் கொண்டுநடாத்துதல் ஆகாது.

3. இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

4. இத்துணைவிதியில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, எந்தவொரு பாற்பண்ணைக்கும் தலைவரால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.

(அ) ஒரு விலங்கினைத் தங்க வைப்பதற்குக் குறைந்த பட்சம் 03 மீற்றர் வீதம் பாற்பண்ணையிலுள்ள விலங்குளைத் தங்க வைப்பதற்குப் போதுமான அளவு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) விலங்குகள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடங்களின் சுவர்களின் உயரம் 01 மீற்றருக்கு மேல் இருத்தல் ஆகாதென்பதோடு, செங்கற்கள் அல்லது சீமெந்துக் கற்களினால் அல்லது கபூக் கல் அல்லது அலுமீனியம் மற்றும் வெட்டுமரத்தினால் நிர்மாணித்து இருபக்கங்களும் சாந்து பூசப்பட்டு வர்ணப்பூசச் பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(இ) விலங்குகள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடம் சுவரின் மேற்பாக எல்லையிலிருந்து கூரை வரை நிர்மாணிக்கப்படும் தூண்கள் பலம் வாய்ந்த மரத்தினாலோ அல்லது இரும்பினாலோ அல்லது கொங்கிறீற்றினாலோ கட்டப்படல் வேண்டுமென்பதோடு, அத்தூண்களின் மேல் எல்லை நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.3 மீற்றர் உயரம் இருத்தல் வேண்டுமென்பதுடன், வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) விலங்குகள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் கூரை ஏதேனும் திடமான பொருட்களைக் கொண்டு அமைய வேண்டுமென்பதுடன், கூரையின் ஓரம் நிலமட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.3 மீற்றர் உயரத்தில் இருத்தல் வேண்டும் ;

(உ) விலங்குகளைத் தங்க வைத்துள்ள கட்டிடத்தின் தரை சீமெந்தினால் அமைதல் வேண்டும் ;

(ஊ) விலங்குகளைத் தங்க வைத்துள்ள கட்டிடங்கள் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் இருத்தல் வேண்டும் ;

(எ) பாற்பண்ணையில் விலங்குகளுக்கு குடிப்பதற்கும், மிருகங்களைக் குளிப்பாட்டுவதற்கும் கட்டிடத்தைக் கழுவுவதற்கும் மாசடையாத போதுமான அளவு நீர் வசதி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஏ) விலங்குகளைக் குளிப்பாட்டிய பின்னர் அகற்றும் நீர், மிருகங்கள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடத்தைக் கழுவிய நீர், சிறுநீர் மற்றும் சாணம் உறிஞ்சியிழுக்கக்கூடிய கிடங்கிற்கு இலகுவில் பாய்ந்து செல்லக்கூடியவாறு சீமெந்தினாலோ அல்லது கொங்கிறீற்றினாலோ வடிகான்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

(ஐ) விலங்குகளின் சாணம், எஞ்சியுள்ள புல் மற்றும் ஏனைய தீன் வகைகளை அகற்றுவதற்கு தனிவேறான இடமொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அந்த இடம் விலங்குகள் தங்கியுள்ள கட்டிடங்கள் மற்றும் பால் அறையிலிருந்து குறைந்தது 10 மீற்றர் தூரத்தில் இருத்தல் வேண்டும் ; அதே போன்று இவ்வாறான இடம் பொது நீர் வழிகள் அல்லது நீரைப் பாவிக்கும் கிணற்றிலிருந்து குறைந்த பட்சம் 10 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஒ) பால் கறக்கும் இடம் மற்றும் தற்காலிகமாக பாலைக் களஞ்சியப்படுத்தும் இடம் மிருகங்கள் தங்கும் இடத்திலிருந்து குறைந்தது 06 மீற்றருக்குக் குறையாத தூரத்தில் அமைதல் வேண்டும் ;

(ஓ) பால் கறக்கும் கட்டிடம் செங்கற்களால் அல்லது சீமெந்துக் கல்லினால் அல்லது கபுக் கல்லினால் கட்டப்பட்டு இரு பக்கங்களும் சீமெந்தினால் சாந்துப்பூச்சிடப்பட்டிருத்தல் வேண்டும். அச்சுவகர்களின் ஆகக் குறைந்தது 1.2 மீற்றர் உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதொடு, சுவரின் மேலோரத்திலிருந்து கூரை வரை கட்டப்படும் தூண்கள் பலம் வாய்ந்த மரத்தினாலோ அல்லது இரும்பினாலோ அல்லது கொங்கிறீற்றினாலோ கட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஔ) பால் கறக்கும் கட்டிடத்தின் தரை சீமெந்தினால் நிர்மாணிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, தரையும் சுவரும் இணையுமிடங்கள் வட்டவளைவாக அமைதல் வேண்டும் ; அதே போன்று கட்டிடத்தின் கூரை விளிம்பு நில மட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 1.8 மீற்றருக்கு மேலாக இருத்தல் வேண்டும் ;

(க) பால் கறக்கும் கட்டிடத்தில் மேசை ஒன்று இருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் மேற்பாகம் மாபிள் ஓடுகளால் அல்லது இடைவெளிகள் அற்ற துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் அல்லது வேறு ஏதேனும் ஊடுருவமுடியாத பொருளால் விரிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ங) பால் கறக்கும் இடத்தில் துப்பரவேற்பாட்டு கழிவுப்பொருள் கொள்கலன் ஒன்று வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ச) பால் கறக்கும் கட்டிடம், ஏதேனும் மலசலகூடம், கழிவுகளை இடும் கிடங்கு, பசளைக் குவியல் அல்லது பசளைக் கிடங்கு, திறந்த கழிவு வடிகான் போன்றவற்றிலிருந்து குறைந்த பட்சம் 10 மிற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும் ;

(ஞ) விலங்குகள் தங்க வைத்திருக்கும் கட்டிடத்திலிருந்து குறைந்தது 20 மீற்றருக்குக் குறையாத தூரத்தில் நோய்வாய்ப்பட்ட விலங்குகளை தங்க வைப்பதற்காக தனிவேறான கட்டிடம் ஒன்று இருத்தல் வேண்டுமென்பதுடன், மிருகங்களைத் தங்க வைக்கும் கட்டிடத்திற்கான தேவைப்பாடுகளைக் கொண்டதாகவே இக்கட்டிடமும் இருத்தல் வேண்டும் ;

(ட) நோய்வாய்ப்பட்ட விலங்குகள் தங்க வைக்கும் கட்டிடத்திலிருந்து பாய்ந்தோடும் கழிவு நீர் ஏனைய விலங்குகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் கட்டிடத்தை நோக்கி பாயாதவாறு வடிகான் அமைக்கப்படல் வேண்டும் ;

(ண) பால் கறத்தலை இயந்திர பாவனை மூலம் மேற்கொள்வதாயின் அந்த இயந்திரங்கள் மற்றும் கறந்த பாலைச் சேகரிக்கும் பாத்திரங்கள் தினந்தோறும் கிருமிநீக்கம் செய்யத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென 4 வது துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ள அனைத்து பாகங்களுக்கும் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை என்ற வகையில் வர்ணப்பூச்சு பூசப்படுதல் வேண்டும்.

6. நோயற்ற மற்றும் நோய்வாய்ப்பட்ட விலங்குகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் கட்டிடங்களின் தரை மற்றும் சுவர்கள், குறைந்தது தினந்தோறும் ஒரு தடவையாவது கழுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

7. பாற்பண்ணை மற்றும் அதன் சுற்றாடலில், வடிகான்கள், மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் சுத்தமாகவும் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையிலும் வைத்திருத்தல் வேண்டும்.

8. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் எவ்வகையுமான கருமங்களில் அல்லது அத்தகைய கருமங்களில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட இடத்தில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட இடத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் கடமையாகும்.

9. பாற்பண்ணையில் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக் கவசம் மற்றும் தேவைப்படும் வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதலும், அவ்வூழியர் வெதுப்பகப் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப் பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

10. விலங்குகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் கட்டிடங்கள் மற்றும் கறக்கும் அறையின் தரை மேசை ஆகியவை குறைந்தது தினந்தோறும் ஒரு தடைவ வீதம் கழுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

11. பால் கறப்பதற்கு, பாலைச் சேமித்து வைக்கும் மற்றும் பாலை எடுத்துச் செல்வதற்கு உபயோகிக்கப்படும் கொள்கலன்கள் மெருகிடப்பட்ட களிமண், கல்வனைஸ் பண்ணப்பட்ட இரும்பு அல்லது தகரம், எனமல் முலாமிடப்பட்ட இரும்பு, மிருதுவாக்கப்பட்ட அலுமினியம், போத்தல் அல்லது போசிலெயின் போன்ற வகையான கொள்கலன்களை உபயோகிக்க வேண்டுமென்பதோடு, அவற்றை விலங்குகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் கட்டிடத்தினுள் களஞ்சியப்படுத்தி வைத்தல் ஆகாது.

12. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பாவிக்கப்படும் எல்லா பாத்திரங்களும் பால் கறத்தல் இயந்திர மூலம் மேற்கொள்ளப் படுவதாயின் அந்த உபகரணங்களும் குறைந்தது நாளொன்றுக்கு ஒரு தடவை வீதம் கிருமி நீக்கம் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், ஏனைய வேறு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தினந்தோறும் சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரதாரரின் பணியாகும்.

13. விலங்குகள் தங்கவைத்துள்ள இடத்தில் சேரும் சாணம் மற்றும் எஞ்சியுள்ள புல் போன்றவை குறைந்த பட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவையேனும் அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அந்த இடங்கள் தினந்தோறும் நீரினால் கழுவிச் சுத்திகரிக்கப்படல் வேண்டும்.

14. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பாவிக்கப்படும் பாத்திரங்கள், அவற்றுக்குரிய கருமங்களைத் தவிர்ந்த வேறு கருமங்களுக்கு உபயோகித்தல் ஆகாது :-

15. பால் கறத்தலை ஆரம்பிப்பதற்கு முன்னர் -

(i) எந்தவொரு கறவைப் பசுவினதும் மடிகளைச் சுத்தமான நீரினால் கழுவியிருந்தால் ;

(ii) பால் கறப்பவர் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவத்தினால் கைகள் இரண்டையும் கழுவியிருந்தால் ;

(iii) இயந்திரங்கள் மூலம் பால் கறப்பதாயின் அந்த உபகரணங்கள் யாவும் கிருமி நீக்கம் செய்யப்பட்டிருந்தால் அன்றி பால் கறப்பதற்கு இடமளித்தல் ஆகாது.

16. பாற்பண்ணையில் வளர்க்கப்படும் எல்லா விலங்குகளும் குறைந்தது வருடத்திற்கு மூன்று தடவைகள் ஒரு மிருக வைத்தியரால் அல்லது அவரால் பெயர் குறிக்கப்பட்ட எவரேனும் பிரதிநிதியின் மேற்பார்வைக்கு உட்படுத்தி அவசியமான வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும் அத்தகைய ஆலோசனைகளுக்கு அமைய செயற்படல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் கடமையாகும்.

17. பாற்பண்ணையில் எந்தவொரு விலங்கிற்கும் ஏதேனும் நோய் பீடிக்கப்பபட்டுள்ளதென அறிந்த உடனேயே அந்த விலங்கை விலங்குகள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடத்திலிருந்து அகற்றி நோயுற்ற விலங்குகள் தங்கவைக்கும் கட்டிடத்தில் தங்கவைத்து அது சம்பந்தமாக மிருக வைத்தியருக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பு அனுமதிப்பத்திரம் பெறுநரின் கடமையாகும்.

18. பால் மடியில் அல்லது வேறு இடத்தில் உண்டாகும் காச நோய், பால் மடி, குளப்பு மற்றும் வாய் சார்ந்த நோய்கள், அன்திரெக்ஸ் நோய் அல்லது பால் மடியில் அன்ரினொமைகோசிஸ் நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது புருசெல்லோசிஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதென மிருக வைத்தியரால் தீர்மானிக்கப்பட்ட எந்தவொரு மிருகத்தினதும் பாலை விற்பதற்கு அல்லது விற்பதற்கு இடமளித்தல் அல்லது மனித பாவனைக்காக உள்ள வேறு ஏதேனும் விலங்குகளின் பாலில் கலத்தலோ அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளித்தலோ எந்தவோர் ஆளினாலும் மேற்கொள்ளப்படல் ஆகாது.

19. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பாவனைக்குரிய புல் மற்றும் வைக்கோல் தவிர்ந்த ஏனைய மிருக உணவுகளை எலிகள் புகாதவாறு பொருத்தமான பாத்திரங்களில் வைத்தல் வேண்டும்.

20. பாலைக் களஞ்சியப்படுத்தி வைத்தல் மற்றும் தயாரித்தல் கருமங்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு கருமத்திற்கும் பால் அறையை உபயோகித்தல் அல்லது உபயோகிக்க இடமளித்தல் ஆகாது.

21. எந்தவோர் ஆளினாலும் நீர் அல்லது வேறு புறப்பொருள் அல்லது பொருட்களைக் கலந்து பாலின் தரத்தைக் குறைத்தல் ஆகாது.

22. (அ) அனுமதிப் பத்திரம் பெற்ற இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள் -

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;

(ii) கண்ணாடிப் பொருட்கள் ;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள் ;

(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் ;

(vii) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ; என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களைச் இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல்

அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

(ஆ) (அ) பிரிவில் கூறியவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், நகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி தலைவரால் கட்டளையிடப்பட்டவாறு இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

(இ) (ஆ) பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் (அ) பந்தியின் (i) உபபிரிவில் கூறப்பட்டுள்ள உயிர்ச் சிதைவு கழிவுப் பொருட்களாகக் கொள்ளப்படுகின்ற விலங்குகளின் சாணம் மற்றும் எஞ்சிய புற்களின் பாகங்கள் பசளையாக உபயோகிப்பதற்கு அத்தகைய பணிப்பு தடையாக அமைதல் ஆகாது. எனினும், அத்தகைய கழிவுப் பொருட்களை பாற்பண்ணையிருந்து வெளியே எடுத்துச் செல்வதாயின் மூடிஎடுத்துச் செல்வதாயினன்றி பாற்பண்ணை அமைந்துள்ள வளவுக்கு வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது.

23. கறக்கப்பட்ட பால் சேமித்து வைப்பதற்கு அதற்காகவே ஒதுக்கப்பட்ட வேறான அறையொன்று இருத்தல் வேண்டுமென்பதோடு அந்த அறை காற்றோட்டமுள்ளதும் இலையான்கள் அல்லது பிற பூச்சிகள், வண்டுகள் மற்றும் எலிகள் புகாதவாறு பாதுகாப்புடன் கூடியதாக இருத்தல் வேண்டும்.

24. இப்பிரிவின் துணைவிதிக்கமைய அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட எந்தவொரு இடத்திலும், எந்தவோர் ஆளும் நித்திரை செய்தல் ஆகாதென்பதோடு, பாற்பண்ணைச் செயற்பாடுகளுக்காக உபயோகிக்கப்படும் உபகரணங்கள் அல்லது பொருட்கள் தவிர்ந்த வேறு எந்தவிதமான பொருட்களையும் வைத்தல் அல்லது களஞ்சியப்படுத்துதல் ஆகாது. எனினும் பாற்பண்ணையில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேறாக ஒதுக்கப்பட்டுள்ள ஓய்வெடுக்கும் அறை அல்லது சாப்பாட்டறை இதில் உள்ளடங்காது.

25. பாற்பண்ணையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் பொருட்டு குறைந்தது பத்துப்பேருக்கு ஒன்றென்ற வகையில் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டுமென்பதுடன், பெண்கள் மற்றும் ஆண்களுக்கென வெவ்வேறாக மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும், அத்துடன் மலசலகூடங்கள் பாற்பண்ணையில் விலங்குகள் தங்கவைக்கப்பட்டிருக்கும் கட்டிடங்கள், பால்கறக்கும் இடங்கள் மற்றும் பாலைச் சேகரித்து வைக்கும் அறைகளிலிருந்து குறைந்தது 15 மீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

26. பாற்பண்ணையின் செயற்பாடுகளுக்காக பாவிக்கப்படும் நீர், நிலத்துக்கடியிலுள்ள நீர்த் தொட்டியில் களஞ்சியப்படுத்துவதாயின் அவ்விடத்திலிருந்து 18 மீற்றருக்குக் குறைந்த தூரத்தில் குப்பைக் கிடங்கு, பசளைக் கிடங்கு அல்லது சாம்பல் கிடங்கு இருத்தல் ஆகாது.

27. பாற்பண்ணையில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சுத்தமான நீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தப்படுத்தும் தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் போன்றவை வழக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

28. ஏதேனும் பாற்பண்ணையில் பெறப்பட்ட பால், தூசி அல்லது வேறு கழிவுப் பொருட்கள் உட்புகாதவாறு நன்றாக மூடப்பட்ட பாத்திரங்களிலன்றி பாலை, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது.

29. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசீலிப்பதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, அவ்விடத்தில் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

30. தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் பாற்பண்ணையில் பாலை அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப்பத்திரம் பெறுநராலும் அத்தகைய கொள்வனவு செய்வதை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

31. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் பாற்பண்ணை நடாத்தப்படும் இடம் 4 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய நிலவுதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தலைவர் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

32. 31 வது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தலைவருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

33. 32 வது துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை தலைவரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

34. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில் -

''பாற்பண்ணை'' என்பது, பாலைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பாலை விற்பனை செய்தல் போன்ற முக்கிய கருமங்களை மேற்கொள்வதற்காக ஒரே இன விலங்குகள் அல்லது பல்லின விலங்குகளைத் தங்க வைக்கும் கட்டிடங்களும் அதன் சுற்றாடலும் எனக் கருதப்படுவதோடு, அந்த விலங்குளையும் உள்ளடக்கும்.

''மிருக வைத்திய உத்தியோகத்தர்'' என்பது, நகர சபை பிரதேசத்தை உள்ளடக்கிய சுகாதார அமைச்சினால் நியமிக்கப்படும் மிருக வைத்திய உத்தியோகத்தர் எனவும்.

''விலங்கு'' என்பது, மாடு, எருமை மாடு, செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு போன்ற இனங்களைச் சேர்ந்த விலங்குகள் எனவும் கருதப்படும்.

## பாகம் XI

### நீச்சல் தடாகங்கள் பற்றிய துணை விதிகள்

1. இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் நீச்சல் தடாகங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

(அ) தலைவரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் நகர சபை பிரதேசத்தினுள் நீச்சல் தடாகமொன்றைக் கொண்டுநடாத்துதல் ஆகாது.

(ஆ) (அ) பிரிவில் கூறப்பட்டது எது எப்படி இருப்பினும், அப்பிரிவின் துணைவிதிகள் நடைமுறைக்கு வரும் தினத்தில் நகர சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள எந்தவொரு நீச்சல் தடாகத்தையும் நடாத்துவதற்கு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இப்பிரிவின் துணைவிதிகள் நடைமுறைக்கு வரும் தினத்திலிருந்து 03 மாத கால அவகாசம் வழங்கப்படுவதோடு, அக்கால அவகாசம் முடிவுறுகையில் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாவிடின் அந்நீச்சல் தடாகத்தைக் நடாத்துதல் ஆகாது.

2. இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

3. இத்துணைவிதியில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டு இருந்தாலன்றி, எந்தவொரு நீச்சல் தடாகத்திற்கும் தலைவரால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது :-

(அ) தடாகத்தில் நீந்துவதற்கு முன்னர் குளிப்பதற்காக துவளை நீர்க்குழாய் (Showerbath) இருத்தல் வேண்டும் ;

(ஆ) நீந்துவதற்கு முன்னர் குளிப்பதற்காகவும், நீச்சல் தடாகத்திற்காகவும் வழங்கப்படும் நீர், பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் சிபார்சு செய்யப்பட்ட நியமங்களுக்கமைய வழங்குவதற்குப் போதுமானளவு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும் ;

(இ) (ஆ) பிரிவில் கூறப்பட்ட நீர் வழங்கலின் பொருட்டு போதியளவு கிருமிநாசினிகளைப் பயன்படுத்தவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) நீச்சல் தடாகத்திலுள்ள முழு நீரையும் 24 மணித்தியாலங்களில் இரண்டு தடவைகள் சுத்திகரிப்பு செய்வதற்கும் கிருமி நீக்கம் செய்வதற்குமான நீர்ச் சுற்றோட்டப் பம்பியைக் கொண்ட வடிகட்டல் தொகுதி பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(உ) நீச்சல் தடாகத்தின் ஒவ்வோர் இடத்தினதும் ஆழம் எவ்வளவு என்பது தடாக மேடையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) நீச்சல் தடாகத்தைச் சுற்றி குறைந்த பட்சம் ஒவ்வொரு 08 மீற்றருக்கு ஒன்று வீதம் அமையக்கூடியவாறு, நீச்சல் தடாகத்தில் இறங்குவதற்கும் தடாகத்திலிருந்து வெளியே வருவதற்கும் துருப் பிடிக்காத உருக்கினால் தயாரிக்கப்பட்ட கை வேலியும் ஏணியும் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(எ) நீச்சல் தடாகத்திற்கு நீரை நிரப்பிய பின்னர் அதன் அடிப்பாகமும் சுவர்களும் நன்றாகத் தெரியும் வகையில் வர்ண மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஏ) பன்னிரண்டு வயதிற்குக் குறைந்த பிள்ளைகளுக்கு நீந்துவதற்கு இடமளிப்பதாயின் அதற்காக ஒரு மீற்றரை விஞ்சாத ஆழத்துடன்கூடிய தனிவேறான பிரிவு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஐ) நீச்சல் தடாகத்தில் நீரில் குதிப்பதற்கு பரண்கள் கட்டப்பட்டிருப்பின் அவை கொங்கிறீற்றினால் நிர்மாணிக்கப்பட வேண்டுமென்பதுடன், அதிலிருந்து வெளியேறுவதற்கு இரும்பு அல்லது உருக்கினால் ஆக்கப்பட்ட உறுதியான ஏணி பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஒ) போதியளவு உயிர்ப் பாதுகாப்பு மற்றும் முதலுதவி நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஓ) நீச்சல் தடாகத்தைப் பயன்படுத்துவோரின் பொருட்டு பெண்கள் மற்றும் ஆண்கள் என வேறு வேறாக உடை மாற்றும் இடங்களும் மலசலகூடங்களும் விநியோகிக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஔ) பிற்பகல் 06.30 மணிக்குப் பின்னரும் நீந்துவதற்கு இடமளிக்கப்படுவதாயின், தடாகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் போதியளவு மின்னொளி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

4. நீச்சல் தடாகத்தில் நிரப்பப்பட்டுள்ள நீரின் நோய்க் கிருமிகள் சம்பந்தமாக சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் பணிப்புக்களுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவரது பணிப்புக்கமைய உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. மலசலகூடங்கள் மற்றும் நீச்சலுக்கு முன் குளிப்பதற்காக துவளை நீர்க்குழாய் பொருத்தப்பட்டுள்ள இடத்தின் தரையும் சுவர்களும் மாபிள் ஓடு பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. சகல நீச்சல் தடாகங்களும்,-

(அ) ஒதுக்கப்பட்ட பகுதி நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் பேணப்படுதல் வேண்டும் ;

(ஆ) மலசலகூடங்களிலிருந்தும் குளிக்கும் இடங்களிலிருந்தும் பாவிக்கப்பட்ட நீர் தடையின்றி பாய்ந்தோடக்கூடியவாறு வடிகான் முறைமை தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(இ) அடிப்பாகத்தில் சேரும் கழிவுப்பொருட்கள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரு தடவைகள் சுத்தப்படுத்தப்படல் வேண்டும்;

(ஈ) நீச்சல் தடாகத்தின் முழு நீர்க் கொள்ளளவு குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரு தடவைகள் வீதம் சுத்தப்படுத்தி நோய்க்கிருமி நீக்கஞ் செய்யப்படல் வேண்டும் ;

(உ) நீச்சலுக்காக வருகைதரும் எந்தவோர் பாவனையாளரும், நீச்சலுக்கு முன்னர் குளிக்காமலும், நீச்சல் உடைகளை அணியாமலும் நீச்சல் தடாகத்தைப் பாவித்தல் ஆகாது.

7. நீச்சல் தடாகம் அமைந்துள்ள பிரதேசத்தில் அல்லது அதனை அண்மித்த பிரதேசத்தில் ஏதேனும் பெருவாரியாகப் பரவும் அல்லது நோய்த் தொற்று பரவியுள்ளதென சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அத்தகைய நீச்சல் தடாகத்தை மூடிவிடக் கட்டளையிடுவதற்கு தலைவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

8. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசோதிப்பதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, நீச்சல் தடாகத்தைப் பாவிப்பதற்கு இடமளிக்கப்பட்ட எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

9. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் நீச்சல் தடாகம் நடாத்தப்படும் இடம் 4 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய நிலவுதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தலைவர் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

10. இப்பிரிவின் துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தலைவருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

11. இப்பிரிவின் துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை தலைவரால் இரத்துச்செய் ப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(அ) அனுமதிப் பத்திரம் பெற்ற இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள் -

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;

(ii) கண்ணாடிப் பொருட்கள் ;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள் ;

(vi) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

(ஆ) (அ) பிரிவில் கூறியவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், நகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி தலைவரால் கட்டளையிடப்பட்டவாறு இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

12. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில் -

"நீச்சல் தடாகம்" என்பது, உடற்பயிற்சிக்காக அல்லது பொழுதுபோக்கிற்காக அல்லது கற்பதற்காக நீச்சலுக்காக வெளியிலிருந்து வருகைதரும் எந்தவோர் ஆளிடமிருந்தும் கட்டணம் அறவிடப்பட்டோ அல்லது கட்டணம் அறிவிடப்படாமலோ நீந்துவதற்காக நிர்மாணிக்கப்பட்ட ஏதேனும் நீர்த் தடாகம் எனக் கருதப்படும்.

## பாகம் XII

## பனிக்கட்டி தொழிற்சாலைகள் பற்றிய துணை விதிகள்

1. இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் பனிக்கட்டி தொழிற்சாலைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. தலைவரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் நகர சபை பிரதேசத்தினுள் பனிக்கட்டி தொழிற்சாலையொன்றை நடாத்துதல் ஆகாது.

3. இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

4. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, எந்தவொரு பனிக்கட்டி தொழிற்சாலைக்கும் தலைவரால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது :-

(அ) இடம் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) பனிக்கட்டி தொழிற்சாலையின் அனைத்து மூடப்பட்ட அறைகளுக்கும் திறந்துவைக்கக்கூடிய ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேணடு மென்பதுடன், திறந்திருக்கும் ஜன்னலின் பரப்பளவு அறையின் பரப்பளவின் பதினைந்திலொன்றுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும் ;

(இ) தொழிற்சாலையில் பனிக்கட்டி உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ள அனைத்து அறைகளின் சுவர்களின் உயரம் மூன்று மீற்றருக்குக் குறையாதிருத்தல் வேண்டுமென்பதோடு, செங்கற்கள் அல்லது சீமெந்துக் கற்களால் கட்டப்பட்டு உட்பக்கம் சாந்து பூசப்பட்டும் வர்ணப்பூச்சு பூசப்பட்டும் இருத்தல் வேண்டும். இல்லையேல் திடகாத்திரமான தகடுகளை உபயோகித்து வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) தாழ்வாரத்தின் ஓரங்கள் நில மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 2.8 மீற்றர் உயரத்தில் இருத்தல் வேண்டும் ;

(உ) கூரை திடமான பொருட்களை உபயோகித்து வேயப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) வெட்டுமரத்தால் ஆக்கப்பட்ட பாகங்கள் எண்ணைச் சாயம் பூசப்பட்டோ அல்லது மெருகூட்டப்பட்டோ இருத்தல் வேண்டும் ;

(எ) எல்லா தரைப் பகுதிகளும் சீமெந்து இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஏ) பனிக்கட்டி தயாரிப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள அறை வேறு கருமங்களுக்கு ஈடுபடுத்தப்படலாகாது ;

(ஐ) பனிக்கட்டி தயாரிப்பதற்கு உபயோகிக்கும் நீர் மனித நுகர்வுக்கு உகந்தது என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் வழங்கப்பட்ட தரச் சான்றிதழைப் பெற்றிருந்தல் வேண்டுமென்பதோடு, இத்தரச் சான்றிதழ் குறைந்தது ஒவ்வோர்

ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபையினால் நீர் வழங்கப்படும் நீரை குளிர் பானங்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுமேயானால் அப்படியான தரச் சான்றிதழ் பெற்றுள்ளதாகக் கருதுதல் வேண்டும் ;

(ஒ) பனிக்கட்டித் தொழிற்சாலைக்கும் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட கருமங்களுக்கும் பாவிக்கப்படும் நீர் களஞ்சியப்படுத்தி வைப்பதாயின், அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கப்படும் நீர் அசுத்தமாவதைத் தடுப்பதற்குப் போதுமானளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஓ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படும் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு 11 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புக்களுக்கமைய அப்புறப்படுத்துவதற்கு ஏற்புடைய நடைமுறைகளை மேற்கொண்டிருத்தல் வேண்டும்;

(ஔ) தொழிற்சாலையினுள் பிறப்பிக்கப்படும் கழிவு நீரை அப்புறப்படுத்துவதற்காக போதியளவு உறிஞ்சியிழுக்கக்கூடிய கிடங்குகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(க) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மலசலகூடம், கழிவுக் குழி அல்லது திறந்த கழிவு வடிகான் அல்லது உறிஞ்சியிழுக்கும் கிடங்கு, பனிக்கட்டி தயாரிக்கும் அறை மற்றும் பனிக்கட்டியை வெளியே விநியோகிக்கும் இடம் குறைந்த பட்சம் 16 மீற்றருக்குக் குறையாத நிர்மாணித்தல் ஆகாது ;

(ங) எரிபொருள் களஞ்சியப்படுத்துவதற்காக தனிவேறான அறை அல்லது இடம் இருத்தல் வேண்டுமென்பதோடு, பனிக்கட்டிகளைக் களஞ்சியப்படுத்தும் அல்லது பனிக்கட்டிகளை வெளியே விநியோகிக்கும் அறைகளினூடாக எரிபொருள் எடுத்துச் செல்லல் ஆகாது ;

(ச) சாதாரண தீ அணைக்கும் கருவிகள் மற்றும் மின்சாரத்தால் ஏற்படும் தீ அணைப்புக் கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென 4 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பாகங்களுக்கும் குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

6. பனிக்கட்டிகள் தயாரிக்கும் பகுதி மற்றும் பனிக்கட்டிகளை விநியோகிக்கும் இடம் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவை வீதம் நீரினால் கழுவச் செய்தலை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

7. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் முழுவதையும் அத்துடன் பாவிக்கப்படும் உபகரணங்களையும் தினந்தோறும் சுத்தம் செய்யவும் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையிலும் இருத்தல் வேண்டும்.

8. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையான வியாபாரத்திலும் அல்லது அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களும் வருடத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

9. பனிக்கட்டித் தொழிற்சாலையில் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக் கவசம் மற்றும் தேவைப்படும் வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதலும், அவ்வூழியர் பனிக்கட்டித் தொழிற்சாலையில் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

10. பனிக்கட்டி தயாரிப்பதற்காக உபயோகிக்கும் இரசாயன பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு ஊடுருவமுடியாததும் இலகுவில் சுத்தம் செய்யக்கூடியதுமான பாத்திரங்களை உபயோகித்தல் வேண்டுமென்பதோடு, அவ்வாறான பொருட்கள் பனிக்கட்டி தயாரிப்பின் போது பனிக்கட்டிகள் தயாரிக்கும் அறையில் வைத்திருப்பதைத் தவிர அவற்றைக் களஞ்சிய அறைக்கு வெளியே வைத்திருத்தல் ஆகாது.

11. (அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள் -

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;
(ii) கண்ணாடிப் பொருட்கள் ;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள் ;

(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின்போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் ;

(vii) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான

கழிவுப் பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

(ஆ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் வெளியேற்றப்படும் கழிவு நீர் உறிஞ்சியிழுக்கும் கிடங்கிற்கு தடையின்றி பாய்ந்து செல்வதற்காக நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) (அ) பிரிவில் கூறியவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், நகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி தலைவரால் கட்டளையிடப்பட்டவாறு இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

12. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசீலிப்பதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான உரிய காலம் என்பதற்கு, பனிக்கட்டி தயாரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அல்லது பனிக்கட்டிகள் விநியோகிக்கப்படும் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

13. தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் பனிக்கட்டித் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள பனிக்கட்டி நீரின் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப்பத்திரம் பெறுநராலும் அத்தகைய மாதிரிகளை பெறுவதை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

14. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் பனிக்கட்டித் தொழிற்சாலை நடாத்தப்படும் இடம் 4 ஆவது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய நிலவுதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தலைவர் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

15. 14 வது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தலைவருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

16. 15 வது துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை தலைவரால் இரத்துச் செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

17. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,-

"பனிக்கட்டித் தொழிற்சாலை" என்பது, வர்த்தகரீதியான அடிப்படையில் நுகர்வதற்காக இயந்திர முறையில் நீரை உறையவைக்கும் தொழிற்சாலை எனக் கருதப்படும்.

## பாகம் XIII

### சாப்பாட்டுக்கடைகள் சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் தேநீர் அல்லது கோப்பிக் கடைகள் பற்றிய துணை விதிகள்

1. இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் சாப்பாட்டுக் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் தேநீர் அல்லது கோப்பிக் கடைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. தலைவரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் நகர சபை பிரதேசத்தினுள் சாப்பாட்டுக் கடை, சிற்றுண்டிச்சாலை மற்றும் தேநீர் அல்லது கோப்பிக் கடையொன்றை நடாத்துதல் ஆகாது.

3. இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

4. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, எந்தவொரு சாப்பாட்டுக் கடை, சிற்றுண்டிச்சாலை மற்றும் தேநீர் அல்லது கோப்பிக் கடையொன்றை நடாத்துவதற்கு தலைவரால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது :-

(1) இடம் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் கொண்டுநடாத்தப்படுதல் வேண்டும்.

(2) இடத்தின் அனைத்து அறைகளின் சுவர்களும் 2.5 மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இரு பக்கங்களுக்கும் சாந்து பூசப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தலும் வேண்டும். எனினும், சமையலறை தவிர்ந்த ஏனைய அறைகள் மரப்பலகையினால் அல்லது ஏதேனும் உலோகத் தகடு வர்க்கத்தினால் அல்லது மரப்பலகையும் ஏதேனும் உலோக தகடு வர்க்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் இப்பிரமாணத்திற்கு அமைவானதெனக் கருதுதல் வேண்டும்.

(3) இடத்திலுள்ள அனைத்து அறைகளுக்கும் உட்கூரைகள் அமைந்திருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய உட்கூரைகள் நிலத்திலிருந்து குறைந்தபட்சம் 2.5 மீற்றர் உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(4) அனைத்து அறைகளுக்கும் திறந்து வைக்கக்கூடிய ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு அறைகளினதும் ஜன்னல்களைக் திறக்கும் போது அத்தகைய ஜன்னல்களின் பரப்பளவு அறையின் தரையின் பரப்பளவின் பதினைந்தில் ஒரு பங்குக்குக் குறையாதிருத்தல் வேண்டும். ஆயினும், ஏதேனும் அறை எயர் கொண்டிஷன் செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இப்பிரமாணம் ஏற்புடையதாகாது.

(5) கூரை ஏதேனும் நிலையான பொருட்களை உபயோகித்து வேயப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) தாழ்வாரத்தின் ஓரங்கள் நில மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 02 மீற்றர் உயரத்தில் இருப்பதுடன், தாழ்வாரம் ஆகக்குறைந்தது 1.5 மீற்றராகவும் இருத்தல் வேண்டும்.

(7) அனைத்து அறைகளினதும் தரை சீமெந்திடப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(8) இடத்தினுள் பிறப்பிக்கப்படும் கழிவுகளைச் சேகரிப்பதற்காக கழிவுப் பாத்திரங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, சமையலறையினுள் வைக்கப்படும் கழிவு பாத்திரங்கள் இலையான்கள் அல்லது வேறு பூச்சிகள், விலங்குகள் உட்புகாதவாறு மூடிவைக்கக்கூடிய மூடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(9) இடத்தினுள் பிறப்பிக்கப்படும் கழிவுகளை அப்புறப்படுத்தல் 11 வது துணைவிதியின் பணிப்புகளுக்கமைய செயலாற்றும் விதத்தில் அவசிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(10) இடத்தின் சமையலறையில் பாவிக்கப்படும் அனைத்து மேசைகளும்,-

(அ) மரத்தினால் செய்யப்பட்டு அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இரும்பு, உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் செய்யப்பட்டிருப்பின் அதன் கால்கள் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(11) இடத்தில் வாடிக்கையாளரின் பாவனைக்கு வைக்கப்பட்டுள்ள அனைத்து மேசைகளும்,-

(அ) மரத்தினால் செய்யப்பட்டு அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இரும்பு, உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் செய்யப்பட்டிருப்பின் அதன் கால்கள் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(12) பாவனைக்கு எடுக்கின்ற நீர் மனித நுகர்வுக்குப் பொருத்தமானதென தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்பட்ட தரச் சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் மாத்திரமன்றி குறைந்த பட்சம் ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் இத்தரச் சான்றிதழ் பெறப்படல் வேண்டும். இடத்தின் பாவனைக்காக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற நீரைப் பயன்படுத்துவதாயின் அத்தகைய தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

(13) இடத்தின் கருமங்களுக்காக பாவிக்கப்படும் நீரைக் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கின்ற நீர் மாசடைவதைக் தடுக்கும் பொருட்டு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(14) வாடிக்கையாளர்களால் பாவிக்கப்பட்ட பாத்திரங்களைக் கழுவுவதற்கு தனிவேறான பகுதியொன்று இடத்தில் இருத்தல் வேண்டும்.

(15) வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களின் பாவனைக்காகக் குறைந்தது பத்துப் பேருக்கு ஒன்றென்ற வீதம் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, பெண்கள் மற்றும் ஆண்களுக்கென தனிவேறாக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(16) அனைத்து மலசலகூடங்களும் அவற்றின் சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் அல்லது ஏதேனும் துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் நிர்மாணிக்கப்பட்டு தரை சீமொந்தினால் சாந்து பூசப்பட்டோ, சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அதே போன்று மேலும் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்ட சுவராயின் சாந்து பூசப்பட்டோ, சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, துருப்பிடிக்காத உலோக தகடுகளால் நிர்மாணிக்கப்பட்ட சுவராயின் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(17) இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆட்களின் பாவனைக்காக குளியல் அறைகள் போதியளவு எண்ணிக்கை இருத்தல் வேண்டுமென்பதோடு, (15) வது பந்தியில் மலசலகூடங்களுக்கு ஏற்புடைய பணிப்புக்களை அத்தகைய குளியல் அறைகளின் தரைகளுக்கும் சுவர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(18) இடத்தில் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில், வாடிக்கையாளர்களின் கைகளைக் கழுவுவதற்கு துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் அல்லது மாபிள் களியினால் நிர்மாணித்து மெருகூட்டப்பட்டோ அல்லது செங்கல்லினால் அல்லது சிமெந்துக்கல்லினால் கட்டப்பட்ட மாபிள் ஓடு பதிக்கப்பட்ட பேசின் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(19) இடத்தில் எந்தவொரு பகுதியிலும் பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீரை தடையின்றி பாய்ந்த செல்வதற்குப் பொருத்தமான வடிகான் முறைமையொன்று இருத்தல் வேண்டும்.

(20) நகர சபையினால் கழிவுநீர் முறைமை மேற்கொள்ளப்பட்டிருப்பின் இடத்தினுள் வெளியாகும் கழிவு நீர் நகர சபையின் பணிப்புக்கமைய அத்தகைய கழிவுநீர் முறைமையில் பாய்ந்து சேரும் ஏற்பாடுகளைச் செய்யமுடியுமென்பதோடு, அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் அத்தகைய கழிவு நீரை, உறிஞ்சியிழுக்கக்கூடிய கிடங்குகளுக்குப் பாய்ந்து செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருத்தல் வேண்டும்.

(21) உள்ளே சாதாரண தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, பாதுகாப்பிற்கான வேலைத் திட்டம் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இடத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டிருப்பின் மேலதிகமாக மின்சார தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(22) இடத்தில் தேநீர், கோப்பி அல்லது பால் தயாரிக்கும் பிரிவு இடைவெளியற்றதும் துருப்பிடிக்காததுமான உலோகத் தகடுகளினாலோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்ட அல்லது வேறு ஊடறுக்கமுடியாத பொருளால் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென 4 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பாகங்களுக்கும் குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

6. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு, கழிவு நீர் பாய்ந்தோடும் வடிகான்கள் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

*7. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலுள்ள மலசலகூடங்களும் அலம்பகங்களும் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டு கிருமிநாசினிகள் உபயோகிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, துர்நாற்றம் வீசாது பார்த்துக்கொள்ளல் வேண்டும்.*

*8. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிப்பதற்கும், விற்பனைக்காகக் காட்சிக்கு வைப்பதற்கும் மற்றும் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு உபயோகிக்கப்படும் பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் அவற்றைப் பாவிப்பதற்கு முன்னர் சுத்தமான நீரினால் கழுவுதல் வேண்டுமென்பதோடு, பாவிக்கப்பட்ட பின்னரும் கழுவிச் சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளை அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.*

*9. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அந்தந்த பிரிவுகளில் சேரும் அனைத்து கழிவுகளும் 11 வது துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ள விதத்தில் வகைப்படுத்தி ஊடறுக்கமுடியாத பொருளால் ஆக்கப்பட்ட பாத்திரங்களில் இடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கழிவுகள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவை அல்லது அவசியமாயின் அதற்கு மேற்படட் தடவைகளிலும் அத்தகைய இடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய பாத்திரங்களில் கழிவுகளைப் போடும் சந்தர்ப்பமும் அவற்றை அப்புறப்படுத்தும் சந்தர்ப்பமும் தவிர்ந்த மற்றெல்லா நேரத்திலும் அத்தகைய பாத்திரங்கள் நன்றாக மூடிவைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*10. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அப்புறப்படுத்தும் கழிவுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடத்தின் தரையிலோ அல்லது அங்கும் இங்கும் இடுதல் ஆகாது.*

*11. (அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப்பொருட்கள் -*

(i) *உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;*

(ii) *கண்ணாடிப் பொருட்கள் ;*

(iii) *கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;*

(iv) *பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;*

(v) *இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள் ;*

(vi) *உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின்போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் ;*

(vii) *ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களைச் இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல்*

*அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.*

*(ஆ) (அ) பிரிவில் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், நகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி தலைவரின் பணிப்பிற்கமைய இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேணடும்.*

*12. அனைத்து அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலும் எலிகள், இலையான்கள் அல்லது வேறு பூச்சிகள் அணுகாத வண்ணமும், அத்தகைய இடத்தில் வைக்கப்படும் உணவுகள் அல்லது பானங்கள் தயாரிப்பதற்கு பாவிக்கப்படும் பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட உணவுகள் மற்றும் பானங்கள் அத்தகைய எலிகள், இலையான்கள் அல்லது வேறு பூச்சிகளால் மாசடைவதைத் தடுப்பதற்கு அவசியமான சகல ஏற்பாடுகளையும் செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.*

*13. வாடிக்கையாளருக்கு உணவு வகைகளைக் வெறுங்கையினால் பரிமாறுதல் ஆகாதென்பதோடு, அத்தகைய உணவு பரிமாறுகையில் கரண்டி, முள்ளுக் கரண்டி அல்லது வேறு வகையான உபகரணத்தை உபயோகித்தல் வேண்டும்.*

*14. எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலும் தரம் குறைக்கப்பட்ட எவ்வகையான பாலை வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் ஆகாது. இத்துணைவிதியின் கருமங்களுக்காக தரம் குறைக்கப்பட்ட பால் என்பது நீர் அல்லது வேறு வெளிப் பொருள் அல்லது பொருட்கள் கலக்கப்பட்ட பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப் பொருள் நூற்றுக்கு 85 வீதத்திற்குக் குறைவாக அல்லது பாற் கொழுப்பு நூற்றுக்கு 35 வீதத்திற்கு குறைவான பசுப்பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப் பொருள் நூற்றுக்கு 9 வீதத்திற்கோ அல்லது பாற் கொழுப்பு நூற்றுக்கு 7 வீதத்திற்கு குறைவான எருமைப் பால் கருதப்படும்.*

*15. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையான வியாபாரத்திலும் அல்லது அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.*

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களும் வருடத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

16. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் மேலங்கிகள் வழங்கப்படுதலும், அத்தகைய ஊழியர் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் மேலங்கிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

17. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சுத்தமான நீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தப்படுத்தும் தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் போன்றவை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

18. எந்தவோர் ஆளும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் புகை பிடித்தல் அல்லது வெற்றிலை சப்புதல் அல்லது வேறு ஏதேனும் பொருளைச் சப்புதல் அல்லது உணவு உண்ணுதல் ஆகாது.

19. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசீலனை செய்வதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

20. தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிக்கப்படும் அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப்பத்திரம் பெறுநராலும் அத்தகைய கொள்வனை செய்வதை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

21. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் 4 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய விளங்குதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தலைவர் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

22. 21 வது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தலைவருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

23. 22 வது துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை தலைவரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

24. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,-

''சிற்றுண்டிச்சாலை அல்லது சாப்பாட்டுக்கடை'' என்பது, விற்பனைக்காக சோறு மற்றும் கறிகளை சமைக்கும் அல்லது வைக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் இடங்கள் கருதப்படுவதோடு, உணவு வேளைக்காக உணவுக்குப் பொருத்தமான வேறு ஏதேனும் ஆக்கப்பட்ட உணவு வகைகள் அல்லது ஏதேனும் சிற்றுண்டி வகைகளை விற்பனையின் பொருட்டு தயரிக்கப்பட்ட அல்லது வைக்கப்பட்ட அல்லது காட்சிக்கு வைக்கப்படும் இடமும் உள்ளடக்குதல் வேண்டும்.

''தேநீர் அல்லது கோப்பி கடை'' என்பது வெதுப்பக தாயாரிப்புகள் அல்லது வேறு சிற்றுண்டிகளுடன் தேநீர் அல்லது கோப்பி விற்பனை செய்வதற்காக நடாத்தப்பட்டுவரும் இடம் எனக் கருதுதல் வேண்டும்.

## XIV வது பாகம்

### ஹோட்டல்கள் பற்றிய துணைவிதிகள்

1. இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் ஹோட்டல்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. தலைவரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் நகர சபை பிரதேசத்தினுள் ஹோட்டலொன்றை நடாத்துதல் ஆகாது.

3. இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

4. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, எந்தவொரு ஹோட்டலையும் நடாத்துவதற்கு தலைவரால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது :-

(1) இடம் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) இடத்தின் அனைத்து அறைகளின் சுவர்களும் 2.5 மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்டிருத்தல்' வேண்டுமென்பதோடு, இரு பக்கங்களுக்கும் சாந்து பூசப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தலும் வேண்டும் ; எனினும், சமையலறை தவிர்ந்த ஏனைய அறைகள் மரப்பலகையினால் அல்லது ஏதேனும் உலோகத் தகடு வர்க்கத்தினால் அல்லது மரப்பலகையும் ஏதேனும் உலோக தகடு வர்க்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் இப்பிரமாணத்திற்கு அமைவானதெனக் கருதுதல் வேண்டும்.

(3) இடத்திலுள்ள அனைத்து அறைகளுக்கும் உட்கூரைகள் அமைந்திருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய உட்கூரை நிலத்திலிருந்து குறைந்த பட்சம் 2.5 மீற்றர் உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(4) அனைத்து அறைகளுக்கும் திறந்து வைக்கக்கூடிய ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு அறைகளினதும் ஜன்னல்களைத் திறக்கும் போது அத்தகைய ஜன்னல்களின் விஸ்தீரணம் அறையின் தரை விஸ்தீரணத்தின் பதினைந்தில் ஒரு பங்குக்குக் குறையாதிருத்தல் வேண்டும். ஆயினும் ஏதேனும் அறை எயர் கொண்டிஷன் செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இப்பிரமாணம் ஏற்புடையதாகாது.

(5) கூரை ஏதேனும் நிலையான பொருட்களை உபயோகித்து வேயப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) தாழ்வாரத்தின் ஓரங்கள் நில மட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 02 மீற்றர் உயரத்தில் இருப்பதுடன், தாழ்வாரம் ஆகக்குறைந்தது 1.5 மீற்றராகவும் இருத்தல் வேண்டும்.

(7) அனைத்து அறைகளினதும் தரை சீமெந்திடப்பட்டு சீமெந்தினால் ஒப்புரவு செய்யப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(8) இடத்தினுள் பிறப்பிக்கப்படும் கழிவுகளைச் சேகரிப்பதற்காக கழிவு பாத்திரங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, சமையலறையினுள் வைக்கப்படும் கழிவு பாத்திரங்கள் இலையான்கள் அல்லது வேறு பூச்சிகள், விலங்குகள் உட்புகாதவாறு மூடிவைக்கக்கூடிய மூடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(9) இடத்தினுள் பிறப்பிக்கப்படும் கழிவுகளை அப்புறப்படுதல் 17 வது துணைவிதியின் பணிப்புகளுக்கமைய செயலாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(10) இடத்தின் சமையலறையில் பாவிக்கப்படும் அனைத்து மேசைகளும்,-

(அ) மரத்தினால் செய்யப்பட்டு அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இரும்பு, உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் செய்யப்பட்டிருப்பின் அதன் கால்கள் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(11) இடத்தில் வாடிக்கையாளரின் பாவனைக்கு வைக்கப்பட்டுள்ள அனைத்து மேசைகளும்,-

(அ) மரத்தினால் செய்யப்பட்டு அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இரும்பு, உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் செய்யப்பட்டிருப்பின் அதன் கால்கள் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(12) பாவனைக்கு எடுக்கின்ற நீர் மனித நுகர்வுக்குப் பொருத்தமானதென தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்பட்ட தரச் சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் மாத்திரமன்றி குறைந்த பட்சம் ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் இத்தரச் சான்றிதழ் பெறப்படல் வேண்டும். இடத்தின் பாவனைக்காக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற நீரைப் பயன்படுத்துவதாயின் அத்தகைய தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

(13) இடத்தின் கருமங்களுக்காக பாவிக்கப்படும் நீரைக் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கின்ற நீர் மாசடைவதைத் தடுக்கும் பொருட்டு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(14) வாடிக்கையாளர்களால் பாவிக்கப்பட்ட பாத்திரங்களைக் கழுவுவதற்கு தனிவேறான பகுதியொன்று இடத்தில் இருத்தல் வேண்டும்.

(15) வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களின் பாவனைக்காகக் குறைந்தது பத்துப் பேருக்கு ஒன்றென்ற வீதம் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, பெண்கள் மற்றும் ஆண்களுக்கென தனிவேறாக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(16) அனைத்து மலசலகூடங்களும் அவற்றின் சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் அல்லது ஏதேனும் துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் நிர்மாணிக்கப்பட்டு தரை சீமெந்தினால் சாந்து பூசப்பட்டோ, சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அதே போன்று மேலும் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்ட சுவராயின் சாந்து பூசப்பட்டோ, சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, துருப்பிடிக்காத உலோக தகடுகளால் நிர்மாணிக்கப்பட்ட சுவராயின் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(17) இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆட்களின் பாவனைக்காக குளியல் அறைகள் போதியளவு எண்ணிக்கை இருத்தல் வேண்டுமென்பதோடு, (15) வது பந்தியில் மலசலகூடங்களுக்கு ஏற்புடைய பணிப்புக்களை அத்தகைய குளியல் அறைகளின் தரைகளுக்கும் சுவர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(18) இடத்தில் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில், வாடிக்கையாளர்களின் கைகளைக் கழுவுவதற்கு துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் அல்லது மாபிள் களியினால் நிர்மாணித்து மெருகூட்டப்பட்டோ அல்லது செங்கல்லினால் அல்லது சிமெந்துகல்லினால் கட்டப்பட்ட மாபிள் ஓடு பதிக்கப்பட்ட பேசின் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(19) இடத்தில் எந்தவொரு பகுதியிலும் பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீர் தடையின்றி பாய்ந்து செல்வதற்குப் பொருத்தமான வடிகான் முறைமையொன்று இருத்தல் வேண்டும்.

(20) நகர சபையினால் கழிவுநீர் முறைமை மேற்கொள்ளப்பட்டிருப்பின் இடத்தினுள் வெளியாகும் கழிவு நீர் நகர சபையின் பணிப்புக்கமைய அத்தகைய கழிவுநீர் முறைமையில் பாய்ந்து சேரும் ஏற்பாடுகளைச் செய்யமுடியுமென்பதோடு, அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் அத்தகைய கழிவு நீரை, உறிஞ்சியிழுக்கக்கூடிய கிடங்குகளுக்குப் பாய்ந்து செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருத்தல் வேண்டும்.

(21) உள்ளே சாதாரண தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, பாதுகாப்பிற்கான வேலைத் திட்டம் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இடத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டிருப்பின் மேலதிகமாக மின்சார தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(22) இடத்தில் தேநீர், கோப்பி அல்லது பால் தயாரிக்கும் பிரிவு இடைவெளியற்றதும் துருப்பிடிக்காததுமான உலோகத் தகடுகளினாலோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்ட அல்லது வேறு ஊடறுக்கமுடியாத பொருளால் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(23) இடத்தில் வாடிக்கையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் நித்திரை செய்வதற்கு ஒதுக்கப்பட்ட படுக்கை அறைகளில் ஒருவர் நித்திரை செய்வதறகு் ஒதுக்கப்பட்ட இடத்தின் அளவு குறைந்த பட்சம் நான்கு மீற்றருக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

5. வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென 4 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பாகங்களுக்கும் குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

6. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு, கழிவு நீர் பாய்ந்தோடும் வடிகான்கள் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

7. அனுமதிப்பபத்திரம் பெறப்பட்ட இடத்தில் படுக்கை அறைகளாக திட்டவட்டமாக ஒதுக்கப்பட்ட அறை தவிர்ந்த வேறு எந்தவோரு அறையிலும் எந்தவோர் ஆளுக்கும் நித்திரைசெய்ய இடமளித்தல் ஆகாது.

*8. 4 வது துணைவிதியின் (23) வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த பட்ச இடத்தின் அளவுடன் பொருந்தாத எண்ணிக்கை கொண்ட ஆட்களை படுக்கை அறைகளில் நித்திரை செய்ய அனுமதிப்பத்திரம் பெறுநர் இடமளித்தல் ஆகாது.*

*9. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் இரவில் தங்கியிருப்பதற்கு வருகை தரும் ஒவ்வொரு ஆளினதும் பெயர், முகவரி மற்றும் அடையாளத்தை பதிவு செய்யும் பதிவேடொன்று அனுமதிப்பத்திரம் பெற்ற இடம் அனைத்திலும் பேணப்படல் வேண்டுமென்பதோடு, தலைவர், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது எந்தவொரு பொலிஸ் அலுவலரினாலும் பரிசீலனை செய்வதற்கு கோரும் சந்தர்ப்பத்தில் அத்தகைய பதிவேட்டினைப் பரிசீலிப்பதற்கு இடமளிப்பது அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.*

*10. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அனைத்து படுக்கை அறையிலும் ஒரு வாடிக்கையாளர் பாவித்த பின்னர் இன்னொரு வாடிக்கையாளரின் பாவனைக்கு இடமளிக்க முன்னர் அத்தகைய படுக்கை அறையில் படுக்கை விரிப்புகள், தலையணை உறை, போர்வைகள், துவாய் மற்றும் பாவிக்கப்பட்ட ஏனைய துணிகள் கழுவாமலன்றி அடுத்த வாடிக்கையாளருக்கு பாவிக்க இடமளித்தல் ஆகாதென்பதோடு, பின்னர் வருகைதரும் வாடிக்கையாளருக்கு அத்தகைய அறையை பாவிக்க இடமளிக்க முன்னர் ஜன்னல்களைக் குறைந்த பட்சம் நான்கு மணித்தியாலங்கள் பூரணமாகத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வித்தலும் வேண்டும்.*

*11. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட அனைத்து இடங்களின் அனைத்து அறைகள், ஏறுபடிகள், முகப்புகள், வடிகான்கள் மற்றும் அத்தகைய இடத்திற்குச் சொந்தமான வளவுகள் தினந்தோறும் நண்பகலுக்கு முன்னர் கூட்டிச் சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.*

*12. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலுள்ள ஏதேனும் படுக்கை அறையில், உணவு சமைக்கும் இடத்தில் அல்லது உணவருந்துவதற்கு ஒதுக்கப்பட்ட ஏதேனும் பிரிவில் எந்தவொரு பிராணியையும் வைத்திருத்தல் ஆகாது.*

*13. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலுள்ள மலசலகூடங்களும் அலம்பகங்களும் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டு கிருமிநாசினிகள் உபயோகிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, துர்நாற்றம் வீசாது பார்த்துக்கொள்ளலும் வேண்டும். ஆயினும் வாடிக்கையாளர் தங்கியிருக்கும் ஏதேனும் அறையின் மலசலகூடம் நாளொன்றுக்கு ஒரு தடவை சுத்தம் செய்யப்படுதலை போதுமானதாகக் கருத முடியும்.*

*14. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிப்பதற்கும், விற்பனைக்காகக் காட்சிக்கு வைப்பதற்கும் மற்றும் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு உபயோகிக்கப்படும் பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் அவற்றைப் பாவிப்பதற்கு முன்னர் சுத்தமான நீரினால் கழுவுதல் வேண்டுமென்பதோடு, பாவிக்கப்பட்ட பின்னரும் கழுவிச் சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளை அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.*

*15. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அந்தந்த பிரிவுகளில் சேரும் அனைத்து கழிவுகளும் 19 வது துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ள விதத்தில் வகைப்படுத்தி ஊடறுக்கமுடியாத பொருளால் ஆக்கப்பட்ட பாத்திரங்களில் இடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கழிவுகள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவை அல்லது அவசியமாயின் அதற்கு மேற்பட்ட தடவைகளிலும் அத்தகைய இடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய பாத்திரங்களில் கழிவுகளைப் போடும் சந்தர்ப்பமும் அவற்றை அப்புறப்படுத்தும் சந்தர்ப்பமும் தவிர்ந்த மற்றெல்லா நேரத்திலும் அத்தகைய பாத்திரங்கள் நன்றாக மூடிவைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*16. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அப்புறப்படுத்தும் கழிவுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடத்தின் தரையிலோ அல்லது அங்கும் இங்கும் இடுதல் ஆகாது.*

*17. (அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள்,-*

(i) *உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;*

(ii) *கண்ணாடிப் பொருட்கள் ;*

(iii) *கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;*

(iv) *பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;*

(v) *இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள் ;*

(vi) *உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின்போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் ;*

(vii) *ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்*

*என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.*

(ஆ) (அ) பிரிவில் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், நகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி தலைவரின் பணிப்பிற்கமைய இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

18. அனைத்து அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலும் எலிகள், இலையான்கள் அல்லது வேறு பூச்சிகள் அணுகாத வண்ணமும், அத்தகைய இடத்தில் வைக்கப்படும் உணவுகள் அல்லது பானங்கள் தயாரிப்பதற்கு பாவிக்கப்படும் பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட உணவுகள் மற்றும் பானங்கள் அத்தகைய எலிகள், இலையான்கள் அல்லது வேறு பூச்சிகளால் மாசடைவதைத் தடுப்பதற்கு அவசியமான சகல ஏற்பாடுகளையும் செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

19. வாடிக்கையாளருக்கு உணவு வகைகளைக் கையினால் பரிமாறுதல் ஆகாதென்பதோடு, அத்தகைய உணவு பரிமாறுகையில் கரண்டி, முள்ளுக்கரண்டி அல்லது வேறு வகையான உபகரணத்தை உபயோகித்தல் வேண்டும்.

20. எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலும் தரக்குறைவு செய்யப்பட்ட எவ்வகையான பாலை வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் ஆகாது. இத்துணைவிதியின் கருமங்களுக்காக தரக் குறைவு செய்யப்பட்ட பால் என்பது நீர் அல்லது வேறு வெளிப் பொருள் அல்லது பொருட்கள் கலக்கப்பட்ட பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப் பொருள் நூற்றுக்கு 85 வீதத்திற்குக் குறைவாக அல்லது பாற் கொழுப்பு நூற்றுக்கு 35 வீதத்திற்கு குறைவான பசுப்பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப் பொருள் நூற்றுக்கு 9 வீதத்திற்கோ அல்லது பாற் கொழுப்பு நூற்றுக்கு 7 வீதத்திற்கு குறைவான எருமைப் பால் எனக் கருதப்படும்.

21. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையான வியாபாரத்திலும் அல்லது அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களும் வருடத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

22. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் மேலங்கிகள் வழங்கப்படுதலும், அத்தகைய ஊழியர் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் மேலங்கிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

23. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சுத்தமான நீர், சுத்தமான துவா, நகங்களைச் சுத்தப்படுத்தும் தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் போன்றவை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

24. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசீலனை செய்வதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

25. தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிக்கப்படும் அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப்பத்திரம் பெறுநராலும் அத்தகைய கொள்வனவு செய்வதை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

26. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் 4 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய விளங்குதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தலைவர் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

27. 26 வது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தலைவருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

*28. 27 வது துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை தலைவரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.*

*29. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,-*

*“ஹோட்டல்” என்பது, விற்பனைக்காக சோறு மற்றும் கறிகள் தயாரிக்கப்படும் அல்லது வைத்திருக்கும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் இடம், உணவு வேளை ஒன்றுக்காக உண்பதற்கு உகந்த வேறு ஏதேனும் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் அல்லது ஏதேனும் சிற்றுண்டி வகைகள் விற்பனைக்காக தயாரிக்கப்பட்ட அல்லது வைத்திருக்கும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் இடம் அல்லது அத்தகைய கருமங்களுடன் வாடிக்கையாளரை தங்கவைக்கும் வசதிகளை வழங்கும் இடம் என கருதப்படும்.*

## *பாகம் XV*

### *தங்குமிடங்கள் பற்றிய துணை விதிகள்*

*1. இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் தங்குமிடங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.*

*2. தலைவரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் நகர சபை பிரதேசத்தினுள் தங்மிடமொன்றை நடாத்துதல் ஆகாது.*

*3. இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.*

*4. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, எந்தவொரு தங்குமிடத்தையும் நடாத்துவதற்கு தலைவரால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.-*

*(1) இடம் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் கொண்டுநடாத்தப்படுதல் வேண்டும்.*

*(2) இடத்தின் அனைத்து அறைகளின் சுவர்களும் 2.5 மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இரு பக்கங்களுக்கும் சாந்து பூசப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தலும் வேண்டும். எனினும், சமையலறை தவிர்ந்த ஏனைய அறைகள் மரப்பலகையினால் அல்லது ஏதேனும் உலோகத் தகடு வர்க்கத்தினால் அல்லது மரப்பலகையும் ஏதேனும் உலோக தகடு வர்க்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் இப்பிரமாணத்திற்கு அமைவானதெனக் கருதுதல் வேண்டும்.*

*(3) இடத்திலுள்ள அனைத்து அறைகளுக்கும் உட்கூரைகள் அமைந்திருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய உட்கூரைகள் நிலத்திலிருந்து குறைந்த பட்சம் 2.5 மீற்றர் உயரத்தில் இருத்தல் வேண்டும்.*

*(4) அனைத்து அறைகளுக்கும் திறந்து வைக்கக்கூடிய ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு அறைகளினதும் ஜன்னல்களைத் திறக்கும்போது அத்தகைய ஜன்னல்களின் பரப்பளவு அறையின் தரையின் பரப்பளவின் பதினைந்தில் ஒரு பங்குக்குக் குறையாதிருத்தல் வேண்டும். ஆயினும் ஏதேனும் அறை எயர் கொண்டிஷன் செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இப்பிரமாணம் ஏற்புடையதாகாது.*

*(5) கூரை ஏதேனும் நிலையான பொருட்களை உபயோகித்து வேயப்பட்டிருத்தல் வேண்டும்*

*(6) தாழ்வாரத்தின் ஓரங்கள் நில மட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 02 மீற்றர் உயரத்தில் இருப்பதுடன், தாழ்வாரம் ஆகக்குறைந்தது 1.5 மீற்றராகவும் இருத்தல் வேண்டும்.*

*(7) அனைத்து அறைகளினதும் தரை சீமெந்திடப்பட்டு சீமெந்தினால் ஒப்புரவு செய்யப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.*

*(8) இடத்தினுள் பிறப்பிக்கப்படும் கழிவுகளைச் சேகரிப்பதற்காக கழிவு பாத்திரங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, சமையலறையினுள் வைக்கப்படும் கழிவுப் பாத்திரங்கள் இலையான்கள் அல்லது வேறு பூச்சிகள், விலங்குகள் உட்புகாதவாறு மூடிவைக்கக்கூடிய மூடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

(9) இடத்தினுள் பிறப்பிக்கப்படும் கழிவுகளை அப்புறப்படுத்தல் 21 வது துணைவிதியின் பணிப்புகளுக்கமைய செயலாற்றும் விதத்தில் அவசிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(10) இடத்தின் சமையலறையில் பாவிக்கப்படும் அனைத்து மேசைகளும்-

(அ) மரத்தினால் செய்யப்பட்டு அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இரும்பு, உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் செய்யப்பட்டிருப்பின் அதன் கால்கள் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(11) இடத்தில் வாடிக்கையாளரின் பாவனைக்கு வைக்கப்பட்டுள்ள அனைத்து மேசைகளும்,-

(அ) மரத்தினால் செய்யப்பட்டு அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இரும்பு, உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் செய்யப்பட்டிருப்பின் அதன் கால்கள் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(12) இடத்தில் பாவனைக்கு எடுக்கின்ற நீர் மனித நுகர்வுக்குப் பொருத்தமானதென தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்பட்ட தரச் சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, குறைந்த பட்சம் ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் இத்தரச் சான்றிதழ் பெறப்படல் வேண்டும். இடத்தின் பாவனைக்காக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற நீரைப் பயன்படுத்துவதாயின் அத்தகைய தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாகக் கருதப்படல் வேண்டும்;

(13) இடத்தின் கருமங்களுக்காக பாவிக்கப்படும் நீரைக் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கின்ற நீர் மாசடைவதைக் தடுக்கும் பொருட்டு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்;

(14) வாடிக்கையாளர்களால் பாவிக்கப்பட்ட பாத்திரங்களைக் கழுவுவதற்கு தனிவேறான பகுதியொன்று இடத்தில் இருத்தல் வேண்டும்.

(15) ஊழியர்களின் பாவனைக்காகக் குறைந்தது பத்துப் பேருக்கு ஒன்றென்ற வீதம் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, பெண்கள் மற்றும் ஆண்களுக்கென தனிவேறாக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்,

(16) அனைத்து மலசலகூடங்களும் அவற்றின் சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் அல்லது ஏதேனும் துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் நிர்மாணிக்கப்பட்டு தரை சீமெந்தினால் சாந்து பூசப்பட்டோ, சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவ்வாறே மேலும் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்ட சுவராயின் சாந்து பூசப்பட்டோ, சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டுமென்பதோடு, துருப்பிடிக்காத உலோக தகடுகளால் நிர்மாணிக்கப்பட்ட சுவராயின் வர்ணப்பூச்சுப் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(17) இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆட்களின் பாவனைக்காக குளியல் அறைகள் போதியளவு எண்ணிக்கை இருத்தல் வேண்டுமென்பதோடு, (15) வது பந்தியில் மலசலகூடங்களுக்கு ஏற்புடைய பணிப்புக்களை அத்தகைய குளியல் அறைகளின் தரைகளுக்கும் சுவர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(18) இடத்தில் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில், வாடிக்கையாளர்களின் கைகளைக் கழுவுவதற்கு துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் அல்லது மாபிள் களியினால் நிர்மாணித்து மெருகூட்டப்பட்டோ அல்லது செங்கல்லினால் அல்லது சிமெந்துக் கல்லினால் கட்டப்பட்ட மாபிள் ஓடு பதிக்கப்பட்ட பேசின் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(19) இடத்தில் எந்தவொரு பகுதியிலும் பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீரை தடையின்றி பாய்ந்து செல்வதற்குப் பொருத்தமான வடிகான் முறைமையொன்று இருத்தல் வேண்டும்.

(20) நகர சபையினால் வடிகான் மேற்கொள்ளப்பட்டிருப்பின் இடத்தினுள் வெளியாகும் கழிவு நீர் நகர சபையின் பணிப்புக்கமைய அத்தகைய கழிவுநீர் முறைமையில் பாய்ந்து செல்லும் ஏற்பாடுகளைச் செய்யமுடியுமென்பதோடு, அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் அத்தகைய கழிவு நீரை, உறிஞ்சியிழுக்கக்கூடிய கிடங்குகளுக்குப் பாய்ந்து செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருத்தல் வேண்டும்.

(21) இடத்தில் சாதாரண தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, பாதுகாப்பிற்கான வேலைத் திட்டம் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இடத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டிருப்பின் மேலதிகமாக மின்சார தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

(22) இடத்தில் தேநீர், கோப்பி அல்லது பால் தயாரிக்கும் பிரிவு இடைவெளியற்றதும் துருப்பிடிக்காததுமான உலோகத் தகடுகளினாலோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்ட அல்லது வேறு ஊடறுக்கமுடியாத பொருளால் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(23) இடத்தில் வாடிக்கையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் நித்திரை செய்வதற்காக ஒதுக்கப்பட்ட படுக்கை அறைகளில், ஒருவர் நித்திரை செய்வதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் அளவு குறைந்த பட்சம் நான்கு மீற்றருக்குக் குறையாதிருத்தல் வேண்டுமென்பதோடு, சகல படுக்கை அறைகளிலும் உடுப்புகளை வைப்பதற்கு அலுமாரி அல்லது கெபினெட், துவாய் இராக்கை, வாடிக்கையாளரின் அல்லது வாடிக்கையாளர்களின் பொருட்களை வைப்பதற்கு மேசை மற்றும் மலசலகூடத்துடன் அமைந்த குளியல் அறை இருத்தல் வேண்டும்.

(24) ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலுள்ள படுக்கை அறை உள்ளிட்ட எந்தவொரு சந்தர்ப்பத்திலும்–

(அ) தனி அறையொன்றில் ஒரு கட்டிலுக்கு மேலாகவும்

(ஆ) இருவர் தங்கும் அறையில் இரட்டைக் கட்டில் அல்லது தனிக் கட்டில்கள் இரண்டுக்கு அதிகமாகவும்

(இ) மூவர் தங்கும் அறையில் இரட்டைக் கட்டிலுடன் தனி கட்டில் அல்லது இரட்டை கட்டில் ஒன்று அல்லது தனிக் கட்டில்கள் மூன்றுக்கு அதிகமாகவும்

(ஈ) குடும்ப அறையில் இரட்டை கட்டில்கள் இரண்டு மற்றும் தனிக் கட்டில் ஒன்று அல்லது இரட்டை கட்டில் ஒன்று மற்றும் தனிக் கட்டில் மூன்று அல்லது தனிக் கட்டில்கள் ஐந்துக்கு மேலும்

போடப்பட்டிருத்தல் ஆகாது.

5. இப்பிரிவின் துணை விதிகளுக்கமைய அனுமதிப்பத்திரத்தைக் கோரும் எவரேனும் ஆளொருவரால் இப்பிரிவின் அட்டவணையில் தரப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவமான்றை தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென 4 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பாகங்களுக்கும் குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

7. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு, கழிவு நீர் பாய்ந்தோடும் வடிகான்கள் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

8. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் படுக்கை அறைகளாக திட்டவட்டமாக ஒதுக்கப்பட்ட அறை தவிர்ந்த வேறு எந்தவோர் அறையிலும் எந்தவொரு ஆளுக்கும் நித்திரை செய்ய இடமளித்தல் ஆகாது.

9. 4 வது துணைவிதியின் (23) வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த பட்ச இடத்தின் அளவுக்குப் பொருந்தாத அளவு எண்ணிக்கையினர் படுக்கை அறைகளில் நித்திரை செய்வதற்கு இடமளித்தல் ஆகாது.

10. ஏதேனுமொரு தங்குமிடத்தில் தனி அறையில் ஒருவருக்கு மேல் அல்லது இருவர் தங்கும் அறையில் இருவருக்கு மேல் அல்லது மூவர் தங்கும் அறையில் மூவருக்கு மேல் நித்திரை செய்வதற்கு அனுமதிப்பத்திரம் பெறுநர் இடமளித்தல் ஆகாது. எனினும் அத்தகைய ஏதேனும் அறையில் நித்திரை செய்யும் எவரேனும் ஆள் 12 வயதுக்குக் குறைவானவராயின் இத் துணைவிதியின் கருமங்களைப் பொறுத்தவரையில் அத்தகையவர் ஒரு ஆளாகக் கருதாதிருத்தல் வேண்டும்.

11. அனுமதிப்பதித்திரம் பெறப்பட்ட இடத்தில் இரவில் தங்கியிருப்பதற்கு வருகை தரும் ஒவ்வொரு ஆளினதும் பெயர், முகவரி மற்றும் அடையாளத்தைப் பதிவு செய்யும் பதிவேடொன்று அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்ற இடங்களிலும் பேணப்படல் வேண்டுமென்பதோடு, தலைவர், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது எந்தவொரு பொலிஸ் அலுவலரினாலும் அத்தகைய பதிவேட்டினைப் பரிசீலனை செய்யக் கோரும் சந்தர்ப்பத்தில் அதற்கு இடமளித்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

12. ஏதேனுமொரு தங்குமிடத்தில் இரவில் தங்கியிருக்கும் அனைவரும் தமது அடையாளத்தை அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு நிரூபித்தல் வேண்டுமென்பதோடு தங்குமிடத்தில் பேணப்படும் விருந்தினர் பதிவேட்டில் தமது தகவல்கள் உட்படுத்தும் பகுதியில் தமது பெயருடன் கையொப்பம் இடுதல் வேண்டும். அவ்வாறே தமது அடையாளத்தை உறுதிப்படுத்தாத அல்லது விருந்தினர் பதிவேட்டில் தமது அடையாளம் பற்றிய தகவல்களை உட்படுத்தும் பகுதியில் தமது பெயருடன் கையொப்பமிடாத எந்தவொரு ஆளுக்கும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் எந்தவொரு பகுதியிலும் இரவு நேரத்தில் தங்கியிருப்பதற்கு அனுமதிப்பத்திரம் பெறுநர் இடமளித்தல் ஆகாது.

*13.* ஏதேனும் தங்குமிடத்தில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட இடமளிக்காதிருத்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டுமென்பதோடு, எவரேனும் ஆளொருவரால் தங்குமிடத்தில் வேறு தங்கியிருப்பவரின் அல்லது தங்குமிடத்திற்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு தொல்லையாக இருத்தல் பாட்டுக்களைப் பாடியோ அல்லது இசைத்தட்டுக்களை இசைத்தோ தேவையற்ற ஒலிகளை ஏழுப்புதல் ஆகாது.

*14.* அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அனைத்து படுக்கை அறையிலும் ஒரு வாடிக்கையாளர் பாவித்த பின்னர் இன்னொரு வாடிக்கையாளரின் பாவனைக்கு இடமளிக்கையில் முன்னர் அத்தகையை படுக்கை அறையில் படுக்கை விரிப்புகள், தலையணை உறை, போர்வைகள், துவாய் மற்றும் பாவிக்கப்பட்ட ஏனைய துணிகள் கழுவாமலன்றி பின்னர் வருகைதரும் வாடிக்கையாளருக்கு அத்தகைய அறையை பாவிப்பதற்கு முன்னர் ஜன்னல்கள் குறைந்த பட்சம் நான்கு மணித்தியாலங்கள் பூரணமாகத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வித்தல் வேண்டும்.

*15.* அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் அனைத்து அறைகள், ஏறுபடிகள், முகப்புக்கூடம், வடிகான்கள் மற்றும் அத்தகைய இடத்திற்குச் சொந்தமான வளவுகள் தினந்தோறும் நண்பகலுக்கு முன்னர் கூட்டித் துப்புரவாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

*16.* அனைத்து அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலுள்ள ஏதேனும் படுக்கை அறையில், உணவு சமைக்கும் இடத்தில் அல்லது உணவருந்துவதற்கு ஒதுக்கப்பட்ட ஏதேனும் பகுதியில் எந்தவொரு பிராணியையும் வைத்திருத்தல் ஆகாது.

*17.* அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலுள்ள மலசலகூடங்களும் சிறுநீர் அகங்களும் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டு கிருமிநாசினிகள் உபயோகிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, துர்நாற்றம் வீசாது பார்த்துக்கொள்ளல் வேண்டும். ஆயினும் வாடிக்கையாளர் தங்கியிருக்கும் ஏதேனும் அறையின் மலசலகூடடம் நாளொன்றுக்கு ஒரு தடவை சுத்தம் செய்தல் போதுமானதாகக் கருத முடியும்.

*18.* அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிப்பதற்கும், விற்பனைக்காகக் காட்சிக்கு வைப்பதற்கும் மற்றும் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு உபயோகிக்கப்படும் பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் அவற்றைப் பாவிப்பதற்கு முன்னர் சுத்தமான நீரினால் கழுவுதல் வேண்டுமென்பதோடு, பாவிக்கப்பட்ட பின்னரும் கழுவிச் சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளை அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

*19.* அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அந்தந்த பகுதிகளில் சேரும் அனைத்து கழிவுகளும் 19 வது துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ள விதத்தில் வகைப்படுத்தி ஊடறுக்கமுடியாத பொருளால் ஆக்கப்பட்ட பாத்திரங்களில் இடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கழிவுகள் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவை அல்லது அவசியமாயின் அதற்கு மேற்பட்ட தடவைகளிலும் அத்தகைய இடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய பாத்திரங்களில் கழிவுகளைப் போடும் சந்தர்ப்பமும் அவற்றை அப்புறப்படுத்தும் சந்தர்ப்பமும் தவிர்ந்த மற்றெல்லா நேரத்திலும் அத்தகைய பாத்திரங்கள் நன்றாக மூடிவைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*20.* அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அப்புறப்படுத்தும் கழிவுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடத்தின் தரையிலோ அல்லது ஆங்காங்கோ இடுதல் ஆகாது.

*21.* (அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள்–

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள்;

(ii) கண்ணாடிப் பொருட்கள்;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும்;

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள்;

(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின்போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள்;

(vii) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்;

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

(ஆ) (அ) பிரிவில் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், நகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி தலைவரின் பணிப்பிற்கமைய இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

22. அனைத்து அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலும் எலிகள், இலையான்கள் அல்லது வேறு பூச்சிகள் அணுகாத வண்ணமும், அத்தகைய இடத்தில் வைக்கப்படும் உணவுகள் அல்லது பானங்கள் தயாரிப்பதற்கு பாவிக்கப்படும் பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட உணவுகள் மற்றும் பானங்கள் அத்தகைய எலிகள், இலையான்கள் அல்லது வேறு பூச்சிகளால் மாசடைவதைத் தடுப்பதற்கு அவசியமான சகல ஏற்பாடுகளையும் செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

23. வாடிக்கையாளருக்கு உணவு வகைகளை வெறுங்கையினால் பரிமாறுதல் ஆகாதென்பதோடு, அத்தகைய உணவு பரிமாறும் பொழுது கரண்டி, முள்ளுக்கரண்டி அல்லது வேறு வகையான உபகரணங்களை உபயோகித்தல் வேண்டும்.

24. எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலும் தரக்குறைவு செய்யப்பட்ட எவ்வகையான பாலை வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் ஆகாது. இத்துணைவிதியின் கருமங்களுக்காக தரக்குறைவு செய்யப்பட்ட பால் என்பது நீர் அல்லது வேறு வெளிப் பொருள் அல்லது பொருட்கள் கலக்கப்பட்ட பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப் பொருள் நூற்றுக்கு 85 வீதத்திற்குக் குறைவாக அல்லது பாற் கொழுப்பு நூற்றுக்கு 35 வீதத்திற்கு குறைவான பசுப்பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப் பொருள் நூற்றுக்கு 9 வீதத்திற்கோ அல்லது பாற் கொழுப்பு நூற்றுக்கு 7 வீதத்திற்கு குறைவான எருமைப் பால் கருதப்படும்.

25. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையான வியாபாரத்திலும் அல்லது அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களும் வருடத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

26. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் மேலங்கிகள் வழங்கப்படுதலும், அத்தகைய ஊழியர் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் மேலங்கிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

27. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சுத்தமான நீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தப்படுத்தும் தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் போன்றவை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

28. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசீலனை செய்வதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

29. தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிக்கப்படும் அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப்பத்திரம் பெறுநராலும் அத்தகைய கொள்வனவு செய்வதை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

30. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் 4 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய விளங்குதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தலைவர் அந்த அனுமதிப்பத்திரதாரருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

31. 30 வது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தலைவருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

32. 31 வது துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை தலைவரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

33. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,-

"குடும்ப அறை" என்பது, ஒரு தடவையில் மூன்று பேர் தங்கக்கூடிய இடம் அத்துடன் இரட்டைக் கட்டில்கள் இரண்டும் தனிக் கட்டில் அல்லது இரட்டைக் கட்டில் ஒன்று மற்றும் தனிக் கட்டில் மூன்று அல்லது தனிக் கட்டில்கள் ஐந்தைக் கொண்ட அறையும்

"தனிக் கட்டில்" என்பது, குறைந்த பட்சம் நீளம் 200 சென்ரி மீற்றரும் அகலம் 95 சென்ரி மீற்றரும் மெத்தையையும் கொண்ட கட்டிலும்

"தனி அறை" என்பது, ஒருவருக்கு மாத்திரம் தங்குவதற்குப் போதிய இடவசதியும் ஒரு கட்டிலையும் கொண்ட அறையும்

"மூவர் தங்கும் அறை" என்பது, ஒரு தடவையில் மூவர் தங்குவதற்குப் போதிய இடவசதியும் இரட்டைக் கட்டில் மற்றும் தனிக்கட்டில் அல்லது தனிக் கட்டில் மூன்று அடங்கிய அறையும்

"இரட்டை கட்டில்" என்பது, குறைந்த பட்சம் 200 சென்ரி மீற்றர் நீளமும் 125 சென்ரி மீற்றர் அகலமும் மெத்தையையும் கொண்ட கட்டிலும்

"இருவர் தங்கும் அறை" என்பது, ஒரு தடவையில் இருவர் தங்குவதற்குப் போதிய இடவசதியும் இரட்டைக் கட்டில் அல்லது தனிக் கட்டில்கள் இரண்டையும் கொண்ட அறையும்

"ஹோட்டல்" என்பது, விற்பனைக்காக சோறு மற்றும் கறிகள் தயாரிக்கப்படும் அல்லது வைக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் இடம், உணவு வேளை ஒன்றுக்காக உணவுக்குகந்த வேறு ஏதேனும் சமைத்த உணவு வகை அல்லது ஏதேனும் சிற்றுண்டி வகை விற்பனைக்காக தயாரிக்கப்படுகின்ற அல்லது வைக்கப்படுகின்ற அல்லது காட்சிக்கு வைக்கப்படுகின்ற இடம் அல்லது அத்தகைய கருமங்களுடன் வாடிக்கையாளரைத் தங்கவைப்பதற்கு இடவசதி அளிக்கப்பட்ட இடம் எனக் கருதப்படும்.

**அட்டவணை**

(5 வது துணைவிதி)

**தங்குமிடமொன்றை நடாத்துவதற்கு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரரின் பெயர் :----.
முகவரி :----.
தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

2. தங்குமிடத்தின் பெயர் :----.
முகவரி :----.
முகாமையாளரின் / பொறுப்பாளரின் பெயர் :----.
தொலைபேசி இலக்கம் :----.

3. அனுமதிப்பத்திரம் கோரப்படும் ஆண்டு :----.

4. தங்குமிடமொன்றில்,-

(i) தனி அறைகளின் எண்ணிக்கை :----.
(ii) இருவர் தங்கும் அறைகளின் எண்ணிக்கை :----.
(iii) மூவர் தங்கும் அறைகளின் எண்ணிக்கை :----.
(iv) குடும்ப அறைகளின் எண்ணிக்கை :----.
(v) ஒரே தடவையில் தங்கவைக்கக்கூடியவர்களின் முழு எண்ணிக்கை :----.

5. தங்குமிடத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை (முகாமையாளர் உள்ளிட்ட) ... ... ... ... ... ... ... ... ...

6. மலசலகூடங்கள்,-

(i) ஆண் ஊழியர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை: ... ...
(ii) பெண் ஊழியர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை: ... ...
(iii) ஆண் வாடிக்கையாளருக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை: ...
(iv) பெண் வாடிக்கையாளருக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை: ...

7. குளியல் அறைகள்,-

(i) ஆண்களுக்கான குளியல் அறைகளின் எண்ணிக்கை: … … … …
(ii) பெண்களுக்கான குளியல் அறைகளின் எண்ணிக்கை: … … … …

8. சமையலறைகளின் எண்ணிக்கை: … … … … … … …

9. நீர் வழங்கல் முறை: … … … … … … … … …

10. திண்மக் கழிவுப் பொருட்களை இறுதியாக அப்புறப்படுத்துவதற்கான நடைமுறைகள் :----.

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன். தங்குமிடங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகளின் பணிப்புரைகளை கடைப்பிடிப்பதற்கும் இணங்குகிறேன். அத்தகைய துணைவிதிகளுக்கமைய மேலே குறிப்பிடப்பட்டுள்ள தங்குமிடத்தை நடாத்துவதற்கு 20 .... ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

----,
உரிமையாளர் / முகாமையாளர்/
பொறுப்பாளரின் கையொப்பம்.

திகதி : 20 ----.

### *XVI ஆவது பாகம்*

#### லொன்டறிகள் பற்றிய துணைவிதிகள்

இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் லொன்டறிகளை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. தலைவரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் நகர சபை பிரதேசத்தினுள் லொன்டறியொன்றை நடாத்துதல் ஆகாது.

3. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, எந்தவொரு லொன்டறியையும் நடாத்துவதற்கு தலைவரால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.-

(i) லொன்டறிக்காகப் பாவிக்கப்படும் கட்டிடம் அனைத்து அறைகளுக்கும் திறந்து வைக்கக்கூடிய ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஜன்னல்களின் பரப்பளவு ஒவ்வொரு அறையினதும் பரப்பளவின் பதினைந்திலொரு பங்குக்கு குறையாதிருத்தல் வேண்டும்.

(ii) சகல அறைகளின் சுவர்களின் உயரத்தின் அளவு 2.14 மீற்றரை விஞ்சாதிருத்தல் வேண்டும்.

(iii) அழுக்குத் துணிகள் மற்றும் கழுவிய துணிகளின் பொருட்டு வேறு வேறாக அறைகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) லொன்டறியில் கடமையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் ஒவ்வொரு பத்துப் பேருக்கு, குறைந்த பட்சம் ஒன்றென்ற வீதம் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும்.

(v) பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரால் சிபார்சு செய்யப்பட்ட நியமங்களுக்கமைய சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதோடு, தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீர் பொது நீர் வழிகளுக்குச் செலுத்தப்படலாகாது.

(vi) துணிகளைக் கழுவிய பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீர் சுத்திகரிப்புக்கு உட்படுத்த இயலாத சந்தர்ப்பத்தில், அத்தகைய கழிவு நீர், உறிஞ்சக்கூடிய கிடங்கொன்றுக்குப் பாய்ந்து செல்வதற்கு ஏற்பாடு செய்திருக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறே அத்தகைய உறிஞ்சியிழுக்கும் கிடங்கு காற்றோட்டத்தில் கலக்காதிருத்தல் வேண்டுமென்பதோடு, அருகாமையிலுள்ள கிணற்றிலிருந்து பதினைந்து மீற்றருக்குக் குறையாத தொலைவில் அமைதல் வேண்டும்.

(vii) தொழிற்சாலைக்காகப் பாவிக்கப்படும் கட்டிடத்தின் உள்ளேயும் வெளியேயும் பாதுகாப்பு கருதி போதியளவு தீயணைப்பு நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

*4*. இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் டிசெம்பர் மாதம் *31* ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

5. அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட அனைத்து லொன்டறிகளாகப் பயன்படுத்துகின்ற இடத்தின் உட்புறம்-

(i) நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

(ii) எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வீட்டுக் கருமங்களுக்காகப் பாவிக்கப்படுதல் ஆகாது.

(iii) ஏதேனுமொரு பிராணியை வைத்திருத்தலோ அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளித்தல் ஆகாது.

(iv) அழுக்குத் துணிகள் மற்றும் கழுவிய துணிகளை ஒன்றாக வைத்தல் அல்லது அவ்வாறு வைப்பதற்கு இடமளித்தல் ஆகாது.

(v) துணிகளை இஸ்திரி செய்வதற்கு கரி பாவிப்பதாயின் வெளியேற்றப்படும் எஞ்சிய பாகங்களை நீரூற்றி அணைத்த பின்னர் வேறு பாத்திரத்தில் இடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தினுள் கரி உருவாக்குவதற்காக சிரட்டை அல்லது வேறு ஏதேனும் பொருளை தீமூட்டல் ஆகாது.

(vi) நாளாந்த நடவடிக்கைகள் முடிவுற்றதும் லொன்டறியில் பற்றவைக்கப்பட்ட நெருப்பை அணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

*6*. ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையான வியாபாரத்திலும் அல்லது அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

7. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,-

"லொன்டறி" என்பது, லொன்டறி ஒன்றாக வியாபாரம் செய்யும் எவரேனும் ஒரு ஆளினால் துணி கழுவுதல், உலர்த்துதல், உலர்த்துவதன் மூலம் சுத்தப்படுத்தல், (றை கிளீனிங்) அல்லது இஸ்திரிக்கை செய்தல் போன்ற ஏதேனும் கருமம் அல்லது கருமங்கள் சிலவற்றுக்காக பாவிக்கப்படும் ஏதேனுமொரு வகை கட்டிடம் அல்லது ஏதேனும் காணி அல்லது இடம் அல்லது வளவு எனக் கருதப்படுவதோடு, அத்தகைய ஏதேனும் துணி களஞ்சியப்படுத்துவதற்கு பாவிக்கப்படும் கட்டிடமும், அவ்வாறான ஆளினால் அல்லது அவருடைய வியாபார கருமத்திற்காக உபயோகிக்கப்படும் ஏதேனும் கிணறு, தொட்டி அல்லது நீரைப் பெற்றுக்கொள்ளும் வேறு வழிகளும் இது உள்ளடக்குதல் வேண்டும்.

## *பாகம் XVII*

### தொழிற்சாலைகள் பற்றிய துணை விதிகள்

இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் தொழிற்சாலைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

*2*. தலைவரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் நகர சபை பிரதேசத்தினுள் தொழிற்சாலையொன்றை நடாத்துதல் ஆகாது.

*3*. இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் டிசெம்பர் மாதம் *31* ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

*4*. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, எந்தவொரு தங்குமிடத்தையும் நடாத்துவதற்கு தலைவரால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.-

(*1*) இடம் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

(*2*) தொழிற்சாலையின் கட்டிடங்கள் அனைத்தும் நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் கொண்டதாகப் பேணப்படுதல் வேண்டும். சகல அறைகளும் திறந்து வைக்கக்கூடியதாக ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு

அறைகளினதும் யன்னல்களைக் திறக்கும்போது அத்தகைய ஜன்னல்களின் பரப்பளவு அறையின் தரையின் பரப்பளவின் பதினைந்தில் ஒரு பங்குக்குக் குறையாதிருத்தல் வேண்டும். ஆயினும் தொழிற்சாலையின் உற்பத்திச் தொழிற்பாடுகள் மூடப்பட்டுள்ள கட்டிடம் அல்லாத கட்டிடத்தில் கொண்டு நடாத்துவதற்கு இயலாத சந்தர்ப்பத்திலும் அல்லது தொழிற்சாலைக் கட்டிடம் எயர் கொண்டிஷன் செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்திலும் இப்பிரமாணம் ஏற்புடையதாகாது.

(3) சகல அறைகளினதும் சுவர்களின் குறைந்த பட்ச உயரம் 2.14 மீற்றருக்குக் குறையாதிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்டிருப்பின், சீமெந்துச் சாந்து பூசப்பட்டு உட்பக்கம் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தலும் வேண்டும்; அவ்வாறில்லையேல் அலுமீனியம் அல்லது வேறு உலோகப் பொருளுடன் மரப்பலகை சேர்த்து முடிவுறுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் மரப்பலகையின் மீது வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) இடத்திலுள்ள அனைத்து அறைகளுக்கும் உட்கூரைகள் அமைந்திருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய உட்கூரைகள் நிலத்திலிருந்து குறைந்த பட்சம் 2 மீற்றர் உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(5) கூரைக்கு உபயோகிக்கப்பட்ட இரும்பு, ஏனைய உருக்கு அல்லது மரத்தின் மீது எண்ணைச் சாயம் அல்லது வர்ணப்பூச்சுப் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) தரை சீமெந்திடப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(7) தொழிற்சாலையில் கடமையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் பாவனைக்காகக் குறைந்தது பத்துப் பேருக்கு ஒன்றென்ற வீதம் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, பெண்கள் மற்றும் ஆண்களுக்கென தனிவேறாகவும் போதுமானளவு மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும்,

(8) பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரால் சிபார்சு செய்யப்பட்ட நியமங்களுக்கமைய சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதோடு, தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீர் பொது நீர் வழிகளுக்குச் செலுத்தப்படலாகாது.

(9) உற்பத்தி நடவடிக்கைக்காக உபயோகிக்கப்பட்ட பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீர் சுத்திகரிப்புக்கு உட்படுத்த இயலாத சந்தர்ப்பத்தில், அத்தகைய கழிவு நீர், பிரதேச சுகாதார பணிப்பாளரால் அல்லது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவரால் சிபார்சு செய்யப்பட்டவாறு உறிஞ்சியிழுக்கும் கிடங்கில் பாய்ந்து செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறே அத்தகைய உறிஞ்சியிழுக்கும் கிடங்கு காற்றோட்டத்தில் கலக்காதிருத்தல் வேண்டுமென்பதோடு, அருகாமையிலுள்ள பொது நீர் வழியிலிருந்தும் கட்டப்பட்டுள்ள கிணற்றிலிருந்தும் ஐம்பது மீற்றருக்குக் குறையாத தொலைவில் அமைதல் வேண்டும்.

(10) தொழிற்சாலைக்காகப் பாவிக்கப்படும் கட்டிடத்தின் உள்ளேயும் வெளியேயும் பாதுகாப்பு கருதி போதியளவு தீயணைப்பு நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(11) தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக உபயோகிக்கப்படும் அறைகளிலிருந்தும், முன்னர் பாவித்த பொதிகள் அல்லது வேறு பொருட்கள் மீண்டும் பாவனைக்கெடுக்கையிலும், ஊழியர்களின் குளியல் அறைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரும் தடையின்றிப் பாய்ந்து செல்வதற்குப் போதிய அளவு வடிகான் நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(12) உற்பத்திக்காக பாவிக்கப்படும் மூலப் பொருட்கள், ஏனைய இரசாயனப் பொருட்கள், ஏதேனும் உற்பத்தியின் பொருட்டு பொதியிடுவதற்காக உபயோகிக்கும் போத்தல்கள் அல்லது வேறு ஏதேனும் பொதியிடும் பொருட்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக குறைந்த பட்சம் ஒரு அறையாவது தனிவேறாக வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென்தோடு, அத்தகைய அறை எலிகள், பூச்சிகள் மற்றும் பிராணிகளின்றிப் பேணுவதற்கு போதிய அளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(13) தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகள் மனிதரின் நுகர்வு அல்லது விலங்குகளின் நுகர்வுக்காக உணவு அல்லது பான வகையாகும்போது அவற்றுக்காக பாவிக்கப்படும் நீர் மனித நுகர்வுக்குப் பொருத்தமானதென தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்பட்ட தரச் சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, குறைந்த பட்சம் ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் இத்தரச் சான்றிதழ் பெறப்படல் வேண்டும். இடத்தின் பாவனைக்காக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற நீரைப் பயன்படுத்துவதாயின் அத்தகைய தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாகக் கருதப்படல் வேண்டும்;

(14) தொழிற்சாலையின் பாவனைக்காக நீரைக் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கின்ற நீர் மாசடைவதையும் நுளம்பு மற்றும் வேறேதும் பரவுதலைத் தடுக்கும் பொருட்டு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய நீரை நிலத்திற்கடியில் நீர்த்தொட்டியில் களஞ்சியப்படுத்துவதாயின் அத்தகைய இடத்திலிருந்து 18 மீற்றருக்குக் குறைந்த தூரத்தில் கழிவுப் பொருட் கிடங்கு அல்லது பசளைக் கிடங்கு அல்லது சாம்பல் கிடங்கு இருத்தல் ஆகாது;

(15) முன்னர் பாவித்த பொதிகளைக் கழுவுவதற்காக உபயோகிக்கும் இடம் தொழிற்சாலையின் உற்பத்திக் கருமங்கள் இடம்பெறுகின்ற அறைகளிலிருந்து தனிவேறான இடத்தில் இருத்தல் வேண்டுமென்பதோடு, மேலே (13) ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறு தரச் சான்றிதழ் வழங்கப்பட்ட நீரை மாத்திரமே உபயோகித்தல் வேண்டும்.

(16) தொழிற்சாலையின் கருமங்களின் காரணமாக பிறப்பிக்கப்படும் கழிவுப் பொருட்கள் 15 வது துணைவிதியில் குறிப்பிட்டுள்ளவாறு வகைபடுத்தி அப்புறப்படுத்தற்கேதுவாக ஒதுக்கப்பட்ட பாத்திரங்கள் அல்லது தொட்டிகள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. தொழிற்சாலை பேணிவரப்படும் இடத்தில் சகல பகுதிகளும் முட்புதர்கள் அல்லது செடிகொடிகள் இன்றியும் நுளம்புகள் அல்லது வேறு ஏதேனும் பரவாதவாறும் நீர் தேங்கிநிற்பதைத் தடுத்துக்கொள்வதும் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

6. துர்நாற்றம் அல்லது நச்சுப் பொருந்திய ஏதேனும் வாயு வகைகள் வெளியேறுவதைத் தடுப்பதற்கு அவசியமான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருத்தாலேயொழிய ஏதேனும் நச்சுத் தன்மை வாய்ந்த அல்லது தொல்லை தரும் துர்நாற்றம் வீசும் ஏதேனும் பொருள் தொழிற்சாலை வளவில் களஞ்சியப்படுத்துதல், பாவனைக்கு எடுத்தல் அல்லது அவ்வாறு செய்வித்தல் எவராலும் புரியப்படலாகாது.

7. 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 32 வது பிரிவின் கீழ் சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் ஆக்கப்பட்டதும் அத்தகைய ஒழுங்குவிதிகளில் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுக்கு அமைவாகவும் ஒலி மாசுபாடு ஏற்படக்கூடிய எல்லையைப் பார்க்கிலும் குறைவாக எல்லைக்குள் ஒலிக்கட்டுப்பாடு பேணப்பட்டு வந்திருந்தாலேயன்றி எந்தவொரு தொழிற்சாலையிலும் ஒலியைப் பிறப்பிக்கக்கூடிய ஏதேனும் இயந்திர சாதனங்களோ நீராவிக் கொதிகலன்களோ இயக்கப்படும்போது ஒலியைப் பிறப்பிக்கின்ற ஏதேனும் கருவி பாவிக்கப்படலாகாது.

8. ஏதேனும் சூளையிலிருந்து உண்டாகும் புகையை வெளியேற்றுவதற்கு 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கமுடைய தேசிய சுற்றாடல் சட்டத்தின் 32 வது பிரிவின் கீழ் சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் ஆக்கப்பட்டதும் அந்த கட்டளைகளுக்கு காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய புகைபோக்கி கட்டப்பட்டிருந்தாலேயொழிய, எந்தவொரு தொழிற்சாலையிலும் புகையை பிறப்பிக்கின்ற சூளை பாவிக்கப்படல் ஆகாது.

9. எந்தவொரு தொழிற்சாலையிலோ வேறேதேனும் இடத்திலோ தொழிலாளர்களையோ சேவையில் ஈடுபட்டுள்ளவர்களையோ அழைப்பதற்காக, கருமங்களை ஆரம்பிப்பதற்காக அல்லது கருமங்களை முடிவுறுத்துவதற்கான சமிக்ஞையை விடுவிப்பதற்காக அல்லது வேறு ஏதேனும் விடயத்திற்காக ஏதேனும் நீராவிச் சங்கு அல்லது நீராவி ஊதுகுழல் அல்லது சைரன் அழைப்புமணி பாவிக்கப்படுதல் ஆகாது. இப்பிரிவின் துணைவிதிகின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கும் தினமாகும் போதும் அவ்விதமான நீராவிச் சங்கு அல்லது நீராவி ஊதுகுழல் அல்லது சைரன் அழைப்புமணி பாவிக்கப்படுகின்ற ஏதேனும் தொழிற்சாலை உள்ளவிடத்து அத்தகைய தொழிற்சாலையில் பாவிக்கப்படுகின்ற அத்தகைய அழைப்பு சமிக்ஞைகளை இத்துணைவிதிகளின் பணிப்புரைகளுக்கமைய திருத்திக் கொள்வதற்கு அத்தகைய தினத்திலிருந்து மூன்று மாத காலம் உரித்தாவதோடு, அத்தினத்திற்குப் பின்னர் அத்தகைய அழைப்பு சமிக்ஞை பாவிக்கப்படல் ஆகாது.

10. எந்தவொரு தொழிற்சாலையிலும் பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொது நீர் வழிகளுக்குப் பாய்ச்சுதல் ஆகாது.

11. 4 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென பணிக்கப்பட்டுள்ள பாகங்களுக்கும் குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

12. தொழிற்சாலையின் அனைத்து அறைகள் அத்துடன் அவற்றின் சுற்றாடல், வடிகான்கள், மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவை நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

13. பாவிக்கப்பட்ட பொதிகளைச் சுத்தம் செய்து மீண்டும் பாவித்து உற்பத்திகளை பொதி செய்வதற்காக அத்தகைய பொதிகளை உபயோகிக்கும் ஏதேனும் தொழிற்சாலையில் அத்தகைய பாவிக்கப்பட்ட பொதிகளை சுத்தம் செய்கையில்-

(அ) அத்தகைய பொதிகளில் முன்னர் ஒட்டப்பட்டிருந்த லேபிள்களை அகற்றுவதற்கும் முதற் சுற்றில் சுத்தம் செய்வதற்காக தொட்டியொன்றும்;

அத்துடன்

(ஆ) அத்தகைய பொதிகள் இறுதிச் சுற்றில் சுத்தம் செய்வதற்கு பிறிதொரு தொட்டியும்; என்றவாறு குறைந்த பட்சம் இரண்டு தொட்டிகள் பாவிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய இறுதிச் சுத்திகரிப்பு ஓடும் நீரில் கழுவப்பட வேண்டுமென்பதை கருத்திற் கொள்ளல் வேண்டும்.

14. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய

எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையான வியாபாரத்திலும் அல்லது அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) அனைத்துத் தொழிற்சாலைகளினது அனைத்து ஊழியர்களும் வருடத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

15. தொழிற்சாலையில் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக்கவசம் மற்றும் தேவைப்படும் வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதலும், அவ்வூழியர் தொழிற்சாலையில் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

16. (அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள்–

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள்;

(ii) கண்ணாடிப் பொருட்கள்;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும்;

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள்;

(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின்போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள்;

(vii) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்;

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

(ஆ) மேலே (அ) பிரிவில் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடப்பட்ட கழிவுப் பொருட்கள், நகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி தலைவரின் பணிப்பிற்கமைய இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

17. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசீலனை செய்வதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

18. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் 4 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய நிலவுதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அத்தகைய பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தலைவர் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

19. 18 வது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தலைவருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

20. 19 வது துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை தலைவரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

21. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,–

"தொழிற்சாலை" என்பது, ஏதேனும் மூலப்பொருளை உபயோகித்து பண்டமொன்றை அல்லது வேறு பொருளொன்றை உற்பத்தி செய்கின்ற அல்லது வேறு தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் உற்பத்தியை உபயோகித்து வேறு ஏதேனும் பண்டத்தை அல்லது பொருளை உற்பத்தி செய்கின்ற இடம் எனக் கருதப்படும்

### பாகம் XVIII

#### மரணச் சடங்கு சேவை நிலையங்கள் பற்றிய துணை விதிகள்

இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் மரணச்சடங்கு சேவை நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. தலைவரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் நகர சபை பிரதேசத்தினுள் மரணச்சடங்கு சேவை நிலையமொன்றை நடாத்துதல் ஆகாது.

3. இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

4. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, எந்தவொரு தங்குமிடத்தையும் நடாத்துவதற்கு தலைவரால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.-

(1) மரணச்சடங்கு சேவை நிலையமொன்று நடாத்தப்பட்டுவரும் கட்டிடத்தின் உள்ளே பூதவுடல்களைத் தயார் செய்வதன் பொருட்டு தனிவேறான அறையொன்று இருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய அறையானது ஒரு ஆளின் பூதவுடலைத் தயார் செய்வதற்கு குறைந்த பட்சம் எண்பது சதுர அடிகளுக்குக் குறையாத இடவசதி இருத்தலும் வேண்டும். அத்துடன் அக்கருமத்திற்காகப் பயன்படுத்த போதியளவு கொங்கிறீற் மேடையொன்று இருக்க வேண்டுமென்பதோடு, அது மாபிள் ஓடு பதிக்கப்பட்டு முழுநிறைவு செய்யப்பட்டிருத்தலும் வேண்டும்.

(2) பூதவுடலைத் தயார் செய்யும் அறை எப்பொழுதும் மரணச்சடங்கு சேவைகள் வழங்கும் நிலையத்தின் காட்சி அறையில் அல்லது அறைகளிலிருந்து வேறுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, வெளி ஆட்கள் உத்தரவின்றி உட்பிரவேசிப்பது தடை செய்யப்பட்டிருத்தலும் வேண்டும்.

(3) பூதவுடலைத் தயார் செய்யும் அறையின் உள்ளே சுத்தமான காற்றோட்டம் கிடைக்கக்கூடிய வகையில் பாவிக்கும் அறையின் பரப்பளவின் ஏழிலொரு பங்குக்குக் குறையாத பரப்பளவைக் கொண்ட ஜன்னல்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கருமத்தில் ஈடுபட்டிருப்பதை எந்தவொரு பிற ஆளும் பார்க்கமுடியாதவாறு இருத்தல் வேண்டும். அத்தகைய ஜன்னல்கள் மரணச் சடங்கு சேவை நிலையம் அமைந்துள்ள இடத்திற்கு அருகாமையில் உள்ள காணிகளில் உள்ள வீடுகளுக்கு நேரடியாக திறந்ததாக இருத்தல் ஆகாது.

(4) பூதவுடலைத் தயார் செய்யும் போது அகற்றப்படும் பூதவுடலின் பாகங்கள் தற்காலிகமாகப் போடுவதற்கு போதியளவு பாத்திரங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கருமத்தில் ஈடுபட்டுள்ள சந்தர்ப்பத்தில் பூதவுடலிலிருந்து வெளியாகும் இரத்தம் அல்லது வேறு ஏதேனும் நீர்ப்பதார்த்தங்கள் அல்லது பூதவுடலைக் கழுவுவதாயின் அத்தகைய கழிவு நீர் போன்றவற்றைச் சேகரிப்பதற்காக ஊடறுக்கமுடியாததும், இலையான்கள், எலிகள், ஏனைய பிராணிகள் உட்பிரவேசிக்கமுடியாததுமான, நன்றாக மூடிவைக்கக்கூடிய பாத்திரங்கள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பொதுமக்கள் மரியாதை செலுத்தும் பொருட்டு பூதவுடலை வைப்பதற்கு இடமளிக்கப்படுவதாயின், ஏதேனும் பூதவுடலுக்கு மரியாதை செலுத்துவதற்கு வருகை தருபவர்களின் வசதி கருதி போதுமானளவு கதிரைகளை வைப்பதற்கும் அவ்வாறு வருகை தருவோரின் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமானளவு இடவசதியும் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) மரியாதை செலுத்துவதற்காக பூதவுடல் வைக்கப்பட்டுள்ள இடம், அந்த மரணச் சடங்கு சேவை நிலையத்தின் காட்சி மண்டபத்திலிருந்தும் சடலம் தயார் செய்யும் அறையிலிருந்தும் தனிவேறாகப் பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(7) இபிரிவின் துணைவிதிகளின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரித்துக் கொள்ளப்பட்ட பதிவேடொன்று இருத்தல் வேண்டும்.

5. மரணச்சடங்கு சேவை நிலையமொன்றுக்காக அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் தேவையுள்ள எந்தவொரு ஆளும் இப்பிரிவின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரமொன்றைத் தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. பூதவுடலைத் தயார் செய்யும் போது அகற்றப்படுகின்ற அல்லது அகற்றப்படும் பூதவுடலின் பாகங்கள், நீதவான் அல்லது திடீர் மரண பரிசோதகரால் அது சம்பந்தமாக வழங்கப்பட்ட பணிப்புரை ஒன்றில்லையேல், அத்தகைய பாகங்கள் அக்கருமம் முடிவடைந்து ஆறு மணித்தியாலங்கள் கழிந்த பின்னர் நிலத்தின் மேலிருந்து நான்கு அடி ஆழமான கிடங்கில் புதைத்து நன்றாக மூடப்படல் வேண்டும்.

7. பூதவுடலைத் தயார் செய்யும் போது அகற்றப்படுகின்ற அல்லது அகற்றப்படும் பூதவுடலின் பாகங்கள், நீதவான் அல்லது திடீர் மரண பரிசோதகரால் அது சம்பந்தமாக வழங்கப்பட்ட பணிப்புரை ஒன்று இருப்பின், அப்பணிப்புரைக்கு இணங்க செயற்படல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

8. 6 வது துணைவிதியின் கருமங்களுக்காகப் போதியளவு இடவசதி, மரணச் சடங்கு சேவை நிலையத்திற்கு இல்லாத பட்சத்தில், சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் கட்டணத்தை செலுத்திய பின்னர் அத்தகைய கருமங்களை நகர சபையின் பொது மயான பூமியில் அத்துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ள ஆழத்தில் புதைத்து முடிவிடுதல் வேண்டும்.

9. பூதவுடலைத் தயார் செய்யும் அறை எப்பொழுதும் கிருமிநாசினிகள் பாவித்து கழுவிச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும. அதேபோன்று அவசிய சந்தர்ப்பத்தில் பணியாட்டொகுதியின் பாவனைக்காகப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு அத்தகைய நிலையத்தில் போதியளவு முதலுதவி மற்றும் வேறு அவசிய உபகரணங்கள் இருத்தல் வேண்டும்.

10. மரணச்சடங்கு சேவைகள் வழங்கும் நிலையத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள பணியாட்டொகுதி உறுப்பினர்கள் பற்றிய அறிக்கையைப் பேணுதல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

11. பூதவுடலைத் தயார் செய்யப்படும் அறைகளில், கடமையில் ஈடுபட்டுள்ள சகல ஊழியர்களுக்கும் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளானினால் சிபார்சு செய்யப்பட்டவாறு பாதுகாப்பான உடைகள், முகக்கவசம் மற்றும் கைக்கவசம் வழங்கப்படுதலும், பூதவுடலைத் தயார் செய்யும்போது அத்தகைய ஊழியர் அந்த உடைகளையும் அணிகளையும் அணிந்து ஏற்புடைய பணியில் ஈடுபடுவதை உறுதி செய்து கொள்ளல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

12. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களையும் குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியமை அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

13. பூதவுடலை எடுத்துச் செல்லும் வாகனம் அல்லது வாகனத்துள் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவையாதல் வெக்கும் கிளினர் மூலமாக சுத்தம் செய்து கிருமிநாசினி இடுதல் வேண்டும்.

14. அதிக காயங்கள் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக தயார் செய்ய முடியாத நிலையிலுள்ள பூதவுடல்கள் தவிர்ந்த ஏனைய பூதவுடல்களை வைக்கும் பிரேதப்பெட்டிக்கு உள்ளே அல்லது பூதவுடல் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை மூடுவதற்காக பொலித்தீன் அல்லது உக்கிப்போகாத வேறு ஏதேனும் பொருளைப் பாவித்தல ஆகாது.

15. அனைத்து அனுமதிப்பத்திரம் பெறுநரால் முறையாக அதிகாரம் வழங்கப்பட்ட ஆள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளினால் ஏதேனும் பூதவுடலைத் தயார் செய்யவோ அல்லது பூதவுடலை எடுத்துச் செல்லவோ இடமளித்தல் ஆகாது.

16. பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் பணிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைய அவரால் அதற்காக அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்கப்பட்ட எழுத்துமூல அனுமதியின்றி வாந்திபேதி, அம்மை, பெரியம்மை, கொள்ளை நோய் மற்றும் மஞ்சட் காய்ச்சல் அல்லது எயிட்ஸ் நோயினால் மரணமடைந்ததாகக் கருதப்படும் எவரேனும் ஆளின் பூதவுடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திற்கு எடுத்துவருதல் அல்லது எடுத்துவருவதற்கு இடமளித்தல் எந்தவொரு ஆளினாலும் மேற்கொள்ளப்படல் ஆகாது.

17. ஏதேனும் பூதவுடலைத் தயார் செய்வதற்கும், மரணச்சடங்கு நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதற்குமென பொறுப்பேற்பதற்கு முன்னர் அத்தகைய மரணம் சம்பந்தப்பட்ட மரணப் பதிவு செயலாளரினால் விநியோகிக்கப்பட்ட முறையான மரண சான்றிதழ் தமக்கு சமர்ப்பிக்கப்பட்டாலன்றி அத்தகைய கருமத்திற்காக அனுமதிப்பத்திரம் பெறுநர் பூதவுடலைப் பொறுப்பேற்றல் ஆகாது.

18. ஏதேனும் பூதவுடலுக்கு ஏற்புடைய மரணம் திடீர் மரணமெனின் அல்லது மரணம் சந்தேகத்திற்கிடமானதெனின் நீதவான் அல்லது திடீர் மரண பரிசோதகரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் மரண விசாரணையின் பின்னர் விநியோகிக்கப்படும் அறிக்கை தமக்கு சமர்ப்பிக்கப்பட்டாலன்றி அத்தகைய பூதவுடலைப் தயார் செய்தலோ அல்லது தயார் செய்வதற்காக பொறுப்பேற்றலோ எந்தவொரு ஆளினாலும் மேற்கொள்ளப்படல் ஆகாது.

19. நீதவான் அல்லது திடீர் மரண பரிசோகரால் நடத்தப்பட்ட திடீர் மரண விசாரணையின் பின்னர் விநியோகிக்கப்படும் அறிக்கையின் மூலம் அத்தகைய பூதவுடலின் இறுதிச் சடங்குகள தொடர்பாக வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரை இருப்பின் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அத்தகைய பணிப்புரையின் ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

20. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அல்லது வேறு வெளியிடத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து சடலங்களின் தயாரிப்பு வேலை மற்றும் மரணச்சடங்கு சேவைகளை வழங்குதல் தொடர்பாக இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரித்துக்கொள்ளப்பட்ட பதிவேடொன்றைப் பேணுதலும் அத்தகைய பதிவேடு தலைவரினாலோ அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தராலோ அல்லது எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தராலோ வேண்டப்படும்போது பரிசீலனைக்காகச் சமர்ப்பித்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

21. பொதுமக்களின் மரியாதைக்காக பூதவுடல் வைக்கும் சேவையைப் பேணிவரும் இடம் தொடர்பில் அத்தகைய இடத்தில் வைக்கப்படும் ஏதேனும் பூதவுடலுக்கும் அத்தகைய பூதவுடலின் உரிமையாளர்களுக்கும் உரிய மரியாதை கிடைக்கக்கூடிய வகையில் பூதவுடல் காட்சிக்கு வைக்கப்படல் வேண்டும்.

22. பொதுமக்கள் மரியாதைக்காக பூதவுடலை வைக்கப்படும் இடம் சுத்தமாகவும் சுகாதாரப் பாதுகாப்புடனும் பேணுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

23. மரணச்சடங்கு சேவை வழங்கும் இடத்திற்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு இடையூறாக அல்லது தொல்லை கொடுக்கும் வகையில் எந்தவொரு கருமத்தையும் மரணச்சடங்கு சேவைகளை வழங்கும் இடத்தின் சுற்றாடலில் புரிதலோ அல்லது அவ்வாறு புரிவதற்கு இடமளித்தலோ எவரேனும் ஆளினால் மேற்கொள்ளப்படல் ஆகாது.

24. (அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள்-

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள்;

(ii) கண்ணாடிப் பொருட்கள்;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும்;

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள்;

(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள்;

(vii) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்;

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

(ஆ) (அ) பிரிவின் (i) உபபிரிவில் இருந்து (vii) உபபிரிவு வரை கழிவுப் பொருட்கள் என்பது, ஏதேனும் பூதவுடலின் பாகங்கள் உள்ளடக்கலாகாதென்பதோடு, பூதவுடலிலிருந்து அகற்றப்பட்ட ஏதேனும் பூதவுடலின் பாகம் அல்லது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு 6 வது துணைவிதியில் அல்லது 7 வது துணைவிதியில் குறிப்பிட்டுள்ளவாறு அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

(இ) மேலே (அ) பிரிவில் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடப்பட்ட கழிவுப் பொருட்கள், நகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி தலைவரின் பணிப்பிற்கமைய இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

25. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசீலனை செய்வதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சந்தர்ப்பமாகவும் கருதப்படும்.

26. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் 4 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய நிலவுதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அத்தகைய பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தலைவர் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

27. 26 வது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தலைவருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

28. 27 வது துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில்

பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை தலைவரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

29. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,-

"மரணச்சடங்கு சேவைகள் நிலையம்" என்பது, ஏதேனும் பூதவுடலை நீண்டகாலம் பழுதடையாது வைப்பதன் பொருட்டு தயார் செய்யப்படும் அல்லது பூதவுடலின் இறுதிச் சடங்கு நடவடிக்கைகளுக்காக தயாரிக்கப்படும் அல்லது இறுதிச் சடங்கு நடவடிக்கைகளுக்காக மயானத்திற்கு எடுத்துச்செல்லும் வரை ஏதேனும் பணத்தை அறவிட்டு பொது மக்களின் மரியாதைக்காக வைக்கப்படும் இடமும்;

"பூதவுடலைத் தயார் செய்தல்" என்பது, மரணமடைந்த ஒருவரின் பூதவுடலை இறுதி மரியாதைக்காக நீண்டகாலம் பழுதடையாதவாறு தயாரித்தல், அத்தகைய பூதவுடலுக்கு உடை அணிவித்தல், பூதவுடலை ஏதேனும் பெட்டியில் வைத்தல் மற்றும் அத்தகைய கருமங்களுக்கு அவசியமான வேறு எந்தவொரு கருமத்தைச் செய்தலும்;

"பூதவுடலின் பாகங்கள்" என்பது, மரணமடைந்த ஆளொருவரின் பூதவுடலிலிருந்து அப்புறப்படுத்தப்படும் ஏதேனும் உடலின் பகுதிகள் அல்லது அவற்றின் ஒரு பகுதி அல்லது உள்ளக பாகம் அல்லது பூதவுடலிலிருந்து வெளியாகும் அல்லது வெளியேற்றப்படும் இரத்தம் அல்லது வேறு ஏதேனும் நீர்ப்பதார்த்தம் அல்லது இறந்தவர் அச்சந்தர்ப்பத்தில் அணிந்திருந்த ஏதேனும் உடை அல்லது உடைகள் அல்லது இறந்தவரின் உடலில் இருந்த ஏதேனும் காயத்தில் அல்லது வேறு காரணமாக அவரின் உடலின் உள்ளே இருந்த அல்லது இருக்கின்ற கட்டுத்துணிகள், பஞ்சு அல்லது வேறேதேனும் பொருளும்;

எனக் கருதப்படும்.

## முதலாவது அட்டவணை

5 வது துணைவிதி

### மரணச்சடங்கு சேவைகள் வழங்கும் நிலையமொன்றை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ண்ணப்பம்

1. விண்ணப்பதாரரின் பெயர் :----.

2. முகவரி :----.

3. தேசிய அளையாள அட்டை இலக்கம் :----.

4. மரணச்சடங்கு சேவைகள் நிலையத்தின் வர்தகப் பெயரும் அத்தகைய இடத்தின் முகவரியும் :----.

5. ஒரே தடவையில் தயார் செய்யும் பொருட்டு வைக்கக்கூடிய பூதவுடல்களின் எண்ணிக்கை :----.

6. நிறுவனத்திற்குச் சொந்தமாகவுள்ள பிரேத வண்டிகள் :----.

7. பூதவுடலைத் தயார் செய்யும் முன்னர் எடுத்துச் செல்வதற்கு ஈடுபடுத்தவுள்ள வாகனங்களின் எண்ணிக்கை :----.

8. அகற்றப்பட்ட பூதவுடலின் பாகங்களை அப்புறப்படுத்துகின்ற விதம் :----.

9. மரியாதை செலுத்துவதற்காக பூதவுடலை வைப்பதற்கு பொறுப்பேற்பதாயின்,-

   (i) ஒரே தடவையில் வைக்கக்கூடிய பூதவுடல்களின் எண்ணிக்கை :----.

   (ii) மரியாதை செலுத்துவதற்கு வருகை தருபவர்களின் எத்தனை வாகனங்கள் ஒரே தடவையில் நிறுத்த முடியும்? :----.

10. இயற்கையான மலர்கள் வைத்தல் மற்றும் விற்பனை செய்யப்படுகிறதா? ஆம் / இல்லை

11. அகற்றப்படும் இயற்கை மலர்கள் அல்லது தாவரப் பாகங்களை அப்புறப்படுத்த எதிர்பார்க்கும் விதம் :----.

12. நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை :----.

13. முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பின்,-

(i) பெயர் :----.

(ii) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

14. மரணச்சடங்கு சேவைகள் நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்பாடு பற்றிய துணைவிதிகளின் ஏற்பாடுகளை அவ்வாறே கடைப்பிடிப்பதற்கும், காலத்திற்குக் காலம் நகர சபையினால் பணிக்கப்படும் வேறு சுகாதார பிரமாணங்களை கடைப்பிடிப்பதற்கும் இணங்குவதாக இங்கு கீழே கையொப்பமிட்டு ஏற்றுக்கொள்கிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

***2 வது அட்டவணை***

*20 வது துணைவிதி*

**மரணச்சடங்கு சேவை நிலையங்கள் அல்லது வேறு ஏதேனும் வெளி இடத்தில் தயார் செய்யப்படும் பூதவுடல்கள் பற்றிய விபரங்கள் பதிவேடு**

மரணச்சடங்கு சேவைகளை வழங்கும் நிறுவனத்தின் பெயர் :----.

முகவரி :----.

| தொடர் இல. | மரணமடைந்த வரின் பெயர் | தே. அ. அ. இல. : | ஆண்/பெண் பால் நிலை | மரணமடைந்த திகதி | மரண சான்றிதழ் பதிவு | | பூதவுடல் பொறுப்பேற்ற | | பூதவுடலின் உறவினர் | | | | திடீர் மரண பரிசோதகரின் கட்டளை | | உறவினரின் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | இலக்கம் | திகதி | திகதி | நேரம் | பெயர் | இறந்த வருக்கு உள்ள உறவுமுறை | முகவரி | தே. அ. அ. இல. : | தொடர்பு இல. | திகதி | |
| 1. | | | | | | | | | | | | | | | |
| 2. | | | | | | | | | | | | | | | |
| 3. | | | | | | | | | | | | | | | |
| 4. | | | | | | | | | | | | | | | |
| 5. | | | | | | | | | | | | | | | |
| 6. | | | | | | | | | | | | | | | |
| 7. | | | | | | | | | | | | | | | |

**கவனிக்கவும்.**- பதிவேட்டின் இடதுபக்கம் மற்றும் வலது பக்கங்கள் இரண்டையும் உபயோகித்து தகவல்களைப் பதிவுசெய்வதற்காக போதியளவு இடத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.

### பாகம் XIX

#### நடமாடும் வியாபாரிகளால் உணவு, பான வகைகளை வியாபாரம் செய்தல் பற்றிய துணை விதிகள்

1. இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் நடமாடும் வியாபாரிகளால் உணவு, பான வகைகளை விற்பனை செய்தலை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. தலைவரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் நகர சபை பிரதேசத்தினுள் உள்ள ஹோட்டல், சாப்பு அல்லது வர்த்தக நிலையமல்லாத வேறேதேனும் இடத்தில் நடமாடும் வியாபாரிகளால் உணவு, பான வகைகளை விற்பனை செய்தல் ஆகாது.

3. (அ) இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் பொது மக்கள் கூடும் எந்தவோர் வகையான விழா அல்லது கூட்டம் அல்லது ஊர்வலம் (பெரஹர) அல்லது வேறு எந்த ஒரு வகையிலுமான பொது மக்கள் ஒன்றுகூடல், நகர சபை பிரதேசத்தினுள் இடம்பெறும் வேளையில் நடமாடும் வியாபாரத்திற்காக தலைவரால் தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்குதல் சட்டமுறையானதாதல் வேண்டும். அதே போன்று அத்தகைய அனுமதிப்பத்திரம் எத்தினத்திற்காக வழங்கப்பட்டதோ அத்தினத்தின் பின்னர் அவ்வனுமதிப்பத்திரம் முடிவுறுதல் வேண்டும்.

4. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புக்கள் அவ்வாறே நிறைவுசெய்யப்பட்டிருந்தாலொழிய, எந்தவொரு நடமாடும் வியாபாரிக்கும் உணவு, பான வகைகள் விற்பனை செய்வதற்கு தலைவரால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.-

(அ) விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள உணவு அல்லது பானங்கள் இலையான், பூச்சிகள், தூசி அல்லது நீர் மூலம் மாசடையாதவாறு மூடிய கொள்கலன் அல்லது பெட்டியை பாவிப்பதற்கு தயார் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்

(ஆ) உணவை விற்பனை செய்யும்போது வாடிக்கையாளருக்கு பரிமாறுவதற்காக துருப்பிடிக்காத உலோகத்தால் தயாரிக்கப்பட்ட சாதனமொன்று இருத்தல் வேண்டும்

(இ) வாடிக்கையாளர் அதே வேளையில் சாப்பிடுவதற்காக உணவு அல்லது பானங்களைப் பரிமாறுவதாயின், அதற்காகவே ஒதுக்கப்பட்ட பாத்திரங்களை வைத்திருத்தல் வேண்டும்.

(ஈ) வாடிக்கையாளர் சாப்பாட்டின் பின்னர் விடப்படும் உணவு மீதிகளை இடுவதற்கு வேறாக பாத்திரம் ஒன்றும் பானங்களின் மீதிகளை இடுவதற்கு வேறாக பாத்திரம் ஒன்றும் வைத்திருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய பாத்திரங்கள் நன்றாக மூடிவைக்கக்கூடிய மூடியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடும் எவரேனும் ஆளினால் ஏதேனுமொரு வீதியில் அல்லது வழியில் பிரயாணம் செய்யும் வாகனங்களுக்கு அல்லது பயணம் செய்யும் பாதசாரிகளுக்கு அல்லது ஏதேனும் பொது இடத்தில் நடமாடும் பொது மக்களுக்கு தடையோ விபத்தோ ஏற்படாத வண்ணம் தமது வியாபாரத்தைக் கொண்டுநடாத்தப்பட்டாலேயன்றி எந்தவொரு பொது இடத்திலும் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடலாகாது.

6. நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடும் சந்தர்ப்பத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகல கழிவுப் பொருட்களும்-

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள்;

(ii) கண்ணாடிப் பொருட்கள்;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும்;

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள்;

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களும் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் தலைவரால் பணிக்கப்பட்டவாறு அகற்றப்படுதல் வேண்டும்.

7. (அ) ஏதேனும் தொடுகை மூலம் தொற்றும் நோய் அல்லது வயிறுசார்ந்த நோய் நிலைமை அல்லது நகர சபை பிரதேசத்தில் பரவுவதாகவும் அல்லது அவ்வாறான நோய்த்தொற்று பரவும் அபாயம் உள்ளதாக பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரால் தலைவருக்கு அறிக்கையிட்டுள்ள சந்தர்ப்பத்தில்-

(i) அது தொடர்பாக எழுத்துமூலமாக காரணம் காட்டி இப்பிரிவின் பணிப்புகளின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத் திரத்தை தற்காலிகமாக இடைநிறுத்தல்;

(ii) நகர சபை பிரதேசத்தில் ஏதேனும் பிரிவில் நடமாடும் வியாபாரத்தை தடை செய்தல்;

(iii) (i) வது பந்தியின் கீழ் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட அனுமதிப்பத்திரம் அவ்வாறு இடைநிறுத்தப்பட்ட காலத்தினுள் தலைவர் அதைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு; மற்றும்

(iv) அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்படவில்லையாயின் அத்தகைய அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவுறுவதற்கு முன்னர் அத்தகைய நோய் பரவும் அபாயம் முடிவுற்றுள்ளதென பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் தலைவருக்கு அறிக்கை சமர்ப்பித்திருப்பின் இடைநிறுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தை மீளளிக்கவும்

தலைவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழ் ஏதேனும் அனுமதிப்பத்திரத்தின் தற்காலிக இடைநிறுத்தல் காரணமாக அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு ஏற்படும் ஏதேனும் நட்டம் அல்லது சேதம் தொடர்பாக நகர சபை, தலைவர், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் கடப்பாடு உடையவர்களாக மாட்டார்கள்.

(இ) (அ) பந்தியின் (ii) உபபிரிவின் கீழ் நகர சபை பிரதேசத்தில் ஏதேனும் பிரிவில் நடமாடும் வியாபாரத்தைத் தடை செய்வதற்குக் காரணமாயிருந்த அபாயம் முடிவுற்றுள்ளதென பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் தலைவருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படின், அத்தகைய பிரிவின் நடமாடும் வியாபாரத்திற்காக மீண்டும் அனுமதி வழங்கப்படுவதாக அனுமதிப்பத்திரம் பெறுநர்களுக்கு அறிவிக்க வேண்டியது தலைவரின் பணியாதல் வேண்டும்.

8. 7 வது துணைவிதியின் கீழ் தலைவரால் நகர சபை பிரதேசத்தில் ஏதேனும் பிரிவொன்றில் நடமாடும் வியாபாரம் தடைசெய்யப்பட்டுள்ளவிடத்து, எந்தவொரு ஆளும் அப்பிரிவில் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடல் ஆகாது.

9. இப்பிரிவின் துணைவிதிக்கமைய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருப்பினும் ஏதேனும் நோய்த்தொற்று தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடுதல் ஆகாது.

10. அனைத்து அனுமதிப்பத்திரம் பெறுநரும் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் அத்துணைவிதிகளின் கீழ் பெற்றுக்கொண்டுள்ள அனுமதிப்பத்திரத்தை தம்வசம் வைத்திருத்தல் வேண்டுமென்பதோடு, தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் கோரும் போது பரிசீலனைக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசீலனை செய்வதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக எவரேனும் நடமாடும் வியாபாரி நடமாடும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

12. எவரேனும் நடமாடும் வியாபாரியால் வியாபாரம் செய்யப்படும் ஏதேனும் உணவு அல்லது பானங்களின் மாதிரியொன்றை, தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையு மென்பதோடு, ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறுநராலும் அத்தகைய கொள்வனவு செய்வதை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

13. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் நடமாடும் வியாபாரம் 4 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய நிலவுதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு எழுத்துமூல அறிவித்தலொன்றை கையளித்த பின்னர் தலைவர் நடமாடும் வியாபாரம் செய்வதற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை தலைவரால் இரத்துச் செய்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

14. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,-

"நடமாடும் வியாபாரம்" என்பது, பாத்திரமொன்றில் அல்லது பெட்டியொன்றில் அல்லது வேறு ஏதேனும் ஆதாரத்துடன் அல்லது ஏதேனும் வாகனத்தில் அல்லது துவிச்சக்கர வண்டியில் அல்லது வண்டியில் அல்லது தள்ளுவண்டியில் வைத்து பொது மக்கள் நுகர்வுக்காக விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காகக் காட்சிக்கு வைத்தல் அல்லது அவ்வாறு காட்சிக்கு வைத்து விற்பனை செய்தல் அல்லது விற்பனை செய்யப்படுகின்ற உணவு அல்லது பான வகைகள் வியாபாரம் எனக் கருதப்படுவதோடு, அதே விதத்தில் இடத்திற்கு இடம் கொண்டு சென்று அல்லது ஏதேனும் ஒரு இடத்தில் நிறுத்தி வைத்து செய்யப்படும் வியாபாரமும் உள்ளடக்குதல் வேண்டும்.

## பாகம் XX

### பாதசாரிகள் மாறுகின்ற இடங்கள் பற்றிய துணை விதிகள்

1. இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் பிரதான வீதிகளில் பாதசாரிகள் மாறுகின்ற இடங்களை ஏற்படுத்தல் மற்றும் அவற்றைப் பேணுதல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. நகர சபைப் பிரதேசத்தினுள் பெருந் தெருக்கள் மற்றும் வீதிகளில் பயணிக்கும் பாதசாரிகளுக்கு வீதிகளைக் கடப்பதற்காக பாதசாரிகள் மாறுகின்ற இடங்களை இனங்கண்டு வெளிப்படுத்தவும் அடையாளமிடவும் முடியும்.

3. இரண்டாவது துணைவிதிக்கமைய வெளிப்படுத்தப்பட்ட, பாதசாரிகள் மாறுகின்ற இடங்களில் குறியீடுகளை இடுதல், மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் 164 ஆம் அத்தியாயத்துடன் வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட 1987 மார்ச் மாதம் 13 ஆம் திகதிய 444/18 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானியின் I, (I) ஆம் பந்தியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் 4.18 வது உருவப்பட மாதிரிக்கமைய இருக்க வேண்டுமென்பதோடு, அத்தகைய ஒழுங்குவிதிகளில் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அமைந்ததாதல் வேண்டும். அதே போன்று அத்தகைய குறியீடுகள் அழிந்து போகாதவாறு மீண்டும் வர்ணப் பூச்சுப் பூசுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் தலைவரின் பணியாதல் வேண்டும்.

4. எவரேனும் ஆளொருவரால் 2 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் பாதசாரிகள் மாறும் குறியீட்டை உருக்குலைத்தல் அல்லது அழித்தல் ஆகாது. எனினும், நகர சபையினால் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு அமைய ஏதேனும் பாதசாரிகள் மாறுகின்ற இடத்தை மாற்ற அல்லது அகற்ற நகர சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

5. எவரேனும் பாதசாரி ஏதேனும் பாதசாரிகள் மாறுகின்ற இடத்தின் மீது வீதியைக் கடப்பதற்காக, அதன் மீது பிரவேசித்துள்ள சந்தர்ப்பத்தில் அத்தகைய பாதசாரிகள் மாறுகின்ற இடத்தைக் கடந்து செல்ல வரும் சகல வாகனங்களினதும் சாரதிகள் அத்தகைய பாதசாரி வீதியைக் கடந்து மறு பக்கத்திற்கு செல்லும் வரை தமது வாகனத்தை நிறுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

6. ஏதேனும் வாகனம் பாதசாரிகள் மாறுகின்ற இடத்தில் வாகனங்கள் நிறுத்திவைக்க வேண்டுமென குறியீடு செய்யப்பட்டுள்ள எல்லையைக் கடக்க நெருங்கியுள்ள சந்தர்ப்பத்தில், பாதசாரிகள் மாறுகின்ற இடத்தின் மீதாக வீதியைக் கடக்க எண்ணும் எந்தவொரு பாதசாரியும் அத்தகைய பாதசாரிகள் மாறுகின்ற இடத்தினுள் பிரவேசிக்காது இருத்தல் வேண்டும்.

7. எவரேனும் பாதசாரி ஒருவர் ஏதேனும் பாதசாரிகள் மாறுகின்ற இடத்தினுள் தரித்திருத்தல் அல்லது அதனூடாக செல்லும் வாகனத்தின் போக்குவரத்திற்குத் தடையாக தரித்திருத்தல் ஆகாதென்பதோடு, அத்தகைய பாதசாரிகள் மாறுகின்ற இடத்தினூடாக பயணிக்கின்ற வேறு எவரேனும் பாதசாரியின் பிரயாணத்திற்கு முறையற்ற வகையில் தடையாக இருத்தல் ஆகாது.

8. பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது வாகனங்களை வழிநடத்துனர் அல்லது ஒளிச் சமிக்ஞை மூலம் அல்லது அக்காலத்தில் கட்டுப்படுத்தப்பட்டுவரும் ஏதேனும் பாதசாரிகள் மாறுகின்ற இடத்தின் குறுக்கேவரும் எந்தவொரு வாகனமும் அத்தகைய பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது வாகனங்களை வழிநடத்துனர் அல்லது ஒளிச் சமிக்ஞை மூலமாக வழங்கப்படுகின்ற சமிக்ஞைக்கிணங்க அத்தகைய வாகனத்தின் சாரதி செயற்படவேண்டும்.

9. எந்தவோர் வாகனத்தின் சாரதியும் தம்மால் ஓட்டப்படும் வாகனம்-

(அ) தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் முன் நோக்கிச் செல்வது தடுக்கப்பட்டிருப்பின்; அல்லது

(ஆ) விபத்தைத் தவிர்த்துக்கொள்வதற்காக அத்தகைய வாகனம் பாதசாரிகள் மாறுகின்ற இடத்தின் மீது நிறுத்துவதற்கு அவசியமேற்பட்டாலன்றி, அத்தகைய வாகனம் ஏதேனும் பாதசாரிகள் மாறுகின்ற இடத்தின் மீது அல்லது அத்தகைய பாதசாரிகள் மாறுகின்ற இடத்தின் ஏதேனும் பகுதியின் மீது எக்காரணத்தின் நிமித்தமும் நிறுத்திவைத்தல்;

ஆகாது.

10. நகர சபை பிரதேசத்தில் ஏதேனும் பாடசாலையின் முன்னாலுள்ள வீதியில் குறியீடு செய்யப்பட்டுள்ள பாதசாரிகள் மாறுகின்ற இடங்களில் பணியில் ஈடுபட்டுள்ள வாகனங்களை வழிநடத்துனர்களை ஊக்குவிப்பதற்கு அவசியமான செயற்பாடுகளை நகர சபையால் மேற்கொள்ள முடியும்.

11. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,-

"வாகனங்களை வழிநடத்துனர்" என்பது, பாதசாரிகள் மாறுகின்ற இடங்களில் பாதசாரிகள் மற்றும் வாகனங்களை வழிநடத்தும் கருமத்திற்காக ஏதேனும் பாடசாலையின் அதிபர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற எவரேனுமொருவரால் பெயர் குறிப்பிடப்பட்டவர் மற்றும் அக்கருமத்தில் ஈடுபட்டுள்ள பாடசாலை மாணவன் அல்லது மாணவி அல்லது வேறு எவரேனும் ஆளெனக் கருதப்படும்,

"வாகனம்" என்பது, மோட்டர் வாகன சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு மோட்டார் வாகனத்தையும் கருதுவதோடு, ஏதேனும் வண்டி, தள்ளுவண்டி, துவிச்சக்கர வண்டி மற்றும் இயந்திரம் மூலம் இயக்கப்படும் துவிச்சக்கர வண்டியும் இதில் உள்ளடக்குதல் வேண்டும்.

## பாகம் XXI

## நிர்மாணப் பொருட்களைச் சார்ந்த கைத்தொழில் நிலையங்களினதும் நிர்மாணப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் இடங்களினதும் ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு பற்றிய துணை விதிகள்

1. இப்பகுதியின் துணை விதிகள் நிர்மாணப் பொருட்களைச் சார்ந்த கைத்தொழில் நிலையங்களினதும் நிர்மாணப் பொருட்களைக் களஞ்சியப்படுத் தும் இடங்களினதும் ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. தலைவரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் நகர சபை பிரதேசத்தினுள் நிர்மாணப் பொருட்களைச் சார்ந்த கைத்தொழில் நிலையமொன்றை அல்லது நிர்மாணப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் நிலையமொன்றை கொண்டுநடாத்துதல் ஆகாது.

3. இரண்டாவது துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெறுவதற்கு அவசியமான எந்தவோர் ஆளினாலும் இங்கே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரமொன்றைத் தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. இப்பிரிவின் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலேயன்றி, 3 வது துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரத்தைக் கோரும் எவரேனும் ஆளுக்கு தலைவரால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் ஆகாது.

5. 3 வது துணை விதியின் கீழ் விநியோகிக்கப்படும் எந்தவொரு அனுமதிப் பத்திரமும் 13 வது துணை விதியின் கீழ் முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது வழங்கப்பட்ட வருடத்தின் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவுறல் வேண்டும்.

6. இப்பிரிவின் துணைவிதியின் கீழ் கோரப்படும் அனுமதிப்பத்திரம் நிர்மாணப் பொருட்களைச் சார்ந்த கைத்தொழில் ஆயின், அத்தகைய கைத்தொழிலைக் கொண்டுநடாத்தும் நிலையத்தில்,-

(i) அருகாமையிலுள்ள ஏதேனும் வதிவிடங்களிலிருந்து குறைந்த பட்சம் 30 மீற்றர் தொலைவில் அமைந்திருத்தல் வேண்டும்;

(ii) வெளியாகும் ஏதேனும் தூசி அல்லது நீராவி, அருகாமையிலுள்ள வதிவிடங்களுக்குப் பரவுதலை தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரால் பணிக்கப்பட்டவாறு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) ஊழியர்களின் பாவனைக்காகப் போதியளவு மலசலகூடங்கள் மற்றும் சிறுநீர் அகங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, குளிப்பதற்கான இடங்களும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iv) கழிவு நீர் பாய்ந்தோடுவதற்குப் போதியளவு வடிகான்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(v) மின்சார உபகரணங்களைப் பொருத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள உதிரிப்பாகங்கள் மற்றும் மின்சுற்றுக்கள் பாதுகாப்பான நிலையில் உள்ளதை உறுதிசெய்துகொள்ளல் வேண்டும்.

7. இப்பிரிவின் துணைவிதியின் கீழ் கோரப்படும் அனுமதிப்பத்திரம் நிர்மாணப் பொருட்களைச் சார்ந்த உற்பத்திகளை களஞ்சியப்படுத்தும் இடம் ஆயின், அத்தகைய இடம்-

(i) அருகாமையிலுள்ள ஏதேனும் வதிவிடங்களிலிருந்து குறைந்த பட்சம் 5 மீற்றர் தொலைவில் அமைந்திருத்தல் வேண்டும்;

(ii) வெளியாகும் ஏதேனும் தூசி அல்லது நீராவி, அருகாமையிலுள்ள வதிவிடங்களுக்குப் பரவுதலை தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு நகர சுகாதார சேவைகள் பணிப்பாளரால் பணிக்கப்பட்டவாறு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) ஊழியர்களின் பாவனைக்காகப் போதியளவு மலசலகூடங்கள் மற்றும் சிறுநீர் அகங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, குளிப்பதற்கான இடங்களும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iv) கழிவு நீர் பாய்ந்தோடுவதற்குப் போதியளவு வடிகான்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(v) மின்சார உபகரணங்களைப் பொருத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள உதிரிப்பாகங்கள் மற்றும் மின்சுற்றுக்கள் பாதுகாப்பான நிலையில் உள்ளதை உறுதிசெய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

(vi) களஞ்சியப் பொருட்களை எடுத்துச் செல்ல வரும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதியளவு இடவசதி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8. இப்பிரிவின் துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவரால்-

(i) தமது வளவினுள் பிறப்பிக்கப்படும் கழிவுப் பொருட்கள் அல்லது அசுத்த நீர் அல்லது வேறு ஏதேனும் திரவ வகைகளை பொது நீர் வழிகளுக்கு பாய்ந்து செல்வதற்கோ அல்லது கலப்பதற்கோ அல்லது அவ்வாறு கலக்கச் செய்வதற்கோ இடமளித்தல் ஆகாது.

(ii) தமது வளவில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள்,-

(அ) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள்

(ஆ) கண்ணாடிப் பொருட்கள்

(இ) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும்

(ஈ) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்

(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள்

(ஊ) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள்;

என்றவாறு வகைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) மேலே பிரிவு (ii) இன் ஏற்பாடுகளுக்கமைய வகைப்படுத்தப்பட்ட கழிவுப் பொருட்களை சபையின் கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் வாகனத்திற்கு அல்லது சபையின் அனுமதியுடன் கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் கருமத்தில் ஈடுபட்டுள்ள ஆளுக்கு, கழிவுப் பொருட்களை சேகரிக்கும் கால அட்டவணைக்கமைய வேறு வேறாகக் கையளிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்திருத்தல் வேண்டும்.

9. இப்பிரிவின் துணைவிதிகளுக்கமைய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ள எவரேனும் ஆளினால் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புரைகளுக்கமைய தமது வளவினுள் பிறப்பிக்கப்படுகின்ற-

(i) அசுத்த நீரைச் சுத்திகரிக்க வேண்டும்;

(ii) அசுத்த நீரல்லாத வேறு ஏதேனும் திரவ வகைகளை அப்புறப்படுத்தப்படல் வேண்டும்.

10. கைத்தொழிலுக்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களும் முடிவுப் பொருட்களும் சுற்றுச்சூழலுக்கு திறந்த நிலையில் அல்லாமல் எடுத்துச் செல்ல வேண்டுமென்பதோடு, ஏதேனும் பொது இடமொன்றின் நிர்மாணிப்புக்காக பயன்படுத்த அவை வைக்கப்படுமாயின் அன்றி, எந்தவொரு பொது இடத்திலும் களஞ்சியப்படுத்தி வைத்தலோ வைத்திருத்தலோ ஆகாது.

11. இப்பிரிவின் துணைவிதிகளின்கீழ் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட எல்லா இடங்களும்-

(i) தலைவரால் பணிக்கப்பட்டவாறு போதியளவு தீ பாதுகாப்பு நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரால் பணிக்கப்பட்டவாறு முதலுதவி மற்றும் சிகிச்சை நடைமுறைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) தொழிற்சாலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்கள் உணவு உண்பதற்கும் ஆடை அணிகளை மாற்றுவதற்கும் உகந்த இடம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, உற்பத்தி செயற்பாட்டில் ஈடுபடும் சந்தர்ப்பத்தில் அணிவதற்காக முகக்கவசம், கைக்கவசம் மற்றும் அவசியமான வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

12. (1) தலைவரால் அல்லது அக்கருமத்திற்காக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர்களால் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தொழிற்பாடுகள் இடம்பெறும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய இடத்தினுள் பிரவேசிப்பதற்கும், இத்துணைவிதியின் பணிப்புரைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என பரிசீலனை செய்தல் சட்டமுறையானதாதல் ஆகும்.

(2) மேலே (1) வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள எவரேனுமோர் ஆளினால் மேற்கொள்ளப்படும் பரிசீலனைக்கு அவசிய ஒத்துழைப்பை வழங்குதல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய பரிசீலனை செய்வதை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

13. (1) 12 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள எவரேனும் ஆளினால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் பரிசீலனையின் போது, அத்தகைய அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் இப்பிரிவின் துணைவிதிகளில் பணிப்புரைகளுக்கு முரணானவை என்பது வெளிப்படின் அத்தகைய முரண்பாடு நிலைமையை திருத்திக்கொள்ளுமாறு அத்தகைய பரிசீலனையை மேற்கொள்பவரால் அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

(2) மேலே (1) வது பிரிவின் கீழ் அறிவித்தலைப் பெற்றுக்கொண்ட அனைவராலும், அத்தகைய அறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ள திருத்தங்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(3) மேலே (2) வது பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

14. (1) 13 வது துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்பட்ட பின்னர், அத்தகைய கைத்தொழிலை தொடர்ந்தும் பேணிவருவதற்கு இடத்தைப் பாவிப்பதற்கு மீண்டும் அனுமதிப்பத்திரத்தைக் கோருவதற்கு அத்தகைய இரத்துச்செய்யப்பட்ட அனுமதிப்பபத்திரம் பெறுநருக்கு உரிமை உண்டு.

(2) மேலே (1) வது பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு புதிய அனுமதிப்பத்திரத்தைக் கோரும் சந்தர்ப்பத்தில், 3 வது, 4 வது மற்றும் 5 வது துணைவிதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

15. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,-

"நிர்மாணிப்புப் பொருட்கள்" என்பது, கருங்கல், கருங்கற் தூள், மணல், சீமெந்து அத்துடன் கூழாங்கல் எனக் கருதப்படும்.

### பாகம் XXII

#### வாகனங்கள் நிறுத்தி வைத்தல் மற்றும் வாகனங்களைக் கையாளல் பற்றிய துணை விதிகள்

இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் வாகனங்கள் நிறுத்தி வைத்தல் மற்றும் வாகனங்களைக் கையாளலை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. (அ) நகர சபை பிரதேசத்தில் ஏதேனுமொரு வீதியில் அல்லது வழியில் எந்தவொரு பாகத்திலும்-

(i) வாகனங்களை நிறுத்தி வைத்தலைத் தடை செய்தல்;

(ii) மட்டுப்படுத்தல்;

(iii) ஒரு பக்கத்தில் மாத்திரம் வாகனங்களை நிறுத்தி வைக்க இடமளித்தல்;

(iv) பொருட்களை ஏற்றுதல் அல்லது இறக்குதலைத் தடை செய்தல் அல்லது மட்டுப்படுத்தல்;

(v) பிரயாணிகளை ஏற்றுதல் அல்லது இறக்குதலை தடை செய்தல்;

(vi) பஸ் நிறுத்துமிடமாக பெயரிடல்

(vii) ஒரு திசையில் மாத்திரம் வாகனம் ஓட்டப்படுகின்ற பாதைகள் அல்லது வீதிகளைப் பெயர் குறித்து பயணம் செய்யக்கூடிய திசையைத் தீர்மானித்தல்

ஆகியவற்றுக்கு நகர சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(ஆ) நகர சபையினால் (அ) பிரிவின் கீழான ஏதேனும் மட்டுப்படுத்தல்களை மேற்கொண்ட பின்னர் அத்தகைய மட்டுப்படுத்தல் பற்றிய வீதிச் சமிக்ஞைகளை ஏற்புடைய இடத்தில் பொருத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் தலைவருடைய பணியாதல் வேண்டும். அத்தகைய மட்டுப்படுத்தல்கள் பற்றிய வீதிச் சமிக்ஞைகள், மோட்டர் வாகனங்கள் சட்டத்தின் 164 ஆம் அத்தியாயத்துடன் வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட 1987 மார்ச் மாதம் 13 ஆந் திகதிய 444/18 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தாமானியின் I, (I) ஆம் பந்தியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் 4.18 வது உருவப்பட மாதிரிக்கமைய இருக்க வேண்டுமென்பதோடு, அத்தகைய ஒழுங்குவிதிகளில் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அமைந்ததாதல் வேண்டும்.

3. நகர சபை பிரதேசத்தினுள் அல்லது நகர சபை பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் ஏதேனும் வீதியில் அல்லது வழியில் பயணம் செய்யும் எந்தவோர் வாகனத்தின் சாரதியால் 2 வது துணைவிதியின் (ஆ) பந்தியின் பணிப்புகளின் கீழ் பொருத்தப்பட்டுள்ள வீதி சமிக்ஞையின் அல்லது சமிக்ஞைகளின் மூலமாகக் காட்டப்படுகின்ற பணிப்புகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

4. 3 வது துணைவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் 2 வது துணைவிதியின் பணிப்புரைகளின் கீழ் நகர சபையினால் தீர்மானிக்கப்பட்டு பொருத்தப்பட்ட ஏதேனும் வீதிச் சமிக்ஞையின் மூலம் குறித்துரைக்கப்பட்ட எல்லைகள்–

(அ) அத்தகைய வீதியின் அல்லது வழியின் ஏதேனும் பாகத்தில் அல்லது நகர சபைப் பிரதேசத்தினுள் வேறு எந்தவொரு வீதியின் அல்லது வழியின் அண்மையிலுள்ள ஏதேனும் கட்டிடத்தில் அல்லது அதன் அருகாமையில் ஏற்படும் ஏதேனும் தீ அல்லது வேறு ஏதேனும் அனர்த்தத்தை தடுத்து நிறுத்தும் பணிக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள நகர சபையின் தீயணைப்பு வாகனம் அல்லது வேறு ஏதேனுமொரு வாகனத்திற்காக;

(ஆ) அத்தகைய வீதியில் அல்லது வழியின் ஏதேனும் பாகத்தில் அல்லது நகர சபைப் பிரதேசத்தினுள் வேறு எந்தவொரு வீதியில் அல்லது வழியில் ஏற்படும் வாகன நெரிசலை நீக்குவதற்காக அல்லது நகர சபைப் பிரதேசத்தினுள் இடம்பெறும் வேறு ஏதேனும் எதிர்பாராத நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தரால் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு செய்யப்படும் கட்டளைக்கமைய செயற்படுவதற்காக அத்தகைய 3 வது துணைவிதியின் பணிப்புக்களை மீறுவதாகக் கருதுதல் ஆகாது.

5. (அ) நகர சபை பிரதேசத்தினுள், இதனகத்துப் பின்னர் "வாகனங்கள் நிறுத்துமிடம்" என அறியப்படும் மோட்டார் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படும் கருமத்திற்காக–

(i) நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் காணி; அல்லது

(ii) வேறு எதேனும் அதிகாரசபையுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய அத்தகைய அதிகாரசபைக்குச் சொந்தமான ஏதேனும் இடத்தை ஒதுக்கிக் கொள்வதற்கு நகர சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடங்களில் நிறுத்தி வைக்கக்கூடிய வாகன வகைகள் மற்றும் ஒரே தடவையில் நிறுத்தி வைக்கக்கூடிய ஆகக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதைக் காலத்திற்குக் காலம் நகர சபையினால் தீர்மானிக்க முடியும்.

6. சகல வாகன நிறுத்துமிடத்தில் குறைந்த பட்சம் வாகனங்கள் உள்ளே செல்வதற்கு ஒரு வாயிலும் அவை வெளியே செல்வதற்கு பிறிதொரு வாயிலுமென இரண்டு வாயில்கள் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும் வாகனங்கள் நிறுத்துமிடத்தினுள்ளே வாகனங்களைத் திருப்புவதற்கென வேறான பகுதி அமைக்கப்பட்டிருக்குமாயின், அத்துடன் ஒரே தடவையில் இரண்டு வாகனங்கள் இரு திசையிலும் செல்லக்கூடிய இரட்டை ஓட்டப் பாதைகளும் கதவுகளுக்கான இடவசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் வாகனங்கள் உட்செல்வதற்கும் அவை வெளியேறுவதற்குமென ஒரு வாயிலை மாத்திரம் வைத்திருக்க முடியும்.

7. சகல வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கும் வருகைதரும் வாகனங்களுக்கு உள்ளே செல்லும் வாயில் மற்றும் வெளியே செல்லும் வாயில் இலகுவில் வாசிக்கக்கூடியவாறு மூன்று மொழிகளிலும் அறிவித்தல் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய இடத்தின் உள்ளே வாகனத்தை நிறுத்தி வைப்பதற்கு உட்செல்லும் மற்றும் வெளியேறும் வாகனங்கள் செல்ல வேண்டிய திசைகளை இலகுவில் அறிந்துகொள்ளும் விதத்தில் 20 சென்ரி மீற்றர் அகலம் கொண்ட வெள்ளைநிற கோட்டுடனான அம்புக்குறிகள் இருத்தல் வேண்டும்.

8. சகல வாகனங்கள் நிறுத்துமிடத்தின் தரை தார் அல்லது கொங்கிறீற் போடப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய வாகன நிறுத்துமிடத்தை உபயோகிப்போரின் பாவனைக்காக ஆண், பெண் இருபாலாருக்கும் வேறு வேறாக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறே இடத்தினுள் சேரும் நீர் இலகுவாக வடிந்தோடுவதற்காகப் போதியளவு வடிகான்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. சகல வாகனங்கள் நிறுத்துமிட வளவினுள் ஒன்றுசேரும் குப்பைகூழங்கள் தினந்தோறும் அப்புறப்படுத்துவதற்கும், அத்தகைய இடத்தில் பேணப்படும் மலசலகூடங்கள் தினந்தோறும் கிருமிநாசினிகளை உபயோகித்து சுத்தம் செய்விப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் தலைவரின் பணியாதல் வேண்டும்.

10. சகல வாகனங்கள் நிறுத்துமிடத்திலும் வாகனங்களை நிறுத்துவதற்கு இடவசதி செய்கையில் வாகன நிறுத்துமிடத்திற்கு உள்ளே வரும் மற்றும் வெளியேறும் வாகனங்களுக்கு பயணிப்பதற்காக போதியளவு ஓட்டப்பாதைகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. ஏதேனும் ஒரு வாகனம், வாகனங்கள் நிறுத்துமிடத்தினுள் செல்லும் பொழுதும் நிறுத்தி வைக்கும் பொழுதும் அதனுள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வேறு ஏதேனும் வாகனத்திற்கு தடை ஏற்படாதவாறு ஒவ்வொரு வாகனமும் நிறுத்தி வைப்பதற்கு வாகனங்கள் நிறுத்துமிடத்தில் போதியளவு இடவசதி ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு வாகனத்திற்கும் ஒதுக்கப்பட்ட எல்லைகளைக் காட்டும் 10 சென்ரி மீற்றர் அகலத்தைக் கொண்ட வெள்ளை நிறக் கோட்டினால் குறியீடு இடப்பட்டிருத்தல் வேண்டும்.

12. ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் வாகனங்கள் நிறுத்தப்படுவதற்காக நகர சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்டவாறான கட்டணம் அறவிட முடியும். அவ்வாறே ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்படும் ஏதேனும் வகையிலான வாகனத்தை நிறுத்துவதன் பொருட்டு அறவிடுவதற்கு நகர சபை தீர்மானிக்கும் கட்டணத்தை அத்தகைய வாகனங்கள் நிறுத்துமிடத்தின் உட்செல்லும் வாயிலில் நன்றாகத் தெரியக்கூடியவாறு மூன்று மொழிகளிலும் காட்சிக்கு வைக்கச் செய்வித்தல் தலைவருடைய பணியாதல் வேண்டும்.

13. (அ) ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் நிறுத்திவைக்கப்படும் வாகனங்களின் கட்டணத்தை அறவிடுவதற்காக இதனகத்துப் பின்னர் "வாகனங்கள் நிறுத்துமிட பொறுப்பாளர்" என அறியப்படுகின்ற-

(i) நகர சபையில் பணியாற்றும் எவரேனும் ஊழியர்;

அல்லது

(ii) நகர சபையினால் பகிரங்க கேள்விப் பத்திரத்தைக் கோருவதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் வெற்றிகரமான கேள்வி பெறுநர் அல்லது அத்தகைய கேள்வி பெறுநரால் பெயர் குறிக்கப்படுகின்ற அவரது முகவரை;

ஈடுபடுத்த முடியும்.

(ஆ) எனினும், ஏதேனும், வாகனங்கள் நிறுத்துமிடத்தில் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்காக அறவிடப்படும் கட்டணம் 12 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டவாறு நகர சபையினால் தீர்மானிக்கப்பட்ட கட்டணத்தின் அளவை விஞ்சாதிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு வாகனமும் நிறுத்துவதன் பொருட்டு அறவிடப்பட்ட கட்டணத்தின் அளவு இப்பிரிவின் முதலாவது அட்டவணைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பற்றுச்சீட்டில் குறிப்பிட்டு வாகனத்தின் சாரதிக்கு விநியோகிக்கப்படுதல் வேண்டும்

14. வாகன நிறுத்துமிட பொறுப்பாளர் ஒவ்வொருவரும் அக்கருமத்தில் ஈடுபட்டுள்ள காலத்தில் நகர சபையினால் தீர்மானிக்கப்பட்டதும் வாகன நிறுத்துமிட பொறுப்பாளரென இலகுவில் அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய வகையில் உடை அணிந்திருக்கச் செய்தல் தலைவரின் பணியாதல் வேண்டும்.

15. (அ) 5 வது துணைவிதியின் (ஆ) பந்தியின் கீழ் நிறுத்தி வைப்பதற்கு இடமளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ள ஏதேனும் வகையிலான வாகனத்தை நிறுத்தி வைப்பதற்கு வாகன நிறுத்தமிடத்திற்கு பிரவேசிக்கையில் அத்தகைய வாகன நிறுத்துமிடத்தின் உட்செல்லும் வாயிலருகில் அத்தகைய வாகனத்தின் சாரதியிடம் இப்பிரிவின் இரண்டாவது அட்டவணைக்கு அமைவாக தாயாரிக்கப்பட்ட உட்செல்வதற்கான அனுமதியைக் காட்டுகின்ற அனுமதி அட்டை ஒன்றை விநியோகித்தல் வாகனங்கள் நிறுத்துமிடத்தின் பொறுப்பாளரின் கருமம் ஆதல் வேண்டும்.

(ஆ) உட்பிரவேசிப்பதற்கான அனுமதிப்பத்திரத்தைக் கொண்ட ஒவ்வொரு வாகனமும் வாகன நிறுத்துமிடத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் -

(i) (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட அட்டையை வாகன நிறுத்துமிடத்தின் பொறுப்பாளரிடம் மீள ஒப்படைத்தல்;

(ii) 12 வது துணைவிதியில் குறிப்பிட்டவாறு நகர சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற அளவுகளோடு ஒத்துவரக்கூடிய வாகனங்கள் நிறுத்தி வைக்கும் கட்டணத்தை வாகன நிறுத்தமிட பொறுப்பாளரிடம் செலுத்துதல்;

அத்துடன்

(iii) செலுத்தப்பட்ட கட்டணத்திற்கு ஒத்துவரக்கூடிய 13 வது துணைவிதியின் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளல்;

அத்தகைய வாகனச் சாரதியின் பணியாதல் வேண்டும்.

16. (அ) எவரேனும் ஆளினால் ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைப்பதற்கு நகர சபையினால் தீர்மானிக்கப்பட்ட வகையைச் சேர்ந்த வாகனமல்லாத வேறு எந்தவொரு வாகனம் அல்லது மோட்டார் வாகனம் அல்லாத எந்தவொரு வாகனத்தையும் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்திவைப்பதற்கோ அல்லது வாகன நிறுத்துமிடத்திற்கு உள்ளே செல்வதற்கோ அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளித்தல் ஆகாது.

(ஆ) வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏதேனும் வாகனம் அத்தகைய வாகன நிறுத்துமிடத்திலிருந்து வெளியே எடுப்பதற்காக அத்தகைய வாகனம் இயங்கச் செய்விக்க முடியாத சந்தர்ப்பத்தில், அத்தகைய வாகனத்தை இழுத்துச் செல்வதற்காக வாகன நிறுத்துமிடத்தினுள் வரும் ஏதேனும் வேறு வாகனம் அத்தகைய வாகன நிறுத்துமிடத்திற்கு உள்ளே கொண்டுவர போதியளவு இடவசதி இருப்பின் அவ்வாறு வரும் வேறு வாகனத்திற்கு (அ) பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் ஆகாது. எனினும், அத்தகைய வாகனத்தை இழுத்துச் செல்கையில் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வேறு வாகனங்களுக்கு எந்தவொரு தடை அல்லது சேதம் ஏற்படும் வகையில் இழுத்துச் செல்லல் ஆகாது.

17. எவரேனும் ஆளொருவரால் ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தின் உள்ளே-

(அ) வாகனங்களைக் கழுவுதல் அல்லது அவ்வாறு செய்ய இடமளித்தல்;

(ஆ) ஏதேனும் வாகனத்தை அப்புறப்படுத்தும் கருமத்திற்காக அத்தகைய வாகனத்தை இயங்கச் செய்வதற்கு அத்தியாவசியமான திருத்த வேலைகளையோ ரயறொன்றை மாற்றும் பணியோ அல்லாத வேறு பழுதுபார்த்தலைச் செய்தல்;

(இ) (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் பழுதுபார்த்தலின் போது சந்தர்ப்பத்திற்கேற்றவாறான விடயம் பற்றிய கருத்திற் கொள்ளல் தவிர தேவையற்ற அல்லது தடையாகவுள்ள ஏதேனும் ஒலி அல்லது ஒலிகளை எழுப்புதல்;

(ஈ) அத்தகைய வாகன நிறுத்துமிடத்தின் பொறுப்பாளரின் அனுமதி இன்றி வாகனம் நிறுத்தி வைக்கப்பட்ட இடத்திலிருந்து அந்த வாகனத்தை வாகன நிறுத்துமிடத்தின் வேறோர் இடத்திற்கு எடுத்துச் சென்று நிறுத்துதல்;

(உ) அத்தகைய வாகன நிறுத்துமிடத்தின் ஓட்டப்பாதை நிரல்களோ அல்லது உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் வாயில்களைத் தடை செய்யும் வண்ணம் வாகனங்களை நிறுத்தி வைத்தல்;

(ஊ) விபத்தொன்றைத் தவிர்த்துக்கொள்ளல் அல்லது வாகனத்தில் அல்லது அதில் தங்கியிருப்போரின் பாதுகாப்பை உறுதி செய்துகொள்ளல் பணியைத் தவிர வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள அபாய அறிவிப்பு தெரிவிக்கும் உபகரணத்தை ஒலிக்கச் செய்தல்;

(எ) நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய வாகன நிறுத்துமிடத்திற்கு உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் ஏதேனும் வாகனத்தின் ஹோர்ன் ஒலி எழுப்புதல்;

(ஏ) மதுபானம் அருந்தல் அல்லது வெற்றிலை எச்சில் துப்புதல் அல்லது கெட்ட வார்த்தைகளை பாவித்தல் அல்லது குழப்ப நிலையை ஏற்படுத்தல் அல்லது ஒழுக்கக் கேடான செயல்களில் ஈடுபடுதல் போன்றவற்றை புரிதல் ஆகாது.

18. ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள எந்தவொரு வாகனத்தினதும் பாதுகாப்பு பற்றிய பொறுப்பு அத்தகைய வாகன நிறுத்துமிடத்தினுள் வாகனத்தை நிறுத்தும் ஆளைச் சார்ந்ததாக இருக்க வேண்டுமென்பதோடு, ஏதேனும் வாகனத்திற்கு வாகன நிறுத்துமிடத்தினுள் நிகழும் ஏதேனும் நட்டம் அல்லது சேதம் தொடர்பாக நகர சபை, தலைவர் அல்லது வாகன நிறுத்துமிட பொறுப்பாளர் பொறுப்பு கூறுதலுக்கு உள்ளாகல் ஆகாது.

19. தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது வாகன நிறுத்துமிடத்தின் பொறுப்பாளர் அல்லது எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தரால் ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏதேனும் வாகனத்தின் உரிமையாளர் அல்லது சாரதியிடமிருந்து வாகனத்திற்காக விநியோகிக்கப்பட்ட உட்பிரவேச அனுமதி அட்டையை பரிசோதிப்பதற்காகக் கோரப்படும் சந்தர்ப்பத்தில் அதைப் பரிசோதிப்பதற்காக வழங்குதல் வாகனத்தின் உரிமையாளர் அல்லது சாரதியின் பணியாதல் வேண்டும்.

20. 7 வது துணைவிதியில் குறிப்பிட்டவாறு ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தினுள் அமைந்துள்ள ஓட்டப் பாதைகளில் வாகனங்கள் செலுத்தப்பட வேண்டிய திசையைக் காட்டுவதற்காக குறியீடு செய்யப்பட்ட திசைக்கு முரணான திசையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏதேனும் வாகனம் செலுத்தப்படல் ஆகாது.

21. ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் செய்யப்பட்டுள்ள நிர்மாணத்திற்கு அல்லது அங்கு காணப்படுகின்ற ஏதேனும் உபகரணத்திற்கு சேதம் விளைவித்தல் அல்லது உருக்குலைத்தல் எவரேனும் ஆளினால் செய்யாதிருத்தல் வேண்டும்.

22. நகர சபை பிரதேசத்தினுள் நிறுவப்பட்டுள்ள ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள-

(அ) அரச வாகனங்களுக்கு;

(ஆ) மாகாணசபை வாகனங்களுக்கு;

(இ) மாகாணத்தினுள் கூட்டிணைக்கப்பட்டுள்ள ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனங்களின் வாகனங்களுக்கு;

இப்பிரிவின் துணைவிதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் ஆகாது. எனினும் ஏதேனும் அரச கூட்டுத்தாபனத்தின் அல்லது நியதிச்சட்ட சபையின் ஏதேனும் வாகனத்திற்கு அத்தகைய பணிப்புரைகள் இப்பிரிவின் துணைவிதிகளில் குறிப்பிட்டவாறே ஏற்புடையதாதல் வேண்டும்.

23. ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தில் உட்பிரவேசிப்பதற்கான அனுமதி அட்டை நிறுத்தப்பட்டுள்ள ஏதேனும் வாகனத்தை அத்தகைய வாகன நிறுத்துமிடத்திலிருந்து அகற்றுவதற்கு தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது வாகன நிறுத்துமிடத்தின் பொறுப்பாளர் நடவடிக்கை எடுத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

24. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்-

“வழி” என்பது, நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதி, வழி, பெருந் தெரு, ஒழுங்கை, தெரு, ஒற்றையடிப்பாதை, படிக்கட்டு, கடவை அல்லது பயணிகள் பாலம் எனக் கருதப்படுவதோடு, நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதி, வழி, பெருந் தெரு, ஒழுங்கை, தெரு, ஒற்றையடிப்பாதை, படிக்கட்டு, கடவை, அல்லது பயணிகள் பாலத்திற்கு இணைத்துப் பொருத்தப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள ஏதேனும் தூரத்தைக் காட்டும் குறியீடு, எல்லைக் கல், எல்லைத் தூண், மின்சாரக் கம்பம், பாலம், ஏதேனும்

வகையிலான மதகு, நீர்க்கடவை, மதில், வில்வளைவமைப்பு, அணைக்கட்டு, வடிகான், சுளூசு, துணைமதில், கைப்பிடி, சங்கிலி, வேலி, சமிக்ஞைப் பலகை, வீதிப் பெயர்ப் பலகை அல்லது வீதி அருகிலுள்ள நடைபாதை மேடை என்பன அதனை உள்ளடக்க வேண்டும்.

"வாகனம்" என்பது, மோட்டர் வாகனங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் வாகனத்திற்காக வழங்கப்பட்ட பொருள்கோடலுக்கு பொருத்தமான வாகனம் எனக் கருதப்படல் வேண்டும்.

***முதலாவது அட்டவணை***

***15 வது துணைவிதியின் (அ) பந்தி***

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . நகர சபை

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . வாகனங்கள் நிறுத்துமிடம்

***வாகனங்களை நிறுத்தி வைத்தல் கட்டணம்***

பற்றுச்சீட்டு இலக்கம் :----.

---

வாகனத்தின் இலக்கம் :----.

திகதி : 20 :----.

வருகைதந்த நேரம் : மு.ப. / பி.ப :----.

வெளியேறிய நேரம் : மு.ப. / பி.ப. :----.

அறவிடப்பட்ட கட்டணம் : ரூபா :----.

***இரண்டாவது அட்டவணை***

*15 ஆவது துணைவிதியின் (அ) பந்தி*

*அட்டையின் முன்புறம்*

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . நகர சபை

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . வாகன நிறுத்துமிடம்

***உட்பிரவேச அனுமதி அட்டை***

***அட்டையின் பின்புறம்***

இந்த அட்டையைக் கைமாற்றுதலாகாது

வாகன நிறுத்துமிடத்திலிருந்து வெளியேறும்போது மீள ஒப்படைத்தல் வேண்டும்

## பாகம் XXIII

## வீதிகளுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தலை தடுத்தல் பற்றிய துணை விதிகள்

இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் வீதிகளுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தலை தடுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. எவரேனும் ஆளொருவரால் நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதிக்கு சேதம் விளைவித்தல் ஆகாதென்பதோடு, வீதியில் பயணம் செய்யும் வாகனங்களுக்கோ அல்லது பாதசாரிகளுக்கோ தடையேற்படுத்தும் வகையில் வீதியில்,-

(அ) வியாபாரம் செய்தல்;

(ஆ) அகற்றிச்செல்வதற்காக இயங்க செய்விக்க அல்லது வேறு அனர்த்தம் காரணமாக வெளியில் ஓட்டிச் செல்லமுடியாத ஏதேனும் காரணம் இருந்தாலேயன்றி, பாகம் XXVI வது துணைவிதிகளின் கீழ் நகர சபையினால் வாகனத்தை நிறுத்துவதற்கு இடமளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் பகுதி அல்லாத இடத்தில் வாகனத்தை நிறுத்தி வைத்தல்;

(இ) வாகனங்களைப் பழுதுபார்த்தல் அல்லது வாகனங்களைக் கழுவுதல்;

(ஈ) ஏதேனும் வீதியில் இடம்பெறும் பழுதுபார்த்தலுக்காக நகர சபையின் அல்லது தலைவரின் தீர்மானத்தின் மீது இடம்பெறும் கருமம் தவிர, கல், மணல், கூழாங்கல், மண், செங்கல் அல்லது மரக்குற்றி போன்றவற்றை இறக்குதல் அல்லது சேர்த்து வைத்தல்;

(உ) ஒதுக்கப்பட்ட வாகனங்களின் உதிரிப்பாகங்களைக் குவித்து வைத்தல்;

ஆகாது.

3. வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் 19 வது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஐம்பது அடிகளுக்கு மேல் அகலமுடைய வீதிகளில் வீதிக் கோடுகள் இடப்பட்டிராத ஏதேனும் வீதியின் நடுக்கோட்டில் இருந்து 25 அடிகளுக்குள் எந்தவோர் விதத்திலுமான நிர்மாணத்தை எந்தவோர் ஆளினாலும் அமைத்தல் ஆகாதென்பதோடு, வேறு எதேனும் நிர்மாணத்திற்காக கொண்டுவரப்பட்ட எந்தவொரு நிர்மாணப் பொருளையும் எதேனும் வீதியில் அல்லது அதன் ஏதேனும் பகுதியில் வைத்திருத்தல் ஆகாது.

4. 3 வது துணைவிதியில் குறிப்பிட்ட பணிகளை மீறியதாக எந்தவோர் ஆளினாலும் நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதி அல்லது அதன் ஏதேனும் பகுதியில் ஏதேனும் நிர்மாணப் பொருளொன்றை வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தலைவரால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அத்தகைய நிர்மாணப் பொருட்களை அத்தகைய இடத்திலிருந்து அகற்றுவதற்கோ அல்லது நகர சபைக்கு உரித்தாக்குவதற்கோ நடவடிக்கை எடுத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும். தலைவரால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் மேலே குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுப்பதன் மூலம் அத்தகைய நிர்மாணப் பொருட்கள் வீதியில் வைக்கப்பட்ட அல்லது வைப்பதற்கு ஏற்பாடு செய்த ஆளுக்கு ஏற்படும் ஏதேனும் இழப்பு, நட்டம் அல்லது சேதம் சம்பந்தமாக அத்தகைய பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற் கொண்ட ஆள் அல்லது நகர சபை வகைப்பொறுப்பு கூற கட்டுப்படல் ஆகாது. அவ்வாறே தொடர்ந்தும் அப்படியாக அகற்றப்பட்ட பொருட்களுக் காக எந்தவொரு அளவிலான நட்டஈடு செலுத்துவதற்கு நகர சபை அல்லது தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் கடப்பாடு உடையவர்களாதல் ஆகாது.

5. நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதியை பராமரித்தல் அல்லது பழுதுபார்ப்பதற்கு அவசியமாகின்ற கருமத்திற்காக-

(அ) அத்தகைய வீதியை முற்றாக அல்லது வீதியின் ஒரு பகுதியை அல்லது வீதியின் ஏதேனும் திசையை நோக்கிச் செல்லும் ஏதேனும் ஓட்டப்பாதை நிரலை ஏதேனும் காலத்திற்கு வாகனப் போக்குவரத்திற்கு மூடி வைப்பதற்கும்;

(ஆ) ஏதேனுமொரு நிர்மாணப் பொருளை அல்லது நிர்மாணப் பொருட்களை அத்தகைய வீதியின் பாகத்தில் குவித்து வைப்பதற்கும்:;

(இ) அத்தகைய வீதியின் அருகாமையிலுள்ள காணிக்குள் உட்பிரவேசிப்பதற்கும் நிர்மாணப் பொருட்கள் எதையும் அத்தகைய காணியில் வைத்திருக்கவும்:;

(ஈ) அத்தகைய வீதியின் அருகாமையிலுள்ள காணியின் ஏதேனும் ஆதனத்திற்கு சேதம் விளைவிக்காத விதத்தில் அத்தகைய காணியில் வாகனங்கள் ஓட்ட இடமளிப்பதற்கும்:;

கட்டளையிடுவதற்குத் தலைவருக்கு அதிகாரமிருத்தல் வேண்டும்.

6. 5 வது துணைவிதியின் கீழ் தலைவரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் கட்டளைக்கு முரணாக செயற்படுதல் அல்லது அத்தகைய ஏதேனும் கட்டளைக்கமைய செயற்படும் எவரேனும் ஆளுக்கு தடை ஏற்படுத்தல் அல்லது அவ்வாறு செய்ய இடமளித்தல் எந்தவோர் ஆளினாலும் மேற்கொள்ளப்படல் ஆகாது.

7. தலைவரால் விநியோகிக்கப்பட்ட எழுத்திலான அனுமதி இருந்தாலன்றி எவரேனும் ஆளினால் நகரசபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதியில் வைக்கப்பட்டுள்ள கல், கூழாங்கல், மணல், மண் அல்லது வேறு ஏதேனும் பொருளை சேகரித்தல் அல்லது குவித்து வைத்தல் அல்லது அகற்றுதல் போன்றவற்றைப் புரியலாகாது.

8. ஏதேனும் காணிக்கு அல்லது காணியில் அமைந்துள்ள கட்டிடத்தின் கூரையில் விழும் மழை நீர் தவிர்ந்த வேறு ஏதேனும் விதத்தில் அத்தகைய இடத்தில் அல்லது இடத்தில் அமைந்துள்ள கட்டிடத்திலுள்ள நீரை அல்லது பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீர் போன்றவற்றை, உறிஞ்சியிழுக்கும் கிடங்கிற்கு பாய்ந்து செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, நகர சபைக்குச் சொந்தமான வீதிக்கு அல்லது வீதியிலுள்ள வடிகானுக்கு அப்புறப்படுத்தல் ஆகாது.

9. போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொருட்கள் அல்லது தூசி அல்லது மணல் அல்லது சிறிய துண்டுகளாக பரவிச் செல்வதைத் தடுக்கின்ற மூடியொன்றினால் மூடப்பட்டிருந்தாலேயொழிய, எவரேனும் ஆளினால் அவ்வாறான ஏதேனும் பொருட்களை நகர சபைக்குச் சொந்தமான வீதியில் ஏதேனும் வாகனத்தில் போக்குவரத்துக்காக எடுத்துச் செல்லல் ஆகாது.

10. ஏதேனும் வீதியின் மீதுள்ள வடிகானை நிரப்புதலோ சேதப்படுத்துதலோ அல்லது அத்தகைய வடிகானூடாகப் பாய்ந்து செல்லும் நீர் இலகுவாகப் பாய்வதைத் தடைசெய்தலோ எந்தவோர் ஆளினாலும் மேற்கொள்ளலாகாதென்பதுடன், அத்தகைய வடிகானுக்குக் குறுக்காக ஏதேனும் காணிக்குள் பிரவேசிப்பதற்கு அவசியமாயின் 3 அடி நீளத்திற்குக் குறையாத பாலம் அல்லது மேடை அல்லது வில்வளைவு அமைப்பொன்றினை அமைத்தல் அத்தகைய இடத்தின் உரிமையாளர் அல்லது வதிபவரின் பணியாதல் வேண்டும்.

11. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்-

"வீதி" என்பது, நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதி, வழி, பெருந் தெரு, ஒழுங்கை, தெரு, ஒற்றையடிப்பாதை, படிக்கட்டு, கடவை அல்லது பயணிகள் பாலம் எனக் கருதப்படுவதோடு, நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதி, வழி, பெருந் தெரு, ஒழுங்கை, தெரு, ஒற்றையடிப்பாதை, படிக்கட்டு , கடவை அல்லது பயணிகள் பாலத்திற்கு இணைத்துப் பொருத்தப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள ஏதேனும் தூரத்தைக் காட்டும் குறியீடு, எல்லைக் கல், எல்லைத் தூண், மின்சாரக் கம்பம், பாலம், ஏதேனும் வகையிலான மதகு, நீர்க்கடவை, மதில், வில்வளைவமைப்பு, அணைக்கட்டு, வடிகான், சுளுசு, துணைமதில், கைப்பிடி, சங்கிலி, வேலி, சமிக்ஞைப் பலகை, வீதிப் பெயர்ப் பலகை அல்லது வீதி அருகிலுள்ள நடைபாதை மேடை என்பன அதனை உள்ளடக்க வேண்டும்.

"வாகனம்" என்பது, மோட்டர் வாகனங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் வாகனத்திற்காக வழங்கப்பட்ட பொருள்கோடல் எனக் கருதப்படல் வேண்டுமென்பதொடு வண்டி, துவிச்சக்கர வண்டி, அல்லது சில்லுகள் பொருத்தப்பட்டு இயந்திர மூலமாகவோ வேறு வகையிலோ இயக்கப்படுகின்ற உபகரணமென கருதப்படும்.

"சேதம் ஏற்படுத்தல்" என்பது, அழிவு ஏற்படுத்தல், கழற்றுதல், உருக்குலைத்தல், புரட்டிப்போடுதல், அப்புறப்படுத்தல், வேறு ஏதேனும் விதத்தில் சேதமேற்படுத்தல், ஏதேனும் பாகத்தின் மீது சுவரொட்டி அல்லது துண்டுப் பிரசுரம் ஒட்டுதல் அல்லது வர்ணப்பூச்சு அல்லது வேறு ஏதேனும் பிசின் வகை அல்லது தார் பூசுதல் என்பன கருதப்படுவதோடு, ஏதேனும் பெயர்ப் பலகையில் எழுத்துகளை மாற்றுதல், அழித்தல், சுரண்டுதல் அல்லது கழற்றுதல் உள்ளடக்க வேண்டுமென்பதோடு, நகர சபையால் அல்லது தலைவரால் அல்லது தலைவரின் அதிகாரம் பெற்ற எவரேனும் உத்தியோகத்தரால் ஏதேனும் வீதியைத் திருத்துவதற்காக செய்விக்கப்படும் ஏதேனும் கருமம் இதில் உள்ளடக்கப்படல் ஆகாது.

## பாகம் XXIV

## தகன நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணமறவிடல் பற்றிய துணை விதிகள்

இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் தகன நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணமறவிடல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2.(அ) தலைவரால் அல்லது அதிகாரம் பெற்ற எவரேனும் உத்தியோகத்தரால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரம் இன்றி நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் தகன நிலையத்தில் எந்தவோர் பூதவுடலையும் தகனம் செய்யப்படுதல் ஆகாது.

(ஆ) இறந்துபோன எவரினதும் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்தின் கீழ் நீதவான் அல்லது திடீர் மரண பரிசோதகரால் விசாரணை நடாத்தப்பட்டு, அத்தகைய விசாரணையின் முடிவில் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அத்தகைய நீதவான் அல்லது திடீர் மரண பரிசோதகர் அனுமதி அளிக்கப்பட்டிருந்தாலேயொழிய, அத்தகைய பூதவுடலை தகனம் செய்வதற்காகப் பொறுப்பேற்கவோ அல்லது தகனம் செய்வதற்கோ தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் ஆகாது.

(இ) இறந்துபோன எவரினதும் மரண சான்றிதழின் 7 வது நிரலில் "மரணத்திற்கான காரணம் அடக்கம் செய்யப்பட்ட அல்லது தகனம் செய்யப்பட்ட இடம்" என்பதில், நகர சபையின் ஏற்புடைய தகனநிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தாலேயொழிய, அத்தகைய பூதவுடலை

தகனம் செய்வதற்காகப் பொறுப்பேற்கவோ அல்லது தகனம் செய்வதற்கோ தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் ஆகாது.

3.(அ) பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அறவிடப்படும் கட்டணம் நகர சபையின் பிரேரணை வழிமொழிதல் மூலமாக விதிக்கப்பட முடியுமென்பதோடு அவ்வாறான பிரேரணை வழிமொழிதல் மூலமாக காலத்திற்குக் காலம் திருத்தம் செய்ய முடியும்.

(ஆ) மேலே (அ) பந்தியின் கீழ் விதிக்கப்படுகின்ற அல்லது காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்படும் கட்டணங்கள், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதோடு தகன நிலையத்தை ஒதுக்கிக்கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் இடத்திலும் தகன நிலையத்திலும் தெளிவாக புலப்படக்கூடிய இடத்தில் காட்சிக்கு வைக்கப்படுதலும் வேண்டும்.

(இ) பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அறவிடப்படும் கட்டணங்கள் இங்கு முதலாவது அட்டவணையில் காட்டப்பட்ட வகைப்படுத்தலின் கீழ் விதிக்கப்பட முடியும்.

4. 2 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் (இதனகத்துப் பின்னர் ''விண்ணப்ப தாரி'' என அறியப்படும்) எவரேனும் ஆள், இங்கு கீழே காட்டப்பட்டுள்ள பதிவேட்டுடன் இங்கு இரண்டாவது அட்டவணைக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை தலைவரிடம் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) மரணமடைந்தவருக்கும் விண்ணப்பதாரிக்கும் இடையிலான தொடர்பினை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டு,-

(i) விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழ்; அல்லது
(ii) மரணமடைந்தவரின் பிறப்புச் சான்றிதழ்; அல்லது
(iii) விண்ணப்பதாரியின் விவாகச் சான்றிதழ்; அல்லது
(iv) மரணமடைந்தவர் வசித்தபிரிவின் கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட சான்றிதழ்;

(ஆ) மரணமடைந்தவரின் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்தின் கீழ் விசாரணை நடாத்தப்பட்டிருந்தால், அத்தகைய விசாரணையை நடாத்திய நீதவான் அல்லது திடீர் மரண பரிசோதகரால் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் கட்டளைச்சட்டத்தின் 41 (உ) பந்தியின் கீழ் பூதவுடலைத் தகனம் செய்ய அனுமதியளித்து வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது இறந்து பிறந்த சடலமாயின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின் 43 (ஆ) பந்தியின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் ; அத்துடன்

(இ) மரணமடைந்தவரின் மரணச் சான்றிதழ்.

5. பூதவுடலொன்றைத் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் கோரி சமர்ப்பிக்கும் விண்ணபத்திரத்தின் பேரில் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்படின், அவ்வாறான விண்ணப்பப்பத்திரம் கிடைக்கப்பெறும் வரிசைக் கிரமத்திற்கமைய இங்கு மூன்றாவது அட்டவணைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பதிவேட்டில் பதிவு செய்தல் தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் பணியாதல் வேண்டும். இப்பதிவேடு விண்ணப்பப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் நகர சபை அலுவலகத்தால் பேணப்படுதல் வேண்டும்.

6. சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைய ஏதேனும் பூதவுடல் தகனம் செய்வதற்குப் பொறுப்பேற்கத் தீர்மானிக்கப்படு மாயின், 3 வது துணைவிதிக்கமைய விதிக்கப்பட்ட உரிய கட்டணத்தை அறவிட்ட பின்னர், தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அதற்கான அனுமதிப்பத்திரத்தை விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும். அத்தகைய அனுமதிப்பத்திரத்திற்கு அமைய தகனம் செய்வதற்குரிய பூதவுடல் தகன நிலைய பொறுப்பாளரிடம் கொண்டுவந்து பொறுப்பிக்க வேண்டிய தினம் மற்றும் நேரம் அத்தகைய அனுமதிப்பத்திரத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

7. ஏதேனும் காரணத்தின் பேரில் தகனம் செவதற்காக பூதவுடலைப் பொறுப்பேற்காவிடின், தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அதற்கேதுவாக அமைந்த காரணங்களுடன் அதுபற்றி உடனடியாக விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

8. வாரத்தின் எல்லா நாட்களிலும் முற்பகல் 07.00 மணியிலிருந்து பிற்பகல் 07.00 மணி வரை தகனம் செய்வதற்காக பூதவுடலைப் பொறுப்பேற்கவும் தகனம் செய்யவும் முடியும்.

9. வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் பூதவுடலை தனக நிலைய பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். அத்தகைய நேரத்தில் பூதவுடலைக் கையளிக்க தாமதம் காரணமாக விண்ணப்பதாரி அல்லது மரணமடைந்தவரின் உரிமையுள்ள வேறு எவரேனும் ஆளுக்கு ஏற்படும் ஏதேனும் வசதியீனம் அல்லது நட்டம் சம்பந்தமாக நகர சபை, தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் வகைப்பொறுப்புக்கு கட்டுப்படல் ஆகாது.

10. ஒவ்வொரு தகன நிலையத்திலும் தகனம் செய்யப்பட்ட ஒவ்வொரு பூதவுடல் தொடர்பாக நாலாவது அட்டவணைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பதிவேடொன்று தகன நிலையத்தின் பொறுப்பாளரால் பேணப்பட்டுவருதல் வேண்டும்.

11(அ) ஒவ்வொரு பூதவுடலும் தகனம் செய்யப்பட்டு எழுபத்திரண்டு மணித்தியாலங்கள் கழிவதற்கு முன்னர் விண்ணப்பதாரியால் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியால் அத்தகைய பூதவுடலின் அஸ்தி பொறுப்பேற்கப்படல் வேண்டும்.

(ஆ) எனினும் விண்ணப்பதாரியின் எழுத்திலான வேண்டுகோளின் பேரில் தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அத்தகைய அஸ்தியை தகன நிலையத்தின் பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்துக்கொள்ளும் கால எல்லையை நீடித்துக்கொள்ள முடியும்.

(இ) (ஆ) பந்தியின் கீழ் அஸ்தி தகன நிலைய பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்திருப்பதற்கு நீடிக்கப்பட்ட காலம், தகனம் செய்யப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களை விஞ்சாதிருத்தல் வேண்டும்.

(ஈ) அவ்வாறு அஸ்தி அப்புறப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலம் முடிவுற்ற பின்னரும் எடுத்துச் செல்லப்படாத அஸ்தியை அகற்றுவதற்கு தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது தகன நிலைய பொறுப்பாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(உ) எவரேனும் விண்ணப்பதாரியால் அல்லது அவருடைய அதிகாரம்பெற்ற பிரதிநிதியால் பொறுப்பேற்கப்படாத அஸ்தியை தகன நிலைய வளவினுள் அல்லது ஏதேனும் மயானத்தில் புதைப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் பணியாதல் வேண்டும்.

12.(அ) ஏதேனும் தகன நிலையத்தின், தகன கூடத்தில் சடலம் வைக்கப்பட்டு அதன் பாதுகாப்பு கதவுகள் மூடப்பட்ட பின்னர் கூடத்தின் மூடப்பட்ட பகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாகத்தினுள் தகன நிலைய பொறுப்பாளர் அல்லது அவரின் உதவியாளர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளும் உட்பிரவேசித்தல் ஆகாது.

(ஆ) தலைவரின் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் அல்லது தகன நிலைய பொறுப்பாளரின் அனுமதியின்றி ஏதேனும் தகன நிலைய வளவினுள் பிரவேசித்தல் ஆகாது.

(இ) (ஆ) பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும்-

(i) பூதவுடலைத் தகனம் செய்வதற்கு எவரேனும் ஆள் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளவிடத்து, பூதவுடலைத் தகனம் செய்வதற்காக கையளிப்பதற்கு அவர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற ஆளுடன் அத்தகைய சந்தர்ப்பத்தில் பங்குகொள்ளும் வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் ; அத்துடன்

(ii) தகனம் செய்யப்பட்ட ஏதேனும் பூதவுடலின் அஸ்தியைப் பொறுப்பேற்க உரிய தினம் அல்லது அத்தினத்திற்கு முன்னர், அனுமதிப்பத்திரம் பெறுநரின் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடன் வருகைதரும் வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள்;

தகன நிலைய வளவினுள் பிரவேசிப்பதற்கு அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ள ஆட்கள் எனக் கருதப்படல் வேண்டும்.

13. ஏதேனும் தகன நிலைய வளவினுள்,-

(அ) அமைதியைக் குலைக்கும் விதத்தில் நடந்துகொள்ளல்;

(ஆ) தகன நிலைய வளவினுள் உள்ள நகர சபைக்குச் சொந்தமான ஆதனங்களுக்கு சேதமேற்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு முற்படுதல்;

(இ) தகன நிலையத்தின் பொறுப்பாளரின் அல்லது அவருடைய எவரேனும் உதவியாளரின் கடமைகளுக்குத் தடை ஏற்படுத்தல்;

(ஈ) தகன நிலைய வளவிற்குள் ஏதேனும் அலங்கரிப்புகளைச் செய்தல் அல்லது அறிவித்தல்களை ஒட்டுதல்

ஆகாது.

14 (அ) பூதவுடலை அடக்கம் செய்வதற்கு உகந்த நிலையில் தகன நிலையத்தைப் பராமரித்துக் கொண்டு நடாத்துதலும் தலைவரின் பணியாதல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் தகன நிலையத்தின் புனரமைப்பு அல்லது பராமரிப்பு கருமத்திற்காக அத்தகைய தகன நிலையத்தை மூடிவைப்பதாயின், அது பற்றிய அறிவித்தலொன்றை மூன்று மொழிகளிலும், பூதவுடல்கள் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் அலுவலகத்திலும் தகன நிலைய வளவினுள் பிரவேசிக்கும் இடத்திலும் தெளிவாகப் புலப்படக்கூடிய விதத்தில் காட்சிக்கு வைத்தல் தலைவரின் பணியாதல் வேண்டும்.

15. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,-

"தகனநிலைய கூடம்" என்பது, தகனம் செய்வதற்காக பூதவுடல் வைக்கப்படுகின்ற கூடமும் அத்தகைய கூடத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள வெளிக் கூடமும்;

"தகனநிலைய வளவு" என்பது, முழு தகன நிலையமும் அதற்குச் சொந்தமான பூமியும்;

"தகன நிலையத்தின் பொறுப்பாளி" என்பது, அப்போதைக்கு நகர சபையின் தகன நிலையத்திற்கும் அதன் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஏவரேனும் ஊழியர்;

"அஸ்தி" என்பது, ஏதேனும் பூதவுடல் தகனம் செய்யப்பட்ட பின்னர், பூதவுடலினதும் அது வைக்கப்பட்ட பெட்டியில் ஏதேனும் எரியாது எஞ்சிய பொருட்களும்;

"பூதவுடல்" என்பது, மரணமடைந்த எவரேனும் ஆளுடைய முழுப் பூதவுடல் அல்லது உயிரற்றுப் பிறந்த குழந்தையின் பூதவுடலும் அல்லது பூதவுடலின் ஏதேனும் பாகமும்;
கருதப்படல் வேண்டும்.

## முதலாவது அட்டவணை

### 3 ஆவது துணைவிதி

தகன நிலையத்தைப் பாவிக்கும் போது அறவிடப்படுகின்ற கட்டணங்கள்

| | | ரூபா. சதம் |
|---|---|---|
| 01. | அதிகாரப் பிரதேசத்தில் வதியும் வயது வந்த ஒருவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு | |
| 02. | அதிகாரப் பிரதேசத்தில் வதியும் வயது வந்த ஒருவரல்லாதவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு | |
| 03. | அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே வதியும் வயது வந்த ஒருவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு | |
| 04. | அதிகாரப் பிரதேசத்தில் வதியும் வயது வந்த ஒருவரல்லாதவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு | |
| 05. | அதிகாரப் பிரதேசத்தில் வதியும் சமுர்த்தி பெறுநர் குடும்பத்தைச் சார்ந்த வயது வந்த ஒருவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு | |
| 06. | அதிகாரப் பிரதேசத்தில் வதியும் சமுர்த்தி பெறுநர் குடும்பத்தைச் சார்ந்த வயது வந்த ஒருவரல்லாதவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு | |

இங்கு வயதுவந்த ஒருவரல்லாதவர் என்பது, வயது 12 வருடங்களுக்குக் குறைந்த பிள்ளையொன்றென்று கருதப்படும்.

## இரண்டாவது அட்டவணை

### 4 ஆவது துணைவிதி

(முன்பக்கம்)

(இரண்டு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்).

...................... நகர சபையின் தகன நிலையத்தில் பூதவுடலொன்று

தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தல்

01. விண்ணப்பதாரியின் முழுப் பெயர்: ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
முகவரி: ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
தேசிய அடையாள அட்டை இலக்கம்: ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
கிராம உத்தியோகத்தர் பிரிவின் இலக்கமும் பெயரும்: ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

02. மரணமடைந்தவரின் முழுப் பெயர்: ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
பெண்ணா / ஆணா?: ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
வதிந்திருந்த இடத்தின் முகவரி: ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
கிராம உத்தியோகத்தர் பிரிவின் இலக்கமும் பெயரும்: ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
தேசிய அடையாள அட்டை இலக்கம்: ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

03. மரணமடைந்தவருக்கும் விண்ணப்பதாரருக்கும் உள்ள தொடர்பு: ... ... ... ... ... ... ... ...
(உறுதிப்படுத்துவதற்கு 5 ஆவது துணைவிதியின் (அ) பந்தியில் குறிப்பிட்ட சான்றிதழ்களை இணைக்கவும்)

04. மரணச் சான்றிதழின் பதிவு இலக்கமும் திகதியும்: … … … … … … … … … … … … …
(மரணச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

05. மரணத்தைப் பதிவுசெய்த செயலாளரின் பெயரும் பிரிவும்: … … … … … … … … … … …

06. மரணத்திற்கான காரணம்: … … … … … … … … … … … … … … … … … … … … … … …

07. மரணம் சம்பந்தமாக மரண விசாரணை நடத்தப்பட்டிருப்பின்;

(5 வது துணைவிதியின் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்ட சான்றிதழை இணைக்கவும்)

விசாரணை உத்தியோகத்தரின் பெயரும் அந்தஸ்தும் - … … … … … … … … … … … …

விசாரணை நடத்தப்பட்ட தினம்: - … … … … …… … … … … … … … … … … … … …

விசாரணை உத்தியோகத்தரின் முடிவு: - … … … … … … … … … … … … … … … …

பூதவுடலைத் தகனம் செய்வதற்கு மரண பரிசோதகர் அனுமதி வழங்கியுள்ளாரா? : - … … … … … … … … … … … …

08. தகனம் செய்வதற்குக் கோரும் தினமும் நேரமும் (விருப்பத்தின் அடிப்படையில்)

| | தினம் | நேரம் | | தினம் | நேரம் |
|---|---|---|---|---|---|
| i. | 20………. | …….மணி | ii. | 20…… | ……….மணி |
| iii. | 20………. | …….மணி | iv. | 20…… | ……….மணி |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன். மேலும் இங்கு காட்டப்பட்டுள்ள தகவல்களின் முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏற்புடைய சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ளன.

திகதி: 20 … … … … …

… … … … … … … … … …
விண்ணப்பதாரியின் கையொப்பம்

(பின் பக்கம்)

***இரண்டாவது அட்டவணை***

திரு. / திருமதி/ செல்வி : … … … … … … … … … … … … … … … … … … … … … … …
… … … … … … … … … … …

**பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரித்தல்**

ஐயா / அம்மணி,
உங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மறு பக்கத்தில் விண்ணப்பப்பத்திரத்தின் பிரகாரம், அனுமதிப்பத்திரம் கீழே காட்டப்பட்டுள்ள காரணங்களின் பேரில் நிராகரிக்கப்படுவதாக கவலையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1. … … … … … … … … … … … … … … … … … … … … … … … … … … … … …
2. … … … … … … … … … … … … … … … … … … … … … … … … … … … … …
3. … … … … … … … … … … … … … … … … … … … … … … … … … … … … …
4. … … … … … … … … … … … … … … … … … … … … … … … … … … … … …

… … … … … … … … … … …
தலைவர் / அதிகாரம் பெற்ற
உத்தியோகத்தரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ இலச்சினை பதிக்கவும்)

திகதி: 20… … … … … …

தகன நிலைய பொறுப்பாளி,

… … … … … … … … … … … தகன நிலையம்.

**சடலத்தை தகனம் செய்வதற்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரம்**

(அ) … … … … … … … … … … … … … … … … … … … … … … … … என்பவரின் பூதவுடலை 20 ... மாதம் … … … ஆம் திகதி முற்பகல்/ பிற்பகல் … … மணிக்கு … … … … … … … … … … தகன நிலையத்தில் தகனம் செய்வதற்கு இத்தால் அனுமதி வழங்குகிறேன்

(ஆ) மறுபக்க விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் 6 வது துணைவிதியின் பிரகாரம் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

(இ) 20… … … திகதிய … …. இலக்கத்தைக் கொண்ட பற்றுச்சீட்டின் மூலம் ரூ. … … … அறவிடப்பட்டுள்ளது.

(ஈ) இவ்வனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள தகவல்களைச் சார்ந்ததாக 11 வது துணைவிதியின் பிரகாரம் ஏற்புடைய பதிவேட்டில் பதிந்த பின்னர் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

அனுமதிப்பத்திர பதிவேட்டின் தொடர் இலக்கம் … … … ஆகும்.

… … … … … … … … … … … …
தலைவர் / அதிகாரம் பெற்ற
உத்தியோகத்தரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ இலச்சினை பதிக்கவும்)

திகதி: 20… … … … … …

***மூன்றாவது அட்டவணை***

**……………… நகர சபையின் தகன நிலையத்தில் பூதவுடல் தகனம் செய்வதற்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களின் பதிவேடு.**

| தொடர் இல. | மரணமடைந்தவரின் பெயர் | தே.அ.இல. | ஆண் / பெண் பால்நிலை | மரணமடைந்த தினம் | மரணச் சான்றிதழ் பதிவு செய்த | | விண்ணப்பதாரியின் | | | | நீதவான் /திடீர் மரண பரிசோதகரின் கட்டளையின் | | அனுமதிப்பத்திர இல. | பற்றுச்சீட்டு | | தகனம் செய்ய ஒதுக்கப்பட்ட | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | இல. | திகதி | பெயர் | இறந்தவருக்குள்ள தொடர்பு | முகவரி | தே.அ.இல. | தொடர்பு இல. | திகதி | | இலக்கம் | தொகை ரூ. சதம் | திகதி | நேரம் |
| | 01. | | | | | | | | | | | | | | | | |
| | 02. | | | | | | | | | | | | | | | | |
| | 03. | | | | | | | | | | | | | | | | |
| | 04. | | | | | | | | | | | | | | | | |
| | 05. | | | | | | | | | | | | | | | | |
| | 06. | | | | | | | | | | | | | | | | |

(கவனிக்கவும்.- பதிவேட்டின் இடது பக்கம் மற்றும் வலது பக்கங்கள் இரண்டையும் உபயோகித்து தகவல்களைப் பதிவு செய்வதற்காக போதியளவு இடத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும்).

### நான்காவது அட்டவணை

### .................. நகர சபை தகன நிலையத்தில் தகனம் செய்யப்பட்ட பூதவுடல்கள் பற்றிய பதிவேடு

| தொடர் இல. | மரணமடைந்தவரின் பெயர் | தே.அ.அ.இல. | ஆண் / பெண் பால்நிலை | அனுமதிப்பத்திரங்கள் பதிவேட்டின் தொடர் இல. | மரணமடைந்த தினம் | மரணச் சான்றிதழ் பதிவு செய்த | | விண்ணப்பதாரியின் | | அனுமதிப்பத்திர இல. | பற்றுச்சீட்டு | | தகனம் செய்யப் பட்ட | | அஸ்தி எடுத்துச் சென்ற திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | இல. | திகதி | பெயர் | தே.அ.அ.இல. | | இலக்கம் | தொகை ரூ. சதம் | திகதி | நேரம் | |
| 01. | | | | | | | | | | | | | | | |
| 02. | | | | | | | | | | | | | | | |
| 03. | | | | | | | | | | | | | | | |
| 04. | | | | | | | | | | | | | | | |
| 05. | | | | | | | | | | | | | | | |
| 06. | | | | | | | | | | | | | | | |
| 07. | | | | | | | | | | | | | | | |
| 08. | | | | | | | | | | | | | | | |

(கவனிக்கவும்.- பதிவேட்டின் இடது பக்கம் மற்றும் வலது பக்கங்கள் இரண்டையும் உபயோகித்து தகவல்களைப் பதிவு செய்வதற்காக போதியளவு இடத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும்).

## பாகம் XXV

### பொது சந்தைகளைக் கொண்டு நடாத்துதல் பற்றிய துணை விதிகள்

இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் பொதுச் சந்தைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. நகர சபையினால் நிர்மாணிக்கப்பட்டு பேணிவரப்படுகின்ற ஏதேனும் பொதுச் சந்தை தொடர்பில் இந்த துணை விதிகளின் கீழே குறிப்பிடப்பட்ட பணிப்புக்களை நகர சபை கடைப்பிடித்தல் வேண்டும். அதாவது அத்தகைய பொதுச் சந்தையின்-

(1) நிரந்தரக் கட்டிடங்கள் அனைத்தும் செங்கற்களால், சீமெந்துக் கற்களால் அல்லது கபூக் கற்களால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு சுவர்களின் உயரம் குறைந்த பட்சம் தரை மட்டத்தில் இருந்து 3 மீற்றர் உயரத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்;

(2) கூரை ஏதேனும் நிலையான பொருட்களினால் ஆக்கப்பட்டு முழுநிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்;

(3) உள்ளே இருக்கின்ற கடை அறைகளின் கூரைக்கு உட்கூரை பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு அத்தகைய உட்கூரை தரை மட்டத்தில் இருந்து 2.85 மீற்றர் உயரத்தில் அமைந்திருத்தலும் வேண்டும்;

(4) கட்டிடத்திற்கு உள்ளே கடை அறைக்கு முன்னால் குறைந்த பட்சம் 2.5 மீற்றர் அகலமுடைய கொரிடோரைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு கடை அறையும் கொரிடோருடன் தொடர்புபடுகின்ற இடத்தில் மடிக்கும் கதவு அல்லது பாகங்களாக கழற்றித் திறக்கக்கூடிய கதவினைக் கொண்டதாக இருத்தலும் வேண்டும்;

(5) கடை அறைகளைக் கொண்ட கட்டிடத்தின் சுவர்களின் வெளிப்புற எல்லையிலும் கொரிடோரின் வெளிப்புற எல்லையிலும் குறைந்த பட்சம் ஒரு மீற்றர் அகலமுடைய மேடை மதிலும் மழை நீர் வழிந்தோடுவதற்கான வடிகான்களும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(6) கட்டிடத்தில் கடை அறைகளைக் கொண்ட பகுதிக்குப் புறம்பாக தற்காலிக வியாபாரிகளுக்கான விற்பனைக் கொட்டில்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(7) உள்ளே நிர்மாணிக்கப்படுகின்ற ஒவ்வொரு விற்பனைக் கொட்டிலும் செங்கற்களினால் அல்லது சீமெந்துக் கல்லினால் அல்லது கபூக் கல்லினால் நிர்மாணிக்கப்பட்ட சிறுமதிலின் மீது கொங்கிறீட் தகட்டினாலோ துருப்பிடியாத உலோகத் தகட்டினாலோ முழுநிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் கொங்கிறீட் தகட்டினால் கட்டு முழுநிறைவு செய்யப்பட்டுள்ளவிடத்து அத்தட்டு சாந்து பூசப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ மாபிள் ஓடு பதிக்கப்பட்டோஇருத்தல் வேண்டும்; அவ்வாறு விற்பனைக் கொட்டில்களை அமைக்க இயலாத ஏதேனும் சந்தர்ப்பத்தில், நிலத்தின் மீது தட்டையான இடப்பகுதிகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அப்பகுதிகள் செங்கல்லினால், சீமெந்துக் கல்லினால் அல்லது கபூக் கல்லினால் முழுநிறைவு செய்யப்பட்டு சீமெந்து சாந்து பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு ஒவ்வொரு பகுதியையும் பிரிக்கின்ற கோட்டுக் குறியீடுகள் வெள்ளை நிறத்தால் அடையாளம் இடப்பட்டிருத்தலும் வேண்டும்;

(8) ஒவ்வொரு விற்பனைக் கொட்டிலினதும் பரப்பளவு குறைந்த பட்சம் இரண்டு சதுர மீற்றர்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும்;

(9) ஒவ்வொரு விற்பனைக் கொட்டிலையும் உள்ளடக்கக்கூடியதாக செங்கல்லினால் அல்லது சீமெந்துக் கல்லினால் அல்லது கல்வனைஸ் பண்ணப்பட்ட இரும்புக் குழாய்களினால் அல்லது பலப்படுத்தப்பட்ட அலுமினியக் குழாய்கள் இடப்பட்ட தூண்களின் மீது குறைந்த பட்சம் தரை மட்டத்தில் இருந்து 2.25 மீற்றர் உயரத்தைக் கொண்ட கூரை அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, தாழ்வாரம் குறைந்த பட்சம் தரை மட்டத்தில் இருந்து 2.1 மீற்றர் உயரத்தில் அமைந்திருத்தல் வேண்டும். அத்துடன் மேற்படி தூண்கள் செங்கல்லினால், சீமெந்துக் கல்லினால் அல்லது கபுக் கல்லினால் கட்டப்பட்டிருப்பின் சாந்து பூசப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு கல்வனைஸ் பண்ணப்பட்ட இரும்பினால் முழுநிறைவு செய்யப்பட்டிருப்பின் அத்தூண்களில் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்;

(10) ஒவ்வொரு கூரையும் நிலையான பொருளினால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு மழைநீர் கீழே வழிந்தோடப் போதுமான குழாய்கள் பொருத்தப்பட்டிருத்தலும் வேண்டும்;

(11) ஒவ்வொரு விற்பனைக் கொட்டிலையும் சுற்றி தரை மட்டத்தில் குறைந்த பட்சம் ஒரு மீற்றர் அகலம் கொண்ட மேடைச் சிறுமதில் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, மழைநீர் வழிந்து செல்ல போதுமான வடிகான்கள் அமைக்கப்பட்டிருத்தலும் வேண்டும்;

(12) பாவனைக்கு எடுக்கின்ற நீர் மனித நுகர்வுக்குப் பொருத்தமானதென தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்பட்ட தரச் சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் மாத்திரமன்றி குறைந்த பட்சம் ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கு ஒருதடவை வீதம் இத்தரச் சான்றிதழ் பெறப்படல் வேண்டும். இடத்தின் பாவனைக்காக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற நீரைப் பயன்படுத்துவதாயின் அத்தகைய தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாகக் கருதப்படல் வேண்டும்;

(13) இடத்தின் கருமங்களுக்காக பாவிக்கப்படும் நீரைக் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கின்ற நீர் மாசடைவதைத் தடுக்கும் பொருட்டு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்;

(14) ஆண்-பெண் பாலாருக்கு வெவ்வேறாக ஒதுக்கப்பட்ட மலசலகூடங்கள் போதுமான எண்ணிக்கையில் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஒவ்வொரு மலசலகூடத்தினதும் தரையிலும் குறைந்த பட்சம் நிலமட்டத்தில் இருந்து இரண்டு மீற்றர் உயரம் வரை சுவர்களிலும் மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(15) எல்லாக் கடை அறைகளுக்கும், விற்பனைக் கொட்டில்களுக்கு அருகிலும், மலசலகூடங்கள் மற்றும் அலம்பகங்களுக்கு உள்ளேயும் கொரிடோரை உள்ளிட்ட பொதுப் பகுதிகளுக்கு உள்ளேயும் போதியளவு மின்சார வெளிச்சம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு ஒவ்வொரு மின்சுற்றும் மின்காவற்கட்டுப் பொருளினால் ஆக்கப்பட்ட உறையினால் மூடப்பட்டிருத்தலும் வேண்டும்;

(16) ஒவ்வொரு கடை அறையிலும் மின்சார மானியொன்று வீதம் பொருத்தப்பட்டிருத்தல் வேண்மென்பதோடு, பொது இடங்களுக்கு ஒளியூட்டுவதற்காக செலவாகும் மின்சார அலகுகளின் எண்ணிக்கையை அளக்கும் பொருட்டு தனிவேறான மானியொன்று பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

(17) வளவினுள்ளே பொதுவான நீர்க்குழாய் வாயில் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

(18) மரக்கறி அல்லது பழவகைகளைக் கழுவுவதற்காக தனிவேறான இடம் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(19) வியாபாரத்தின் தன்மைக்கேற்ப நீர் பாவிக்க வேண்டிய அவசியம் நிலவுகின்ற ஒவ்வொரு கடை அறைக்கும் ஒரு நீர் இணைப்பு வீதம் வழங்கப்படல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு நீர் இணைப்பு தொடர்பிலும் வெவ்வேறான நீர்மானி வீதம் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, பொது நீர்க்குழாய் வாயிலிலும் மரக்கறி மற்றும் பழவகைகளைக் கழுவும் பொருட்டு ஒதுக்கப்பட்ட இடத்தின் நீர்ப் பாவனையை அளப்பதற்காகவும் தனிவேறான நீர்மானியொன்று வீதம் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

(20) நேரடியாக உள்ளேயும் கூரை மீதும் விழுகின்ற மழை நீரும் மரக்கறி மற்றும் பழவகைகளைக் கழுவுவதற்காக ஒதுக்கியுள்ள இடத்தில் இருந்து அப்புறப்படுத்தும் நீரும் முறையாகப் பாய்ந்தோட போதுமான அளவில் வடிகான் தொகுதியொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கழிவு நீர் தடையின்றிப் பாய்ந்து செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்;

(21) உள்ளே போதுமான அளவில் தீப்பாதுகாப்பிற்கான வேலைத் திட்டம் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, மின்சாரம் காரணமாக தோன்றக்கூடிய தீ, எரிபொருள் மூலமாகத் தோன்றக்கூடிய தீ மற்றும் வேறுவிதமாகத் தோன்றக்கூடிய தீயைக் கட்டுப்படுத்த அவசியமான வெவ்வேறு வகையைச் சார்ந்த தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

(22) பாவனையாளர்களால் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்களின் நிறையை அளந்து உறுதி செய்துகொள்ளும் பொருட்டு பொதுவான நியம தராசு அதற்காக ஒதுக்கப்பட்டதும் தெளிவாகப் புலப்படக்கூடியதுமான இடத்திலும் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(23) பொதுச் சந்தையில் கடை அறைகளின் இட அமைவினைக் கருத்திற்கொண்டு நகர சபையினால் இறைச்சி, மீன், பழங்கள், சில்லறைச் சாமான்கள் மற்றும் பிற வர்த்தகப் பொருட்களை விற்பனை செய்வதற்காக சந்தையைப் பகுதிகளாகப் பிரித்து ஒதுக்குவதும் நகர சபையின் கருமமாக அமைதல் வேண்டும்

(24) வளவில் பிறப்பிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் -

(i) உயிர்ச்சிதைவு கழிவுப் பொருட்கள்
(ii) கண்ணாடிப் பொருட்கள்;
(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும்;
(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்;
(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள்;
(vi) ஊறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்;

தனித்தனியாக சேகரிக்கக்கூடிய கிடங்குகளோ பாத்திரங்களோ அல்லது தொட்டிகள் மேற்படி பொதுச் சந்தையில் தனிவேறான ஓரிடத்தில் அமைந்திருக்க வேண்டுமென்பதோடு, உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்களை இடுவதற்காக அமைக்கப்பட்ட கிடங்குகள், பாத்திரங்கள் அல்லது தொட்டிகள் பூனைகள், இலையான்கள், பிற பூச்சிகள் அல்லது ஏதேனும் பறவைகள் நுழைய இயலாத வண்ணம் நன்கு மூடக்கூடிய மூடி பொருத்தப்பட்டும் இருத்தல் வேண்டும்

(25) துவிச்சக்கர வண்டிகளையும் மோட்டார் சைக்கிள்களையும் நிறுத்தி வைப்பதற்கான இடமொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(26) சந்தைக்கு வருகை தருகின்ற பாவனையாளர்களினதும் பொருட்களின் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள வாகனங்களும் நிறுத்தி வைப்பதற்குப் போதுமான அளவில் இடவசதி ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்

3.(அ) பொதுச் சந்தையில் உள்ள ஏதேனும் கடை அறையொன்றின் குத்தகை பெறுநரோ ஏதேனும் வியாபாரக் கொட்டிலொன்றைப் பாவிக்க அல்லது கையாள்வதற்கு அனுமதிச் சீட்டினைப் பெற்றுள்ள எவரேனும் ஆளோ வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கடை அறையில் அல்லது அதன் அருகில் அல்லது வியாபாரக் கொட்டிலில் அல்லது அதற்கு அருகில் பிறப்பிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் அனைத்தையும்

(i) உயிர்ச்சிதைவு கழிவுப் பொருட்கள்;
(ii) கண்ணாடிப் பொருட்கள்;
(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும்;
(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்;
(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள்;
(vi) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்;

என்ற வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டு அத்தகைய ஒவ்வொரு வகையினத்தையும் சேர்ந்த கழிவுப் பொருட்களை இடுவதற்காக நகர சபையினால் அமைக்கப்பட்டுள்ள தனித்தனியான கிடங்குகளில் அல்லது பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இட வேண்டியது மேற்படி குத்தகை பெறுநரது அல்லது மேற்படி வியாபாரக் கொட்டிலில் அனுமதிச் சீட்டு பெற்றுள்ளவரின் கருமமாக அமைதல் வேண்டும்.

(ஆ) பொதுச் சந்தைக்கு வருகை தருகின்றவர்களால் அப்புறப்படுத்துகின்ற கழிவுப் பொருட்களை இடுவதற்காக (அ) பந்தியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அப்புறப்படுத்தல்களை இலகுபடுத்துகின்ற சிறிய அளவிலான பாத்திரங்களைப் பொதுச் சந்தையின் பொருத்தமான இடங்களில் வைக்கச் செய்வித்தல் தலைவரது பணியாக அமைதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய பாத்திரங்கள் போதுமான அளவு கால இடைவெளியில் (அ) பந்தியில் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருட்களுடன் தொடர்புடைய கிடங்கில், பாத்திரத்தில் அல்லது தொட்டியில் இடச் செய்வித்தல் வேண்டும்.

(இ) 2 வது துணைவிதியின் (24) வது பந்தியின் பணிப்புக்களின் கீழ் உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்களை இடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள கிடங்கில், பாத்திரத்தில், தொட்டியில் கழிவுப் பொருட்களை இடுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது கழிவுப் பொருட்களை அதிலிருந்து வெளியில் எடுக்கின்ற வேளையிலன்றி வேறு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அத்தகைய கிடங்குகள், பாத்திரங்கள் அல்லது தொட்டியின் மூடி நன்கு மூடிவைக்கப்படல் வேண்டும்.

4.(அ) ஏதேனும் பொதுச் சந்தையில் வியாபாரத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தின் அளவு என்பது-

(i) கடை அறையினைப் பொறுத்தமட்டில், அத்தகைய கடை அறையின் பின்புறச் சுவரில் இருந்து 2 வது துணைவிதியின் (4) வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கதவு பொருத்தப்பட்டுள்ள எல்லை வரையான பகுதியாகவும்,

(ii) வியாபாரக் கொட்டிலைப் பொறுத்தமட்டில், அத்தகைய வியாபாரக் கொட்டிலின் மேற்புற பரப்பளவு மற்றும் வியாபாரத்தில் ஈடுபடுகின்றவருக்கு இருப்பதற்கான இடமளிக்கப்பட்டுள்ள அத்தகைய வியாபாரக் கொட்டிலின் பின்புறமாக உள்ள நிலப்பகுதியெனவும், கருதப்படல் வேண்டும்

(ஆ) விற்பனைக்காக பொதுச் சந்தைக்கு எடுத்துவரப்படுகின்ற ஏதேனும் பொருள் அல்லது பண்டம் வியாபாரத்திற்காக பாவிக் கப்படுகின்ற ஏதேனும் உபகரணம் அல்லது வேறேதும் ஒன்று அத்தகைய பொருள் அல்லது பண்டம் சந்தைக்குள்ளே எடுத்து வருகின்ற வேளையிலோ அங்கிருந்து வெளியில் எடுத்துச் செல்கின்ற வேளையிலோ அன்றி வேறு எச்சந்தர்ப்பத்திலும் ஏதேனும் கொரிடோரில் அல்லது மேடைச் சிறுமதில் மீது வைக்கப்படுதலோ அவ்வாறு செய்ய இடமளித்தலோ கூடாது.

(இ) பொதுச் சந்தைக்குள்ளே ஏதேனும் கொரிடோர் மீதோ மேடைச் சிறுமதில் மீதோ எவ்விதத்திலும் வியாபாரத்தை மேற்கொள்ளலாகாதென்பதோடு, அத்தகைய கொரிடோர் அல்லது மேடைச் சிறுமதில் மீது பயணிக்கின்றவர்களுக்கு தடையேற்படக்கூடிய எந்தவொரு செயலையும் புரிதல் ஆகாது.

5. பொதுச் சந்தைக்குள்ளே அமைந்துள்ள ஹோட்டல், சாப்பாட்டுக் கடை, சிற்றுண்டிச்சாலை அல்லது தேநீர் அல்லது கோப்பிக் கடை அல்லாத வேறு எந்த இடத்திலும் எவரேனும் சமையலில் ஈடுபடலாகாது.

6. நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் பொதுச் சந்தையின்-

(1) உள்ளே அநாகரீகமாக நடந்துகொள்ளல், கலகம் செய்தல், ஆபாசமான வார்த்தைகளைப் பிரயோகித்தல் அல்லது பிச்சை எடுத்தல்

(2) அன்றாடப் பணிகளின் நிறைவின் போது சந்தையை மூடிவிடட் பின்னர் அந்த வளவில் தரித்திருத்தல்;

(3) ஏதேனும் கட்டிடத்திற்கு, நிர்மாணிப்புக்கு, பொருத்தப்பட்டுள்ளவற்றுக்கு அல்லது அலங்காரத்தின் பொருட்டு வளர்க்கப்பட்டுள்ள அல்லது மலர்ச் செடிகளுக்கு அல்லது பெயர்ப் பலகைக்கு அல்லது வேறு பொருட்களுக்கு சேதமேற்படுத்தல், நட்டம் விளைவித்தல், அலங்கோலப்படுத்தல் மற்றும் உருக்குலைத்தல்;

(4) பாவனைக்காக வழங்கப்பட்டுள்ள நீரை அசுத்தமாக்கல், விரயமாக்கல், விரயமாக்க இடமளித்தல் அல்லது வேறு விதமாக விரயமாக்குதல் அல்லது அந்த நீரில் நீராடுதல், துணிகள் அல்லது விலங்குகளைக் கழுவுதல் மற்றும் மரக்கறி வகைகளையும் பழங்களையும் கழுவுவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தைத் தவிர்ந்த வேறு ஏதேனும் இடத்தில் மரக்கறி மற்றும் பழங்களைக் கழுவுதல்;

(5) தலைவரால் முறைசார்ந்த வகையில் அனுமதி வழங்கப்பட்டிருந்தாலே ஒழிய தனது கடை அறையின் பெயர்ப்பலகை அல்லாத வேறு ஏதேனும் விதத்திலான விளம்பர அறிவித்தல் பலகையைப் பொருத்தல், பதாகைகளை காட்சிப்படுத்தல் அல்லது வேறு ஏதேனும் விதத்திலான பிரச்சாரப் பணியைச் செய்தல்;

(6) மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ள பிரதான ஆளிப் பலகையை நெருங்குவதில் தடையேற்படுத்தக்கூடிய வகையில் பொருட்களை வைத்தல் அல்லது பிரதான ஆளிப் பலகையைச் சேதப்படுத்தல்;

(7) மின்சார இணைப்பினை வழங்குவதற்காக கட்டிடத்திற்குள்ளே இழுக்கப்பட்டுள்ள பிரதான மின்கம்பியிலிருந்தோ வேறு ஏதேனும் கம்பியிலிருந்தோ வஞ்சகமான முறையில் மின் இணைப்பினை பெற்றுக்கொள்ளல்;

(8) நீர் இணைப்பினை வழங்குவதற்காக கட்டிடத்திற்குள்ளே போடப்பட்டுள்ள பிரதான நீர்க்குழாயொன்றிலிருந்து வஞ்சகமான முறையில் நீர் இணைப்பினைப் பெற்றுக்கொள்ளல்;

(9) கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள தீயணைப்பு உபகரணங்களை நெருங்கமுடியாத வண்ணம் தடையேற்படுத்தக்கூடியதாக பொருட்களை வைத்தல் அல்லது பிரதான ஆளிப் பலகைக்கு சேதம் விளைவித்தல்;

(10) அக்கருமத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்திலன்றி எந்தவொரு வகையையும் சேர்ந்த மரக்கறி, இறைச்சி அல்லது மீன் விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக காட்சிக்கு வைத்தல் அல்லது அவ்வாறு செய்ய இடமளித்தல்;

(11) வளவுக்குள்ளே துவிச்சக்கர வண்டியையோ மோட்டார் சைக்கிள்களையோ கொண்டுவருதலும் அவ்வாறு செய்ய இடமளித்தலும்;

(12) ஏதேனும் வியாபாரம் செய்யும் இடத்திலிருந்து அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்கள் 3 வது துணைவிதியின் பணிப்புகளுக்கு அமைவாக நகர சபையினால் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் கிடங்கில் அல்லது தொட்டியிலன்றி பொதுச் சந்தைக்குள் வேறு ஏதேனும் இடத்தில் போடுதல்;

எவராலும் புரியப்படல் ஆகாது.

7. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையான வியாபாரத்திலும் அல்லது அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

8. பொதுச் சந்தையில் ஏதேனும் கடை அறையினை அல்லது வியாபாரக் கொட்டிலைப் பாவிக்கின்ற அல்லது கையாளுகின்ற ஒவ்வொரு நாளிலும் அன்றாட அலுவல்களின் ஆரம்பத்திலும் இறுதியிலும் அதற்கு இடைப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் அத்தகைய கடை அறையிலும் அதன் முன்புறத்தில் உள்ள கொரிடோர், மேடைச் சிறுமதில் இன்றேல் வியாபாரக் கொட்டிலின் மீதும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் கூட்டிச் சுத்தம் செய்தலும் அவ்வாறு கூட்டிச் சுத்தம் செய்த பின்னர் சேர்கின்ற கழிவுப் பொருட்களை 3 வது துணைவிதியில் குறிப்பிட்டுள்ளவாறு நகர சபையினால் வழங்கப்பட்டுள்ள கிடங்கில் அல்லது தொட்டியில் இடுவதோ அல்லது இடச் செய்வித்தலோ ஒவ்வொரு கடை அறையினதும் குத்தகை பெறுநரதும் வியாபாரக் கொட்டிலைப் பாவிக்கின்ற அல்லது கையாளுகின்றவரின் கருமமாகும்.

9. பொதுச் சந்தையில் மரக்கறிகள், பழங்கள், இறைச்சி, மீன் அல்லது வேறு உணவு அல்லது பான வகைகளை விற்பனை செய்கின்ற அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு கடை அறையும் வியாபாரக் கொட்டிலும் ஒவ்வொரு ஹோட்டல், சாப்பாட்டுக்கடை, சிற்றுண்டிச்சாலையையும் உள்ளிட்ட தேநீர் அல்லது கோப்பிக் கடையும் அன்றாடப் பணிகள் நிறைவடைந்ததும் அத்தகைய வியாபார நிலையத்தில் விற்பனைக்காக பொருட்களைக் காட்சிப்படுத்துகின்ற ஒவ்வொரு கடை அறை, மேசை, வாங்கு, பொருட்களை வைக்கும் பலகை, அலுமாரியும் சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் கழுவியோ சுரண்டிச் சுத்தம் செய்ய வேண்டியதோ அவ்வாறு செய்விக்க வேண்டியதோ அத்தகைய இடத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவரின் பணியாக அமைதல் வேண்டும்.

10. ஏதேனும் பொதுச் சந்தையில் ஏதேனும் கடை அறை அல்லது வியாபாரக் கொட்டில் எவ்வகையைச் சேர்ந்த பண்டம் அல்லது பொருளை விற்பனை செய்வதற்காக ஒதுக்கிக்கொடுக்கப்பட்டுள்ளதோ அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள வகையைச் சேர்ந்த பண்டங்களையோ பொருட்களையோ தவிர எந்தவொரு வகையையும் சேர்ந்த பண்டங்களையோ பொருட்களையோ விற்பனை செய்வதற்காக எந்தவொரு ஆளும் காட்சிப்படுத்தப்படக் கூடாது.

11. பொதுச் சந்தையில் கடை அறைகளுக்குப் புறம்பாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏதேனும் வியாபாரக் கொட்டிலின் அன்றாடப் பணிகளின் இறுதியில் எந்தவொரு பண்டமோ பொருளோ கழிவுப் பொருளோ எவராலும் வைக்கப்படல் ஆகாது.

12. ஊன் அறுக்கும் கட்டளைச் சட்டத்தின் பணிப்புக்களின் கீழ் முறைசார்ந்த அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுள்ள அல்லது ஊன் அறுக்கும் நிலையத்தில் கொல்லப்பட்ட ஏதேனும் விலங்கின் இறைச்சியாக அமைந்தாலேயொழிய எவரும் பொதுச் சந்தையில் இறைச்சி விற்கும் இடமொன்றில் சந்தைப்படுத்தவோ சந்தைப்படுத்துவதற்காக காட்சிப்படுத்தவோ களஞ்சியப்படுத்தவோ ஆகாது.

13. ஏதேனும் ஊனறுக்கும் நிலையத்தில், என்றாவது ஒரு நாள் இறைச்சிக்காக விலங்குகள் கொல்லப்படுவதை தடை செய்தோ ஊனறுத்தல் கட்டளைச் சட்டத்தின் 17 வது பிரிவின் தத்துவங்களின் பிரகாரம் உரிய அதிகாரம் கொண்டவரால் கட்ட ளையொன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டோ உள்ள சந்தர்ப்பத்தில் பொதுச் சந்தைக்கு உள்ளே பேணிவரப்படுகின்ற ஏதேனும் இறைச்சிக் கடையொன்றில் வியாபாரத்திற்காக இறைச்சியை வைத்திருத்தல் அல்லது வியாபாரத்திற்காக இறைச்சியை காட்சிப்படுத்தல் அல்லது களஞ்சியப்படுத்தல் ஆகாது.

14. எவரேனும் ஆளொருவரினால் பொதுச் சந்தை வளவினுள் நாய் அல்லது பூனை அல்லது வேறேதும் விலங்கு அல்லது பறவையைக் கொண்டுவர இடமளித்தல் ஆகாது. இக்கட்டளையை ஏதேனும் பரிசோதனைக்காக எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தரால் உத்தியோகபூர்வ பொலிஸ் நாய் ஒன்றினை பொதுச் சந்தைக்குள்ளே கொண்டுவருவதைத் தடுப்பதற்கான கட்டளையெனக் கருதலாகாது.

15. பொதுச் சந்தையின் வியாபார நடவடிக்கைகள் நிறைவடைந்து பொதுச் சந்தையை முழுமையாக மூடிவிடுகின்ற சந்தர்ப்பத்திலும் பொதுச் சந்தையின் ஏதேனும் கடை அறையை மூடிவிட்டு நீங்கிச் செல்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய கடை அறையின்

மின்விளக்குகள், மின்விசிறிகள் மற்றும் பிற மின்சார உபகரணங்கள் அனைத்தையும் செயலிழக்கச் செய்விக்க வேண்டுமென்பதோடு ஏற்றிவைக்கப்பட்ட ஏதேனும் தீ மற்றும் தேங்காய் எண்ணெய் விளக்குகளை அணைக்க வேண்டியது குத்தகை பெறுநரின் கருமமாகும். ஆயினும் உணவு அல்லது பான வகைகளை நீண்ட காலம் பேணி பாதுகாப்பதற்காகப் பாவிக்கின்ற குளிர்சாதன பெட்டிகளோ மிகைக் குளிர்சாதனப் பெட்டிகளோ இதன் கீழ் உள்ளடக்கப்படலாகாது. அத்துடன் மேலும் பொதுச் சந்தையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய ஏதேனும் வகையிலான தீச்சுடரை ஏற்றிவைத்தலோ எரியச் செய்வித்தலோ அல்லது பொதுச் சந்தை வளவினுள்ளே எந்தவோர் இடத்திலும் பட்டாசுக் கொளுத்தலோ கொழுத்தச் செய்வித்தலோ எவராலேனும் புரியப்படலாகாது.

16. ஏதேனும் பொதுச் சந்தைக்கு வெளியில் உள்ள இடமொன்றில் இருக்கின்ற ஏதேனும் கழிவுப் பொருட்களை பொதுச் சந்தையில் பிறப்பிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் இடப்படுகின்ற ஏதேனும் கிடங்கில், பாத்திரத்தில் அல்லது தொட்டியில் எவரேனும் இடலாகாது.

17. பொதுச் சந்தையில் உள்ள ஒவ்வொரு மலசலகூடத்தையும் அலம்பகத்தையும் குறைந்த பட்சம் மூன்று நாட்களுக்கு ஒரு தடவை வீதம் கிருமிநாசினி பாவித்து கழுவிச் சுத்தம் செய்யவும் நீர் பாய்ந்தோட அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வடிகானையும் குறைந்த பட்சம் இரண்டு தடவைகள் வீதம் கழுவிச் சுத்தம் செய்யவும் ஏற்பாடு செய்ய வேண்டியது தலைவரது பணியாக அமைதல் வேண்டும்.

18. 2 வது துணைவிதியின் (24) வது பந்தியில் பணிக்கப்பட்டவாறு அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கிடங்கிலும், பாத்திரத்திலும் அல்லது தொட்டியிலும் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களைக் குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு ஒரு தடவை அல்லது அவசியமேற்படின் அதற்கு மேற்பட்ட தடவைகள் அங்கிருந்து அப்புறப்படுத்தச் செய்விப்பது தலைவரின் பணியாக அமைதல் வேண்டும். அத்துடன் மேற்படி கழிவுப் பொருட்களை அந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்தும்போது கழிவுப் பொருட்கள் ஏற்றப்பட்ட பாகத்தை முழுமையாக மூடப்பட்ட வாகனமொன்றில் எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்வித்தல் வேண்டும்.

19. மரக்கறி அல்லது பழங்களைக் கழுவும் பொருட்டு ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒன்று சேர்கின்ற மண், மணல் அல்லது வேறு பொருட்களைக் குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு ஒரு தடவை வீதம் அப்புறப்படுத்தவும் அவ்விடத்தில் நீர் பாய்ந்தோடுவதில் ஏற்படுகின்ற தடைகளை நீக்கவும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியதும் தலைவரின் பணியாக அமைதல் வேண்டும்.

20. பொதுச் சந்தையில் பொருத்தப்பட்டுள்ள தீயணைப்புக் கருவிகளின் இயக்கம் முறையாக நிலவுகின்றதாவென குறைந்த பட்சம் ஒரு தடவை வீதம் பரிசோதிக்க வேண்டியதும் செயலிழந்த தீயணைப்புக் கருவிகளுக்குப் பதிலாக புதிய கருவிகளைப் பொருத்தச் செய்விப்பதும் தலைவரின் பணியாக அமைதல் வேண்டும்.

21. பொதுச் சந்தையில்-

(அ) களஞ்சிய அறைகளில் உட்புறச் சுவர் தவிர்ந்த ஏனைய சுவர்கள், ஒவ்வொரு விற்பனை கொட்டிலினதும் சீமெந்தினால் சாந்து பூசப்பட்ட பகுதிகள் மற்றும் கல்வனைஸ் பண்ணப்பட்ட இரும்பினால் முழுநிறைவு செய்யப்பட்டுள்ள நிர்மாணிப்புக்கள் மற்றும் கடையறைகளின் உட்புற உட்கூரையைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளை குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப் பூச்சு பூசச் செய்விக்க வேண்டியது தலைவரது பணியாக அமைதல் வேண்டும்.

(ஆ) கடை அறைகளின் உட்புறச் சுவர் நீங்கலாக ஏனைய சுவர்கள், கடை அறைகளில் உள்ளே கல்வனைஸ் பண்ணப்பட்டு இரும்பினால் முழுநிறைவு செய்யப்பட்டுள்ள நிர்மாணிப்புகள் மற்றும் கடை அறைகளின் உட்கூரையை குறைந்த பட்சம் ஒரு வருடத்திற்கு ஒரு தடவை வர்ணப் பூச்சு பூச வேண்டியது மேற்படி கடை அறையின் குத்தகை பெறுநரது கடமையாக அமைதல் வேண்டும்.

22. பொதுச் சந்தையில் ஏதேனும் விற்பனைக் கொட்டிலொன்றைப் பாவிக்க அல்லது கையாள 27 வது துணைவிதியின் கீழ் அனுமதிச்சீட்டினைப் பெற்றுள்ள எவரேனுமொருவரினால் அத்தகைய டிக்கெற்றைக் கைமாற்றுதலோ அத்தகைய அனுமதிச்சீட்டு எந்த விற்பனைக் கொட்டிலுக்காக விநியோகிக்கப்பட்டுள்ளதோ அது தவிர்ந்த பிறிதொரு இடத்தில் வியாபாரம் செய்தலோ ஆகாதென்பதோடு, எவரேனுமாள் அவ்வாறு செயலாற்றியுள்ளாரென தலைவரோ அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரோ திருப்தியடைந்துள்ளவிடத்து அவரை உரிய இடத்தில் வியாபாரத்திற்காக ஆற்றுப்படுத்த அல்லது அன்றைய நாளில் வியாபார நடவடிக்கைகளிலிருந்து தடுத்து பொதுச் சந்தையிலிருந்து நீக்க அல்லது அவருக்கு விநியோகித்துள்ள அனுமதிச்சீட்டை செல்லுபடியற்றதாக்க தலைவரோ அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரோ அதிகாரமுடையவராக இருத்தல் வேண்டும்.

23. ஏதேனும் பொதுச் சந்தையில் கடை அறையினைக் குத்தகைக்கு எடுத்துள்ள எவரேனுமொருவராலோ ஏதேனும் விற்பனைக் கொட்டிலைப் பாவிக்க அல்லது கையாள்வதற்கான அனுமதிச்சீட்டினைப் பெற்றுள்ள எவரேனுமொருவராலோ தனது வியாபாரக் கருமங்களுக்காக ஒதுக்கிக்கொண்ட அத்தகைய கடை அறையின் அல்லது விற்பனைக் கொட்டிலின் இடத்தை அல்லது அதில் ஒரு பகுதியை ஏதேனும் பண்டங்கள் அல்லது பொருட்களை விற்பனை செய்யவோ வியாபாரத்திற்காகக் காட்சிப்படுத்தவோ அல்லது வேறு ஏதேனும் கருமத்திற்காக எவருக்குமே இடமளித்தலாகாது.

24. நகர சபையின் முன்கூட்டியே தீர்மானித்துக்கொள்ளப்பட்ட கருமத்திற்காக அதிகாரம் வழங்கப்பட்டிருந்தாலேயொழிய எவராலும் பொதுச் சந்தையின் ஏதேனும் கடை அறையின் நிர்மாணத் திட்டத்தை மாற்றியமைக்கின்ற அல்லது அத்திட்டத்திற்கு சேதம் விளைவிக்கின்ற வகையிலான எந்தவொரு நிர்மாணிப்பையோ அல்லது பொருத்துகையையோ அல்லது மாற்றத்தையோ அல்லது கூடு அமைத்தலையோ செய்தலாகாது.

25. நகர சபையின் முன்கூட்டியே தீர்மானித்துக்கொள்ளப்பட்ட கருமத்திற்காக அதிகாரம் வழங்கப்பட்டிருந்தாலேயொழிய எவராலும் பொதுச் சந்தையின் ஏதேனும் விற்பனைக் கொட்டிலின் நிர்மாணத் திட்டத்தை மாற்றியமைக்கின்ற அல்லது அத்திட்டத்திற்கு சேதம் விளைவிக்கின்ற வகையிலான எந்தவொரு நிர்மாணிப்பையோ அல்லது பொருத்துகையையோ அல்லது மாற்றத்தையோ செய்தலாகாதென்பதோடு பொதுச் சந்தைக்கு உள்ளே எங்கேனும் விற்பனைக் கொட்டிலை நிர்மாணித்தலோ கூடு அமைத்தலோ ஆகாது.

26. நகர சபையினால் பேணிவரப்படுகின்ற ஏதேனும் பொதுச் சந்தை திறந்து வைக்கப்பட வேண்டிய நாட்கள் மற்றும் நேரங்கள் காலத்திற்குக் காலம் நகர சபையினால் தீர்மானிக்கப்பட முடியும். நகர சபையினால் அவ்விதமாக தீர்மானிக்கப்பட்ட விதத்தில் பொதுச் சந்தை திறந்துவைக்கப்படுகின்ற நாட்கள் மற்றும் நேரங்கள் யாவை என்பதை மும்மொழியிலுமான அறிவித்தல் மூலமாக அல்லது அறிவித்தல் தெளிவாகப் புலப்படத்தக்க வகையில் பொதுச் சந்தைக்குள் பிரவேசிக்கின்ற வாயிலின் அருகில் காட்சிக்கு வைக்கச் செய்வித்தல் தலைவரின் பணியாக அமைதல் வேண்டும்.

27.(அ) பொதுச் சந்தையின் கடை அறைகளுக்கு வெளியில் உள்ள பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஏதேனும் விற்பனைக் கொட்டிலைப் பாவிக்க அல்லது கையாள வேண்டிய அவசியம் நிலவுகின்ற ஒவ்வொருவரும் இப்பிரிவின் துணைவிதிகளின் பணிப்புக்களின் கீழ் நகர சபையின் அதிகாரத்தின் பேரில் அல்லது அதன் கீழ் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிச்சீட்டு ஒன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியிலான பணிப்பின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிச்சீட்டு இங்கு முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாதிரிக்கு அமைவாக தயாரித்துக்கொள்ளப்படல் வேண்டும்.

28. 27 வது துணைவிதியின் பணிப்பின் கீழ் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிச் சீட்டினை வைத்திருப்பவர், அவரது ஊழியர் அல்லது முகவரொருவர் இருப்பின் அத்துடன் இப்பிரிவின் துணைவிதிகளின் பணிப்புக்களுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைந்தொழுகினாலேயன்றி, பொதுச் சந்தையின் கடை அறைகளைக் கொண்ட பகுதிக்கு வெளியில் அமைக்கப்பட்டுள்ள விற்பனைக் கொட்டிலொன்றைப் பாவித்தல் அல்லது கையாளல் ஆகாது.

29. 27 வது துணைவிதியின் பணிப்பின் கீழ் பொதுச் சந்தைக் கட்டிடத்தில் கடை அறைகளைக் கொண்ட பகுதிக்கு வெளியில் அமைக்கப்பட்டுள்ள விற்பனைக் கொட்டில்களுக்காக நகர சபைக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் இங்கு இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாய்ப்பாட்டுக்கமைய நகர சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற விதத்தில் நிர்ணயிக்கப்பட முடியும்.

இவ்விதமாக மேற்படி கட்டண வீதங்கள் நகர சபையினால் காலத்திற்குக் காலம் மாற்றியமைக்கப்படலாம் அல்லது திருத்தியமைக் கப்படலாம்.

30. இப்பிரிவின் துணைவிதிகளிலான பணிப்புகளின் கீழ் நகர சபையுடன் கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கையைச் செய்துள்ளவர், அவரது ஊழியர் அல்லது முகவரொருவர் இருப்பின் அத்துடன் இப்பிரிவின் துணைவிதிகளிலும் மேற்படி குத்தகை உடன்படிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைந்தொழுகினாலேயன்றி எவராலும் பொதுச் சந்தைக் கட்டிடத்தின் ஏதேனும் கடை அறையினைப் பாவித்தலோ கையாளலோ ஆகாது.

31.(அ) பொதுச் சந்தைக் கட்டிடத்தில் இறைச்சிக்கடை அல்லாத ஏதேனும் கடை அறையினை பாவிக்க அல்லது கையாள குத்தகை பெறுநரொருவரைத் தெரிவு செய்து மேற்படி கடை அறையினைத் தெரிவு செய்த குத்தகை பெறுநருக்கு குத்தகை வழங்கும் பணியை பகிரங்கமான கேள்விப் பத்திரம் கோரல் மூலமாக ஈடேற்ற வேண்டியது தலைவரின் கருமமாக அமைதல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழ் ஏதேனும் கடை அறையினைக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விப் பத்திரங்களைக் கோரும் போது அக்கடை அறைக்காகச் செலுத்த வேண்டிய மாதாந்த குத்தகையைத் தீர்மானித்தலானது பிரதான விலை மதிப்பீட்டாளரது மதிப்பீட்டுக்கு அமைவாக இடம்பெறல் வேண்டும்.

(இ) (அ) பிரிவின் கீழ் குத்தகை பெறுநரொருவரைத் தெரிவு செய்வதற்கான கேள்விப் பத்திரம் கோரப்பட வேண்டிய சந்தர்ப்பங்களாக-

(i) குத்தகை பெறுநரால் தனது சுயவிருப்பின் பேரில் குத்தகை உடன்படிக்கையை செல்லுபடியற்றதாக்கி உள்ளவிடத்து; அல்லது

(ii) இப்பிரிவின் துணைவிதிகளின் பணிப்புக்களை மீறுதல் அல்லது குத்தகை உடன்படிக்கையின் பணிப்புக்களை மீறியமை காரணமாக குத்தகை உடன்படிக்கை செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ள அல்லது செல்லுபடியற்றதாகி உள்ளதாக கருதப்படுகின்றவிடத்து; அல்லது

(iii) ஏதேனும் குத்தகை பெறுநரின் வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளை இல்லாத நிலையில் குத்தகை பெறுநர் மரணமடைந்தவிடத்து;

கருதப்பட வேண்டுமென்பதோடு, 35 வது துணைவிதியில் குறிப்பிட்ட பணிப்பின் பிரகாரம் எவரேனும் குத்தகை பெறுநரால் ஏதேனும் எதிர்வரும் ஆண்டுக்காக அத்தகைய குத்தகை உடன்படிக்கை புதுப்பிக்கப்படுவது மறுக்கப்பட்டிருப்பின் அல்லது அத்தகைய செல்லுபடியாகும் தன்மையை வேண்டுமென்றே தவிர்த்து இருந்தாலேயொழிய நகர சபையும் அத்தகைய குத்தகை பெறுநரும் இணங்கி கைச்சாத்திட்ட குத்தகை உடன்படிக்கை செல்லுபடியற்றதாகிவிட்டதாகக் கருதப்படலாகாது.

32. 31 வது துணைவிதியின் பணிப்புக்களின் கீழ் பகிரங்க கேள்விப் பத்திரக் கோரல் மூலமாக ஏதேனும் கடை அறையைப் பாவித்தல் அல்லது கையாளலின் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட குத்தகை பெறுநர் நகர சபையுடன் உடன்படிக்கைக்கு வருதல் வேண்டும்.

33. 31 வது துணைவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் இப்பிரிவின் துணைவிதிகள் வலுவுக்கு வருகின்ற திகதியாகும் போது நகர சபைக்குச் சொந்தமாக உள்ள ஏதேனும் பொதுச் சந்தையில் ஒவ்வொரு கடை அறை சம்பந்தமாகவும் நகர சபையுடன் இறுதியாக கைச்சாத்திட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை பெறுநர் அத்தகைய வலுவுக்கு வரும் தினத்தில் இருந்து அமுலாகக்கூடியவாறு 31 வது துணைவிதியின் கீழ் அத்தகைய கடை அறையைப் பாவிக்கவோ கையாளவோ தெரிவு செய்யப்பட்ட குத்தகை பெறுநராகக் கருதப்படுவது சட்டமுறையானதாகும். அத்துடன் தொடர்ந்தும் இந்த துணைவிதி ஏற்புடையதாகின்ற எவரேனும் குத்தகை பெறுநர் இப்பிரிவின் துணை விதிகள் வலுவுடையதாக வருகின்ற நாளில் இருந்து மூன்று மாத காலத்திற்குள் 32 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புகளுக்கு அமைவாக புதிய குத்தகை உடன்படிக்கைக்கு வருதல் வேண்டும்.

34.(அ) 32 மற்றும் 33 வது துணைவிதிகளின் பணிப்புக்களின் கீழ் நகர சபையுடன் கைச்சாத்திடப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை ஒரு வருட காலத்திற்காக மாத்திரம் வலுவுடையதாக இருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஒரு வருட காலம் நிறைவடைய ஒரு மாதத்திற்கு முன்னர் எதிர்வரும் ஆண்டுக்காக நகர சபையுடன் புதிய உடன்படிக்கையைச் செய்துகொண்ட பின்னர் மேலும் ஒரு வருட காலத்திற்காக மேற்படி கடை அறையின் குத்தகைக் காலத்தைச் செல்லுபடியானதாக்கிக் கொள்ளலாம். அவ்வண்ணமே ஏதேனும் தொடர்ச்சியான வருடத்திற்காக மேற்படி கடை அறையின் குத்தகைக் காலத்தை வருடந்தோறும் செல்லுபடியாக்கிக் கொண்டு அக்கடை அறையைப் பாவிக்கவோ கையாளவோ அத்தகைய குத்தகை பெறுநருக்கு உரிமை இருத்தல் வேண்டும்.

(ஆ) எவ்வாறாயினும் (அ) பந்தியின் கீழ் எவரேனும் குத்தகை பெறுநரினால் தொடரும் வருடத்திற்கான குத்தகைக் காலத்தை செல்லுபடியாக்கிக் கொண்டு அத்தகைய கடை அறையைப் பாவிக்கின்றமைக்காக அல்லது கையாளுவதற்காக அத்தகைய தொடரும் ஆண்டில் செலுத்த வேண்டிய மாதாந்த வாடகையை பிரதம விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுக்கிணங்க தீர்மானிக்க வேண்டியது தலைவரின் பணியாக அமைதல் வேண்டும்.

35. ஏதேனும் கடை அறையின் குத்தகைக் காலம் நிறைவடைகின்ற நாளில் இருந்து ஒரு மாத காலம் கழிவதற்கு முன்னராக 34 வது துணைவிதியின் கீழ் எதிர்வரும் ஆண்டுக்காக குத்தகைக் காலத்தை நீடித்திருத்தாலேயொழிய எவரேனும் குத்தகை பெறுநருக்கு பாவிக்க அல்லது கையாள வழங்கப்பட்டுள்ள அத்தகைய கடை அறையை அந்த மாதம் முடிவடைகின்ற திகதிக்குப் பின்னர் பாவிக்கவோ கையாளவோ உரிமை இருத்தல் ஆகாது.

36. பொதுச் சந்தையின் ஏதாவது கடை அறையை எவரேனும் கீழ்க் குத்தகைக்கு எடுத்தலாகாது. எவரேனுமொருவரால் ஏதேனும் கடை அறையை கீழ்க் குத்தகைக்கு எடுத்ததன் காரணமாக அத்தகைய கடை அறையின் குத்தகை பெறுநருடன் நகர சபை செய்துள்ள உடன்படிக்கை செல்லுபடியற்றதாக்கப்பட்டமை காரணமாகவும் அத்தகைய கடை அறை மீண்டும் நகர சபையினால் கையேற்கப்பட்டமை காரணமாகவும் அத்தகைய கீழ்க் குத்தகை பெறுநருக்கு விளைகின்ற ஏதேனும் நட்டம் அல்லது சேதம் அல்லது இழப்பு அத்தகைய குத்தகை பெறுநரையே சாரும் என்பதோடு நகர சபையோ தலைவரோ செயலாளரோ அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரோ அது தொடர்பான பொறுப்பு வகிக்க கடப்பாடு உள்ளவராக மாட்டார்.

37. நகர சபையினால் பேணிவரப்படுகின்ற ஏதேனும் பொதுச் சந்தையில் ஏதேனும் கடை அறையின் குத்தகை பெறுநரால் அத்தகைய கடை அறையை கீழ்க் குத்தகைக்கு விடுதலோ வாடகைக்கு விடுதலோ ஆகாதென்பதோடு, எவரேனும் குத்தகை பெறுநரால் அத்தகைய கடை அறை கீழ்க் குத்தகைக்கு விடப்பட்டோ, வாடகைக்கு விடப்பட்டோ உள்ளதாக அல்லது இப்பிரிவின் துணைவிதிகளின் பணிப்புக்களை அல்லது அத்தகைய கடை அறையைக் குத்தகைக்கு விடுவதுடன் தொடர்புடைய குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள பணிப்புக்களை மீறியுள்ளதாக திருப்தியுறக்கூடிய அளவுக்குப் போதுமான காரணங்கள் உள்ளதாக தலைவர் அபிப்பிராயப்படுமிடத்து சம்பந்தப்பட்ட குத்தகை பெறுநருக்கு அது பற்றி எழுத்து மூலமாக விடயங்களை அறிவித்து அத்தகைய கீழ்க் குத்தகைக்கு வழங்கப்பட்டமையை அல்லது வாடகைக்கு விடப்பட்டமையை முடிவுறுத்துமாறு அறிவிக்க வேண்டியது தலைவரது பணியாக அமைதல் வேண்டும்.

38. 37 வது துணைவிதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எந்தவோர் ஆளும் அத்தகைய அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள விடயங்களுக்கு எதிராக ஏதேனும் எதிர்ப்பினையோ எதிர்ப்புக்களையோ தெரிவிக்கும் அளவுக்கு தம்வசம் விடயங்கள் இருப்பின் அத்தகைய அறிவித்தலின் திகதியில் இருந்து 14 நாட்களுக்குள் அத்தகைய எதிர்ப்பு அல்லது எதிர்ப்புக்கள் தொடர்பில் தம்மால் சமர்ப்பிப்பதற்கு உள்ள காரணங்களை எழுத்து மூலமாகக் குறிப்பிட்டு தலைவருக்கு மேன்முறையீட்டினைச் சமர்ப்பிப்பதற்கான உரிமை அத்தகைய குத்தகை பெறுநருக்கு உண்டு . அத்துடன் அத்தகைய குத்தகை பெறுநரால் எழுத்தில் முன்வைக்கப்பட்ட எதிர்ப்பு அல்லது எதிர்ப்புக்களைப் உள்ளிட்ட விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தல் தலைவருக்கு கிடைத்த தினத்தில் இருந்து 14 நாட்களுக்குள் அத்தகைய எதிர்ப்பு அல்லது எதிர்ப்புக்கள் பற்றிய விசாரணையொன்றை நடாத்துதல் தலைவரின் பணியாக அமைதல் வேண்டும்.

39. 38 வது துணைவிதிகளுக்கிணங்க எதிர்ப்புக்கள் தொடர்பாக தலைவரால் நடாத்தப்படுகின்ற விசாரணையின் போது 37 வது துணைவிதியின் பணிப்புக்களின் பிரகாரம் தலைவரால் அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானவையென உறுதியாகியுள்ள சந்தர்ப்பத்தில் அல்லது அத்தகைய எதிர்ப்புக்கள் தொடர்பான விசாரணைத் திகதி வரை அத்தகைய கீழ்க் குத்தகைக்கு விடுதல் அல்லது வாடகைக்கு விடுதலை சரிசெய்ய குத்தகை பெறுநர் தவறியுள்ள சந்தர்ப்பத்தில் நகரசபையுடன் அத்தகைய குத்தகை பெறுநர் கைச்சாத்திட்டுள்ள குத்தகை உடன்படிக்கை செல்லுபடியற்றதாகியுள்ளதாக கருதப்படல் வேண்டுமென்பதோடு அத்தகைய எதிர்ப்பு தொடர்பான விசாரணை நடத்தப்பட்ட நாளில் இருந்து 7 நாட்களுக்குள் அத்தகைய கடை அறையினை நகர சபைக்கு கையேற்க வேண்டியது தலைவரின் பணியாக அமைதல் வேண்டும். அத்துடன் தொடர்ந்தும் மீளக் கையேற்கப்பட்ட ஏதேனும் கடை அறையை மீண்டும் குத்தகைக்கு கொடுப்பதற்காக தலைவரால் 31 வது துணை விதியின் பணிப்புக்கள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

40. 36 வது துணைவிதியில் இருந்து 39 வது துணைவிதி வரையான துணைவிதிகளில் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் கடை அறையொன்றின் குத்தகை பெறுநரின் கோரிக்கையின் பேரிலோ குத்தகை பெறுநர் இறக்குமிடத்தோ அத்தகைய குத்தகை பெறுநரின் வாழ்க்கைத்துணைக்கு அல்லது பிள்ளைக்கு அத்தகைய கடை அறையின் உரிமையைக் கையளிப்பதற்கு அத்தகைய துணைவிதிகளின் பணிப்புக்கள் தடையாக அமையலாகாது.

41.(அ) நகர சபையினால் பேணப்பட்டு வருகின்ற ஏதேனும் பொதுச் சந்தையில் கடை அறையொன்றை பாவிக்க அல்லது கையாளத் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குத்தகை பெறுநரும்,-

(i) குத்தகை பெறுநர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்ற தருணமாகின்ற போது நகர சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள பெறுமதியைக் கொண்டதும் மீளச் செலுத்தக்கூடியதுமான பிணை வைப்புத் தொகை;

(ii) 32 வது துணைவிதியின் அல்லது 33 வது துணைவிதியின் பணிப்பின் கீழ் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிட்ட மாதாந்த குத்தகை வாடகையைப் போல் மும்மடங்கிற்குச் சமமான வைப்புத் தொகை; நகர சபையில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட பணிப்புக்கள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டிருந்தாலேயொழிய எவருக்கேனும் நகர சபையினால் பேணிவரப்படுகின்ற ஏதேனும் பொதுச் சந்தையில் கடை அறையொன்றைப் பாவிக்கவோ கையாளவோ இடமளித்தல் ஆகாது.

(இ) 33 வது துணைவிதி ஏற்புடையதாகின்ற எவரேனும் குத்தகை பெறுநர் அத்தகைய துணைவிதியில் குறிப்பிட்டவாறு நகர சபையுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாளில் இருந்து ஆறு மாதங்கள் கழிவதற்கு முன்னர் (அ) பந்தியின் பணிப்புக்களைப் பூர்த்தி செய்திருந்தாலேயன்றி அத்தகைய ஆறு மாத காலம் தீர்ந்த பின்னர் அத்தகைய கடை அறையினைப் பாவித்தலோ கையாள்வதோ சட்டபூர்வமானதாக அமையாது.

42.(அ) பொதுச் சந்தையின் ஏதாவது கடை அறைக்காக குத்தகை பெறுநரால் நகர சபைக்கு செலுத்தப்பட வேண்டிய ஒவ்வொரு மாதத்திற்குமான குத்தகை வாடகை செலுத்தப்பட வேண்டிய திகதி அத்தகைய கடை அறையை குத்தகைக்கு கொடுத்ததுடன் தொடர்புடைய உடன்படிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிடப்படல் வேண்டுமென்பதோடு, அத்தேதியன்றோ அதற்கு முன்னராகவோ அத்தகைய குத்தகைப் பணத்தை நகர சபைக்குச் செலுத்த வேண்டியது குத்தகை பெறுநரது கருமமாகும்.

(ஆ) எவரேனும் குத்தகை பெறுநரால் (அ) பந்தியில் குறிப்பிட்டவாறு கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக்கிணங்க உடன்பட்ட தினத்திலோ அதற்கு முன்னரோ சம்பந்தப்பட்ட மாதாந்த குத்தகை வாடகையை நகர சபைக்கு செலுத்தத் தவறுகின்ற தருணத்தில் ஏற்புடைய மாதாந்த வாடகையின் நூற்றுக்குப் பத்து வீத தாமதக் கட்டணத்தைச் செலுத்த குத்தகை பெறுநர் கட்டுப்படுவதோடு அத்தகைய பணிப்பு சம்பந்தப்பட்ட உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

(இ) எவரேனும் குத்தகை பெறுநரால் நகர சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய மாதாந்த குத்தகை வாடகை செலுத்தப்படாமல் தவறவிடப்பட்டுள்ளவிடத்து அத்துடன் அத்தகைய நிலுவைக் குத்தகை வாடகை மூன்று மாதங்களை விஞ்சுகின்ற ஏதேனும் சந்தர்ப்பத்தில் இங்கு (ஈ) மற்றும் (உ) பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதி விளைவுகளையும் குறிப்பிட்டு அத்தகைய நிலுவைத் தொகையையும் (ஆ) பந்தியில் குறிப்பிட்ட தாமதக் கட்டணத்தையும் செலுத்துமாறு குத்தகை பெறுநருக்கு கடித வடிவிலான அறிவித்தலை ஒப்படைக்க வேண்டியது செயலாளரது பணியாக அமைதல் வேண்டும். அத்துடன் இந்த அறிவித்தலுக்கிணங்க நிலுவைக் குத்தகைப் பணத்தையும் தாமதக் கட்டணத்தையும் செலுத்துவதை தொடர்ந்தும் தவறவிடுவாரெனின் கடை அறைக்கு சீல் வைத்த பின்னர் அதிலுள்ள குத்தகை பெறுநருக்கு சொந்தமான எந்தவோர் ஆதனத்தையும் விற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பதையும் அவ்வாறு செயலாற்றப் போகின்ற எதிர்காலத் திகதி யாதென்பதையும் அத்தகைய அறிவித்தலில் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) (இ) பந்தியின் கீழான அறிவித்தல் கிடைத்த எவரேனும் குத்தகை பெறுநர் தனக்கு அவ்வறிவித்தல் கிடைத்த திகதியில் இருந்து ஏழு நாட்களுக்குள் அத்தகைய நிலுவைக் குத்தகைப் பணத்தையும் தாமதக் கட்டணத்தையும் செலுத்தத் தவறின் சம்பந்தப்பட்ட கடை அறைக்கு சீல் வைக்க வேண்டியது செயலாளரது பணியாக அமைதல் வேண்டும்.

(உ) (ஈ) பந்தியின் பணிப்புக்களின் கீழ் செயலாற்றி ஒரு நாள் கழிந்த பின்னரும் ஏழு நாட்கள் கழிவதற்கு முன்னராகவும் ஏற்புடைய குத்தகை பெறுநரோ அவரது கடித மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் முகவர் அந்த இடத்திற்கு வருகை தந்திருப்பின் அவரின் முன்னிலையிலும் குத்தகை பெறுநரோ அவரது முகவரோ வருகை தந்திராவிடின் நகர சபையின் வேறு ஏதேனும் உத்தியோகத்தர்கள் இருவர் முன்னிலையிலும் அத்தகைய கடை அறையின் கதவு அல்லது கதவுகளுக்கு பொறிக்கப்பட்ட சீலை உடைத்து கதவுகளைத் திறந்து அத்தகைய கடை அறையில் உள்ள குத்தகை பெறுநருக்குச் சொந்தமான ஏதேனும் ஆதனத்தை பகிரங்கமாக விற்பனை செய்து அத்தகைய நிலுவைக் குத்தகைப் பணம், நிலுவைக் கட்டணம் ஆகியவற்றுடன் கடை அறையினை சீல் வைக்கவும் குத்தகை பெறுநருக்குச் சொந்தமான ஏதேனும் ஆதனத்தை விற்பனை செய்யவும் செலவாகிய ஏதேனும் பணத்தொகையையும் அறவிட்டு நகர சபையின் நிதியத்திற்கு வரவு வைப்பதற்கான அதிகாரம் செயலாளருக்கு இருத்தல் வேண்டுமென்பதோடு அவ்வாறு செய்வது சட்டமுறையானதாகவும் அமையும்.

(ஊ) (ஈ) பந்தியிலும் (உ) பந்தியிலும் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், அத்தகைய பந்திகளில் குறிப்பிட்டவாறு செயலாற்றத் தயாராகும் ஏதேனும் சந்தர்ப்பத்திலோ அத்தகைய இரண்டு சந்தர்ப்பங்களுக்கிடையில் இடம் பெறுகின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய நிலுவைக் குத்தகைப் பணம், தாமதக் கட்டணம் மற்றும் அவ்வாறு செயலாற்ற முனைந்தமையால் அவ்வேளையாகும் போது நகர சபைக்கு உறப்பட நேர்ந்த ஏதேனும் பணத்தொகை இருப்பின் அப்பணத்தொகையையும் நகர சபைக்குச் செலுத்துவதன் மூலம் (ஈ) பந்தியில் அல்லது

(உ) பந்தியில் குறிப்பிட்டவாறு செயலாற்றுவதை நிறுத்துவதற்கு குத்தகை பெறுநருக்கு உரிமை இருத்தல் வேண்டுமென்பதோடு அத்தகைய பணத்தை முழுமையாக அறவிட்டுக் கொண்ட பின்னர் அவ்வாறு செயலாற்றுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டியது செயலாளரது பணியாக அமைதல் வேண்டும்.

(எ) இத்துணைவிதியின் (இ) பந்தியில் இருந்து (ஊ) பந்தி வரை ஏதேனும் பந்தியின் கீழ் அல்லது அவற்றின் ஒரு சிலவற்றின் கீழ் அல்லது அனைத்துப் பந்திகளின் கீழும் செயலாற்றியமை காரணமாக அத்தகைய கடை அறையை குத்தகைக்குக் கொடுத்தலுடன் தொடர்புடையதாக கைச்சாத்திட்ட உடன்படிக்கை செல்லுபடியற்றதாகுதல் இடம்பெற்றுள்ளதாகக் கருதுதலாகாது.

(ஏ) (எ) பந்தியில் எவ்வாறு குறிப்பிட்டிருப்பினும் எவரேனும் குத்தகை பெறுநரால் ஏதேனும் கடை அறையின் குத்தகைப் பணம் செலுத்துதலைத் தவறவிட்டுள்ளமை காரணமாக ஒரு வருடத்திற்குள் (ஈ) பந்தியில் பணிக்கப்பட்ட விதத்தில் அத்தகைய கடை அறைக்கு சீல் வைக்கப்படுகின்ற இரண்டு சந்தர்ப்பங்களுக்கு பிறகு தொடர்ந்தும் குத்தகைப் பணம் செலுத்துவதை தவறவிடுவாராயின், செயலாளரால் அதுபற்றி அத்தகைய குத்தகை பெறுநருக்கு கடித மூலமாக அறிவித்தல் விடுக்க வேண்டுமென்பதோடு, அத்தகைய அறிவித்தல் குத்தகை பெறுநருக்கு கிடைத்த தினத்தில் இருந்து நகர சபையுடன் அத்தகைய குத்தகை பெறுநரால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை செல்லுபடியற்ற தாதல் வேண்டும்.

**43.** பொதுச் சந்தைக்குள்ளே ஒவ்வொரு கடை அறையும் சார்பில் பெறப்பட்டுள்ள நீர் இணைப்பு மற்றும் மின்சார இணைப்பு மூலமாக எவரேனும் குத்தகை பெறுநரால் நுகரப்படுகின்ற நீர் அலகுகளின் எண்ணிக்கை மற்றும் மின்சார அலகுகளின் எண்ணிக்கைக்காக மாதாந்தம் செலுத்த வேண்டிய விலைச் சிட்டைகளின் செலவுகளை அத்தகைய குத்தகையாளர் ஏற்க வேண்டும்.

**44.** பொதுச் சந்தை வளவில் பொதுவான பாவனைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஏதேனும் மின்சுற்றில் இருந்தோ பொது நீர்வழிக்குழாய் வாயில் மூலமாகவோ, கடை அறைக்கான மின்சார இணைப்பையோ நீர்வளங்களையோ பெற்றுக்கொள்ளல் அல்லது அவ்வாறு பெற்றுக்கொள்ள இடமளித்தல் ஆகாது.

**45.** பொதுச் சந்தையின் கடை அறைகளைத் தவிர விற்பனைக் கொட்டில்களைப் பாவிக்க அல்லது கையாள வேண்டிய தேவை நிலவுகின்ற எவரேனும் ஆட்களுக்கு அனுமதிச் சீட்டுகளை விநியோகிக்கவும் அத்தகைய அனுமதிச் சீட்டுகளுக்கான பணத்தை அறவிடவும் செயலாளரிடமிருந்து அதிகாரம் பெற்ற எவரேனும் உத்தியோகத்தர் ஈடுபடுத்தப்பட முடியும். அத்துடன் எவரேனும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அத்தகைய அனுமதிச் சீட்டுகளை விநியோகிப்பதன் மூலமாக தினந்தோறும் சேகரிக்கப்படுகின்ற பணம் அன்றைய தினத்தின் பிற்பகல் 3.00 மணிக்கு முன்னராக நகர சபையின் பொது நிதியத்திற்கு வரவு வைக்கச் செய்வித்தல் அத்தகைய அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் பணியாக அமையும். ஏதேனும் தினமொன்றில் அத்தகைய அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் சேகரிக்கப்படுகின்ற பணம் நகர சபையின் பொது நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட பின்னர், பொதுச் சந்தையில் அனுமதிச்சீட்டு விற்பனை மூலமாக சேகரிக்கப்பட்ட பணமேதும் இருப்பின் அது தொடர்ந்துவரும் வேலைநாளில் நகர சபையின் பொது நிதியத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.

**46.** பொதுச் சந்தையின் கடை அறைகளைத் தவிர்ந்த விற்பனைக் கொட்டில்களைப் பாவிக்கவோ கையாளவோ ஆட்கள் எவருக்கேனும் அனுமதிச் சீட்டுகளை விநியோகித்தலும் அதற்காக பணம் சேகரித்தலும் தொடர்பில், 45 வது துணை விதியில் பணிக்கப்பட்டவாறு செயலாளரின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவர் ஈடுபடுத்தப்பட இயலாதெனின் அக்கருமத்தை பகிரங்க கேள்விப் பத்திரக் கோரல் மூலமாகத் தெரிவு செய்யப்படுகின்ற (இதனகத்துப் பின்னர் "கட்டணம் சேகரிப்பவர்" எனக் கூறப்படுகின்ற) ஆளிடம் ஒப்படைக்க நகர சபை தத்துவமுடைய தாயிருத்தல் வேண்டும்.

**47.** 46 வது துணைவிதியின் கீழ் தெரிவு செய்யப்படுகின்ற எவரேனும் கட்டணம் சேகரிப்பவருக்கு அத்தகைய கருமம் ஒப்படைக்கப்படுதல் ஒரு வருடத்திற்காக மாத்திரம் செல்லுபடியாதல் வேண்டுமென்பதோடு தொடரும் வருடத்திற்காக மீண்டும் கேள்விப் பத்திரக் கோரல் மூலமாக கட்டணம் சேகரிப்பவர் ஒருவர் தெரிவு செய்யப்படல் வேண்டும். ஆயினும் முந்திய வருடத்திற்காக தெரிவு செய்யப்பட்ட எவரேனும் கட்டணம் சேகரிப்பவருக்கு தொடரும் வருடத்திற்காக கேள்விப் பத்திர விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும் அத்தகைய கேள்விப் பத்திர விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள நகர சபை தீர்மானிக்குமேயானால் அவர் தொடரும் வருடத்திற்கான கட்டணம் சேகரிப்பவராக தெரிவு செய்யப்படவும் இத்துணைவிதிகளின் பணிப்புகளினூடாக தடுக்கப்பட்டுள்ளதாக கருதப்படல் ஆகாது.

**48.**(அ) 45 வது துணைவிதியின் பணிப்புகளின் கீழ் கட்டணம் சேகரிப்பவர் தெரிவு செய்யப்பட்டவிடத்து அவர்-

(i) அத்தகைய தெரிவு செய்யப்படுதலுக்கான கேள்விப் பத்திரம் கோரப்படுகின்ற தருணத்தில் நகர சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள பொறுமதியைக் கொண்டதும் மீளச் செலுத்தக்கூடியதுமான பிணை வைப்புத் தொகையை நகர சபையில் வைப்புச் செய்யவும்

(ii) அத்தகைய அனுமதிச்சீட்டு விநியோகித்தல் மற்றும் கட்டணம் சேகரித்தல் தொடர்பில் நகர சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ளவும்

(iii) (ii) வது பந்தியின் பணிப்பின் கீழ் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் இணங்கியுள்ள வருடாந்தக் கட்டணத்தின் மூன்றிலொன் றுக்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட வைப்புத் தொகையை நகர சபையில் வைப்புச் செய்யவும்; நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) (அ) பந்தியில் குறிப்பிட்டுள்ள பணிப்புக்களை அவ்வாறே பூர்த்தி செய்திருந்தாலேயொழிய எவரேனும் ஆளுக்கு நகர சபையினால் பேணிவரப்படுகின்ற ஏதேனும் பொதுச் சந்தையில் விற்பனைக் கொட்டிலைப் பாவிக்க அல்லது கையாள்வதற்காக ஆட்களுக்கு அனுமதிச்சீட்டுக்களை விநியோகிக்கவும் அத்தகைய அனுமதிப் பத்திரங்களுக்காக பணம் சேகரிக்கவும் இடமளித்தல் ஆகாது.

49. 29 வது துணைவிதியின் பணிப்புக்களின் கீழ் ஏதேனும் பொதுச் சந்தையில் விற்பனைக் கொட்டிலைப் பாவிக்கவோ கையாளவோ நகர சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டணத்தை விஞ்சிய அளவிலான கட்டணத்தை அல்லது கட்டணங்களை எந்தவொரு கட்டணம் சேகரிப்பவரும் அறவிடல் ஆகாது.

50. 48 வது துணைவிதியின் (அ) பந்தியின் (iii) வது உபபந்தியின் பணிப்புக்களுக்கிணங்க எவரேனும் கட்டணம் சேகரிப்பவருடன் கைச்சாத்திடப்படுகின்ற உடன்படிக்கையில்-

(அ) விற்பனைக் கொட்டிலைப் பாவித்தல் அல்லது கையாளல் தொடர்பாக அனுமதிச்சீட்டு விநியோகிக்கப்பட வேண்டிய விதம்;

(ஆ) அத்தகைய அனுமதிச்சீட்டுக்காக பணம் அறவிடப்படுகின்ற விதமும் உச்சப் பணத்தொகையும்;

(இ) கட்டணம் கேசரிப்பவரால் உடன்படிக்கை செய்துகொள்ளப்படுகின்ற வருடத்திற்காக நகர சபைக்கு செலுத்த வேண்டிய முழுப் பணத்தொகை;

(ஈ) அத்தகைய வருடாந்த பணத்தொகையை சமமான பன்னிரண்டு தவணைகளில் நகர சபைக்குச் செலுத்த வேண்டுமென்பதும் ஒரு தவணைப் பணத்தின் பெறுமதியும்;

(உ) ஒவ்வொரு மாதத்திற்காகவும் செலுத்த வேண்டிய பணத் தொகையை நகர சபைக்குச் செலுத்த வேண்டிய திகதி;

(ஊ) உரிய தினத்தில் மாதாந்த பணத்தொகையைச் செலுத்தத் தவறுமிடத்து அத்தகைய பணத்தொகையில் நூற்றுக்கு பத்து வீதத்திற்குச் சமமான தொகையை தாமதக் கட்டணமாக நகர சபைக்குச் செலுத்த கட்டணம் சேகரிப்பவர் கட்டுப்படுகிறார் என்பது;

(எ) நகர சபைக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை மூன்று மாதங்களுக்கு மேலாக செலுத்தத் தவறுமிடத்து 51 வது துணை விதியின் பணிப்புக்களுக்கிணங்க உடன்படிக்கையை இரத்துச் செய்யக் கட்டுப்படுவதாகவும் அத்தகைய உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டதாக செயலாளரிடமிருந்து கடித மூலமான அறிவித்தல் கிடைத்த தினத்தில் இருந்து அத்தகைய சந்தையில் விற்பனைக் கொட்டில்களைப் பாவிக்கவோ கையாளவோ ஆட்களுக்கு அனுமதிச்சீட்டுக்களை விநியோகிக்கவும் அத்தகைய அனுமதிச்சீட்டுகளுக்காக பணம் அறவிடுவதற்கும் கட்டணம் சேகரிப்பவருக்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரம் முடிவுறுத்தப்படுகின்றதென்பது;

உடன்பட்ட நிபந்தனைகளாக உள்ளடக்க வேண்டியது நகர சபையின் கருமமாகும்.

51.(அ) கட்டணம் சேகரிப்பவரால் நகர சபைக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ள மாதாந்தக் கட்டணத்தை செலுத்தாமல் தவறவிட்டுள்ள மற்றும் அத்தகைய நிலுவைக் கட்டணம் மூன்று மாதங்களுக்கான கட்டணத்தைவிட அதிகமாக உள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அத்தகைய நிலுவைப் பணத்தையும் தாமதக் கட்டணத்தையும் செலுத்துமாறு கட்டணம் சேகரிப்பவருக்கு கடிதமூலமான அறிவித்தலை ஒப்படைக்க வேண்டியது செயலாளரின் கருமமாக அமைதல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழான அறிவித்தல் கிடைத்த எவரேனும் கட்டணம் சேகரிப்பவரால் தனக்கு அந்த அறிவித்தல் கிடைத்த தினத்தில் இருந்து ஏழு நாட்களுக்குள் அத்தகைய நிலுவைப் பணத்தையும் தாமதக் கட்டணத்தையும் நகர சபைக்குச் செலுத்தத் தவறின், அத்தகைய அறிவித்தல் அவருக்கு கிடைத்த தினத்தில் இருந்து ஏழு நாட்கள் கழிந்த நாளில் இருந்து அத்தகைய கட்டணம் சேகரிப்பவருடன் நகர சபை கைச்சாத்திட்ட உடன்படிக்கை செல்லுபடியற்றதாக வேண்டுமென்பதோடு, அவ்வாறு செல்லுபடியற்றதாதல் சட்டமுறையானதாகும். அத்துடன் அத்தகைய உடன்படிக்கை செல்லுபடியற்றதென கருதப்படுகின்ற தினத்திலேயே அத்தகைய கட்டணம் சேகரிப்பவருக்கு அதுபற்றி கடிதமூலமாக அறிவிக்க வேண்டியது செயலாளரின் பணியாதல் வேண்டும்.

(இ) (ஆ) பந்தியின் பணிப்புக்களின் கீழ் ஏதேனும் உடன்படிக்கை செல்லுபடியற்றதான தினத்தின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய உடன்படிக்கையின் ஒரு கட்சிக்காரரான கட்டணம் சேகரிப்பவரால் அத்தகைய பொதுச் சந்தையில் விற்பனைக் கொட்டில்களைப் பாவிக்க அல்லது கையாள்வதற்காக எவரேனும் ஆளுக்கு அனுமதிச்சீட்டு விநியோகிக்கப்படுதலோ அத்தகைய அனுமதிச்சீட்டினை விநியோகித்தமைக்கான பணம் சேகரிக்கப்படுதலோ ஆகாது.

(ஈ) (ஆ) பந்தியின் பணிப்புக்களின் கீழ் ஏதேனும் உடன்படிக்கை செல்லுபடியற்றதான தினத்திற்குப் பின்னர் அடுத்துவருகின்ற தினத்தில் இருந்து அத்தகைய பொதுச் சந்தையில் விற்பனைக் கொட்டில்களைப் பாவிக்கவோ கையாள்வதற்காகவோ அனுமதிச்சீட்டுகளை விநியோகிக்கவும் அத்தகைய அனுமதிச்சீட்டுகளுக்காக பணம் சேகரிக்கவும் நகர சபையின் எவரேனும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரை ஈடுபடுத்த வேண்டியது செயலாளரது பணியாக அமைதல் வேண்டும். அத்துடன் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவரைக் கொண்டு அப்பணியைத் தொடர்ந்தும் மேற்கொள்ள இயலாதென்பது செயலாளரது அபிப்பிராயமாகுமிடத்து 46 வது துணைவிதியில் குறிப்பிட்ட பணிப்புகளுக்கிணங்க செயலாற்றும் பொருட்டு தனது அபிப்பிராயத்தை தலைவர் ஊடாக நகர சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்விதமான

செயலாளரது அபிப்பிராயம் நகர சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் 46 வது துணைவிதியின் பிரகாரம் செயலாற்ற வேண்டுமென நகர சபையினால் தீர்மானிக்கப்பட முடியும்.

(உ) (ஈ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் 46 வது துணைவிதிக்கு அமைவாக செயலாற்ற நகர சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில், அத்தகைய கேள்விப்பத்திர கோரல்களுக்கிணங்க கேள்விப்பத்திர விண்ணப்பமொன்றை சமர்ப்பிக்க செல்லுபடியற்றதாகியுள்ள உடன்படிக்கையின் ஒரு கட்சிக்காரரான கட்டணம் சேகரிக்கப்பவருக்கு உரிமை உருத்தல் வேண்டும்.

52. தலைவரால் அக்கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் எவ்வாண்டுக்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வாண்டின் டிசெம்பர் முப்பத்தோராம் திகதியில் முடிவுறுத்தப்படல் வேண்டும்.

53. அப்பிரிவின் துணைவிதியின் கீழ் விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் முன்கூட்டியே செல்லுபடியற்றதாக்கப்பட்டிருந்தாலேயொழிய அந்த அனுமதிப்பத்திரம் எவ்வாண்டுக்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வாண்டின் முப்பத்தோராம் திகதியில் முடிவுறுத்தப்படல் வேண்டும்.

54. 2 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட பொதுச் சந்தையுடன் தொடர்புடைய பணிப்புக்கள் அவ்வண்ணமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தாலேயொழிய தலைவரால் எந்தவொரு தனியார் சந்தைக்கும் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.

55. ஏதேனும் தனியார் சந்தையின் உள்ளே கடை அறைகளிலும் விற்பனைக் கொட்டிகளிலும் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற ஒவ்வோர் ஆளும் 57 வது துணைவிதியின் பணிப்புக்களுக்குக் கட்டப்பட்டதாக மாற்றங்கள் சகிதம் 2 வது துணைவிதியில் இருந்து 21 வது துணைவிதி வரையான துணைவிதிகளின் பணிப்புக்களைக் கடைப்பிடித்தல் வேண்டுமென்பதோடு அத்தகைய ஆட்களால் அப்பணிப்புகள் கடைப்பிடிக்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அத்தகைய சந்தையின் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாக அமைதலும் வேண்டும்.

56. 57 வது துணைவிதியின் பணிப்புக்களுக்குக் கட்டுப்பட்டதாக மாற்றங்கள் சகிதம் 2 வது துணைவிதியில் இருந்து 21 வது துணைவிதி வரையான துணைவிதிகளின் பணிப்புக்களைக் கடைப்பிடிக்க வேண்டியது ஒவ்வொரு தனியார் சந்தையினதும் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாக அமைதல் வேண்டும்.

57. ஏதேனும் தனியார் சந்தையுடன் தொடர்புடையதாக 55 வது துணைவிதியின் பணிகளுக்காக 2 வது துணைவிதியில் இருந்து 21 வது துணைவிதி வரையான துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள -

(அ) "பொதுச் சந்தை" என்பதற்குப் பதிலாக அத்தகைய தனியார் சந்தையும்;

(ஆ) "குத்தகை பெறுநர்" என்பதற்குப் பதிலாக அத்தகைய தனியார் சந்தையில் ஏதேனும் கடை அறையில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர் அல்லது அவரது முகவர் அல்லது அச்சந்தர்ப்பத்தில் கடை அறையின் நிருவாகத்திற்கும் பொறுப்பான எவரேனும் ஆளும்;

(இ) "தலைவர்" அல்லது "நகர சபை" என்பதற்குப் பதிலாக அத்தகைய தனியார் சந்தையின் அனுமதிப்பத்திரம் பெறுநர் எனக் கருதப்படல் வேண்டுமென்பதோடு, அவரது முகவர் அல்லது அச்சந்தர்ப்பத்தில் அத்தகைய தனியார் சந்தையில் அனுமதிப்பத்திரதாரரின் பணி அல்லது கடமைக்குப் பொறுப்பாக உள்ள எவரேனும் ஆளும்

எனக் கருதப்படல் வேண்டும்.

58. ஏதேனும் தனியார் சந்தை திறந்த வைக்கப்படுகின்ற நாட்களும் நேரங்களும் யாவையென மும்மொழிகளிலுமான அறிவித்தலோ அறிவித்தல்களோ தெளிவாகப் புலப்படக்கூடியவாறு அத்தகைய தனியார் சந்தைக்குள் பிரவேசிக்கும் வாயிலுக்கு அருகாமையில் காட்சிக்கு வைக்கச் செய்வித்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரது பணியாக அமைதல் வேண்டும்.

59. தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் பொதுச் சந்தையில் அல்லது தனியார் சந்தையில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள அல்லது காட்சிக்காக வைக்கப்பட்டுள்ள அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் உணவுப் பொருளின் மாதிரியொன்றை அதற்கான விலையைச் செலுத்திப் பெற்றுக்கொள்வது சட்டமுறையானதாக அமைய வேண்டுமென்பதோடு, எவரேனுமொருவரால் அத்தகைய கொள்வனவு மறுக்கப்படுதலோ அதற்குத் தடையேற்படுத்தலோ ஆகாது.

60. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசீலிக்க தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்குப் பரிசோதிப்பதற்காக, அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம் என்பதற்கு ஏதேனும் பொதுச் சொத்தை அல்லது தனியார் சந்தை, வியாபார நடவடிக்கைகளுக்காகத் திறந்து வைக்கப்படுகின்ற எந்தவொரு தருணமும் எனப் பொருள்படும்.

61. இப்பிரிவின் துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ள ஏதேனும் தனியார் சந்தை பேணிவரப்படுகின்ற இடம் 57 வது துணை விதியுடன் வாசிக்கப்படவேண்டிய 2 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பிற்கு அமைவாக நிலவுவது முடிவுற்றால் அல்லது இந்த துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுக்கு முரணாக அமையும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிடப்படுகின்ற தினமொன்றுக்கு முன்னராக அத்தகைய இடத்தை அப்பணிப்புக்கு அல்லது பணிப்புகளுக்கு அமைவான

நிலைமைக்குக் கொண்டுவருவதற்கு அவசியமான அனைத்தையும் ஈடேற்றுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்குப் பணிப்புரை விடுக்கின்ற அறிவித்தல் ஒன்றைத் தலைவர் அத்தகைய அனுமதிப்பத்திரம் பெறுநரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

62. 61 வது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தல் கிடைத்த எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநர் அத்தகைய அறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னராக அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ள விதத்தில் செயலாற்றுதல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் விடயங்களை எழுத்து மூலம் சமர்பித்துள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அத்தகைய அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்கான அதிகாரத்தை தலைவர் கொண்டிருத்தல் வேண்டும். ஆயினும், அவ்வாறு நீடிக்கப்படுகினற் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சுதல் ஆகாது.

63. 62 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலான அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநர் அத்தகைய அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னராக அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ள விதத்தில் செயலாற்றுவதைத் தவறவிட்டுள்ள தருணத்தில், அந்த இடத்திற்கான அனுமதிப்பத்திரத்தை தலைவர் செல்லுபடியற்றதாக்குவது சட்டமுறையானதாக அமைதல் வேண்டும்.

64. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,-

"வாழ்க்கைத்துணை'' என்பது, எவரேனும் குத்தகை பெறுநரின் மனைவி அல்லது கணவரையும் ;

''பொதுச் சந்தை'' என்பது, வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக அமைக்கப்பட்ட கடை அறை மற்றும் தத்தமது வீட்டுத் தோட்டத்திலோ வீட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற காய்கறிகள் அல்லது பழங்களையும் உள்ளடக்கிய வேறு பொருட்கள் அல்லது பண்டங்களை விற்பனை செய்வதற்கான இடங்களை ஏற்படுத்தியுள்ளதும் நகர சபையினால் நிர்மாணிக்கப்பட்டு பேணிவரப்படுகின்ற ஏதேனும் உற்பத்தியை மொத்தமாக கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்யப்படுகின்ற இடமும் அதில் உள்ளடக்கப்படல் வேண்டும்;

''தனியார் சந்தை'' என்பது, நகர சபை அல்லது வேறு எவரேனும் ஒருவராலோ ஆட்களின் குழுவினாலோ பொதுச் சந்தையின் பணிகளுக்கு ஒத்த பணியை அல்லது பணிகளை நடத்தி வருகின்ற இடம் எனக் கருதப்படல் வேண்டும்;

''பிரதம விலைமதிப்பீட்டாளர்'' என்பது, விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதம விலை மதிப்பீட்டாளர் எனக் கருதப்படுவதோடு, நகர சபை அடங்குகின்ற நிர்வாக மாவட்டத்திற்காக அத்தகைய திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தரும் அதில் உள்ளடங்க வேண்டும்.

''குத்தகை பெறுநர்'' என்பது, நகர சபையுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை சகிதம் ஏதேனும் பொதுச் சந்தையில் ஏதேனும் கடை அறையினைப் பேணிவருகின்ற ஆள் எனக் கருதப்படல் வேண்டும்.

''விற்பனைக் கொட்டில்'' என்பது, ஏதேனும் சந்தையில் கடை அறைகளிலிருந்து பிரிக்கப்பட்டதும் அத்தகைய பொதுச் சந்தைக்குள்ளே அன்றாடம் வியாபாரத்தை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ளதுமான ஏதேனும் வாங்கு அல்லது தட்டு அல்லது பெட்டி கருதப்படுவதோடு அத்தகைய பொதுச் சந்தையில் தரையின் மீது கோடுகளால் குறியீடு அடையாளமிடப்படுவதன் மூலமாக வியாபார நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனும் இடமும் அதில் உள்ளடங்க வேண்டும்.

## முதலாவது அட்டவணை

27 வது துணைவிதியின் (ஆ) பந்தி

(அடிச்சீட்டுப் புத்தகமாகத் தயாரிக்கப்படல் வேண்டும்)

### ... ... நகர சபை ... ... ... ... ... ... பொதுச் சந்தை
### விற்பனைக் கொட்டிலைப் பாவித்தல் அல்லது கையாளல்
### தொடர்பான அனுமதிச்சீட்டு

அனுமதிச்சீட்டு உரிமையாளரின் பெயர்: ...............................................
தேசிய அடையாள அட்டை இலக்கம்: ...............................................
ஒதுக்கப்பட்ட விற்பனைக் கொட்டிலின் /கோடுகள் வரையப்பட்ட பகுதியின் இல.: ...............................................
ஒதுக்கப்பட்ட காலம்: 20............. திகதி
முதல் 20 ................ திகதி வரை
ஒதுக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை: 01 நாள்/ 07 நாட்கள்/ 01 மாதம;*
அறவிடப்பட்ட கட்டணம் : ரூபா ...............................................
விநியோகித்த திகதி: ...............................................

...........................................
கட்டணம் சேகரிப்பவரின் கையொப்பம்

* - தேவையற்ற சொற்களை வெட்டிவிடுக.

***இரண்டாவது அட்டவணை***

*29 வது துணைவிதி*

**பொதுச் சந்தையொன்றில் விற்பனைக் கொட்டிலைப் பாவித்தல் அல்லது கையாளல் தொடர்பாக அறவிடப்படுகின்ற கட்டண வாய்ப்பாடு**

| *விற்பனைக் கொட்டிலின் தன்மை* | *ஒரு நாளுக்கான கட்டணம் ரூ.* | *07 நாட்களுக்கான கட்டணம் ரூ.* | *ஒரு மாதத்திற்கான கட்டணம் ரூ.* |
|---|---|---|---|
| நிலத்திற்கு மேலாக அமைக்கப்பட்ட விற்பனைக் கொட்டில் | .................... | ........................ | ................... |
| நிலத்தின் மீது கோடு அடையாளம் இட்டு பிரிக்கப்பட்ட பகுதி | .................... | ........................ | ................... |

***பாகம் XXVI***

**விளையாட்டு மைதானங்கள் பற்றிய துணைவிதிகள்**

1. இப்பகுதியின் துணை விதிகள் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் பொது விளையாட்டு மைதானங்களை ஒழுங்குமுறைப் படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் விளையாட்டு மைதானத்தைப் பாவிப்பதற்கான அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளக் கருதியுள்ள எந்தவோர் ஆளும் இப்பகுதியின் துணைவிதிகளின் முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைய தயாரித்த விண்ணப்பப் பத்திரமொன்றைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

3. 2 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டவாறான விண்ணப்பப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்கின்ற எவரேனும் ஆளுக்கு நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் விளையாட்டு மைதானமொன்றைப் பாவிப்பதற்கான அனுமதிப்பத்திரமொன்றை விநியோகிக்கையில் இங்கு கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்தாலேயொழிய தலைவரால் அனுமதிப்பத்திரமொன்று விநியோகிக்கப்படலாகாது:

(அ) விளையாட்டு மைதானத்தைப் பாவனைக்கு எடுப்பதற்கான அனுமதிப் பத்திரமொன்றைக் கோருவதற்கான ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரமும் நகர சபை அலுவலகத்திற்கு கிடைத்த வரிசைக் கிரமத்திற்கிணங்க பரிசீலனை செய்யப்படல் வேண்டும். இருந்த போதிலும் விளையாட்டு மைதானத்தைப் பாவனைக்கு எடுப்பதற்காக கிடைக்கின்ற விண்ணப்பப் பத்திரங்கள் மத்தியில் ஏதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டுடன் தொடர்புடைய ஏதேனும் விடயம் சம்பந்தமானதாக அமைகின்ற விண்ணப்பப்பத்திரத்திற்கு ஆகக்கூடிய முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்

(ஆ) இதில் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாதிரிக் கட்டண வாய்ப்பாட்டுக்கிணங்க நகர சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறான விதத்தில் விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொள்வதற்கான கட்டணத்தையும் வைப்புப் பணத்தொகையையும் செலுத்திய பின்னர் மாத்திரம் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படல் வேண்டும்.

4. பாவனைக்காக விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொள்ள விண்ணப்பப்பத்திரமொன்றைச் சமர்ப்பித்தலை, அத்தகைய ஒதுக்கிக்கொள்ளலை எதிர்பார்த்துள்ள திகதிக்கு குறைந்த பட்சம் மூன்று நாட்களுக்கு முன்னராக செய்துகொள்ளல் வேண்டும். எவரேனும் ஆளினால் விடுக்கப்படுகின்ற வேண்டுகோள், விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொள்ளத் தேவையான தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னராக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதோடு, அத்தகைய வேண்டுகோளுக்கிணங்க செய்யப்படுகின்ற ஒதுக்கிக்கொள்ளலானது 5 வது துணை விதியின் ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டதாக அமைதல் வேண்டும்.

5. இப்பகுதியின் துணைவிதிகளிலான ஏற்பாடுகளின் கீழ் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட ஏதேனும் விளையாட்டு மைதானத்தில், அத்தகைய ஒதுக்கிக்கொள்ளலை இரத்துச் செய்வித்துக்கொள்ள வேண்டிய தேவை ஏதேனும் விண்ணப்பதாரிக்கு தோன்றிய சந்தர்ப்பத்தில் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டதாக தலைவரால் இடமளிக்க முடியும்:-

(அ) ஒதுக்கிக்கொள்ளலை இரத்துச் செய்வதற்கான கோரிக்கை விடுக்கப்படுவது, விளையாட்டு மைதானம் ஒதுக்கப்பட்ட திகதிக்கு,-

(i) மூன்று மாதங்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு ஐந்து;

(ii) இரண்டு மாதங்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு பத்து;

(iii) ஒரு மாதத்திற்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு பதினைந்து;

(iv) பதினைந்து நாட்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு இருபத்தைந்து;

(v) ஏழு நாட்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு ஐம்பது;

(vi) மூன்று நாட்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு எழுபத்தைந்து;

வீதத்தையும் நகர சபை நிதியத்தில் பிடித்து வைக்கக் கட்டுப்படல் வேண்டும்.

(ஆ) ஒதுக்கிக் கொள்ளலை இரத்துச் செய்வதற்கான கோரிக்கை விடுக்கப்படுவது, விளையாட்டு மைதானம் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட திகதிக்கு மூன்று நாட்களை விடக் குறைவான காலப்பகுதியாயின் செலுத்திய கட்டணம் மீளச் செலுத்தப்படலாகாது.

(இ) ஏதேனும் ஒதுக்கிக் கொள்ளல் இரத்துச் செய்துகொள்ளப்பட்டவிடத்து அத்தகைய ஒதுக்கிக் கொள்ளலுக்காக செலுத்தப்பட்ட வைப்புத் தொகையை முழுமையாகப் பெற்றுக்கொள்ள விண்ணப்பதாரிக்கு உரிமை இருத்தல் வேண்டும்.

(ஈ) எவரேனும் ஆளொருவரால் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட விளையாட்டு மைதானம் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட கருமத்துக்காகவன்றி வேறு ஏதேனும் கருமத்திற்காக பாவிக்கப்படலாகாது.

(உ) விளையாட்டு மைதானமொன்றை ஒதுக்கிக் கொள்வதற்காக விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை எக்காரணத்தின் நிமித்தமும் பிறிதோர் ஆளுக்கு சாட்டுதல் செய்தலாகாது.

6. எவரேனும் ஆளொருவரால் விளையாட்டு மைதானமொன்றை ஒதுக்கிக் கொள்ளும் பொருட்டு விடுக்கப்படுகின்ற கோரிக்கைக்கு இடமளிக்காத சந்தர்ப்பத்தில், அவ்வாறு இடமளிக்காமைக்கு ஏதுவான காரணங்களைக் குறிப்பிட்டு அது பற்றி விண்ணப்பப்பத்திரத்தைச் சமர்ப்பித்த தினத்திலேயே அத்தகைய விண்ணப்பதாரிக்கு அறிவிக்க வேண்டியது தலைவரின் பணியாகும்.

7. ஏதேனும் கருமத்திற்காக ஒதுக்கிக் கொள்ளப்பட்ட விளையாட்டு மைதானத்தின் அவ்வாறு ஒதுக்கிக் கொண்ட திகதிகளை மாற்றிக்கொள்ளத் தேவையாயின், விண்ணப்பதாரியால் அது பற்றிய எழுத்து மூலமான கோரிக்கையொன்றைத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய கோரிக்கைக்கிணங்க ஒதுக்கப்பட்ட திகதியை திருத்திக் கொள்ளலானது 3 மற்றும் 4 வது துணைவிதிகளின் பணிப்புகளுக்கு கட்டுப்பட்டதாக அமைதல் வேண்டும்.

8. இப்பகுதியின் துணைவிதிகளில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க விளையாட்டு மைதானம் ஏதேனும் கருமத்திற்காக ஒதுக்கப்பட்டிராத ஏதேனும் சந்தர்ப்பத்தில் அத்தகைய விளையாட்டு மைதானத்தை விளையாடுவதற்காகவோ விளையாட்டுப் பயிற்சிப் பணிகளுக்காகவோ ஈடுபடுத்த இடமளிப்பது தலைவரின் பணியாக அமைதல் வேண்டும்.

9. ஏதேனும் கருமத்திற்காக ஒதுக்கப்பட்ட விளையாட்டு மைதானமொன்று ஏற்புடைய கருமத்திற்காக பாவிக்கப்பட்ட பின்னர் நகர சபையில் வைப்புச் செய்யப்பட்ட வைப்புத் தொகையிலிருந்து,-

(அ) விளையாட்டு மைதானம் அல்லது அதில் ஏதேனும் பகுதிக்கு ஏற்பட்டுள்ள ஏதேனும் நட்டம் இருப்பின் அத்தகைய நட்டத்தின் பெறுமதியும் ;

(ஆ) விளையாட்டு மைதானம் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட கால எல்லையை விட மேலதிகமாக ஈடுபடுத்தப்பட்ட காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணமும்;

கழிக்கப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள ஏதேனும் பணத்தொகையை மாத்திரம் விண்ணப்பதாரிக்கு மீளச் செலுத்தப்படலாம்.

10. எவரேனும் ஆளினால் நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் விளையாட்டு மைதானத்திற்கு சேதம் விளைவித்தலோ அவ்வாறு சேதமடைய இடமளித்தலோ ஆகாது. அத்துடன் விளையாட்டு மைதானத்தில் மாடுகள், ஆடுகள், பன்றிகள், குதிரைகள், மட்டக்குதிரைகள், கோவேறு கழுதைகள் அல்லது நாய்கள் அனுமதிக்கப்படலாகாது. அத்துடன் தொடர்ந்தும், தலைவரிடமிருந்து பெறப்பட்ட அனுமதியின்றி எந்தவொரு வாகனமும் எந்தவொரு மைதானத்திற்குள்ளேயும் அனுமதிக்கப்படலாகாது.

11. இப்பகுதியின் துணைவிதியின் கீழ் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட ஏதேனும் விளையாட்டு மைதானம் அவ்வாறு ஒதுக்கிக்கொள்ளப்பட்ட தினத்தில் நகர சபையின் ஏதேனும் அத்தியாவசியக் கருமத்திற்காக அவசியமாகுமிடத்து அத்தகைய ஒதுக்கிக்கொள்ளலை இரத்துச் செய்ய தலைவர் அதிகாரமுடையவராக இருத்தல் வேண்டும். ஆயினும், அத்தகைய இரத்துச் செய்தல் மேற்கொள்ளப்படின் அத்தகைய இரத்துச் செய்தலானது விளையாட்டு மைதானம் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னராக விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்படல் வேண்டுமென்பதோடு, அவரால் செலுத்தப்பட்ட கட்டணமும் வைப்புத் தொகையும் முழுமையாகவே அவருக்கு மீளச் செலுத்தப்படல் வேண்டும். மேலும், அத்தகைய இரத்துச் செய்தலை ஒதுக்கிக்கொள்ளப்பட்ட திகதிக்கு முன்னர் மூன்று நாட்களை விடக் குறைவான காலப்பகுதிக்குள் செய்தலாகாது.

12. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயன்றி இப்பகுதியின் துணைவிதிகளில்,-

"விளையாட்டு மைதானம்" என்பது, விளையாடுவதற்காக நகர சபையினால், ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட ஏதேனும் விளையாட்டு மைதானம் எனக் கருதப்படுவதோடு விளையாட்டு மைதானத்தைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்டுள்ள மதில் அல்லது வேலி

அல்லது அதற்குள்ளே நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏதேனும் கட்டிடம் அல்லது அத்தகைய ஏதேனும் நிர்மாணிப்பின் பகுதி அல்லது ஏதேனும் பொருத்தி அல்லது உபகரணமும் அதில் உள்ளடங்குதல் வேண்டும்.

"விளையாட்டு" என்பது, 1973 இன் 25 ஆம் இலக்கமுடைய விளையாட்டுத்துறை சட்டத்தில் அதற்கு கொடுக்கப்பட்டுள்ள அர்த்தமாகவே கருதப்படல் வேண்டும்.

**முதலாவது அட்டவணை**

2 வது துணைவிதி

**.......... நகர சபையின் ...... விளையாட்டு மைதானத்தைப் பாவிக்க அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரம்**

01. விண்ணப்பதாரியின் பெயர்:- ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
முகவரி:- ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
தேசிய அடையாள அட்டை இல.:- ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

02. விளையாட்டு மைதானத்தைக் கோருவதற்கான காரணம்:- ... ... ... ... ... ... ... ... ... ... ...

03. தேவைப்படுகின்ற திகதியும் நேரமும்:
திகதியில் இருந்து ... ... ... ... திகதி வரை ................. நேரம் : ... ... ... ...

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். இக்கோரிக்கைக்கிணங்க சம்பந்தப்பட்ட விளையாட்டு மைதானம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டால் அந்த விளையாட்டு மைதானத்தின் கட்டிடத்திற்கு, நிர்மாணிப்புகளுக்கு, உபகரணங்களுக்கு மற்றும் பொருத்திகளுக்கு ஏதேனும் சேதமேற்பட்டால் அந்த நட்டத்தை வைப்புத் தொகையிலிருந்து நகர சபை கழித்துக்கொள்ள உடன்படுவதோடு அத்தகைய வைப்புத் தொகை மேற்படி அறவிடலுக்குப் போதுமானதாக அமையாவிட்டால் மேலும் தேவையான பணத்தொகையை நகர சபைக்குச் செலுத்தவும் உடன்படுகின்றேன். அத்துடன் விளையாட்டு மைதானங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை செய்தல் பற்றிய துணைவிதிகளின் ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்கவும் உடன்படுகிறேன்.

... ... ... ... ... ... ... ... ... ... ...
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி:- ... ... ... ... ... ...

**இரண்டாவது அட்டவணை**

3 வது துணைவிதியின் (ஆ) பந்தி

**விளையாட்டு மைதானமொன்றைப் பாவிப்பதற்கு இடமளிக்க அறவிடப்படுகின்ற கட்டண வாய்ப்பாடு**

| | விளையாட்டு மைதானத்தின் பெயர் | கட்டணம் | வைப்புத் தொகை | மேலதிக மணித்தியாலம் ஒன்றுக்கான கட்டணம் |
|---|---|---|---|---|
| | | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் |
| (1) | | ................... | ....................... | .................. |
| (2) | | ................... | ....................... | .................. |
| (3) | | ................... | ....................... | .................. |
| (4) | | ................... | ....................... | .................. |

**பாகம் XXVII**

**சனசமூக நிலையங்கள் பற்றிய துணைவிதிகள்**

1. இப்பகுதியின் துணை விதிகள் நகர சபையினால் பேணி வரப்படுகின்ற சனசமூக நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. நகர சபையினால் பேணி வரப்படுகின்ற ஏதேனும் சனசமூக நிலையங்களைப் பாவிப்பதற்கான அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளக் கருதியுள்ள எந்தவோர் ஆளும் இப்பகுதியின் துணைவிதிகளின் முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைய தயாரித்த விண்ணப்பப்பத்திரமொன்றைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

3. 2 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டவாறான விண்ணப்பப்பத்திரமொன்றைச் சமர்ப்பிக்கின்ற எவரேனும் ஆளுக்கு நகர சபையினால் பேணி வரப்படுகின்ற ஏதேனும் சனசமூக நிலையமொன்றைப் பாவிப்பதற்கான அனுமதிப் பத்திரமொன்றை விநியோகிக்கையில் இங்கு கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்தாலேயொழிய தலைவரால் அனுமதிப் பத்திரமொன்று விநியோகிக்கப்படலாகாது:-

(அ) சனசமூக நிலையமொன்றைப் பாவனைக்கு எடுப்பதற்கான அனுமதிப் பத்திரமொன்றைக் கோருவதற்கான ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரமும் நகர சபை அலுவலகத்திற்கு கிடைத்த வரிசைக் கிரமத்திற்கிணங்க பரிசீலனை செய்யப்படல் வேண்டும். இருந்த போதிலும் சனசமூக நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தின் ஏதாவது சிவில் அமைப்பொன்றின் கூட்டத்திற்கோ அல்லது அத்தகைய அமைப்பினால் நடத்தப்படுகின்ற பொதுக் கருமத்திற்கோ முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

(ஆ) இதில் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாதிரிக் கட்டண வாய்ப்பாட்டுக்கிணங்க நகர சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறான விதத்திலான சனசமூக நிலையத்தை ஒதுக்கிக் கொள்வதற்கான கட்டணத்தையும் வைப்புப் பணத்தொகையையும் செலுத்திய பின்னர் மாத்திரம் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் வேண்டும்.

(இ) (ஆ) பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், சனசமூக நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தின் ஏதாவது சிவில் அமைப்பின் கூட்டத்திற்காகவோ அத்தகைய அமைப்பினால் நடத்தப்படுகின்ற பொதுக் கருமத்திற்காகவோ எவ்விதமான கட்டணமும் அறவிடப்படலாகாது.

4. பாவனைக்காக சனசமூக நிலையத்தை ஒதுக்கிக் கொள்ள விண்ணப்பப்பத்திரமொன்றைச் சமர்ப்பித்தலை, அத்தகைய ஒதுக்கிக்கொள்ளலை எதிர்பார்த்துள்ள திகதிக்கு குறைந்த பட்சம் மூன்று நாட்களுக்கு முன்னராக செய்துகொள்ளல் வேண்டும். ஆயினும், நகர சபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் வசித்துக்கொண்டிருந்த எவரேனும் ஆளினதோ அத்தகைய ஆளினது உறவினரதோ பூதவுடல் வைக்கப்படுவதற்காக சனசமூக நிலையத்தை ஒதுக்கிக்கொள்ள விடுக்கப்படுகின்ற கோரிக்கைக்கு இந்த வரையறை ஏற்புடையதாகாது. எவரேனும் ஆளினால் விடுக்கப்படுகின்ற வேண்டுகோள், சனசமூக நிலையத்தை ஒதுக்கிக் கொள்ளத் தேவையான தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னராக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதோடு, அத்தகைய வேண்டுகோளுக்கிணங்க செய்யப்படுகின்ற ஒதுக்கிக்கொள்ளலானது 5 வது துணை விதியின் ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டதாக அமைதல் வேண்டும்.

5. இப்பகுதியின் துணைவிதிகளிலான ஏற்பாடுகளின் கீழ் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட ஏதேனும் சனசமூக நிலையத்தில், அத்தகைய ஒதுக்கிக்கொள்ளலை இரத்துச் செய்வித்துக்கொள்ள வேண்டிய தேவை ஏதேனும் விண்ணப்பதாரிக்கு தோன்றிய சந்தர்ப்பத்தில் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டதாக தலைவரால் இடமளிக்க முடியும்:-

(அ) ஒதுக்கிக்கொள்ளலை இரத்துச் செய்வதற்கான கோரிக்கை விடுக்கப்படுவது, சனசமூக நிலையம் ஒதுக்கப்பட்ட திகதிக்கு-

(i) மூன்று மாதங்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு ஐந்து;

(ii) இரண்டு மாதங்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு பத்து;

(iii) ஒரு மாதத்திற்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு பதினைந்து;

(iv) பதினைந்து நாட்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு இருபத்தைந்து;

(v) ஏழு நாட்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு ஐம்பது;

(vi) மூன்று நாட்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு எழுபத்தைந்து;

வீதத்தையும் நகர சபை நிதியத்தில் பிடித்து வைக்கக் கட்டுப்படல் வேண்டும்.

(ஆ) ஒதுக்கிக் கொள்ளலை இரத்துச் செய்வதற்கான கோரிக்கை விடுக்கப்படுவது, சனசமூக நிலையம் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட திகதிக்கு மூன்று நாட்களை விடக் குறைவான காலப்பகுதியாயின் செலுத்திய கட்டணம் மீளச் செலுத்தப்படலாகாது.

(இ) ஏதேனும் ஒதுக்கிக் கொள்ளல் இரத்துச் செய்துகொள்ளப்பட்டவிடத்து அத்தகைய ஒதுக்கிக் கொள்ளலுக்காக செலுத்தப்பட்ட வைப்புத் தொகையை முழுமையாகப் பெற்றுக்கொள்ள விண்ணப்பதாரிக்கு உரிமை இருத்தல் வேண்டும்.

(ஈ) எவரேனும் ஆளொருவரால் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட சனசமூக நிலையம் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட கருமத்துக்காகவன்றி வேறு ஏதேனும் கருமத்திற்காக பாவிக்கப்படலாகாது.

(உ) சனசமூக நிலையமொன்றை ஒதுக்கிக் கொள்வதற்காக விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை எக்காரணத்தின் நிமித்தமும் பிறிதோர் ஆளுக்கு சாட்டுதல் செய்தலாகாது.

6. எவரேனும் ஆளொருவரால் சனசமூக நிலையமொன்றை ஒதுக்கிக் கொள்ளும் பொருட்டு விடுக்கப்படுகின்ற கோரிக்கைக்கு இடமளிக்காத சந்தர்ப்பத்தில், அவ்வாறு இடமளிக்காமைக்கு ஏதுவான காரணங்களைக் குறிப்பிட்டு அது பற்றி விண்ணப்பப் பத்திரத்தைச் சமர்ப்பித்த தினத்திலேயே அத்தகைய விண்ணப்பதாரிக்கு அறிவிக்க வேண்டியது தலைவரின் பணியாகும்.

7. ஏதேனும் கருமத்திற்காக ஒதுக்கிக் கொள்ளப்பட்ட சனசமூக நிலையத்தின் அவ்வாறு ஒதுக்கிக் கொண்ட திகதிளை மாற்றிக்கொள்ளத் தேவையாயின், விண்ணப்பதாரி அது பற்றிய எழுத்து மூலமான கோரிக்கையொன்றைத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.அத்தகைய கோரிக்கைக்கிணங்க ஒதுக்கப்பட்ட திகதியை திருத்திக் கொள்ளலானது 3 மற்றும் 4 வது துணைவிதிகளின் பணிப்புகளுக்கு கட்டுப்பட்டதாக அமைதல் வேண்டும்.

8. ஏதேனும் கருமத்திற்காக ஒதுக்கப்பட்ட சனசமூக நிலையமொன்று ஏற்புடையகருமத்திற்காக பாவிக்கப்பட்ட பின்னர் நகர சபையில் வைப்புச் செய்யப்பட்ட வைப்புத் தொகையிலிருந்து-

(அ) சனசமூக நிலையம் அல்லது அதில் ஏதேனும் பகுதிக்கு ஏற்பட்டுள்ள ஏதேனும் நட்டம் இருப்பின் அத்தகைய நட்டத்தின் பெறுமதியும்;

(ஆ) சனசமூக நிலையம் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட கால எல்லையை விட மேலதிகமாக ஈடுபடுத்தப்பட்ட காலப்பகுதிக்காக அறவிடப் பட வேண்டிய கட்டணமும்;

கழிக்கப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள ஏதேனும் பணத்தொகையை மாத்திரம் விண்ணப்பாதாரிக்கு மீளச் செலுத்தப்படலாம்.

9. எவரேனும் ஆளினால் நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் சனசமூக நிலையத்திற்கு சேதம் விளைவித்தலோ அவ்வாறு சேதமடைய இடமளித்தலோ ஆகாது. சனசமூக நிலையத்தில் புகைபிடித்தல், மதுபானம் அருந்துதல், சூதாட்டத்தில் ஈடுபடல் அல்லது ஏதேனும் துர்நடத்தையில் ஈடுபடலாகாது.

10. இப்பகுதியின் துணைவிதியின் கீழ் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட ஏதேனும் சனசமூக நிலையம் அவ்வாறு ஒதுக்கிக்கொள்ளப்பட்ட தினத்தில் நகர சபையின் ஏதேனும் அத்தியாவசியக் கருமத்திற்காக அவசியமாகுமிடத்து அத்தகைய ஒதுக்கிக்கொள்ளலை இரத்துச் செய்ய தலைவர் அதிகாரமுடையவராக இருத்தல் வேண்டும். ஆயினும், அத்தகைய இரத்துச் செய்தல் மேற்கொள்ளப்படின் அத்தகைய இரத்துச் செய்தலானது சனசமூக நிலையம் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னராக விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்படல் வேண்டுமென்பதோடு, அவரால் செலுத்தப்பட்ட கட்டணமும் வைப்புத் தொகையும் முழுமையாகவே அவருக்கு மீளச் செலுத்தப் படல் வேண்டும். மேலும், அத்தகைய இரத்துச் செய்தலை ஒதுக்கிக்கொள்ளப்பட்ட திகதிக்கு முன்னர் மூன்று நாட்களை விடக் குறைவான காலப்பகுதிக்குள் செய்தலாகாது.

11. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயன்றி இப்பகுதியின் துணைவிதிகளில்,-

''பொதுக் கருமம்'' என்பது, நகர சபைப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் பொது நன்மைக்காக அல்லது தேவையின் நிமித்தம் ஏதேனும் சிவில் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்படுகின்ற ஏதேனும் கூட்டம், கலந்துரையாடல், மருந்துவப் பிணியாய்வு (கிளினிக்), உதவி வழங்கும் பணி, அத்தகைய தன்மை கொண்ட ஏதேனும் கருமம் அல்லது சமூக அல்லது சமயப் பணியாகக் கருதப்படுவதோடு ஏதேனும் வணிகத் தகமையுடைய கருமம் அதில் உள்ளடக்கப்படலாகாது.

''சனசமூக நிலையம்'' என்பது, நகர சபையினால் பேணிவரப்படுகின்ற நகர சபைப் பிரதேசத்திற்குள் வசிக்கின்ற மக்களின் பொதுப் பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனும் காணி அல்லது வளவு கருதப்படுவதோடு, அவற்றைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள மதில், வேலி அல்லது அதற்குள்ளே காணப்படுகின்ற ஏதேனும் கட்டிடம் அல்லது ஏதேனும் நிர்மாணிப்பின் பகுதி அல்லது பொருத்தி அல்லது உபகரணங்களும் அதில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

''சிவில் அமைப்பு'' என்பது, நகர சபைப் பிரதேசத்தில் வசிக்கின்ற மக்களின் பங்கேற்புடன் தாபிக்கப் பெற்றுள்ள ஏதேனும் தொண்டர் அமைப்பு என கருதப்படுவதோடு, நகர சபைப் பிரதேசத்தில் வசிக்கின்ற மக்களின் நன்மை அல்லது மேம்பாட்டுக்காக நகர சபைப் பிரதேசத்திற்கு வெளியில் நிறுவப்பட்டுள்ள வேறேதேனும் தொண்டர் அமைப்பும் அதில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

**முதலாவது அட்டவணை**

2 வது துணைவிதி

**............ நகர சபையின் ............ சனசமூக நிலையத்தைப் பாவிக்க அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரம்**

(1) விண்ணப்பதாரியின் பெயர்:- ...............................................................
முகவரி:- ...............................................................
தேசிய அடையாள அட்டை இல.:- ...............................................................

(2) சனசமூக நிலையத்தைக் கோருவதற்கான காரணம்:- ...............................................................

(3) தேவைப்படுகின்ற திகதியும் நேரமும் :

| திகதியில் இருந்து | திகதி வரை | நேரம் |
|---|---|---|
| ........................................ | ........................................ | .................................................. |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். இக்கோரிக்கைக்கிணங்க சம்பந்தப்பட்ட சனசமூக நிலையம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டால் அந்த சனசமூக நிலையத்தின் கட்டிடத்திற்கு, நிர்மாணிப்புகளுக்கு, உபகரணங்களுக்கு மற்றும் பொருத்திகளுக்கு ஏதேனும் சேதமேற்பட்டால் அந்த நட்டத்தை வைப்புத் தொகையிலிருந்து நகர சபை கழித்துக்கொள்ள உடன்படுவதோடு அத்தகைய வைப்புத் தொகை மேற்படி அறவிடலுக்குப் போதுமானதாக அமையாவிட்டால் மேலும் தேவையான பணத்தொகையை நகர சபைக்குச் செலுத்தவும் உடன்படுகின்றேன். அத்துடன் சனசமூக நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை செய்தல் பற்றிய துணைவிதிகளின் ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்கவும் உடன்படுகிறேன்.

................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி:- ................................................................

**இரண்டாவது அட்டவணை**

3 வது துணைவிதிகள் (ஆ) பந்தி

**சனசமூக நிலையமொன்றைப் பாவிப்பதற்கு இடமளிக்க அறவிடப்படுகின்ற கட்டண வாய்ப்பாடு**

| | சனசமூக நிலையத்தின் பெயர் | கட்டணம் | வைப்புத் தொகை | மேலதிக மணித்தியாலம் ஒன்றுக்கான கட்டணம் |
|---|---|---|---|---|
| | | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் |
| 01. | | .................... | ........................ | ................... |
| 02. | | .................... | ........................ | ................... |
| 03. | | .................... | ........................ | ................... |
| 04. | | .................... | ........................ | ................... |

## பாகம் XXVIII

### விளம்பர அறிவித்தல்கள் பற்றிய துணைவிதிகள்

இப்பகுதியின் துணைவிதிகள் நகர சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் விளம்பர அறிவித்தல்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. நகர சபை பிரதேசத்தில் விளம்பர அறிவித்தல்களை காட்சிக்கு வைப்பதற்காக இடமளிக்கப்படும் பிரதேசங்கள் எவையென நகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும். விளம்பர அறிவித்தல்களை காட்சிக்கு வைக்கும் பொருட்டு இடமளிக்கப்படும் பிரதேசங்கள் பற்றி காலத்திற்குக் காலம் நகர சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் பற்றிய அறிவித்தலை வர்த்தமானியில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது தவிசாளரின் பணியாக அமைவதோடு அத்தகைய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியாகிய தினத்திலிருந்தோ அதில் திட்டவட்டமாக காட்டப்பட்டுள்ள ஏதேனும் எதிர்வரும் தினத்திலிருந்தோ நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

3.(அ) 2 வது துணைவிதியின் கீழ் நகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஏதேனும் பிரதேசத்தில் நகர சபைக்குச் சொந்தமான காணியிலோ நகர சபையினால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கிணங்க பெறப்படுகின்ற வேறு எவரேனும் ஆளுக்குச் சொந்தமான காணியிலோ விளம்பர அறிவித்தல்களைக் காட்சிக்கு வைக்கத்தக்க காட்சிப் பலகைகளை அமைத்துப் பேணிவருவதற்கான அதிகாரம் நகர சபைக்கு இருத்தல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழ் நகர சபையினால் அமைக்கப்பட்டுள்ள ஏதேனும் காட்சிப் பலகையில் விளம்பர அறிவித்தலொன்றை காட்சிக்கு வைப்பதற்காக நகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறான கட்டணத்தைக் காட்சிக்கு வைப்பவர்களிடமிருந்து அறவிடுவதற்கான அதிகாரத்தை நகர சபை கொண்டிருத்தல் வேண்டும்.

4. (அ) தலைவரால் அக்கருமத்திற்காக இங்கு முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைய தயாரித்த / விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று இருந்தாலேயொழிய எவரேனும் ஆளினால் நகர சபைப் பிரதேசத்தில் பகிரங்க இடங்களிலிருந்து பார்க்கும் போது புலப்படக்கூடியதாக எந்தவொரு விளம்பர அறிவித்தலையும் காட்சிப்படுத்துதலோ காட்சிக்கு வைக்கச் செய்வித்தலோ ஆகாது.

(ஆ) காட்சிக்கு வைப்பதற்கான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்த போதிலும் ஏதேனும் விளம்பர அறிவித்தல் பகிரங்க இடமொன்றில் இருந்து பார்க்கும்போது புலப்படக்கூடியவாறு ஏற்புடைய அனுமதிப்பத்திரத்தில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள இடமொன்றில் அல்லது இடங்களைத் தவிர வேறு எந்த இடத்திலும் காட்சிக்கு வைக்கப்படுவதோ அவ்வாறு வைக்கச் செய்வித்தலோ ஆகாது.

5. இப்பகுதியின் துணைவிதிகளின் கீழ் விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி அவ்வனுமதிப்பத்திரத்தில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் செல்லுபடியானதாதல் வேண்டும்.

6. ஏதேனும் விளம்பர அறிவித்தலொன்றை காட்சிக்கு வைப்பதற்கான அனுமதிப்பத்திரம் தேவைப்படுகின்ற ஒவ்வோர் ஆளினாலும் குறைந்த பட்சம் அத்தகைய அறிவித்தலை காட்சிக்கு வைக்கக் கருதுகின்ற தினத்திற்கு 2 வேலை நாட்களுக்கு முன்னராக இங்கு காட்டப்பட்டுள்ள இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாகத் தயாரித்த விண்ணப்பப் பத்திரமொன்று தலைவரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. இத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்ட பணிப்புக்களை அவ்வண்ணமே விண்ணப்பதாரி பூர்த்திசெய்திருந்தாலேயொழிய தலைவர் எவ்விதமான விளம்பர அறிவித்தலையும் காட்சிக்கு வைப்பதற்கான அனுமதிப்பத்திரமொன்றை விநியோகித்தல் ஆகாது -

(அ) 2 வது துணைவிதியில் குறிப்பிட்டவாறு நகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்ட வலயத்தைச் சேர்ந்த இடமொன்றில் காட்சிக்கு வைப்பதற்கான கோரிக்கையாக அமைதல் வேண்டும் ;

(ஆ) அறிவித்தலை காட்சிக்கு வைக்க கோருகின்ற இடத்திற்காக பிறிதொருவருக்கு முன்னர் விநியோகித்த அனுமதிப்பத்திரமொன்றின் செல்லுபடியாகும் காலவரையறை நிறைவடைந்திருத்தல் வேண்டும்; ஆயினும், முன்னர் விநியோகிக்கப்பட்ட அத்துடன் தொடர்ந்தும் செல்லுபடியாகின்ற அனுமதிப்பத்திரத்தின் கீழ் காட்சிக்கு வைக்கப்படுகின்ற ஏதேனும் அறிவித்தல் பலகையில் குறிப்பிடப்பட்ட அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட தடையேற்படாத வண்ணம் அதற்கு அருகில் அறிவித்தல் பலகையொன்றை காட்சிக்கு வைப்பதற்கான அனுமதிப்பத்திரமொன்றை விநியோகிக்க அந்த ஏற்பாடு தடையாக அமைதல் ஆகாது;

(இ) காட்சிக்கு வைப்பதற்கான அனுமதிப்பத்திரம் கோரப்பட்டுள்ள அறிவித்தல் ஆபாசமான அல்லது அருவருக்கத்தக்க அல்லது பண்பற்ற அல்லது ஏதேனும் கலாசாரத்திற்குப் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற அல்லது சமயத்திற்கோ இனப்பிரிவுக்கோ அல்லது இனக்கூட்டத்திற்கோ பாதிப்பினை ஏற்படுத்துகின்ற அல்லது அத்தகைய நிலைமை ஏற்படக்கூடிய வகையிலான காட்சியோ பதங்களோ உள்ளடக்கப்படுகின்ற வகையிலான அறிவித்தலாக அமைதல் ஆகாது;

(ஈ) 3 வது துணைவிதியின் கீழ் நகர சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள காட்சிப் பலகையொன்றில் காட்சிக்கு வைக்க அனுமதிப் பத்திரமொன்று கோரப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அத்தகைய காட்சிப் பலகையில் அந்த விளம்பர அறிவித்தலைக் காட்சிக்கு வைக்கப் போதியளவு இடவசதி இருக்க வேண்டுமென்பதோடு, அத்தருணமாகும் வேளையிலும் முன்னர் விநியோகிக்கப்பட்ட ஏதேனும் அனுமதிப் பத்திரத்தின் கீழ் காட்சிப்படுத்தப்படுகின்ற விளம்பர அறிவித்தலுக்காக ஒதுக்கப்பட்ட காலப்பகுதி நிறைவடைத்திருத்தலும் வேண்டும்;

(உ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தடைவிதிக்கப்பட்டுள்ள அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வகையிலான விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைத்தல் இடம்பெறல் ஆகாது;

(ஊ) அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்ளும் பொருட்டு சமர்ப்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரமும் 210 மி.மீற்றர் X 297 மி.மீற்றர் அளவிலான கடதாசியில் 1:1000 அளவுத்திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்ட அறிவித்தல் மாதிரியுடனும் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தக் கருதியுள்ள இடத்தின் அல்லது இடங்களின் 210 மி.மீற்றர் X 297 மி.மீற்றர் அளவிலான கடதாசியில் 1:1000 அளவுத்திட்டத்தில் வரையப்பட்ட திட்டவரைபடமும் / திட்டவரைபடங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பது, விளம்பர அறிவித்தலின் உண்மையான நீளமும் அகலமும் அதில் குறிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்;

(எ) விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்படுகின்ற இடங்கள்,-

(i) நகர சபையினால் 3 வது துணைவிதியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட காட்சிப் பலகையாக அமையுமிடத்து அக்காட்சிப் பலகையில் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்காக அத்துணைவிதியின் (ஆ) பந்தியின் கீழ் தீர்மானிக்கப் பட்டுள்ள கட்டணத்தை நகர சபைக்கு செலுத்தியிருத்தல் வேண்டும் ; இன்றேல்,

(ii) விண்ணப்பதாரி அல்லாத வேறு ஆளுக்கோ ஏதேனும் அதிகாரசபைக்கோ சொந்தமான இடமாக அமையுமிடத்து அந்த ஆளினால் அல்லது அதிகாரசபையினால் அத்தகைய விளம்பர அறிவித்தலை அந்த இடத்தில் காட்சிப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துகின்ற எழுத்திலான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8. விளம்பர அறிவித்தலுக்கு அருகில் பயணஞ் செய்கின்ற எவரேனும் ஆளுக்கோ வாகனத்திற்கோ இடையூறு அல்லது விபத்து ஏற்படக்கூடிய வண்ணம் எவரேனும் ஆளினால் ஏதேனும் விளம்பர அறிவித்தல் பொருத்தப்படலாகாது. அத்துடன் வாகனத்தைச் செலுத்துகின்ற எவரேனும் சாரதியின் கவனத்தை திசைதிருப்புகின்ற வகையிலோ அவரது புலக்காட்சிக்கு தடையேற்படுத்துகின்ற வகையில் மின்சார ஒளிக்கீற்றுகளை பொருத்தவோ உறிஞ்சியொளிரச் செய்வித்தலோ ஆகாது.

9. சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விண்ணப்பப் பத்திரத்திற்காக இப்பகுதியிலான துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றை விநியோகிக்க அவசியமான பணிப்புகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளவிடத்து, அது பற்றி தலைவரோ அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரோ விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் வேண்டும். விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் கிடைத்த பின்னர் அவரால் 10 வது துணைவிதியில் குறிப்பிட்டுள்ளவாறு அனுமதிப்பத்திரக் கட்டணமும் 11 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட பிணைப்பணமும் செலுத்தப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை விநியோகிப்பது தலைவரின் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் பணியாக அமைதல் வேண்டும்.

10.(அ) இப்பகுதியிலான துணைவிகளின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்தினதும் அடிப்படையில் நகர சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய அனுமதிப் பத்திரக் கட்டணமானது அத்தகைய அனுமதிப்பத்திரத்திற்காக அறவிடப்படுகின்ற கட்டணம் 255 வது அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 164 வது பிரிவின் (2) வது உட்பிரிவின் I நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்தக் கட்டணத்தையும் அதற்கு நேரொத்த II வது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள உச்சக் கட்ணத்தையும் விஞ்சாத வகையிலான கட்டணமாக அமைதல் வேண்டுமென்பதோடு, நகர சபையினால் அத்தகைய கட்டணம் வருடந்தோறும் விதிக்கப்படல் வேண்டும்.

(ஆ) இப்பிரிவின் துணைவிதிகளின் கீழ் விநியோகிக்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரமொன்று முன்கூட்டியே செல்லுபடியற்ற தாக்கப்பட்டாலொழிய அத்தகைய அனுமதிப்பத்திரம் எவ்வருடத்தில் விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைதல் வேண்டும்.

(இ) ஏதேனும் விளம்பர அறிவித்தலின் காட்சிக்காக விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் காலம் நிறைவடைந்த பின்னர் தொடரும் வருடத்திலும் அத்தகைய விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்த அவசியமாகின்ற வேளையில் அத்தகைய தொடரும் வருடத்திலும் அத்தகைய விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்தவதற்காக புதிய அனுமதிப்பத்திரமொன்று பெறப்படல் வேண்டும். ஆயினும், விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்காக விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்திற்காக தொடரும் வருடத்தில் அறவிட நகர சபை அங்கீகரித்துள்ள அனுமதிப் பத்திரக் கட்டணம் எதுவாயிருப்பினும் அத்தகைய விளம்பர அறிவித்தலின் காட்சிப்படுத்துதலுக்காக விநியோகிக்கப் படுகின்ற புதிய அனுமதிப்பத்திரத்திற்கு முன்னர் அங்கீகரித்த அனுமதிப் பத்திரக் கட்டணமே ஏற்புடையதாதல் வேண்டும்.

(ஈ) (அ) பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் நகர சபையினால் விதிக்கப்படுகின்ற வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் பற்றிய அறிவித்தலை வர்த்தமானிப் பத்திரிகையில் அறிவிக்க வேண்டியது தலைவரின் பணியாதல் வேண்டும்.

(உ) இத்துணைவிதியில் எது குறிப்பிடப்பட்டிருப்பினும் ஏதேனும் சமயப் பணி அல்லது பண அறவீடு இன்றி நடத்தப்படுகின்ற கலாசாரப் பணி தொடர்பான விளம்பர அறிவித்தல் அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் இருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். ஆயினும், அத்தகைய பிரச்சார அறிவித்தலுக்காக இப்பகுதியின் துணைவிதிகளின் ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே ஏற்புடையதாதல் வேண்டும்.

11.(அ) விளம்பர அறிவித்தலொன்றை காட்சிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஏதேனும் விண்ணப்பப் பத்திரத்திற்காக அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ள வேளையில் பிணைத் தொகை விண்ணப்பதாரியால் நகர சபையில் வைப்புச் செய்யப்படும் வரை தலைவரால் அத்தகைய விண்ணப்பப் பத்திரத்திற்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படலாகாது.

(ஆ) ஏதேனும் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை விநியோகிக்க முன்னர் நகர சபையில் வைப்புச் செய்ய வேண்டிய பிணைத் தொகை பற்றி நகர சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானத்தை வர்த்தமானியில் அறிவிக்க வேண்டியது தலைவரது பணியாதல் வேண்டும்.

12. காட்சிப்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு அறிவித்தலுக்காகவும் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்தின் இலக்கம் அந்த அறிவித்தலில் அல்லது அறிவித்தலைக் காட்சிப்படுத்த முன்னர் ஒவ்வோர் அறிவித்தலிலும், வலது பக்க கீழ் மூலையில் குறிப்பிட வேண்டியது அனுமதிப் பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

13. (அ) ஏதேனும் விளம்பர அறிவித்தலைப் பொருத்துவதற்காக பாவிக்கப்படுகின்ற ஏதேனும் வகையைச் சேர்ந்த காட்சிப் பலகை, தாங்கி, நிர்மாணிப்பு அல்லது பொருத்தி, சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் அல்லது எவரேனும் ஆளுக்கோ அல்லது எவரேனும் ஆளின் ஆதனத்திற்கோ ஆபத்து விளைவிக்கக்கூடிய அல்லது சேதமேற்படுத்தக்கூடிய வகையில் நிலவுகின்ற வேளையில் அதனைத் திட்டவட்டமான காலப்பகுதிக்குள் இயல்பு நிலைக்கு கொண்டுவருமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற அறிவித்தல் மூலமாக பணிப்புரை விடுக்க தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்

(ஆ) (அ) பந்தியின் கீழான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்ற எவரேனும் ஆள் அத்தகைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட காலப் பகுதிக்குள் அவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள பணிப்புக்களுக்கு அமைவாக செயலாற்றுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில்

தலைவராலோ அதிகாரம் பெற்ற உத்தியோகத்தராலோ அத்தகைய விளம்பர அறிவித்தலுக்காக விநியோகித்த அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல் அல்லது அவ்விளம்பர அறிவித்தலைக் கழற்றி அகற்றுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(இ) (ஆ) பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்துள்ள வேளையில் அத்தகைய விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக நகர சபையில் வைப்புச் செய்துள்ள பிணைத் தொகை நகர சபைக்குரியதாக அமைதல் வேண்டுமென்பதோடு அப்பிணைத் தொகையைக் கோரி நிற்க வேறு எந்த ஆளுக்கும் உரிமை இருத்தல் ஆகாது.

14. காட்சிக்காக செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்று காட்சிப்படுத்துகின்ற ஏதேனும் அறிவித்தலுக்கு இடம்பெறுகின்ற சேதம், விகாரப்படுத்துதல் அல்லது அகற்றுதல் சம்பந்தமாக நகர சபை எவ்வகையிலான வகைப்பொறுப்பிற்கும் கட்டுப்படலாகாது.

15. இப்பகுதியின் துணைவிதிகளில் ஏதேனும் பணிப்பு மீறப்பட்டுள்ள வேளையில் அத்தகைய மீறல் தொடர்பாக கவனஞ் செலுத்துகின்ற அறிவித்தலுடன் விநியோகிக்கப்பட்ட ஏதேனும் அனுமதிப் பத்திரத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் தலைவருக்கோ அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கோ இருத்தல் வேண்டும்.

16. ஏதேனும் விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக இப்பகுதியின் துணைவிதிகளின் கீழ் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் அத்தகைய விளம்பர அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அர்த்தத்தை அல்லது வெளிப்பாட்டினைச் சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்ட சட்டபூர்வமான அனுமதி அடங்கியுள்ளதாக கருதப்படலாகாதென்பதோடு அவ்வாறு பொருள் கொள்ளலும் ஆகாது.

17. ஏதேனும் விளம்பர அறிவித்தலை நிர்மாணிக்கும் பொருட்டு பாவிக்கப்பட்ட எவ்விதமான நிர்மாணத் தாங்கியோ, பொருத்தியோ, அதற்காகப் பாவிக்கப்பட்ட வேறு ஏதேனும் பொருள் காரணமாகவோ அத்தகைய விளம்பர அறிவித்தலின் வெளிப்படுத்தப்பட்ட அர்த்தம் அல்லது உணரப்படுகின்ற வேறு அர்த்தம் காரணமாகவோ ஏதேனும் தரப்பினருக்கு நேரிடுகின்ற அல்லது நேரிடக்கூடிய ஏதேனும் நட்டம் அல்லது சேதம் சம்பந்தமாக அனுமதிப் பத்திரம் பெறுநர் பொறுப்பு வகிக்க கட்டுப்படல் வேண்டும்.

18. இப்பகுதியிலான துணைவிதிகளின் கீழ் அனுமதிப் பத்திரமொன்றை பெற்றுக்கொள்ள சமர்ப்பித்த விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துகின்ற இறுதித் திகதிக்குப் பின்னர் நாற்பத்தெட்டு மணித்தியாலங்கள் கழிவதற்கு முன்னர் அத்தகைய விளம்பர அறிவித்தலையும் அதற்காக பாவிக்கப்பட்ட வேறு சகலவிதமான பொருட்களின் பாகங்களையும் அந்த இடத்திலிருந்தோ இடங்களிலிருந்தோ அகற்றச் செய்விக்க வேண்டியது அனுமதிப் பத்திரம் பெறுநரது பணியாதல் வேண்டும்.

19.(அ) 18 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயலாற்றியதன் பின்னர் தலைவருக்கு எழுத்து மூலமாக விடுக்கப்படுகின்ற கோரிக்கையின் பேரில் சம்பந்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை விநியோகிக்க முன்னர் நகர சபையில் வைப்புச் செய்யப்பட்ட வைப்புத் தொகையை அனுமதிப் பத்திரம் பெறுநரால் மீளப்பெற இயலும்.

(ஆ) (அ) பந்தியில் குறிப்பிட்டவாறு எழுத்திலான கோரிக்கை கிடைத்த பின்னர் அத்தகைய வைப்புத் தொகையை அனுமதிப் பத்திரம் பெறுநருக்கு விடுவிக்க முன்னர்-

(i) 18 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட பணிப்புகள் அனுமதிப்பத்திரம் பெறுநரால் முறையாக ஈடேற்றப்பட்டுள்ளதா என்பதையும்

(ii) அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்பட்டது நகர சபையினால் நிர்மாணிக்கப்பட்ட காட்சிப் பலகையிலாக அமையுமிடத்து அவ்வறிவித்தலை அகற்றும் போது அல்லது அனுமதிப் பத்திரம் பெறுநரால் பொறுப்புக்கூற வேண்டிய ஏதாவது கருமம் காரணமாக அக்காட்சிப் பலகைக்கு ஏதேனும் சேதம் ஏற்படவில்லை என்பதையும்

உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியது தலைவரின் பணியாதல் வேண்டும்.

(இ) அனுமதிப் பத்திரம் பெறுநரால் 18 வது துணைவிதியில் குறிப்பிட்டவாறு செயலாற்றியுள்ளமையும் நகர சபையின் காட்சிப் பலகைக்கு சேதம் ஏற்படவில்லையென்பதும் (அ) பந்தியில் குறிப்பிட்டவாறு உறுதிப்படுத்திக் கொள்ளப்படுகின்ற வேளையில் தலைவர் திருப்தியடைந்தாலேயன்றி அத்தகைய வைப்புத் தொகை அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு முழுமையாக விடுவிக்கப்படலாகாது. எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் 17 வது துணைவிதியில் குறிப்பிட்டவாறு செயலாற்றுவதைத் தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில் அல்லது நகர சபையின் காட்சிப் பலகைக்கு சேதம் ஏற்பட்டுள்ளவிடத்து, சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் அப்பணியைப் புரிதல் அல்லது காட்சிப் பலகையைத் திருத்தியமைத்தல் அல்லது அவ்விரு கருமங்களுக்காகவும் நகர சபைக்கு ஏற்க நேரிடுகின்ற செலவினை வைப்புத் தொகையில் இருந்து கழித்துக்கொள்ள வேண்டுமென்பதோடு, எஞ்சிய ஏதேனும் பணத்தொகை இருப்பின் அத்தொகையை மாத்திரம் அனுமதிப் பத்திரதாரருக்கு மீளச் செலுத்துதல் வேண்டும்.

(ஈ) (இ) பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு செயலாற்றும் போது நகர சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தொகை வைப்புச் செய்யப்பட்ட பிணைத்தொகையைப் பார்க்கிலும் விஞ்சியதாக உள்ள சந்தர்ப்பத்தில், அவ்வாறு மேலதிகமாக அறவிடப்பட வேண்டிய பணத்தொகையை அனுமதிப் பத்திரம் பெறுநர் நகர சபைக்குச் செலுத்த வேண்டும்.

20. நகர சபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் பேணிவரப்படுகின்ற ஏதேனும் தொழில் நிலையத்தின் அல்லது தொழிற்சாலையின் பெயர், முகவரி மற்றும் அத்தகைய தொழில் நிலையத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தொழில் முயற்சியின் தன்மை அல்லது தொழிற்சலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திகளின் தன்மையைக் காட்டுகின்ற அறிவித்தல் பலகை ஒன்றினை மாத்திரம் அத்தகைய தொழில் நிலையத்தின் அல்லது தொழிற்சாலையின் முன்புறத்தில் காட்சிப்படுத்தல், வீட்டுப் பெயர்ப்பலகைகள் மற்றும் ஏதேனும் ஆதனத்தைக் குத்தகைக்குவிட அல்லது வாடகைக்குக் கொடுக்க அத்தகைய ஆதனத்தின் மீது காட்சிப்படுத்தப்படுகின்ற "குத்தகைக்காக" அல்லது "விற்பனைக்காக" அல்லது "வாடகைக்காக" எனக் குறிப்பிடப்படுகின்ற ஒரு விளம்பர அறிவித்தல் தொடர்பில் மாத்திரம் இப்பகுதியின் துணைவிதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாது. ஆயினும், அத்தகைய ஒன்றுக்கு மேற்பட்ட அறிவித்தல் பலகைகள் காட்சிப்படுத்தப்படுகின்ற ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு அதிகரிக்கின்ற ஒவ்வொரு பெயர்ப் பலகைக்கும் இப்பகுதியிலான துணைவிதிகளின் ஏற்பாடுகள் வலுவுள்ளனவாக அமைதல் வேண்டும்.

21. அரசாங்கம் அல்லது மாகாணசபை அல்லது நகர சபையினால் காட்சிப்படுத்தப்படுகின்ற விளம்பர அறிவித்தல் சம்பந்தமாக இப்பகுதிக்கான துணைவிதிகள் ஏற்புடையதாதல் ஆகாது.

22. ஏதேனும் தொழில் நிலையத்தின் பெயர், இலக்கம் மற்றும் / அல்லது முகவரியுடன் வேறு ஏதேனும் வர்த்தகப் பண்டத்தின் அல்லது சேவையின் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலும், ஏதேனும் வீட்டின், ஏதேனும் விதத்திலான வர்த்தகப் பண்டத்தின் அல்லது சேவையின் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலும், அவ்விளம்பர அறிவித்தல் அல்லது விளம்பர அறிவித்தல்கள் இப்பகுதிக்கான துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கு கட்டுப்படல் வேண்டும். இந்த துணைவிதியின் ஏற்பாடுகள் சம்பந்தமாக அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய ஆளாக அத்தகைய தொழில் நிலையத்தின் அல்லது வீட்டின் உரிமையாளர், முகாமையாளர் அல்லது அவ்வேளையில் அதன் நிருவாகத்திற்கும் பொறுப்பாக உள்ள எவரேனும் ஆள் கருதப்படல் வேண்டும்.

23. ஏதேனும் விதத்திலான விளம்பர அறிவித்தல் பொது இடத்தில் உள்ள அல்லது அத்தகைய இடத்தை அண்டியுள்ள மரமொன்றில், மரத்தண்டில், கிளையில் அல்லது வேறு ஏதேனும் பகுதியில் அல்லது பொதுக் கட்டிடமொன்றுடன் இணைக்கப்பட்டு பொருத்துதல், ஒட்டுதல், தொங்கவிடல், கட்டிவைத்தல் அல்லது விளம்பரக் காட்சிப்படுத்தல் எவராலும் மேற்கொள்ளப்படலாகாது.

24. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள் கோடல் தேவைப்பட்டாலேயொழிய, இப்பகுதிக்கான துணைவிதிகள் –

"கட்அவுட்" என்பது, பலகை அல்லது வேறு ஏதேனும் மூலப் பொருளைப் பாவித்து தயாரிக்கப்பட்ட ஏதேனும் சட்டகத்தில் ஒட்டப்பட்ட அல்லது பொருத்தப்பட்ட விளம்பர அறிவித்தல்களையும்;

"காட்சிப் பலகை" என்பது, மக்கள் அறிந்துகொள்வதற்காகவோ கவனத்திற்காகவோ, காட்சிப்படுத்தப்படுகின்ற ஏதேனும் விளம்பர அறிவித்தல்களைப் பொருத்துவதற்காக அல்லது தாங்கி வைப்பதற்காக நிர்மாணிக்கப்படுகின்ற ஏதேனும் வகையிலான நிரந்தரமான பலகையையும்;

"விளம்பர அறிவித்தல்" என்பது, எவரேனும் ஆளினால் ஏதேனும் காணியிலோ, கட்டிடத்திலோ நிர்மாணிப்பிற்கு மேலாக அல்லது அதன் மீது முழுமையாகவோ பகுதியளவிலோ காட்சிப்படுத்தப்படுகின்றதும் மக்களின் அறிந்துகொள்ளல் அல்லது கவனத்தின் பொருட்டு காட்சிப்படுத்துகின்ற, ஒட்டுகின்ற, பொருத்துகின்ற, நிர்மாணிக்கின்ற, தொங்கவிடப்படுகின்ற அல்லது வேறு விதமாக இடஅமைவு செய்யப்படுகின்ற பிரச்சாரக் கருமத்திற்காக பாவிக்கப்படுகின்ற ஏதேனும் எழுத்து, சொல் அல்லது உருவப்படக் குறிப்பினை உள்ளடக்குகின்ற விளம்பர அறிவித்தல், பெனர் அல்லது கட்அவுட் அல்லது வேறுவிதமான மாதிரியுரு, விளம்பரத்தாள் அறிவித்தல், வர்த்தகஅறிவித்தலையும்

கருதுகின்றது.

## முதலாவது அட்டவணை

04 வது துணைவிதி

### ................. நகர சபை எல்லைக்குள் விளம்பர அறிவித்தல்களை காட்சிப்படுத்துவதற்கான அனுமதிப் பத்திரம்

செலுத்திய அனுமதிப் பத்திர கட்டணம் : ரூ. ......................................
அனுமதிப் பத்திரத்தின் தொடர் இலக்கம் : ......................................
பிணைத் தொகை : ரூ. ......................................

............................................................................ இல் வசிக்கும் ............................................................................இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை உரிமையாளரான .................................... .................................. என்பவருக்கு விளம்பர அறிவித்தல்களை ஒழுங்குறுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகளின் பணிப்புக்களுக்கு கட்டுப்பட்டதாக 20................ ஆண்டு ................. மாதம் ................ திகதியில் இருந்து 20.......... ஆண்டு ............. மாதம் ............... திகதி வரையான காலப்பகுதிக்குள் ...................................... நகர சபை எல்லைக்குள் கீழே குறிப்பிட்டுள்ள இடத்தில் / இடங்களில் விளம்பர அறிவித்தலை / அறிவித்தல்களை காட்சிப்படுத்த இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகின்றது.

**விளம்பர அறிவித்தல் / அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்பட அதிகாரமளிக்கப்பட்டுள்ள இடம் /இடங்கள்**

01. .......................................................................................................................
02. .......................................................................................................................
03. .......................................................................................................................
04. .......................................................................................................................

...............................................................
தலைவர் / அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்
........................................... நகர சபை.

திகதி:- ......................................................

***இரண்டாவது அட்டவணை***

*06 வது துணைவிதி*

**விளம்பர அறிவித்தலைக் காட்சிக்கு வைப்பதற்கான விண்ணப்பப்படிவம்**

01. விண்ணப்பதாரியின் பெயர்:- ......................................................................................................

02. முகவரி:- ..................................................................................................................................

03. தேசிய அடையாள அட்டை இல.:- ............................................................

04. தொலைபேசி இலக்கம்:- ............................................................

05. விளம்பர அறிவித்தல் பற்றிய விபரங்கள்-

i. அறிவித்தலின் அளவு: நீளம் ............... செ.மீ. அகலம்: ................. செ.மீ

ii. அறிவித்தல்களின் எண்ணிக்கை : ............................................................

iii. அறிவித்தலின் உள்ளடக்கம்: ............................................................

iv. இடஅமைவு செய்யும் விதம்: ..............................................................

v. இடவமைவு செய்யும் இடங்கள்: ............................................................

(7 வது துணைவிதியின் (ஊ) பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரியொன்றை இணைக்கவும்)

06. கோருகின்ற அனுமதிப் பத்திரம் செல்லுபடியாக வேண்டிய காலஎல்லை:

தொடக்கத் திகதி: 20..............................................மாதம் ................. ஆம் திகதி

இறுதித் திகதி: 20......................................... மாதம் ................... ஆம் திகதி

விளம்பர அறிவித்தல்களை ஒழுங்குறுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதியின் அனைத்துவிதமான பணிப்புக்களையும் கடைப்பிடிப்பேன் எனவும், அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் நிறைவடைந்து இரண்டு நாட்கள் கழிய முன்னர் அனுமதிப் பத்திரத்துடன் தொடர்புடைய விளம்பர அறிவித்தல் / அறிவித்தல்களையும் அதில் இடப்பட்டுள்ள பொருட்கள் அனைத்தையும் எனது செலவில் அவ்விடத்தில் இருந்து / இடங்களில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் எனவும் இத்தால் உறுதியளிக்கிறேன்.

..........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி:- .................................

***பாகம் XXIX***

**அடகு மற்றும் அடகு பிடிப்போரைப் பதிவு செய்தல் பற்றிய துணைவிதிகள்**

இப்பகுதியின் துணைவிதிகள் நகர சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் அசைவற்ற ஆதனங்கள் தொடர்பான அடகு மற்றும் அடகு பிடிப்போரின் முகவரிகளைப் பதிவுசெய்தல் பற்றிய துணைவிதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. நகர சபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் நிலவுகின்ற ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை அடகு பெறும் எவரேனும் அடகு பிடிப்போரால் அத்தகைய அடகு நடைமுறைக்கு வருகின்ற நாளில் இருந்து ஏழு நாட்கள் கழியுமுன்னர் இங்கு முதலாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மாதிரிக்கமைவாகத் தயாரிக்கப்பட்ட விணணப்பப்பத்திரம் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு நகர சபையில் பதிவு செய்துகொள்ளப்படல் வேண்டும்.

3. இப்பகுதியின் துணைவிதிகள் நடைமுறைக்கு வருகின்ற திகதியாகும் போதும் நகர சபை பிரதேசத்தில் நிலவுகின்ற ஆதனமொன்றை அடகு பிடித்துள்ள ஒவ்வொரு அடகு பிடிப்போனாலும், இப்பகுதியின் துணைவிதிகள் நடைமுறைக்கு வருகின்ற நாளில் இருந்து ஒரு மாதம் கழியுமுன்னர் 2 வது துணைவிதியில் பணிக்கப்பட்டவாறு பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

4.(அ) இப்பகுதியின் துணைவிதிகளிலான பணிப்புக்களின் கீழ் ஏதேனும் அடகு நகர சபையில் பதிவுசெய்து கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கின்ற ஒவ்வோர் அடகு பிடிப்போனாலும் நகர சபையினால் பணிக்கப்படுகின்ற அளவிலான கட்டணமொன்று செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழான ஏதேனும் அடகு நகர சபையில் பதிவு செய்யப்படுவதற்காக அடகு பிடிப்போனால் நகர சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணம் நகர சபையினால் தீர்மானிக்கப்பட இயலுமென்பதோடு, அத்தகைய கட்டணத்தை மாற்றுதலோ திருத்துதலோ காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படலாம்.

(இ) (ஆ) பந்தியின் கீழ் நகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற அல்லது மாற்றப்படுகின்ற அல்லது திருத்தம் கொண்டுவரப்படுகின்ற கட்டண வீதங்கள் பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற தினத்தில் இருந்து அல்லது அத்தகைய அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற ஏதேனும் எதிர்வரும் தினத்தில் இருந்து அமுலாக வேண்டும்.

5. (அ) 2 வது துணைவிதியிலும் 3 வது துணைவிதியிலும் பணிக்கப்பட்டுள்ளவாறு நகர சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள எவரேனும் அடகுபிடிப்போனால் அடகுக்காகப் பெறப்பட்டுள்ள ஏதேனும் ஆதனமொன்று,-

(i) அத்தகைய அடகுபிடிப்போனால் ஆதனத்தின் அடகு வைப்போனுக்கு விடுவிக்கப்பட்டிருப்பின்;

(ii) அத்தகைய அடகுபிடிப்போனால் இறையிலிச் சொத்தாக கையேற்றப்பட்டிருப்பின்;

(iii) அத்தகைய அடகுபிடிப்போனும் வேறு எவரேனும் ஆளுடன் அல்லது ஆட்கள் பலருடன் கூட்டு உரிமைக்காக கையேற்கப் பட்டிருப்பின்;

(iv) அத்தகைய அடகுபிடிப்போனால் வேறு விதத்தில் அத்தகைய ஆதனத்தில் உரிமையகற்றப்பட்டிருப்பின்

அச்சம்பவம் இடம்பெற்று ஒரு மாதம் கழியுமுன்னர், அதுபற்றி செயலாளருக்கு எழுத்திலான அறிவித்தல் மூலமாக அறிவிக்க வேண்டியது அடகுபிடிப்போனின் பணியாதல் வேண்டும்.

(ஆ) நகர சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள எவரேனும் அடகுபிடிப்போனின் முகவரி மாற்றமடைந்தவிடத்து, அத்தகைய மாற்றம் இடம்பெற்று ஏழு நாட்களுக்குள் அதுபற்றிய எழுத்திலான அறிவித்தலை செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டியது அடகுபிடிப்போனின் பணியாதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய எழுத்திலான அறிவித்தல் கிடைத்த உடனேயே அடகுபிடிப்போரைப் பதிவு செய்யும் பதிவேட்டினை அதற்கிணங்க திருத்தியமைத்தலும் அவ்வாறு திருத்தப்பட்டுள்ளதாக அடகுபிடிப்போனுக்கு எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டியதும் செயலாளரது பணியாதல் வேண்டும்.

6. இரண்டாவது துணைவிதியில் அல்லது 3 வது துணைவிதியிலான பணிப்புக்களின் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரத்துடனும் தொடர்புடைய அடகுபிடிப்போர் மற்றும் அவர்களிடம் அடகு வைக்கப்பட்டுள்ள ஆதனங்கள் பற்றிய பதிவேடொன்றினை இப்பகுதியின் இரண்டாவது அட்டவணையின் மாதிரிக்கு அமைவாகத் தயாரித்து பேணிவர வேண்டியது செயலாளரது பணியாதல் வேண்டும்.

7.(அ) நகர சபையினால் பேணிவரப்படுகின்ற அடகுபிடிப்போர் மற்றும் அவர்களால் அடகு பெறப்பட்டுள்ள ஆதனங்கள் பற்றிய பதிவுசெய்தல் பதிவேட்டினைப் பரிசீலனை செய்ய வேண்டிய எவரேனும் ஆள், வாரத்தின் எந்தவொரு வேலை நாளிலும் அலுவலக நேரத்தில் அத்தகைய பதிவேட்டினைப் பரிசீலனை செய்ய இடமளிக்க வேண்டியது செயலாளரின் பணியாதல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் பணிப்புக்களுக்கிணங்க அடகு பிடிப்போரைப் பதிவுசெய்தல் பற்றிய பதிவேட்டினைப் பரிசீலனை செய்ய அவசியமான ஒவ்வோர் ஆளும் நகர சபையினால் பணிக்கப்படுகின்ற கட்டணத்தை முன்கூட்டியே செலுத்தி செயலாளரிடமிருந்து அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஆயினும், ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது மாகாணசபையின் திணைக்களத்தின் தலைமையதிகாரியோ அத்தகைய ஆளினால் எழுத்திலான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தரால் கடமைத் தேவையின் நிமித்தம் அத்தகைய பதிவேட்டினைப் பரிசீலனை செய்வதற்காக கட்டணம் அறவிடப்படலாகாது.

(இ அடகுபிடிப்போனது பதிவுசெய்தல் பற்றிய பதிவேட்டினைப் பரிசீலனை செய்வதற்காக அறவிடப்படுகின்ற கட்டணம் நகர சபையினால் தீர்மானிக்கப்பட இயலுமென்பதோடு, அத்தகைய கட்டணத்தை காலத்திற்குக் காலம் நகர சபை மாற்றலாம் அல்லது திருத்தலாம்.

(ஈ) (இ) பந்தியின் கீழ் நகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற அல்லது மாற்றப்படுகின்ற கட்டண வீதங்கள் பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்தில் இருந்தோ அவ்வறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற ஏதேனும் எதிர் வரும் தினத்தில் இருந்தோ அமுலாக்கப்படல் வேண்டும்.

8.(அ) நகர சபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆதனம் மீது நகர சபையினால் விதிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஆதனவரி, வரி அல்லது கட்டணம், 2 வது துணைவிதியின் பணிப்புக்களின் கீழ் பதிவு செய்துள்ள எவரேனும் ஆதனத்தின் உரிமையாளரால் செலுத்தப்படாமல் தவறவிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில்-

(i) அத்தகைய ஆதனத்தை தடை செய்வதற்கான பிடியாணையைப் பிறப்பிக்க;

(ii) அத்தகைய ஆதனத்தை தடை செய்யும் பொருட்டு விநியோகிக்கப்பட்ட பிடியாணையை அமுலாக்க;

(iii) விநியோகிக்கப்பட்ட பிடியாணையின் பேரில் தடைசெய்யப்பட்ட அத்தகைய ஆதனத்தை விற்பனை செய்ய;

பதினான்கு நாட்களுக்கு முன்னர் அதுபற்றிய எழுத்திலான அறிவித்தலை அத்தகைய ஆதனத்தின் அடகுபிடிப்போனுக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் செயலாளரது பணியாதல் வேண்டும்.

(ஆ) நகர சபைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆதனத்தின் மீது நகர சபையினால் விதிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஆதனவரி, வரி அல்லது கட்டணத்தைச் செலுத்தாமல் தவறவிட்டமை காரணமாக நகர சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள அடகுபிடிப்போர்களின் பதிவேட்டில் உள்ளடக்கப்படுகின்ற ஏதேனும் ஆதனம் தொடர்பில்-

(i) அத்தகைய ஆதனத்தை தடை செய்வதற்கான பிடியாணையைப் பிறப்பிக்க;

(ii) அத்தகைய ஆதனத்தை தடை செய்யும் பொருட்டு விநியோகிக்கப்பட்ட பிடியாணையை அமுலாக்க;

(iii) விநியோகிக்கப்பட்ட பிடியாணையின் பேரில் தடைசெய்யப்பட்ட அத்தகைய ஆதனத்தை விற்பனை செய்ய;

நேர்ந்துள்ளதாக அத்தகைய ஆதனத்தின் அடகுபிடிப்போனுக்கு (அ) பந்தியின் கீழான அறிவித்தலொன்று கிடைத்தவிடத்து, தன்னால் அடகுக்காக எடுக்கப்பட்ட அத்தகைய ஆதனத்திற்காக ஏற்புடைய ஆதனவரி, வரி அல்லது கட்டணத்தை அத்தகைய அடகுபிடிப்போன் நகர சபைக்குச் செலுத்தி அத்தகைய ஆதனத்தை தடைவிதிப்பதற்கான பிடியாணையைப் பிறப்பிப்பதை அல்லது அத்தகைய ஆதனத்தின் மீது அவ்விதமாக விநியோகிக்கப்பட்ட பிடியாணையை அமுலாக்குவதை அல்லது விநியோகித்த பிடியாணையின் பேரில் தடைசெய்யப்பட்ட அத்தகைய ஆதனம் விற்கப்படுவதை தடுத்துக்கொள்வது சட்டமுறையானதாதல் வேண்டும்.

9. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள் கோடல் தேவைப்பட்டாலேயொழிய, இப்பகுதிக்கான துணைவிதிகளில்,-

"அடகு பிடிப்போன்" என்பது, நகர சபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை அடகாக வைத்துக்கொண்டு ஏதேனும் பணத்தொகையையோ அல்லது வேறு ஏதேனும் பண்டத்தையோ அல்லது சேவையையோ கடனடிப்படையிலோ அல்லது வேறு ஏதேனும் வகையில் வழங்குகின்ற எவரேனும் ஆள் எனக் கருதப்படுவதோடு, அசைவற்ற ஆதனத்தை அடகாக வைத்துக்கொண்டு, கடனுக்குப் பணம் வழங்குகின்ற ஏதேனும் வணிக வங்கியும் அதில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

## முதலாவது அட்டவணை

2 வது துணைவிதி

**........................ நகர சபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் அசைவற்ற ஆதனங்கள் பற்றிய அடகு மற்றும் அடகுபிடிப்போரின் முகவரிகளைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பப் படிவம்**

(ஒவ்வோர் ஆதனம் தொடர்பிலும் தனித்தனியான விண்ணப்பப்பத்திரம் வீதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

1. அடகு வைக்கப்பட்ட அசைவற்ற ஆதனம்:-

(அ) அடகு வைத்தவரின் பெயர் / பெயர்கள்:

1. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

2. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

3. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

(ஆ) அடகு வைத்தவரின் முகவரி (கள்):-

1. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

2. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

3. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

(இ) அமைந்துள்ள தெருவின் அல்லது ஊரின் பெயர்:- ... ... ... ... ... ... ... ... ... ...

(ஈ) ஆதனவரி இலக்கம்:- ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

(உ) அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவின் இலக்கமும் பெயரும்:- ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

(ஊ) நிலப்பரப்பு:
... ... ஏக்கர் ... ... றூட் ... ... பர்ச்சஸ் (ஹெக்டெயார்...... )

(எ) உறுதி இலக்கம்: ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

(ஏ) நொத்தாரிசின் பெயரும் முகவரியும்: ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

2. அடகு பிடிப்போனின்:-

(அ) பெயர்:- ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

(ஆ) முகவரி: ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

3. அடகின் பெறுமதி: ரூபா. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

4. ஆதனத்தின் அடகு தொடங்கும் திகதி: ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

5. ஆதனத்தின் அடகு முடிவடையும் திகதி: ... ... ... ... ... ... ... ... ...

6. ஈட்டுறுதி பதிவு செய்த திகதி: ... ... ... ... ... ... ... ... ...

7. நொத்தாரிசின் பெயரும் முகவரியும்: ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

(அடகு உறுதியைத் தயாரித்த நொத்தாரிசினால் உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுறுதியின் பிரதியொன்றை இணைக்கவும்)

திகதி: 20 ... ... ... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ...
விண்ணப்பதாரி /
அடகு பிடிப்போனின் கையொப்பம்.

**இரண்டாவது அட்டவணை**

6 வது துணைவிதி

...................நகர சபை

அசைவற்ற ஆதனங்கள் பற்றிய அடகு மற்றும் அடகுபிடிப்போரின் முகவரிகளைப் பதிவுசெய்யும் பதிவேடு

| பதிவு செய்த | | அடகு பிடிப்போனின் | | அடகு வைப்போனின் | | ஆதனம் அமைந்துள்ள தெரு /ஊர் | ஆதன வரி இல. | கி.சே.அ. பிரிவின் இலக்கமும் பெயரும் | காணியின் பரப்பளவு (ஹெக்.) | உறுதி இல. | நொத்தாரிசின் பெயரும் முகவரியும் | அடகு தொடங்கும் திகதி | அடகு முடிவடையும் திகதி | ஈட்டுறுதியின் இல. | நொத்தாரிசின் பெயரும் முகவரியும் | விடயத்திற்குப் பொறுப்பான அலுவலரின் கையொப்பம் | செயலாளரின் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருடம் | இல. | பெயர் | முகவரி | பெயர்/ பெயர்கள் | முகவரி | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

## பாகம் XXX

### பருவகால அறிக்கைகளையும் தகவல்களையும் சமர்ப்பித்தல் பற்றிய துணைவிதிகள்

இத்துணைவிதிகள் ஆதனவரி மற்றும் வரிவிதிப்பு அத்துடன் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடும் பணிக்காக நகர சபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் நிலவுகின்ற ஆதனங்கள் பற்றிய தகவல்களையும் கைத்தொழில்கள் அல்லது தொழில் முயற்சிகள் பற்றிய பருவகால அறிக்கைகளையும் சமர்ப்பித்தல் தொடர்பான துணைவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2.(அ) நகர சபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைச் சுவீகரித்துக்கொள்ளுகின்ற ஒவ்வோர் ஆளினாலும், அத்தகைய அசைவற்ற ஆதனம் சுவீகரித்துக்கொள்ளப்பட்ட தினத்தில் இருந்து மூன்று மாதங்களுக்குள் அத்தகைய அசைவற்ற ஆதனம் பற்றிய தகவல்களை நகர சபையில் பதிவுசெய்து கொள்வதற்காக இப்பகுதியின் துணைவிதிகளில் முதலாவது அட்டவணைக்கு அமைவாகத் தயாரித்த விண்ணப்பப் பத்திரம் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியில் குறிப்பிட்டவாறு விண்ணப்பப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கின்ற எவரேனும் ஆளினால் அத்தகைய விண்ணப்பப் பத்திரத்துடன், நொத்தாரிசு ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்ட ஆவணங்களின் நிழற் பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :-

(i) அத்தகைய ஆதனத்தின் உரித்துறுதி;

(ii) அதிகாரம் பெற்ற நிலஅளவையாளரால் வரையப்பட்ட அத்தகைய ஆதனத்தின் வரைபடம்;

(iii) அத்தகைய அசைவற்ற ஆதனத்தின் மீது ஏதேனும் கட்டிடமோ கூட்டாட்சிக் கட்டிடமோ நிர்மாணிக்கப்பட்டுள்ளவிடத்து கட்டிடக் கலைஞரொருவரால் வரையப்பட்ட அத்தகைய கட்டிடத்தின் அல்லது கூட்டாட்சிக் கட்டிடத்தின் திட்டவரைபடம்;

(iv) அத்தகைய அசைவற்ற ஆதனம் கட்டிடமாகவோ கூட்டாட்சிக் கட்டிடமாகவோ அமையுமிடத்து கட்டிடக் கலைஞரொருவரால் வரையப்பட்ட அத்தகைய கட்டிடத்தின் அல்லது கூட்டாட்சிக் கட்டடத்தின் திட்டவரைபடம்.

3. இப்பகுதியின் துணைவிதிகள் அமுலுக்கு வரும் திகதியாகும் போதும் நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தில் அமைந்துள்ள ஏதேனும் அசைவற்ற ஆதனமொன்று கொள்ளப்பட்டுள்ள ஒவ்வோர் ஆளினாலும், இப்பகுதியின் துணைவிதிகள் அமுலுக்குவரும் தினத்திலிருந்து ஆறு மாதங்கள் கழியு முன்னர் 2 வது துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றப்படல் வேண்டும்.

4.(அ) இப்பகுதியின் துணைவிதிகளில் பணிக்கப்பட்டுள்ளவாறு நகர சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் உரிமையாளரினால் தனக்குச் சொந்தமான எந்தவோர் அசைவற்ற ஆதனத்தின் உரிமையை,-

(i) வேறு எவரேனும் ஆளுக்கோ ஆட்கள் பலருக்கோ கையளித்திருப்பின் அல்லது அத்தகைய ஆதனத்தை வேறு எவரேனும் ஒருவரிடம் அடகு வைத்திருப்பின்

அல்லது

(ii) அட்டோர்னி தத்துவமளித்தலின் மூலமாக வேறு எவரேனும் ஆளுக்கோ ஆட்கள் பலருக்கோ கையளிக்கப்பட்டிருப்பின்;

அத்தகைய ஏதேனும் நிகழ்வு இடம்பெற்று ஒரு மாதம் கழிய முன்னர் அது பற்றி செயலாளருக்கு எழுத்திலான அறிவித்தல் மூலமாக அறிவிக்க வேண்டியது அத்தகைய அசைவற்ற ஆதன உரிமையாளரின் பணியாதல் வேண்டும்.

(ஆ) இப்பகுதியின் துணைவிதிகளில் பணிக்கப்பட்டுள்ளவாறு நகர சபையில் பதிவினைப் பெற்றுள்ள ஏதேனும் அசைவற்ற ஆதன உரிமையாளரால் தனக்குச் சொந்தமாக உள்ள ஏதேனும் அசைவற்ற ஆதனமாக அமைகின்ற கட்டிடம் ஈடுபடுத்தப்பட்டுள்ள கருமம் மாற்றப்பட்டிருப்பின் அத்தகைய மாற்றம் செய்யப்பட்டு ஒரு மாதம் கழியு முன்னர் அது பற்றி செயலாளருக்கு எழுத்திலான அறிவித்தலின் ஊடாக அறிவிக்க வேண்டியது அத்தகைய அசைவற்ற ஆதன உரிமையாளரின் பணியாதல் வேண்டும்.

(இ) இப்பகுதியின் துணைவிதிகளில் பணிக்கப்பட்டுள்ளவாறு நகர சபையில் பதிவினைப் பெற்றுள்ள ஏதேனும் அசைவற்ற ஆதன உரிமையாளரால் தனக்குச் சொந்தமான ஏதேனும்,-

(i) அசைவற்ற ஆதனமொன்றை உப பிரிகையிடலுக்கு இலக்காக்க முன்னர்;

(ii) அசைவற்ற ஆதனமாக அமைகின்ற ஏதேனும் காணியில் கட்டிடமொன்றை நிர்மாணிக்க முன்னர் ;

(iii) அசைவற்ற ஆதனமாக அமைகின்ற ஏதேனும் கட்டிடத்தின் மாதிரியில் மாற்றமேற்படுகின்ற வகையில் -

(1) புதிதாக பகுதியொன்று சேர்க்கப்படுமாயின்; அல்லது

(2) நிலவுகின்ற ஒரு பகுதி உடைத்து அகற்றப்படுமாயின்; அல்லது

(3) நிலவுகின்ற ஒரு பகுதி உடைத்து அகற்றப்பட்டு புதிய பகுதியொன்று சேர்க்கப்படுமாயின்;

அல்லது

(4) முழுமையான கட்டிடத்தையும் உடைத்து அகற்றி வேறொரு கட்டிடம் நிர்மாணிக்கப்படுமாயின்;

அத்தகைய ஏதேனும் நிகழ்வு இடம்பெற முன்னர் அதற்கான அனுமதியை நகர சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ஈ) நகர சபையில் பதிவினைப் பெற்றுள்ள ஏதேனும் அசைவற்ற ஆதன உரிமையாளரின் முகவரி மாற்றமடைந்துள்ள வேளையில், அத்தகைய மாற்றம் ஏற்பட்டு ஏழு நாட்களுக்குள் அது சம்பந்தமான எழுத்திலான அறிவித்தலை செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டியது அத்தகைய அசைவற்ற ஆதன உரிமையாளரது பணியாதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய எழுத்திலான அறிவித்தல் கிடைத்த உடனேயே அசைவற்ற ஆதன உரிமையாளர்களைப் பதிவு செய்வதற்கான பதிவேட்டினை அதற்கிணங்க திருத்தியமைத்தலும் அவ்வாறு திருத்தப்பட்டுள்ளதாக அத்தகைய அசைவற்ற ஆதனத்தின் உரிமையாளருக்கு எழுத்து மூலமாக அறிவித்தலும் செயலாளரின் பணியாதல் வேண்டும்.

5. இப்பகுதியிலான துணைவிதிகளின் பணிப்புக்களின் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரத்துடனும் தொடர்புபடுகின்ற அசைவற்ற ஆதன உரிமையாளர்களையும் அவர்களுக்குச் சொந்தமாக உள்ள அசைவற்ற ஆதனங்களையும் பதிவு செய்வதற்கான பதிவேடொன்றினை, இப்பகுதியின் இரண்டாவது அட்டவணையில் மாதிரிக்கு அமைவாகத் தயாரித்துப் பேணிவர வேண்டியது செயலாளரது பணியாதல் வேண்டும்.

6.(அ) நகர சபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் பேணிவரப்படுகின்ற ஏதேனும் தொழில் முயற்சியையோ கைத்தொழிலோ விற்கப்படுவதன் பேரில் (255 வது அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நகர சபையினால் விதிக்கப்படுகின்ற ஏதேனும் வரி அல்லது நகர சபையினால் விநியோகிக்கப்படுகின்ற ஏதேனும் அனுமதிப் பத்திரத்தின் மீது அறவிடப்படுகின்ற கட்டணம் அறவிடப்படுகையில் நகரசபைக்குச் செலுத்த வேண்டிய அத்தகைய வரியை அல்லது அனுமதிப்பத்திரக் கட்டணத்தை கணிப்பிடுவதற்கு அவசியமான அத்தகைய தொழில் முயற்சியினதோ கைத்தொழிலினதோ விற்பனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகையில்-

(i) ஏதேனும் ஒருவருட காலப்பகுதிக்குள் பெற்ற பெறுகைகளின் அளவு ; அல்லது

(ii) ஏதேனும் ஒருவருட காலப்பகுதிக்குள் விற்பனைப் புரள்வு; அல்லது

(iii) ஏதேனும் ஒருவருட காலப்பகுதிக்குள் ஈட்டப்படக்கூடிய இலாபம்; அல்லது

(iv) ஏதேனும் விற்பனை மூலமாகக் கிடைத்த பணத்தொகையை

உறுதிப்படுத்தி அறிக்கையொன்று மூலமாக உறுதிப்படுத்துமாறு அத்தகைய கைத்தொழிலின் அல்லது தொழில் முயற்சியின் உரிமையாளரிடமோ முகாமையாளரிடமோ செயலாளரால் கடித மூலமான அறிவித்தலினூடாக கோருவது சட்டமுறையானதாதல் வேண்டும்.

(ஆ) செயலாளரால் அனுப்பப்படுகின்ற (அ) பந்தியின் கீழான அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எவரேனும் ஆளினால் அத்தகைய அறிவித்தல் தனக்கு கிடைத்த தினத்தில் இருந்து பதின்நான்கு நாட்களுக்குள் அவ்வறிவித்தல் மூலமாக கோரப்பட்டுள்ள தகவல்களை செயலாளருக்கு வழங்க வேண்டும்.

7. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள் கோடல் தேவைப்பட்டாலேயொழிய, இப்பகுதிக்கான துணைவிதிகளில்-

"அசைவற்ற ஆதனம்" என்பது, ஏதேனும் காணி அல்லது கட்டிடம் அல்லது கூட்டாட்சிக் கட்டிடத்தையும்,

"ஆதன உரிமையயளர்" என்பது, ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் தனி உரிமையாளரான எவரேனும் ஆள் அல்லது அத்தகைய அசைவற்ற ஆதனத்திற்கு தனி ஒருவருக்கு மேற்பட்ட எண்ணிக்கையுடைய உரிமையாளர்கள் இருக்குமிடத்து அத்தகைய ஒவ்வோர் உரிமையாளரும் தனியாகவும் கூட்டாகவும் அத்தகைய ஆதனத்தின் உரிமையாளராகக் கருதப்படல் வேண்டுமென்பதோடு, அக்காலத்தில் அத்தகைய ஆதனத்தில் குடியமர்ந்துள்ள அல்லது அத்தகைய ஆதனத்தின் பொறுப்பினை வகிக்கின்ற வேறு எவரேனும் ஆளும் அதில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

## *முதலாவது அட்டவணை*

2 வது துணைவிதியின் (அ) பகுதி

**…………………… நகர சபை பிரதேசத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் பற்றிய தகவல்களைச் சமர்ப்பித்தல்**

(ஒவ்வோர் ஆதனம் தொடர்பிலும் தனித்தனியான மாதிரிப் பத்திரம் வீதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

1. (அ) ஆதன உரிமையாளரின்/ உரிமையாளர்களின் பெயர்/பெயர்கள்:-

1. … … … … … … … … … … … … … … … … … … … …
2. … … … … … … … … … … … … … … … … … … … …
3. … … … … … … … … … … … … … … … … … … … …

(ஆ) ஆதன உரிமையாளரின் / உரிமையாளர்களின் முகவரி(கள்):
1. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
2. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
3. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
(இ) அமைந்துள்ள தெருவின் அல்லது ஊரின் பெயர்:- ... ... ... ...
(ஈ) ஆதனவரி மதிப்பு இலக்கம்:- ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
(உ) அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவின் இலக்கமும் பெயரும்:- ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
(ஊ) நிலப்பரப்பு:
... ... ஏக்கர் ... ... றூட் ... ... பேர்ச் (......ஹெக்டெயார்)
(எ) உறுதி இலக்கம்: ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
(ஏ) நொத்தாரிசின் பெயரும் முகவரியும்: ... ... ... ... ... ... ... ...

2\. (அ) ஆதனம் காணியாக அமையுமிடத்து அத்தகைய ஆதனத்தின் மீது ஏதேனும் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளதா?
ஆம் / இல்லை
(ஆ) விடை "ஆம்" எனில் அத்தகைய கட்டிடம் தனிக்கட்டிடமா இன்றேல் கூட்டாட்சிக் கட்டிடமா என்பது? ... ... ... ... ... ... ...

3\. ஆதனம் கொள்ளப்பட்ட திகதி: ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

4\. ஆதனம் பாவிக்கப்படுகின்ற நோக்கம்: வதிவிடம் / வர்த்தக அல்லது வணிகக் கருமம்

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
ஆதன உரிமையாளரின் கையொப்பம்.

திகதி: 20... ... ... ...

## இரண்டாவது அட்டவணை

5 வது துணைவிதி

**................... நகர சபை**

அசைவற்ற ஆதனங்களைப் பதிவுசெய்தலுக்கான பதிவேடு

| பதிவு செய்த | | ஆதன உரிமையாளரின் | | ஆதனம் அமைந்துள்ள தெரு / ஊர் | ஆதன வரி மதிப்பு இல. | கி.சே.அ. பிரிவின் இலக்கமும் பெயரும் | காணியின் பரப்பளவு (ஹெக்)) | உறுதி இல. | நொத்தாரிசின் பெயரும் முகவரியும் | காணியா இன்றேல் கட்டிடமா என்பது | ஆதனம் கொள்ளப்பட்ட திகதி | ஆதனம் பாவிக்கப்படும் நோக்கம் | வி.பொ.அ கையொப்பம் | செயலாளரின் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருடம் | இல. | பெயர்/ பெயர்கள் | முகவரி | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

11-298

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.